T. 641.

அநாதிநம:

# பாண்டியவம்ச பாரம்பரை.

இது

திருச்சிராப்பள்ளி

தமிழ் பூர்வோத்ர ஆராய்ச்சி சங்கத்தின

அங்கத்தவரி லொருவராகிய

தூத்துக்குடி

**ஸ்ரீமத். சுவர்னம் எட்வார்ட் அவர்களால்**

இயற்றப்பெற்று

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

**1911**

First Edition 1000 Copies.

*Registered Copy Right.*

இதன் விலை] [ரூ 1 அணா 8.



பாண்டியராஜமுத்திராங்கம்.

# முகவுரை.

ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்த தேவாதி தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட இந்நில வலயத்தின்கண் அண்டசம், உற்பீசம், சுவேதசம், சராயுசமென்னும் நால்வகைப் பிறப்பும், தேவர், மானிடர், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்னும் எழுவகைத் தோற்றமுமாகிய பிரம்ஹாதி பிபீலிகாபரியந்தமான எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிற் சிறந்தது மானுஷ்ய வர்க்கமேயாம்.

இம்மானுஷ்ய வர்க்கமானவை மனு என்பவனால் பிரம்ம, க்ஷத்ரிய, வைஸ்ய, சூத்ரரென்று நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. இந்நான்கு பிரிவிலும் மஹா கீர்த்தியும், பராக்கிரமமும் பொருந்தியது க்ஷத்ரிய குலமேயாம். இந்த க்ஷத்ரிய குலமானது சோம, சூரிய, அக்கினி யென்னும் மூன்று முக்கிய பிரிவுகளையுடையது. அவற்றுள் மஹா சிரேஷ்டம் பொருந்திய சோமகுலத்திலேயுதித்த பாண்டியர்களது வம்ச வரலாறு, வீர பராக்கிரம முதலியவற்றைக்கூறுமிந்நூலுக்குப் "பாண்டிய வம்ச பாரம்பரை" யெனப்பெயர்.

சிலர் அறியாமையினாலும், வேறு சிலர் காய்மகாரத்தினாலும் காலவேறுபாட்டான் மாறுபாடுற்றுக்கிடக்கும் பாண்டியர்களது குலத்தையும், அவர்களது சந்ததியாரையும் பற்றி மனம் போன போக்கில் வரைந்தும், உண்மையை மறைத்தும், வெளியிட்டிருக்கின்றனர். அந்தோ பரிதாபம்! பரிதாபம்!! யாம் அன்னோரியற்றிய நூற்களைக்கண்ணுற்று வருந்துங்கால்; அப்பாண்டியர்களது குலமின்னதென்றும், அவர்களது சந்ததியாரின்னாரென்றும் நூலாதாரத்துடன் உண்மையை விளங்கத்தீட்டின் அஃது இவ்வுலகின்கண் பலரறியாமையால் நிகழும் ஊறுகளையகற்றிப் பரோபகாரமாய் விளங்குவதோடு புண்ணியத்தையும் பயக்குமென்னும் நல்லெண்ணம் எம்முள்ளத்து உதித்தமையால் சிறந்த கல்விமான்களாலியற்றப்பட்ட நூற்களையும், எமது ராஜமாளிகையிலுள்ள பழைய சாசனங்களை

யும், எமது ஆசிரியர்களான மகா-ள-ள-ஸ்ரீ சின்னையாருபின் மோத்தா, M. X. ஹென்றிமேயோ இன்பகவிராயரவர்களினது அந்தமாகிய உபந்நியாசங்களையும், பாக்களையும் ஆதாரமாகக்கொண்டு அரும்பிரயாசத்துடன் இந்நூலை வரைந்து மண்ணுலகின் மாந்தர் யாவரும் படித்திதன் பயனையடையும் பொருட்டு அச்சிற்பதிப்பித்து வெளியிட்டேம்.

பாண்டியருடைய சரித்திரத்தைக் கூறுமுன் அவர்களது குலமின்னதென்றும், அவர்களது சந்ததியாரின்னாரென்றும் வரையறுத்துக் கொள்வதவசியமெனப்புலப்படுகின்றமையால் அவைகளை இங்ஙனம் ஆராய்ச்சி செய்வாம்.

1-வது பாண்டியருடைய குலமென்ன?

அறு சீர்க்கழி நெடிலடிலாசிரிய விருத்தம்.

"போனவப் புரவித் தாமா புரிந்துபோர் தொடங்கு மெல்லைச்
சேனைகள் நான்கி னேடுஞ் சித்திர வாக னென்னு
மீனவன் வழுதி மாரன் வெண்மதி மரபில் வந்தோன்
வானவர் முதல்வன் சென்னி வரிவளை யுடைத்து மீண்டோன்"

என்று வில்லி பாரதம் கன்ன பருவம் பதினேழாம் நாள் போர் புரிசருக்கம் ளசு-வது கவியிலும்

வேறு.

"துங்க வாம்பரி மீனவன் தோன்றலும்
மங்கை வேழ மகன்றகன் றேருடின
திங்க ளின்குலச் செல்வனென் றஞ்சியே
எங்கு மோடு மிருட்கண மென்னவே." என்றும்,

"வீறு மம்புலி யின்குல மேன்மையான்
வீறு மம்புலி யின்குலம் வீட்டினன்
ஆறி லொன்று கடமை கொண் டாள்பவ
னாறி லொன்று கடமை கொண் டானரோ." என்றும்.

அருணாசலப்புராணம் வச்சிராங்கத பாண்டியன் சருக்கம் ௰௨, ௰௩-வது கவிகளிலும் கூறப்பட்டுள்ளன. இக்கவிகள் பாண்டியனை

வெண்மதி மரபில் வந்தோனென்றும், திங்களின் குலச்செல்வனென்றும், அம்புலியின் குலத்தானென்றும் கூறுவதால் பாண்டியர்களங்கமற்ற சந்திரகுலத்திலேயுதித்தவர்களென்பது சான்றாகும்.

2-வது பாண்டியருடைய சந்ததியார் யார்?

அறுசீர்க்கழி நெடிலடிலாசிரிய விருத்தம்.

"அரதனுங் கதனு மைந்தன் றனைக்கடி தழைப்பித் தாதி
பரதனு மெனவிப் பாரைப் புரவெனப் பகர்ந்தான் சில
விரதனுங் கதனைக் கேளா வதன்முனம் விடைபெற்றனை
இரதனன் மருங்குஞ் சூழப் பதிபுகுந் திறமை செய்தான்".

அதாவது; வச்சிராங்கத பாண்டியன் தன்குமாரனாகிய இரத்தினங்கதனைச் சிக்கிரத்தில் வரவழைத்து முன் நம் வம்சத்தில் பிரபலவானாயிருந்த பரதன்போல் இராஜ்யத்தைக் காப்பாற்று என்று சொன்னான். அந்த வார்த்தையைக்கேட்பதற்கு முன்னமே மகனானவன் விடை பெற்றுக்கொண்டு இரத, கஜ, துரக, பதாதிகள் புடைசூழ மதுரைக்குப்போய் இராஜ்ய பரிபாலனம் செய்தான் என்று அருணாசலப்புராணம் வச்சிராங்கத பாண்டியன் சருக்கம் சக-வது செய்யுளில் கூறப்பட்டுள்ளதாலும்,

"1-வது பரதன் S. A. Sovereign the son of Dushyanta by Saguntalai after whem India is called பரதகண்டம்".

அதாவது; பரதன் துஷ்யந்தனுக்குச் சகுந்தலையினிடமாய்ப் பிறந்தவன். அவனுக்குப்பின் இந்தியா பரதகண்டமென்றழைக்கப்பட்டது. என்றும்,

2-வது "பரதன் S. A. King of the Lunar race சந்திரகுலத்தோரரசன் his descendants are பரதர் fem பரத்தி"

அதாவது; பரதன், சந்திரகுலத்தோரரசன். அவன் சந்ததியாரே பரதர். பெண்பால் பரத்தி. என்றும்,

3-வது "பரதர் S. (Singular பரதன், Feminine பரத்தி) inhabitants of maritime districts being fishers."

அதாவது; பரதர் பெயர்ச்சொல் பன்மை. ஒருமை பரதன். பெண்பால் பரத்தி. முத்து, சங்கு, மீன் முதலிய படுப்போராகையால் கடற்கரையோரமாய் வசிக்கின்றவர்கள் என்றும் டாக்டர் வின்ஸ்லோ தம தகராதியில் கூறுவதாலும், வீரமாமுனி சுவாமிகளருளிச்செய்த சதுரகராதியிலேனோரங்கமாகிய பொருளகராதியைத் திறந்து துரியோதனன் குலத்தோரியாரென்று பார்ப்போமாயின், "துரியோதனன் குலத்தோர்=குருகுலத்தார், கௌரவர், பரதர், பாரதர், பௌரவர் என்று காணப்படுவதாலும், J. P. றட்லர் தமது அகராதியில் "பரதர்=பரவர். பரவர்=பரதர்." என்றே வரைந்திருப்பதாலும்,

வெண்பா.

"இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பிற்
றுறைத்தோணி நின்றுலாந் தூங்குநீர்ச் சேர்ப்ப
விறைத்தோறு மூறுங் கிணறு." (பழமொழி)

என்பதில்; அகன்ற துறைமுகத்து நிற்குந்தோணிகளை யோயாமலலைத்துக்கொண்டேயிருக்குஞ் சமுத்திரத்தையுடைய சேர்ப்பனாகிய பாண்டியனே! யென்னும்.

வெண்பா.

"இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்களை நின்றுழல் வதெல்லாம்—அடம்பம்பூ
வன்னங் கிழிக்கும் அலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும்." (நாலடி)

என்பதில்; அடம்பினுடைய பூக்களை அன்னங்கள் கிழித்து விளையாடும் அலைகள் பொருந்திய குளிர்ந்த சமுத்திரத்தையுடைய சேர்ப்பனாகிய பாண்டியனே! யென்றும் சங்கச்செய்யுட்கள், நெய்தனிலத்தலைவராகிய பரதருக்குரிய கொண்கன், துறைவன், சேர்ப்பன், புலம்பன், மெல்லன் என்னும் நாமங்களில் சேர்ப்பனென்னும் பெயரால் பாண்டியனை யழைப்பதாலும்,

விருத்தம்.

"பப்புரு வாக னென்னும் பரவனைப் பெற்றெ டுத்தாள்
செப்பரும் வலனு யர்த்த பார்த்தனுஞ் செழிய னோக்கி
இப்புவி யாள விந்த மகனைநா னுனக்கே யீந்தேன்
ஒப்புக வென்று மிக்க வுவகையாய்ச் சொற்றான் மன்னோ"

பப்புருவாகனென்னும் பாண்டியனைப் பரவனென "பரதவம்ச சரித்திர சங்க்ஷேபம்" கூ-வது கவி சாட்சிக்கின்றமையாலும், உண்மையை யுற்றுணர்ந்த வித்வசிரோமணிகள் பாண்டியனை வேடர் கோன், வேளாளர்கோன், மறவர்கோன், குறவர்கோன், பள்ளர் கோன், பறையர்கோன், சாணார்கோன், எனக்கூறாமல் மீனவர்கோ னெனச் சொல்லுவதாலும்,

விருத்தம்.

"அலைகட லரசு செய்யும் நெய்தலுக் கதிப ரானோர்
வலையது வீசி வேட்டை யாடிட வல்லோ ராகும்
கலையுறு சந்த்ர வம்ச பரவரே பாண்டியர் கண்டீர்
குலமதிற் பரவ ரல்லார் பாண்டிய ரென்றல் குற்றம்."

என சமஸ்கிருத வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ வெங்கட்டராமய்யர் அவர்கள் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ சங்கரசுப்பய்யர் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய "மதுரைப்பாண்டியர்" என்னும் வியாசத்தில் காணப்படுவதாலும்,

"ஓதல் வேட்டல் புரைதீரப் பெரும்பார் புரத்தல்
கரையறு படைக்கலங் கற்றல் * விசயம்."

(சேந்தன் திவாகரம்)

என்னும் க்ஷத்ரியர்க்குரிய அறுதொழில்களிலொன்றாகிய பெரும்பார் புரத்தலின் பொருட்டாய் ஏற்பட்ட கடல்வேட்டை வனவேட்டைகளுள், தேர்ச்சிபெற்ற நெய்த நிலவாசிகளாகிய பரத குலத்தவீர பாண்டியர்களது சந்ததியாரென்பது எவராலும்

* விசயம்=Victory இது போர்செய்து வெற்றி பெறலென்னு அர்த்தத்தையுடையது.

மறுக்கப்படாத சத்யமேயாம் (அறிவீனர்களுடையவும், காய்மகாரிகளுடையவும் கருத்தழிந்தது.)

" ஓதலே வேட்ட லீதல் உலகோம்பல் படை பயிற்றல்
மேதகு போர்செய் திட்டல் வேந்தர்செய் தொழில்க ளாறே.

எனத் திவாகரத்துக்குப் பின்னூலாகிய சூடாமணி நிகண்டில் முண்டல புருடன் விசயம் என்பதின் அர்த்தத்தை விளக்கிக்காட்டியிருக்கின்றமையால் ஈண்டு மிம்மொழிக்கு வேறே அர்த்தம் பொருந்தாதாகையால் உலகாள் வேந்தரெல்லாம் சாணூர் குலத்தவரேயெனக்கூறும் "அமரர் புராண" ஆசிரியரின் கருத்துப்பிசகென்பாம்.

வெண்பா.

" கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி." என்னும்

ஔவையார் திருவாக்கின்படி இலக்கண இலக்கியங்கள் கற்ற வித்வ சிரோமணிகள் இதிகாசபுராண சம்பந்தமான சரித்திரங்கள் வரைவதைக்கண்ணுற்று, அதனைச் சிறிதுங் கல்லாத சிறுவனாகிய யாம் எம்மையும் அவ்வித்வான்களிலொருவனாகப் பாவித்து " பாண்டியவம்சபாரம்பரை " என்னுமிந்நூலை வரையத் துணிந்தனம்.

கல்விக்கடலையுண்ட கவிவாணருக்கு முன் நெறிநின்றறியா அறிவிற் சிறியேன் பல கலைகற்று வெல்லத்துணிந்தோன் போற் சில கலைகற்றுச் சொல்லத்துணிந்த விதனைப் பிள்ளைச் சொல்லினுள்ள பிழைபோல் எள்ளத்துணியாதென் வெள்ளைச் சொல்லினுள்ளபொருளைக் கொள்ளக்கடவீர்களெனப் பிரார்த்திக்கின்றேன்.

உன்னத பரமண்டலத்தில் சருவேஸ்வரனுக்குத் தோத்திரமும், பூலோகத்தில் சுத்தமனதுள்ளவர்களுக்குச் சமாதானமு முண்டாகக்கடவது.

தூத்துக்குடி
5—8—1910

சுவர்னம் எட்வார்ட்.

# சிறப்புப் பாயிரம்.

இஃது

தென்மணவாபுரி அஷ்டாவதானி மகா-ள-ள-ஸ்ரீ சவிேயர் ஹென்றிலேயோ இன்ப கவிராயர் அவர்கள் பௌத்ரரும், லூயிஸ் அன்னப் பூபதிலேயோ பரதபண்டிதரவர்கள் புத்ரரும், "பரதவம்ச சரித்திர சங்க்ஷேபம்" என்னும் நூலினாசிரியரும், நமது ராஜவாசல் வித்வானுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ M. X. ஹென்றிலேயோ இன்ப கவிராயரவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

நிலமண்டில வாசிரியப்பா.

மழையது கலைமக ளுருவதை வளைந்து
விளைபொருளாகச் சங்கும்வெண் முத்தும்
நிரைநிரை கொண்ட நெடுங்கடல் சென்று
புரையறு திரையைப் பூர்ணமா யுண்டே
ஆத்தா ளுருவென வகன்றுயர் பரந்து
பார்த்தோர் நடுக்குறப் பர்வத மீதெம்
அரசனின் முரசென அலற விடித்து
விரிகதிர் வேலென மின்னியன் னவன்றன்
கொடையெனப் பொழிந்த குறை வினன்னீரே
தடையற மலையினின் றிடையறு தொழுகவப்
பானிக ரருவியைப் பள்ளரா முழுநர்
கானிடை மறித்துக் கழனியோங் குதற்காச்
சிறைசெய்து கழனியைச் சீர்பெற வுழுது
கறையினெல் விதைகளைக் கழனியிற் றெளித்து
நாற்றென வளர்ந்தபின் நன்கதை நடற்காப்
பாற்சங் கின்றவெண் பருந்திரண் மணிகள்
மடையூடு வரவே மகிழ்வொடு பொறுக்கித்
தடமுலை மாலையாச் சாத்திய வுழத்தியர்
பிடுங்கும் போது பிசகிலாப் பைங்கதிர்
தடமுலை பாயவத் தாளமும் பசுமைசேர்

மரகத மணியென வயங்கிடத் தகவாய்
நிரைவளம் பொருந்திய நேர்வளர் பாண்டி
நாட்டினை முறைவழா நெறிவழா நடுநிலை
காட்டியாண் டிடுமா கண்ய நே ரிறை யன்
குரைகடல் வளைந்த குவலய முழுதும்
ஒருகுடைக் கீழாள் உசிதவெண் டிங்கள்
கோத்திரத் துதித்த கோமக னேனைய
பார்த்திப ரடிதொழும் பரதமா பூபதி.
தன்குலத் துதித்த சார்வ பௌமனும்
மின்செறி சேலெனும் மீனக் கொடியைச்
சிமய வரையிற்றன் னெல்லையாத் தீட்டி
இமையவர் புகழு மெழிற்குல சேகர
பாண்டியன் றனது பவித்திர நிறைந்து
மாண்டக வோங்கு மைந்தராம் பரதர்தம்
பாரம் பரையைப் பழுதறு வசனமாச்
சீரார் சிறப்பொடு செழியர்தம் மிறையாம்
சிஞ்ஞோர் தொன்கபிரியல் தெக்குரூஸ் மோத்தவாஸ்
மஞ்ஞைவா கனனிகர் வழுதியாள் நாளில்
வரைந்து தந்தனன் வையகத் தினிதுவாழ்
விரிந்த கலைவல மேலோர் களிபெற
இவனா ரோவெனில் எமதுநன் மைத்துனன்
தவறா நலனுஞ் சால்பு முடையவன்
மத்தேஸ் எட்வர்ட் மாண்புடைப் புதல்வன்
சத்திய வசனன் தகவுசேர் கஸ்பார்
எட்வர் டென்னு மெழிற்புரு ஷோத்தமன்
பெட்பா யியற்றும் பெரியதோர் தவத்தின்
சேயனாத் துலங்குஞ் சிறந்த கல்விமான்
வயநற் குணமே இலகுநே ருளத்தன்
தமிழ்ப்பூர் வோத்திர சங்கத்தி னவயவம்
இமிழ்செஞ் சுவர்ண மெட்வர்ட் மன்னோ.

# சாற்றுக் கவிகள்.

---

இது

"தோத்திர ஜீவரத்தின" மென்னும் ஜெப நூலினாசிரியராகிய
தூத்துக்குடி மகா-ா-ா-ஸ்ரீ M. X. இராசையா ரூயின் மொரால்
பரதபாண்டியவர்மா அவர்களியற்றிய

பதினான்கு சீரிரட்டை யாசிரிய விருத்தம்.

---

தண்ணுலவு பரவைவா ழுயர்பாஞ்ச சன்னியந்
 தரளவான் மணிசொரிய வெண்
டரங்கமது கரைகொண்டு சேர்த்திடச் சேர்ப்பரின்
 தகைமைசேர் மாதர் கோத்துத்
தடமுலை பருகுதம் மழலைவாய் மதலைகள்
 தாமமா யணிய வந்தத்
தரளநீண் மாலையொளி வீசிடக் குமுதமலர்
 தழையவிழ் பாண்டி நாட்டை
மண்ணுலவு தென்றிசைத் தாமிர பருணிநதி
 வளர்மீனத் துவஜ மெனவே
மாற்றலர்க ளஞ்சிட மேருவினில் நாட்டியே
 மனுநீதி முறையி னாண்ட
மன்னராம் பாண்டியர்தம் வம்சபா ரம்பரையை
 மதுமொழுகு திவ்ய தமிழால்
மதியில்வல இதிஹாசர் மலர்மழை பொழிந்திதய
 மகிழ்வோடு கொள்ளை கொள்ள
விண்ணுலவு பன்னிரு மீனினை மகுடமாய்
 வேய்ந்தவெம் பனி மயத்தாய்
விரைகமழ் பூங்கழல் முடிமிசை கொண்டவன்
 விரதநல் லறன் வாய்ந்தவன்
வில்லுமிழு வுளையினா லிந்திரன் முடிதொலைத்த
 வேம்பணி வழுதி மரபோன்

வெற்றிமயி லேறுமென் தமையனுஞ் செந்தில்வாழ்
வேலனை நிகர்த்த திறலோன்
பண்ணுலவு கலைவலோன் கஸ்பாரெட் வார்ட்பிரபு
பௌரவன் அளித்த சுகுணன்
பண்டித சிரோமணி முத்தமிழ்க் கலைவாணி
பண்பா யணியு மார்பணி
பார்த்தனிகர் மேனியன் சொர்னமெட் வார்டினிது
பழுதற நன்கு தீட்டிப்
பன்னரு மெங்குலம் விளங்கிடத் தந்தனன்
பாரிலிவன் வாழ்க மன்னே.

---

இது
திருவனந்தபுரம் சன் ஜோசப்ஸ் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்
மகா-ா-ா-ஸ்ரீ
R. P. குழந்தைசுவாமி B. A., L. T., L. C. P., M. R. A. S.
அவர்களருளிய
அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

---

பன்னரிய பரதகுலப் பாண்டியரின் வம்சபரம் பரையா மிந் நூல், என்னயமும் பெருகுதமிழ் வசனமதி லிசைத்தெவர்க்கு மினிது தந்தான், மின்னுமணி பவளமொடு முத்தமெலாம் வாரியலை வீசுமாற்றூற், பொன்னகரோப் பாந்தூத்துக் குடிவாழ்சு வர்ன மெட்வாட் புலவ ரேறே.

---

இது
மதுரை செந்தமிழ்ச் சங்கத்து வித்வான்களிலொருவராகிய
பவித்திரமாணிக்கநகர் (கீழக்கரை) மகா-ா-ா-ஸ்ரீ
M. ஜோசப் டையஸ் அவர்கள் சொல்லிய
எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

---

நிலமக டனக்கு முகமென விளங்கி நெடும்புகழ் வாய்ந்தசீர் மந்த்ர, தலமதிற் றென்னன் குலமதி லுதித்த தகைமைசேர் எட்

வாட் வள்ளல், உலம்புகழ் பாண்ட்ய பாரம் பரையாம் உன்னரு மின்னநன் னூலே,நலந்திகழ் தமிழால் நானிலம் போற்ற நவின்றனன் மானில மாதோ.

இது

யாழ்ப்பாணம் "சன்மார்க்க போதினி"ப் பத்திராதிபரும்,
வலிகாமங்கிழக்கு விவாக ரிஜிஸ்ருரும், அச்சுவேலி ஜெனன மரண
ரிஜிஸ்ருரும் டிவிஷன் ஆபீசருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ
ச. தம்பிமுத்துப்பிள்ளையவர்களருளிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

---

பாண்டிய வமிச பாரம் பரைதனை யறிஞர் மெய்ச்ச
வேண்டிய விளக்கத் தோடு விரிவுறச் செய்தான் கல்வி
ஆண்டிடு தமிழ்ப்பூர் வோத்ர ஆராய்ச்சிச் சங்க வங்கம்
பூண்டிடு சுவர்னம் எட்வார்ட் புகழ்பெறு புந்தி யோனே.

வெண்பா.

பரதர் குலத்தோன் படர்கோவை மீது
கருதுவியா பாரிகஸ்பார் எட்வார்ட்—டருகுமரன்
தூத்துக்குடியான் சுவர்னம் எட்வார்ட் முன்னூல்கள்
பார்த்துரைத்தான் பாரம் பரை.

---

இது

தூத்துக்குடி அர்ச்சியசிஷ்ட பிரான்சீஸ் சவேரியார் கலாசாலைத்
தமிழ்ப்பண்டிதராகிய ஸ்ரீரங்கம் மகா-ா-ா-ஸ்ரீ
ஸ்ரீநிவாச ஐயங்காரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

---

பரதகண்ட மதிற்றிகழும் பாண்டியர்தம் பரம்பரையாஞ் சரிதம் தன்னை, வரதகுண னெனவெவரும் வாழ்த்துமெம் வள்ளலாம்

சுவர்ன மெட்வார்ட், கரதலா கமலமென வென்றுளும் விளங்கிடவே கருத்தா லாய்ந்து, சரதமுடனெவர்களுமே தான்வியப்பச் செந்தமிழாற் சாற்றினு னால்.

---

இது

முன்னீர்ப்பள்ளம், மகா-௱-௱-ஸ்ரீ பொன்னம்பலம்பிள்ளை அவர்கள் குமாரரும், ஸ்ரீவில்லிபுத்தூர் சி. எம். எஸ். ஹைஸ்கூல் தமிழ் பண்டிதரும், திருச்சிராப்பள்ளி தமிழ் பூர்வோத்ர ஆராய்ச்சி சங்கத்தின் அங்கத்தவருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ மு. பொ. ஈசுரமூர்த்தியா பிள்ளை அவர்கள் சொல்லிய

கட்டளைக்கலித்துறை.

---

பாண்டிய வம்ச பரம்பரை யாரும் பகுத்தறிவான்
வேண்டிய வாறு வகுத்துரைத் தான்வெகு நூற்கடலைத்
தாண்டிய தன்மையன் தக்கோன் எனும்கஸ்பரின் றநயன்
ஈண்டியல் தேர் "சொர்ணம் எட்வார்" எனும் பேர்க் கொண்டலே.

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

---

# பாண்டியவம்சபாரம்பரை

காப்பு வெண்பா.

உலகெலாம் போற்ற உயர்பாண் டியர்தங்
குலவியபா ரம்பரையைக் கூற—வலமுடனே
அண்டபகி ரண்டமும மனைத்தும்வாக் காலளித்துக்
கண்டகேளித் தோன்கழலே காப்பு.

## பாண்டிய நாட்டின் சிறப்பு.

சரஸ்வதியைப்போலுந் தவளநிறமுடைய முகிற்குழாங்கள்: புள்ளினமுலாவு மாகாயத்திடைப் பரந்துசங்கு, முத்து, பவள முதலியவை நிரைநிரையாய்க் குவிந்து கிடக்கின்ற குளிர்ச்சி பொருந்திய நெடிய சமுத்திரத்தின்கண்ணே சென்று, அதன் தெண்ணீரையுண்டு, பாவாணர்கள்போற்றரிய துவாரகாபுரிக் கிறைவனாகிய உவணகேதன மகாராஜனின் திருவுருக்கொண்டு, கொக்கரைக் கிரீடம்பூண்ட பாண்டியனது நாட்டில் வானகட்டைக்கீறி வளம்பொருந்திய செல்வத்தைத்தந்து தமிழ்முனிவனாகிய அகத்தியன் வாழும் பொதிபமலையிலே, அப்பாண்டியனின் வேலாயுதம்போல மின்னி அவன் முரசம்போல வொலித்து, அவனது கொடைக்கொப்பாகி மழையை வருஷிப்பதினாலுண்டான பால்போன்ற அருவிகள் அம்மலையில் குவிந்துகிடக்கும் யானைக்கோடாதியாய பல செல்வங்களையு மொருங்கே கொள்ளைகொண்டகன்று, தாமிரபருணி முதலிய புண்ணிய நதிகளாகப்பெருகி, கரைபுரண்டோடி மருதநிலஞ்சேர, உழவர்கள் அந்நீரையடக்கி, பல கால்வாய்கள்வழியாய்க் குளங்களிற் சேர்த்து, நிலங்களை நனைத்து, அருமையான நெல்விதைகளை விதைக்க, அவ்விதைகள் முளைத்துச் சிறிதே வளர்ந்து, திரவியத்தைக் கொண்ட ஈனர்களுடைய தலையைப்போல நிமிர்ந்துநிற்க, கொலைத்தொ

ழில்புரியும் நீண்ட கொம்புகளையுடைய மதயானைகளும், காரேரு மைகளும் முன்சொன்ன குளங்களிற்சென் றமுக்குவதால் ஆண் வாளைகள் ஆகாயத்திலெழுந்து, அங்கோங்கி வளர்ந்த பலாவின் கனிகளைப்போழ்ந்துடைக்க, அவைகளினின் றொழுகியதேனும், மாமரங்களிலே வாசஞ்செய்கின்ற மந்திக்கூட்டங்கள் தம் மார்பிற்றூங்கிய பார்ப்பினங்களுக்கு அம் மாங்கனிகளைக் கொய்தருத்துவதைக் கண்ணுற்ற முத்தாரம்பூண்ட மத்தகம்போன்ற முலைகளையும், நுண்ணிய இடையையுமுடைய வுழத்தியர்கள் சங்குகளைக்கொண்டு அம் மந்திகளையெறிய அம்மந்திகள் சினங்கொண்டு மாங்கனிகளைப் பறித்து அம்மாதர்கள்மேலெறிய, அப்பழங்கள் சிதறியொழுகிய தேறலும், மடையூடுசென்று முன்சொன்ன நெற்பயிர்களைப் பூரணமாய் வளர்க்கவும், அதிலுண்டாகிய கதிர்களின் பாரந்தாங்காமல் செல்வமும், ஞானமும் வாய்ந்த பெரியோர்களுடைய சிரங்களைப்போல் அப்பயிர்கள் தலைசாய்க்க, பழுத்த கதிர்களை மள்ளர்கள் கொய்து போரமைத்துக் கடாக்களைவிட்டுத் தெளித்து அடுத்தேற்குநர்க்குத் தாராளமாகக் கொடுத்து, செழிப்பதல்லாமல்; சந்தனமும், அகிலும் அடர்ந்த வனங்களிலே தங்கன்றை நினைந்து எருமைகள்பொழிந்த தீம்பாலை ஓதிமப்புட்கள் மிதமின்றி யருந்தியதனால் மயக்குற்று தாமரைக்கயங்களையடுத்து அம்மரைமலர்களிலே சங்கீன்ற வெண்முத்துக்களைத் தங்கருவென்று நினைத்து, அடைகாத்து வெட்கும் வளமுடையதும், வெள்ளியங்கிரிக் கிறைவனாகிய பரமசிவனே பரதனாகவும், பார்வதிதேவியே பரத்தியாகவும் வந்துதோன்றி மகிழ்ந்து திருவிளையாட்டயர்ந்தமையால் புண்யபூமியென்றும், பூலோக மோக்ஷமென்றும் ரிஷீஸ்வரர்களால் புகழ்ந்து கொண்டாடப்பட்டதும், கடல், மலை, ஆறு முதலியவற்றால் அரண்பெற்றதுமாகியநாடு பாண்டியநாடேயாம்.

---

## திருமந்திர நகரச்சிறப்பு.

பூமிதேவிக்குத் திருமுகமண்டலம்போலவும், திலதம்போலவும், நேத்திரம்போலவும், திருமங்கலநாண்போலவும், மார்பிலசையாநின்ற முத்தாரம்போலவும், மகாலட்சுமி வாசமாயிருக்கும் பொற்கமலம் போலவும் விளங்கி, ஆகாயமளாவிய மாடமாளிகைகளாலும், கூட

கோபுரங்களாலும், வேதவேதியர்கள்வாழும் விஸ்தாரம்பொருந்திய வீதிகளாலும், வீராதிவீரர்கள் வீற்றிருக்கும் ராஜவீதிகளாலும், குபேரசம்பத்தைப்பெற்ற வைசியர்கள்வசிக்கும் வீதிகளாலும், பல்வகைச்சூத்திரர்கள் வாசஞ்செய்கின்ற வீதிகளாலும், கல்விச்சாலைகளாலும், தொழிற்சாலைகளாலும், அன்னசத்திரங்களாலும், அலங்காரம்பொருந்திய ஆலயங்களாலும், நிறைந்து விளங்குநகரமெது வென்றால், பரமசிவன் தனது பத்தினியாகிய பார்வதிதேவிக்குத் திருமந்திரத்தை யுபதேசித்தருளிய திருக்ஷேத்திரமாகிய திருமந்திர நகரமேயாம்.

## அரசியல்.

ஆதியில் திருமாலும் தேவர்களுங்கூடித்திருப்பாற்கடல் கடைகிறபோது மந்தரகிரியாகிய மத்துச்சுழல தானேதறியாகியிருந்தும், விஷந்தோன்றினபோது அவ்விஷத்தின் சுவாலையடங்க வமுதத்திற்றோன்றியும், உலகம் குளிர்ச்சிபெறத் தனது சோடச கலைகளைவீசியும், எங்கும் பிரகாசிக்கப் பரமன் சடாமுடியின்மீதினிது வீற்றிருக்கும் வெண்மதிக்குலத்துதித்த யயாதிமகாராஜனின் சந்ததியிற்றோன்றிப் பாண்டிநாட்டைப் பாரம்பரையா யரசுபுரிந்துவரும் பரதகுலத்தில் * சிஞ்ஞோர், சிஞ்ஞோர்தொன் கபிரியேல் தெக்குரூஸ் லாசரூஸ் மோத்தவாஸ்பரதவர்மபாண்டியனென்னும் அரசன்தோன்றி, புலியும், பசுவும் ஓர் துறையில் நீர்பருகவும், சிங்கமும் யானையும் சினேகித்துக் கூடிவிளையாடவும், பூனையுமெலியு மொருமித்துலாவவும், எதிரிகளோடவும், வறியவர்கள் நாடவும், துர்ச்சனர்கள்வாடவும் திருமந்திரநகரில் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம்பண்ணி கீர்த்தியுடன் தர்மசெங்கோல் செலுத்திவருகின்றான். இப்பிரபு பாண்டியராஜசிம்மாசனத்துக்குரித்தான முறையைப் பாண்டியவம்சபாரம்பரையென்னு மிந்நூலின் கண்ணே தெளிவாகச்சொல்வாம்.

---

## உலகசிருஷ்டிப்பும் ஒப்பீர்வம்ச வரலாறும்.

சிறப்புப்பொருந்திய வுலகமெல்லாம்புகழும்படி ஞானாய், அநாதியாய், சரீரமில்லாதவனாய், சகலநன்மைச் சொரூபியாய், சர்வ

* சிஞ்ஞோர், சிஞ்ஞோர்தொன் என்பதற்கர்த்தம் [illegible]

வியாபகனாய், சர்வாதிகாரணனாய் விளங்கிய சருவேசுவரன் தம்மையன்றிவேறொன்று மில்லாதகாலத்தில் வானத்தையும், பூமியையும், சகல சராசரங்களையும் தமது வாக்கினாற் சிருஷ்டித்தபின், ஆதாம் என்னும் ஆதிமனுஷனையும், ஏவாள்என்னும் ஆதிமனுஷியையும் தமது கரங்களாற்படைத்தார்.

ஆதாம் ஏவாளைமணந்து காயீன், ஆபேல், சேத்முதலான குமாரவர்க்கங்களைப் பெற்றான். உலகசிருஷ்டிப்புக்குப்பின் 129ம்வருஷம் காயீன்தன்னிளையோனாகிய ஆபேலைக்கொன்று கடவுளின்சாபத்தையேற்றான். அப்பால் 235ம்வருஷம் சேத்என்பவனுக்கு ஏனோஸ்என்னுங் குமாரன் பிறந்தான். இவனுக்கு கேனானும், கேனானுக்கு மலாலியேலும், மலாலியேலுக்கு யாரேத்தும், யரேத்துக்கு ஏனோக்கும், ஏனோக்குக்கு மத்சலாவும், மத்சலாவுக்கு லாமேக்கும், லாமேக்குக்கு நோவாவும் சிரேஷ்ட புத்திரர்களாய்த் தோன்றினார்கள். இவர்களுடைய சந்ததியார் பூமியிலெங்கும் பலுகிப்பரவினார்கள். இவ்வண்ணம் பரவிய பிரஜைகள் மெய்யான தேவனையும், அவரருளிய அருள்வேதத்தையுமறந்து காதல் கவறாடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதன்மறுத்தலென்னும் பஞ்சபாதகங்களையுந் துணிந்துசெய்துவந்தமையால், சர்வவல்லபசருவேசுவரன்கோபமுற்று அவர்களை ஜலத்தினலழிக்க நினைத்தார்.

அப்போது சத்யவிரதனென்று பெயர்வழங்கிய நோவாஎன்பவன் நீதிமானாக விளங்கினான். இவனுக்குசேம், காம், யாப்பேத், என்று மூன்று புத்திரர்களிருந்தார்கள். சேம், காம், யாப்பேத் என்று சரித்திராசிரியர்கள் சொல்லியிருப்பினும் யாப்பேத்என்னுங் குமாரனே சிரேஷ்டன். (அஃதெங்ஙனமெனின்: உலகசிருஷ்டிப்புக்குப்பின் 1556ம்வருஷம் யாப்பேத்என்பவனும், 1558ம்வருஷம் சேம் என்பவனும், இவ்விருவர்களுக்குப்பின் காம்என்பவனும் பிறந்தான். ஆகையால் யாப்பேத்என்பவனே சிரேஷ்டபுதல்வன்.) இவர்கள் மூவருங் கலியாணஞ்செய்திருந்தார்கள். மட்டற்ற வல்லபத்தையும், அளவற்றபரிசுத்தத்தன்மையையுங்கொண்டிருக்கிறசருவேசுவரன் நோவாவைநோக்கி: பூமியானது பாவத்தால் நிறைந்திருக்கின்றது. மனுக்கள் தொடக்கமாய் மிருகங்களையும், பூமியிலுள்ளவைகள் தொ

டக்கமாய் ஆகாயத்தில் பறக்கின்ற பறவைகளையும் ஜலத்தினலழிக்கப்போகின்றோம். ஆகையால் நீ கொப்பேர்மரத்தாலோர் கப்பலைச்செய். அது முந்நூறுமுழநீளமும், ஐம்பதுமுழ அகலமும், முப்பதுமுழ உயரமும், மூன்றடுக்குகளும், அறைகளும், சாளரங்களுமுள்ளதாயிருக்கவேண்டும். அகத்திலும், புறத்திலும், கிசில் பூசவேண்டும், நீ உன்மனைவியோடும், மைந்தர்களோடும், அவர்களின் மனைவியர்களோடும் அந்தக்கப்பலினுள்ளே பிரவேசிக்கக்கடவாய். ஊர்வனவற்றிலும், பக்ஷி, மிருகங்களிலும் ஆணும் பெண்ணுமாக வகைக்கொருஜோடும், சுத்தமான மிருகபக்ஷிகளில் ஆணும் பெண்ணுமாக எவ்வேழுஜோடுகளையும், உன்னோடு கப்பலில் சேர்த்துக்கொள், உங்களுக்கும், அவைகளுக்கும் வேண்டியவுணவுக ளுன்னிடத்திலிருக்கட்டுமென்றார். நோவா கர்த்தர் சொல்லியபடியே செய்தான். சருவேசுவரன் தாம் நினைத்தகாரியத்தை முடிக்கும்படி ஏவினார். உடனே கரியமேகங்கள் தோன்றிக் கண்கள் பிளக்கும்படி மின்னிக் காதுகள் செவிடுபடும்படி முழங்கி, இடிமேலிடியிடித்து நாற்பதுநாள் அல்லும் பகலும் ஓயாது மழைபெய்து வெள்ளமுண்டானது. இவ்வெள்ளமானது பூலோகமெங்கும் பரவி பூமியிலுயர்ந்துள்ள பர்வதங்களுக்குமேல் பதினைந்துமுழ முயர்ந்து நூற்றைம்பதுநாளளவும் அதே நிலையில் நின்றமையால் மனிதரும், மிருகங்களும், ஊர்வன, பக்ஷி முதலியவைகளும் செத்தொழிந்தன. நோவாவும் அவன் மனைவியும், மைந்தர்களும், அவர்களின மனைவியர்களும், கப்பலிலவர்களோடிருந்த மிருக, பக்ஷிகளுமாத்திர மழியாமலிருந்தார்கள். பின்பு நீர் வடியத்தொடங்கினது. நோவாவினுடையகப்பல் அர்மேனியாதேசத்திலுள்ள அராரத்தென்னும் உயர்ந்த மலைச்சிகரத்திற் றங்கிற்று. நீர் வற்றியபின் நோவா முதலானஎண்மரும் மற்றப்பிராணிகளோடு வெளியேவந்து சருவேசுவரனைத் தோத்திரித்தார்கள். கர்த்தர் அவர்களைஆசீர்வதித்து இனி யுலகத்தை ஜலத்தினலழிப்பதில்லை யென்பதற்கறிகுறியாக மேகத்தில் வானவில் தோன்றும்படி செய்வோமென்று அவர்களுக்குச்சொன்னார்.

சருவேசுவரனுடைய ஆசீர்வாதமடைந்த நோவாவினுடைய மைந்தர்கள் மூவரில் நடுவுளோனாகிய சேம் என்பவனுக்கு எலாம், அசூர், அர்பக்சாத், லூத், ஆராம் என்று ஐந்துமக்கள் பிறந்தார்கள்.

இவர்களுள் அற்பக்சாத், சாலாகைப்பெற்றான். சாலாகு: ஏபேறா வைப்பெற்றான். ஏபேரு: பலேக், யொக்தான் என்பவர்களைப் பெற்றான். யொக்தான்: அல்மோதாது, சாலேப், அசர்மாவேத், யாராக், ஆதோராம், ஊசால், தேக்கலா, ஓபால், அபிமயேல், சேபா, ஓப்பீர், எவிலா, யோபாப் என்பவர்களைப் பெற்றான். இவர்களும் இவர்களுடைய சந்ததியாரும், காம், யாப்பேத் என்பவர்களுடைய சந்ததியார்களோடு சினேயார்தேசத்திலே நீர்வளமும், நிலவளமும் பொருந்திய வோர் நல்லிடத்தைத் தெரிந்துகொண்டு அங்கேபோய் வாசம்பண்ணினார்கள். அக்காலத்தி லிவர்களெல்லோரு மொரே பாஷையைப்பேசி வந்தார்கள். இவர்கள் தங்களுடையபெயர் உலகத்தின் அந்தம்வரை பிரகாசிக்கும்பொருட்டு அவ்விடத்திலோர் சிறந்த பட்டினத்தையும், அப்பட்டினத்தோடு ஆகாயமளாவிய வோர் கோபுரத்தையுங் கட்டத் தீர்மானித்தார்கள். அவர்கள் நினைத்தபடியே பட்டினத்தைக் கட்டிமுடித்து கோபுரத்தை மேக மண்டலத்தின்மே லுயரும்படி நாற்பத்துமூன்றுவருஷகாலமாய்க் கட்டிவந்தார்கள்.

அப்போது சருவேசுவரன்: இவர்களெல்லோருமொரேபாஷைக் காரர்களாயிருப்பதினால், ஏககூட்டமா யிருந்துகொண்டு தாங்கள் நினைத்தவைகளை யெல்லாம் செய்பலாம். அவைகளைத் தடுத்தழிக்க வல்லவரொருவருமில்லையென் றெண்ணி இறுமாப்புக்கொண்டிருக்கிறார்களென்றுகண்டு, இவர்களுளொருவர் பேசுவதை மற்றொருவரறியாதபடி இவர்கள்பாஷை தாறுமாறாகக் கடவதென்றார். அந்தக்ஷணமே பாஷை பிரிவுபட ஒருவன் பேசுகிறது மற்றொருவனுக்கு விளங்காமலும், வேறொருவன் சொல்லுவதை இன்னொருவன் கண்டுபிடிக்கக்கூடாமலும் போயினமையால் கல்லைக்கேட்கிறவனுக்கு மண்ணையும், மண்ணைக்கேட்கிறவனுக்குத் தண்ணீரையும், தண்ணீரைக் கேட்கிறவனுக்குக் கயிற்றையும், கயிற்றைக்கேட்கிறவனுக்குக் கம்பையுங் கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அதனால் அந்தவேலை நிறைவேறாமற்போயினதுமன்றி அங்கே கூடியிருந்தவர்களும் பலபக்கங்களிலும் பிரிந்துபோனார்கள்.

இப்படிப் பிரிந்துபோனவர்களுள் சேம்என்பவனுடைய வம்சத்தில் யொக்தானென்பவனுக்குப் பிறந்த பதின்மூன்றுமக்களிலொருவனாகிய ஒப்பீர்என்பவன் தன்மனைவி, மக்களோடு மணிமருவு மலைகளும், நதிகளும், சோலைகளுந்திகழ் இந்நிலத்தை (நாம் வாசஞ் செய்யுமிந்தத் தேசத்தை, வந்தடைந்தான். நாம் வாசஞ்செய்யுமிந்தத் தேசத்திற்கு பூர்வத்தில் இவனால் ஒப்பீர்தேசமென்று பெயர் வழங்கிவந்தது. எல்லாவளமும் பொருந்திய இந்தத்தேசத்திலே ஒப்பீருடைய சந்ததியார் பலுகிப் பரவினார்கள். அவர்களுக்குள்ளே மேலான பிரபுக்களும், அரசர்களுந்தோன்றி ஒப்பற்றசெல்வத்துடன் வாழ்ந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் மெய்ஞ்ஞானமற்று அஞ்ஞானமென்னு மந்தகாரத்திடையே யமிழ்ந்திக்கிடந்தார்கள்.

---

## ஒப்பீர்தேசத்தில் ஆரியர் வந்த வரலாறு

அக்காலத்தில் வடமேற்கே பல்லாயிரங்காதத்திற் கப்புறமுள்ளதும், ஐரோப்பாக் கண்டத்தி னோர்பகுதியுமாகிய ஸ்காந்திநேவியமென்றவிடத்திலிருந்து ஆரியரென்ற ஜாதியார் புறப்பட்டு நாலாபக்கங்களிலுஞ் சென்றார்கள். இவ்வண்ணம் சென்ற ஆரியருள் ஒரு பிரிவினர் மத்திய ஆசியாவின் மேற்குப்பாகத்திலுள்ள துருக்கிஸ்தானமென்னுமிடத்தில் வந்து தங்கினார்கள். இவர்களே கிறிஸ்து பிறக்க இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன்னே கைப்பர்க் கணவாயின்மார்க்கமாய் ஒப்பீர்தேசத்தினுள்ளே புகுந்து, சிந்துநதிதீரங்களிற் குடியேறினார்கள். இங்ஙனம் ஸ்காந்திநேவியமென்றவிடத்தினின்று பிரிந்து பற்பலவிடங்களுக்குஞ் சென்ற ஆரியர்களதுபாஷையாகிய ஆரியமானது இலத்தீன், கிறீக், எபிரேயம், சமஸ்கிருதம் முதலிய பல பிரிவுகளாயின. இதில் சமஸ்கிருதம்பேசும் ஆரியர்களே யிங்குவந்து குடியேறினார்கள்.

இவ்வாறு அநேகவருஷங்கள் சென்றபின் ஆரியர்தொகையிலும், பலத்திலுமதிகரித்து ஒப்பீர்தேசத்தின் மத்தியபாகத்தைத் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டார்கள். இவர்கள்ஜயித்தபூமிக்கு ஆரியவர்த்தம் (ஆரியவாசம்) என்று சொல்லப்பட்டது. இவர்கள் வந்து குடியேறிய இடத்தைப்பற்றி யாரவீகதேசத்தார் இவர்களைச்

சிந்துக்களென்றும், இவர்களாண்டதேசத்தைச் சிந்துதேசமென்றும் பேரிட்டழைத்துவந்தார்கள்.

ஆரியர் கல்வியிற் சிறந்தவர்களாயும், சோதிடசாஸ்திரத்தில் வல்லவர்களாயும் விளங்கினார்கள். அக்காலத்தில் வாழ்ந்திருந்த ஒப்பீர்வம்சத்தரசர்களிடமிவர்கள்சென்று, இன்னநாளையி லின்னவேளையில்சூரியனைப் பாம்புவிழுங்கி இன்னநேரத்தில் கக்கிவிடுமென்றும், அப்பால் இன்னநாளையில் இன்னவேளையில் சந்திரனை யரவு தீண்டுமென்றும் சொன்னார்கள். அவர்கள் சொல்லியவண்ணமே சூரிய, சந்திர கிரகணங்களுண்டானதைக் கண்டு மெய்ஞ்ஞானமற்றவர்களாகிய ஒப்பீருடைய சந்ததியார் அதிசயித்து இவர்களென்ன பின்வருவதை முன்னுரைக்க வல்லவர்களாயிருக்கிறார்கள்! ஆகையால் இவர்கள் தேவர்களென்பதற்கு ஆக்ஷேபணையில்லையென்று அவர்களுக்குத் தேவாராதனைசெலுத்தத்தொடங்கினார்கள். கபடநெஞ்சுடைய வஞ்சகர்களான அவ்வாரியர்கள் இன்றுதான் தாங்களெண்ணியவெண்ணம் நிறைவேறிற்றென்றகமகிழ்ந்து, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்னும் முன் ஜாக்கிரதையோடு, தங்களது கண்யததிற்குப் பழுதுவாராமல் தங்களைத் தேவர்களாக அந்த ஒப்பீரவம்சத்தார் பாவிக்கவும், அத்தால் தாங்கள்வெகு செல்வாக்கைப்பெற்றுச் சுகமாய்க் காலத்தைக்கழிக்கவு மெண்ணிக் கபடஎண்ணத்துடன் நான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம் முதலியவைகளையுண்டுபண்ணி அவர்களுக்குப் போதித்துவந்தார்கள்.

இவ்வண்ணம் ஆரியர் கற்பித்தவைகளையெல்லாம் ஒப்பீருடைய சந்ததியாரொப்புக்கொண்டமையால் அவர்கள்சொன்னதெல்லாம் வேதமும், வைத்ததெல்லாம் சட்டமும், படைத்ததெல்லாம் தெய்வமுமாகி முப்பத்துமுக்கோடிதேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கின்னர, கிம்புருடர் முதலானவர்களு முண்டானார்கள். ஒப்பீர்வம்சத்தாரின்சாஸ்திரங்களும், இதிகாசபுராணங்களும் அழிந்தொழிந்தமையால் யாம் ஒப்பீர்வம்சத்தாருடைய புராணங்களின்வழியேசென்று இச்சரித்திரத்தைப் பூர்த்திசெய்வதற்கசாத்யமாயினதுபற்றி ஆரியர்களெழுதிய புராணங்களின்வழியேசென்று பாண்டியவம்சபாரம்பரையைச் சொல்வாம்.

# சந்திரகுல ராஜர்கள் சரித்திரம்.

சகல வேதபுராணங்களினாலே பிரசித்தராயும், மனதினாலே மாத்திரம் அறியத்தக்கவராயும், உருவமில்லாதவராயும், சர்வாந்திரியாமியாயும், இவ்வளவவ்வளவென்று மதிப்பிடக்கூடாதவராயும், பிறப்பிறப்பில்லாதவராயும், நாரமென்ற பெயரையுடைய ஜலத்தில் வசித்தலினாலே ஸ்ரீமந்- நாராயணனென்று சொல்லப்பட்ட அந்தப்பரமாத்மாவினுடைய நாபிக்கமலத்துதித்தவரான பிரம்மா பிரஜாசிருஷ்டிசெய்யவுன்னிப் பிருகு, புலஸ்தியன், கிருது, அங்கிரசு மரீசி, அத்திரி, தக்கன், வசிஷ்டன், நாரதனென்று சொல்லப்பட்ட ஒன்பதுபுத்திரர்களை மனதினாலே சிருஷ்டித்தார். இவ்வொன்பதின்மர்களும் பிரம்மாவுக்குச் சமானஸ்தர்களாயிருந்தபடியினாலே நவப்பிரம்மாக்களென்றழைக்கப்பட்டார்கள். இந்த நவப் பிரம்மாக்களிலொருவனாகிய அத்திரி பிரஜாபதி யென்பவன், தக்கனப்பிரஜாபதி என்பவனுக்குச் சுவாயம்புவமனுவின் சிரேஷ்ட புதல்வியாகிய பிரசூதி யென்பவளிடமாய்ப் பிறந்த இருபத்துநான்குகன்னியருளிருபத்தோராவது கன்னிகையாகிய அனசூயையென்னு மாதை மணந்து அவளிடமாக புகழ், கல்வி, வலி, வெற்றிமுதலாகிய பதினாறுபேறுகளையும் பதினாறுகலைகளாய்க்கொண்ட நிலையான கீர்த்தி பொருந்திய சந்திரனையும், துர்வாசனையும், தத்தாத்திரேயனென்ற மகா யோகியையும் பெற்றான்.

சிருஷ்டி, திதி, லய, த்ரோபவ, அனுக்கிரகமென்று சொல்லப்பட்ட பஞ்ச கிருத்தியங்களின் முதன்மையான படைக்குந்தொழிலைக்கொண்ட பத்மாசனனாகிய பிரம்மதேவன் அத்திரிப் பிரஜாபதியின் புத்திரனாகிய சந்திரனைச் சகல வேடாதிகளுக்கும், பிராமணர்களுக்கும், நட்சத்திரங்களுக்கும் அதிபதியாய் மகுடாபிஷேகம்செய்தார். சதுர்முகப் பகவானால் கிரீடாபிஷேகம்பெற்ற சந்திரன் தன்னுடைய மேலான கௌரவத்தைக் காட்டும்பொருட்டு ராஜசூயயாகஞ்செய்தான். அன்றுமுதலிவன் குலத்தவர்க்குச் சந்திரகுலத்தவரென்றும், இவனரசாட்சிசெய்த நாட்டிற்குச் சந்திரநாடென்றும் பெயர்வழங்கலாயிற்று. (சந்திரனுக்குரிய பெயர்களில் இந்துவென்னும் நாமமுமொன்றாகையால் இவனாண்டநாட்டை இந்துநாடென்றும், அந்நாட்டுக் குடிகளை இந்துக்களென்றும் சொல்வதுமுண்டு.)

இவ்வரசன் தானடைந்த மகிமையினாலும், அதிகாரத்தினாலும் மதமுங் கர்வமுமுடையவனாகி, சகலதேவர்களுக்குங் குருவாகிய பிரகஸ்பதியின்மனைவி தாரையென்பவளை யவள் பர்த்தாவினிடமிருந்த பகரித்துக்கொண்டான். இச்செய்தியைப் பிரகஸ்பதி அன்னவாகனனாகிய பிரம்மாவுக் கறிவிக்க, பிரம்மா சந்திரனிடத்திற்கெழுந்தருளி வந்து, தாரையை அவள் கணவனிடம் விட்டுவிடும்படி புத்திசொன்னார். இன்னமும் ரிஷீஸ்வரர்க ளெல்லோரும் பிரகஸ்பதியின்பொருட்டுச் சந்திரனிடத்திலிரந்து மன்றாடினார்கள். சந்திரன் இவர்களின் வேண்டுதலுக்குக் கிஞ்சித்து மனமிளகாதவனாயிருந்தபடியினாலே யுத்தத்திற்கிடமுண்டாயிற்று.

சிவன் அங்கிரஸினிடத்தில் வித்தைகற்றவராகையால் தமது குருபுத்திரராகிய பிரகஸ்பதியின்பக்கத்தில்தேவசைனியங்களோடு வந்துசேர, பிரகஸ்பதியினிடத்தில் பகைகொண்ட சுக்கிரனும், அவன் சிஷ்யர்களான ஜம்பன், கும்பன் முதலான சகல தைத்ய தானவர்களும் சந்திரனுக்குப் படைத்துணைவரானார்கள். இந்தயுத்தத்தின்போது தேவர்களை யசுரர்களும், அசுரர்களைத் தேவர்களும் வெற்றிகொள்ளவெண்ணி யொருவரையொருவர் வெட்டியும், குத்தியும், தள்ளியும், உதைத்தும், மிதித்தும், அடித்தும், அஸ்திரசஸ்திரங்களைப் பிரயோகித்தும் அட்டகாசஞ் செய்தார்கள். இவ்வகோர யுத்தத்தா லுலகினரெல்லோரும் மனக்கலக்கமுற்றுப் பிரம்மதேவனிடத்தில் சரணம்புக, பிரம்மா பிரசன்னமாகிச் சந்திரனைச் சமாதானப்படுத்தித் தாரையை பிரகஸ்பதியோடனுப்பிவைத்தார். யுத்தம் முடிந்தது. தாரை சந்திரனின்மேற்கொண்ட காமத்தினாலுண்டான யுத்தமாகையாலே இதற்கு "தாரகாமயம்" என்று பெயர் சொல்லப்பட்டது.

தாரை சந்திரனைவிட்டகலுங்கால் கர்ப்பமடைந்திருந்தவளாகையால் சிறிதுகாலத்துக்குப்பின், அம்புவியோர் வியக்கத்தக்கவோராண்மகவையீன்றாள். பிரகஸ்பதி அக்குழந்தை தன்விந்துக்குப் பிறந்திருக்கலாமென்றெண்ணி யதன்மேலதி விருப்பமுற்றிருந்தார். தாரை குழந்தைபெற்ற செய்தியைச் சந்திரனறிந்தபோது அக்குழந்தை தன்விந்துக்குப்பிறந்ததென்று பிரகஸ்பதியோடு வார்த்தையா

டத் தொடங்கினன். இவர்களிருவரும் பிள்ளையின்பொருட்டு வார்த்தா டுவதைத் தேவர்கள்கேட்டுத் திடுக்கிட்டு ஏது இவ்விருவர்களுக்கும் மீண்டும் சண்டை மூண்டுகொள்ளும்போலிருக்கின்றதே யெனப் பயந்து சண்டைக்குமுன் சமாதானஞ்செய்வதே யுக்தமெனநினைந்து எழுந்தருளிவந்து தாரையைநோக்கி: தையலே! இச் சிறுவன் குரு வுக்குப் பிறந்தவனு? அல்லது உடுபதிக்குப் பிறந்தவனு? உள்ளதை யொழியாமற்சொல்லென அவள் அமுதகிரணனுக்கே யிக்குழந்தை யைப் பெற்றேனெனக்கூறினள். அப்படியானல் பிதாவினிடத்தில் பிள்ளையை யொப்புவிக்கும்படி தேவர்கள் சொல்லப் பிரகஸ்பதி குழந்தையைத் தண்ணவனிடத்தி லொப்புவித்தார்.

சந்திரன் அகங்குளிர்ந்து, முகமலர்ந்து மகனைத்தழுவி முத்த மிட்டுக் குழந்தாய் நீ மிகவும் புத்தியுள்ளவனுகையினுலே யுனக்குப் புதனென்னும்பெயர் தந்தேனென்றுன்.

---

## சூரியவம்ச வரலாறு.

சர்வலோக கர்த்தாவாயும், பகவானுயுமிருக்கின்ற ஸ்ரீமந் நாரா யணனுடைய நாபிக்கமலத் துதித்தவரான பிரம்மா பிரஜா சிருஷ்டி செய்யவுன்னி நவப்பிரம்மாக்களைப்படைத்தாரன்றே? அவர்களில் மரீசி என்னும் மகரிஷியின் மைந்தனுகிய காசிபன் என்பவன் தன் பிதாவின் சகோதரனுகிய தக்கனப் பிரஜாபதிக்கு அசிக்கினியென் பவளிடம் பிறந்த அறுபது பெண்களிலொருத்தியாகிய அதிதியென் பவளை விவாகஞ்செய்து, அவளிடமாய்த்தாதுருமித்திரன், அரிய மான், சக்கரன், வருணன், அமிசுபகவன், தரணி, இருதுவன், விசுவாசன், பூஷன், சவித்திரன், துவஷ்டான், விஷ்ணு வென்னும் பன்னிருசூரியர்களைப் பெற்றுன். இப்பன்னிருவர்களில், விசுவாச னென்னும் சூரியன்றுன் சூரியகுலத்திற் காதியரசன். இவன் முதல் சூரியகுலக்ஷத்திரியர்களும், சந்திரன் முதல் சந்திரகுலக்ஷத்திரியர் களுமுற்பத்தியானுர்கள். இவ்விசுவாசனென்னும் சூரியனுக்குச் சரணியுவென்னும் பெண்ணிடம் வைவச்சுதமனுவும், இம்மனுவுக்கு இளையென்னும் பெண்ணும் பிறந்தார்கள். இவளைச்சந்திர புத்திர னுகிய புதன் மணந்து புரூருவனைப் பெற்றுன்.

# புரூருவச் சக்கரவர்த்தி சரித்திரம்.

அழகு பொருந்திய வமுதககிரோனின் குலத்துதித்தவனாகிய இவன் சகல சாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, அநேக யாகங்களைச் செய்து சக்கரவர்த்தி யென்னும் பட்டத்தைப் பெற்று, புலியும் பசுவுமோர்துறையினீர்பருகும் படியாயரசியற்றினான். இவன் முதல் சந்திரகுலத்தவர்க்குப் * பரவரென்னும் பரியாயநாமமுண்டாயிற்று. இவனோர்நாள் தனது நந்தவனத் துலாவிக்கொண்டிருக்கும்போது ஆடகலோகப் பெண்களிலொருத்தியாகிய ஊர்வசி யென்பவள் மாலைப்பொழுது மலர்கொய்துவர இந்திரகாவிற்குச் சென்றாள்.

அங்கு இவள்வருகைக்காக எதிர்பார்த் தொளித்திருந்த அசுரர்கள் இவளைத்துராகிருதமாய்ப்பிடித்துத் தேரின்மேலேற்றிக்கொண்டு தங்களிருப்பிடத்திற்குச் செல்லுகையில் அவளலறுவதைச் செவியுற்றசக்கரவர்த்தி இதென்ன; ஆகாயத்திலசரீரிபுலம்புகின்றதேயென்றண்ணாந்துபார்த்தான். அந்தரத்தில் வாயுவேகமாகச் செல்லும் இரதமொன்றில் அசுரர்கள் ஊர்வசியைப்பலாத்காரமாய்ச்சிறையெடுத் தேகுவதையும், அவள் புலம்புவதையும் கண்ணுற்றுச் சக்கரவர்த்தி சாரதியை நோக்கி: ஓ சாரதி! இதென்ன அநீதி! இந்திரலோகசுந்தரமங்கையாகிய ஊர்வசியையல்லோ வசுரர்கள் சிறைபிடித்தேகுகின்றார்கள். ஐயோ பாவம்! இவளை மீட்க வல்லவரொருவரும் ஆடகலோகத்தில்லையா? நல்லது சீக்கிரம் இரதத்தைக் கொண்டுவா வெனச்சொல்லி வாய்மூடுமுன்னே சாரதியானவன்

---

**விருத்தம்.**

*"இன்ன புருருவ னுதியா யெங்குலத் தெவர்க்கும்
மன்னு பௌரவர் பரவராய்ப் பெயர்மரு வியதால்
அன்ன சந்திர குலத்தவ ரென்னுநா மத்தின்
பின்னு மிப்பெயர் பிசகறத் துலங்கிய வன்றே."

என்று மகா-௱-௱-ஸ்ரீ ம. ச. ஹென்றி லேயோன் இன்பகவிராயர் அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய "பரதவம்ச சரித்திர சங்க்ஷேபம்." என்னும் நூலிலும், "பரவர்" என்பது "பௌரவர்" என்னும் வடமொழியின்திரிபு என்று ஸ்ரீலஸ்ரீ சுமங்கலசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய "ஹித்தியாசவருணாவ" என்னும்பிரபந்தத்திலும் கூறப்பட்டுள்ளன.

மனோவேகத்திலும் அதிவிரைவாய்ச் செல்லக்கூடிய திவ்ய இரத மொன்றைக் கொண்டுவந்து சக்கரவர்த்திக்கு முன்னே நிறுத்தினன். அதிலே அவனேறிக்கொண்டு, தேவர்களாலும் வெல்லுதற்கரிய அந்த வசுராகளைமறித்து, வில்லைவளைத்துக் கணைகளைத்தொடுத்து, ஊர்வசியை மீட்டு இந்திரலோகஞ்சென்று, தேவேந்திரனைக்கண்டு, ஓ தேவராஜேந்திரா! அக்கிரமமிகுந்த அசுரர்கள் சிறைபிடித்துச் சென்ற ஊர்வசியை இதோ மீட்டுவந்தேன். அவளை யொப்புக் கொள்ளுக வென்று சொல்லி வணங்கினன். ஊர்வசியின்பொருட்டு மனக்கிலேசங் கொண்டிருந்த இந்திரன் அவளைக்கண்டவுடனே ஆனந்தங்கொண்டு புரூருவச் சக்கிரவர்த்தியைப்பார்த்து: கயிலையங்கிரிக்கிறைவனாகிய சிவபெருமானது திருமுடியின்மேல் என்றும் மங்காதொளிரும் வெண்மதிக்குலத்தோய்! நீ மகா பராக்கிரமசாலி. சத்தியம், தருமம், இராஜநீதி முதலிய சுபலட்சணங்களுன்னிடத்திற்றான் குடிகொண்டிருக்கின்றன. ஏனெனில்; இந்த வூர்வசியை அசுரர்கள் சிறைபிடித்தேகுமுன் இவளென் சுவாதீனம். அசுரர்கள் வசம் சிறைப்பட்ட காலத்தில் இவளவ்வசுரர்கள் சுவாதீனம். அவ்வசுரர்களிடமிருந்து இவளை நீ சிறை மீட்டகாலத்திலிவளுனது சுவாதீனம். இது மனுதர்மசாஸ்திரத்தின்விதி. இதை நீ யறிந்திருந்தும் இவளையுனது சுவாதீனப்படுத்திக்கொள்ளாது என்னிடத்திற் கொண்டுவந்த வுனது மேலானகுணத்தை யானென்னவென்று புகழுவேன்? உன்னைப்போலும் மன்னனிப்பூவில் பிறப்பதரிது. ஓ! சக்கரவர்த்தி! நீ இவ்வூர் வசியின்பொருட்டு அதிசிரமப்பட்டு இவளை அவ்வசுரர்களினின்று மீட்டதனல், நீஇவளையழைத்து உன்மனைக்கேகி சுகானுபோகங்களை யனுபவிக்கக்கடவாய் என்று சொல்லி, பின் ஊர்வசியைப் பார்த்து: ஓ பெண்ணே ஊர்வசி! நீ இந்தப் புரூருவச் சக்கரவர்த்தியோடு பிரயாகாபுரிக்குச்சென்று அவன் மனமகிழும் படி யவனைக்கூடி ஓர் புத்திரனைப் பெற்று, அவனிடத்தொப்புவித்து யதாப்பிரகாரம் தெய்வலோகம்வந்து சேரென்று ஆக்ஞாபித்தான்.

தேவேந்திரனது கட்டளைப்பிரகாரம் புரூருவச்சக்கரவர்த்தி ஊர்வசியையழைத்துக்கொண்டு தன்நகர்போய்ச்சேர்ந்து, இரதியும் மதனும்போலிருவருங் கூடிவாழுநாளில் ஆயுவென்னுமோர் புத்தி

ரன்தோன்ற, ஊர்வசி அப்புத்திரனைச் சக்கரவர்த்தியினிடத் தொப்புவித்துத் தேவேந்திரனது கற்பனைப்பிரகாரம் சுவர்க்கலோகத்திற்குச் சென்றாள். புரூருவச்சக்கரவர்த்தி தன்மகன் ஆயுவுக்கு மகுடத்தைச்சூட்டி அரியதவத்தைச் செய்து வீட்டையடைந்தான்.

---

## ஆயுவென்னும் அரசன் சரித்திரம்.

ஆயுவென்பவன் தந்தையினு மெண்மடங்கதிகந் தர்மத்தைச் செய்து, நாகராஜன்மகளை மணந்து நகுஷன், சந்திரவிருத்தன், இரம்பன், இரசி, அனேநசு என்னும் ஐந்துமக்களைப் பெற்று, முதியோனாகியநகுஷனுக்குமுடியைச்சூட்டி, சர்வகாமியார்த்தங்களினின்றும் மனம்வெறுத்து, பூர்வகன்மவினையை நசிப்பித்து, தவம்செய்து புண்யலோகமடைய மனத்தைத் திடப்படுத்திச் சுகமே வனத்திற்குச் சென்றான்.

## நகுஷராஜன் சரித்திரம்.

இந்த நகுஷனென்னுமரசன் நவகண்டங்களுக்கு மதிபதியாய் மகுடம்பூண்டு, அரசர்க்குரிய பஞ்சகுழுவினரோடுங்கூடி யரசியற்றி நூறு அசுவமேதயாகங்களைச் செய்து, சுவர்க்கத்திற் கிறைவனாகிய விந்திரனை யோடியொளிக்கும்படியாகத் துரத்திவிட்டு, தானிந்திரப் பட்டத்தைப்பெற்று வாழ்ந்துவருநாளில் யயாதி, சங்கியாதி, பிரயாதி யென்று மூன்று குமாரர்களைப் பெற்று, பழைய விந்திரனின் மனைவியைச் சேரக்கருதி முனீஸ்வரர்களாற் சுமக்கப்பட்ட வோர் பல்லக்கிலேறிச் செல்லும் வழியில் அகத்தியமுனியின் சாபத்தாற் சர்ப்பமாயினான்.

## யயாதிமகாராஜன் சரித்திரம்.

சுவர்க்கத்திற்கிறைவனாக விளங்கிய நகுஷராஜனின் சிரேஷ்ட புதல்வனாகிய யயாதியென்பவன் தன்பிதாவின் மகுடத்தைத்தாங்கி இம்மை, மறுமை யென்னு மிரண்டினது தன்மையையுமுணர்ந்து, அறம், பொருள், இன்பம், வீடென்னும் நாற்பொருளையுந்தேர்ந்து

மெய்யானகடவுளினது திருவடியைமனத்திலிருத்தி, நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு என்னும் சப்ததீவுகளி லுள்ளோரும் மதிக்கும்படியாயரசியற்றிவருநாளிலோர்நாள் மந்திரி பிரதானி முதலிய உத்தியோகஸ்தர்கள் புடைசூழ மிருகவேட்டை யாட வனத்திற்குச் சென்றான்.

---

# சன்மிஷ்டை தெய்வயானை யென்னும் இரு பெண்களின் சரித்திரம்.

ஆடகலோகத்தார் கிடுகிடெனநடுநடுங்கத்தக்க வாளாயுதத் தையுடைய் அசுரர்குலத் தலைவனாகிய விடப்பன்மன்மகள் சன்மி ஷ்டையும், சுக்கிராசாரியின்மகள் தெய்வயானையும் ஒருநாள்நீராடும் பொருட்டுத் தோழியர்களோடு பொற்றாமரைத் தடாகத்துச்குச் சென்று நீர்விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்தவேளையில் சுழ ல்காற்றொன்று தோன்றிக் கரையின்மேல் வைக்கப்பட்டிருந்த கன் னியர்களினுடைகளையெல்லாம் பந்துபோ லொன்றாகத்திரட்டியோர் மூலையிற் கொண்டுபோய் ஒதுக்கிவிட்டது. மங்கையர்கள் நீராட வந்து வெகுநேரமானதுகண்டு, தெய்வயானையைத்தவிர மற்றனைவ ருங் கரையிலேறி மூலையிலொதுங்கிக்கிடந்த வஸ்திரங்களில் தத்தங் கைகளிலகப்பட்டவைகளை ஒவ்வொருவரு மணிந்துகொள்ள இராஜ புத்திரியாகிய சன்மிஷ்டை குருகுமாரியாகிய தெய்வயானையின் வஸ்திரத்தையுடுத்திக்கொண்டாள். அப்பால் தெய்வயானை தீர்த் தமாடிக் கரையில்வந்தபோது தாதியர்கள் சன்மிஷ்டையின் துகிலை க்கொண்டுபோய் அவளுக்குக்கொடுக்க, அவளவ் வஸ்திரத்தைக்கண் ணுற் பார்த்துவிட்டு அது என்னதன்றே இதைவைத்துவிட்டு என் சொந்த ஆடையைக் கொண்டுவாருங்களென்று சொன்னாள். பாங் கியர்களவளை நோக்கி ஓ! அம்மணீ! உமது ஆடையை நம்மிராஜகு மாரத்தியணிந்திருக்கின்றாள். ஆகையால் அவ்வம்மனுடைய துகிலை உமக்குக் கொண்டுவந்தோமென்று சொன்னார்கள். அதற்குள்ளாக அரசன் புத்திரியாகிய சன்மிஷ்டையும் சமீபத்தில் வந்து, தெய்வ யானையைப்பார்த்து ஓ குருகுமாரியே! சொற்பமாகியவுன்னுடையை

யானுடுத்திக்கொண்டு எனது விலையேறப்பெற்ற வஸ்திரத்தையுன்க்குக்கொடுத்தேன். நீ அதைச் சந்தோஷமாயணிந்துகொள்ளென்று களங்கமில்லாமற் சொன்னாள். அதற்குக் கபடநெஞ்சுடைய வஞ்சகர்களான ஆரியர்கள் குலத்துதித்த வேதியன் மகளான தெய்வயானை அரசகுமாரத்தியை நோக்கி ஓ சன்மிஷ்டாய்! நீ குபேரசம்பத்தையுடையவளாயினுமென்ன! க்ஷத்ரியகுலத்தவள்தானே! உன் வஸ்திரம் உன்னுதற்கரிய விலையேறப்பெற்றதாயினும் நீ யுடுத்தியதை நானெனது கரங்களாற்றொடவும் நியாயமுண்டோ? இல்லையேயென்றாள். தெய்வயானையின் வாய்மொழிகளானவை மாசற்றசன்மிஷ்டையின் மனதைப் புண்படச்செய்தமையால் அவள் கோபமுற்று, என்னடீபேதாய்! உங்கள் குலத்தவர்கள் ஆயிரம் வித்தைகளைக் கற்றவர்களாயினுமென்ன! எங்கள் குலத்தவர்களிடத்தில் கையேந்தி நிற்பவர்கள் தானே. முட்டிபுகும் பார்ப்பாரக்குலமென்ன அவ்வளவு மேன்மை! எங்கள் குலமென்ன தாழ்மை? சிச்சி போடி போவென்று வாயில்வந்தபடி யெல்லாமவளைத்தூற்றித் தாதியர்களைக்கொண்டு தெய்வயானையைத்தூக்கி ஓர் பாழுங்கிணற்றில் போட்டுவிட்டுச் சன்மிஷ்டை பாங்கியர்களோடு அரண்மனைக்குச் சென்றாள்.

பாழுங்கிணற்றில் தள்ளுண்ட பார்ப்பினி, அக்கிணற்றருகில் முளைத்துப்படர்ந்து, கிணற்றினுள்ளே தொங்கிக்கொண்டிருந்த கொடிகளைப் பிடித்துக்கொண்டு, காமன் மனதைக் கலங்கச்செய்யும் திருநேத்திரங்களினின்றும் முத்தைப்போன்ற நீர்த்துளிகள் மத்தகத்தைப்போன்ற அவளிருமுலைகளின்மேல் சொட்டுச் சொட்டெனவிழுந்து இருமலைகளின் நடுவிலருவியோடு மாப்போல் அவள் முலைகளுக்கிடையிலோட அழுதுகொண்டிருந்தாள்.

## வனத்தில் வேட்டையாடச்சென்ற யயாதிமகாராஜன்பாழுங்கிணற்றினின்று தெய்வயாவினயை மீட்ட சரித்திரம்.

மிருகவேட்டையாட வனத்திற்குச்சென்ற மதிகுலதிலகனாகிய யயாதிமகாராஜன் வேட்டையாடிக்களைத்துத் தாகவிடாய் தீர்த்துக்

கொள்ள நல்ல ஜலந்தேடித் தெய்வாதீனமாய்த் தெய்வயானை விழுந்துகிடக்கும் பாழுங்கிணற்றருகில்வந்து அக்கிணற்றினுள்ளெட்டிப் பார்த்தான். அங்கே மின்னலைப்பழிக்கும காந்திபொருந்திய ஓர் யௌவனப்பெண்ணைக்கண்டு வியப்புற்று, அவளைத் தன்னிருகரங்களாற் பற்றிக் கரையின் மேலேற்றி, பின்னவளைப் பார்த்து ஓ பெண்ணே! நீயார்? உன் பெயரென்ன வென்றுகேட்டான்.

தெய்வயானை அரசனை வணங்கிச் சொல்லுகிறாள்: ஓ மலைபோன்ற புயத்தையுடைய மன்னனே! நான் அசுரர்குலகுருவாகிய சுக்கிராசாரியின் மகள். என்பெயர் தெய்வயானை. அசுரர்குலத்தலைவனாகிய விடப்பன்மன்மகள் சன்மிஷ்டையோடு தீர்த்தமாடக் குளத்திற்கு வந்தபோது அவளது ஆடையைத்தொட யான்மறுத்ததினாலுண்டான பிணக்கினால் அவள் தோழியர்களைக்கொண்டு என்னைத் தூக்கி இந்தப்பாழுங்கிணற்றிற் போட்டுவிட்டு அந்தப்புரத்திற்கேகினாள். திங்கள்குலதிலகனாகிய நீர்என்னையிப்பாழுங்கிணற்றினின்று மீட்டிரக்ஷித்தீர். தாங்கள் என்மட்டிற் புரிந்த சகாயம்என்றும் மறக்கத்தக்கதன்று என்றுசொல்லி அரசனிடம்விடைபெற்றுக்கொண்டு தனித்தவோர் சோலையையடைந்து, சன்மிஷ்டையின் கொடுஞ்செயலைநினைந்து நினைந்து மனதுருகிக்கொண்டிருந்தாள்.

இங்கே தெய்வயானை தனித்துப் புலம்பிக்கொண்டிருப்பதை விடப்பன்மனுடைய இரதசாரதிகளி லொருவன் அசுவத்திற்குப் புல்வெட்ட வந்தவிடத்திற் கண்டு, அவள் அங்ஙனம் தனித்துப் புலம்பிக்கொண்டிருக்குங் காரணத்தை ஆதியோடந்தமாக விசாரித்தறிந்து, சுக்கிராசாரியினிடம்போய்ச் சொல்ல, அவன் உடனே மகளிருக்கும் மாஞ்சோலையையடைந்து மகளைக்கண்டு, ஓ, அம்மணீ! உனக்கெய்திய துன்பமென்னை யென, அவள் நடந்த விருத்தாந்தமத்தனையும் ஆதியோடந்தமாகத் தந்தைக்குச்சொல்லிப்பின்னும் சொல்லுகிறாள்: என்பிதாவே! நமது அருமை, பெருமையை அறியாத விந்த விடப்பன்மனையடுத்துத் தினம் பதினாயிரம் பொன் சம்பாதித்துக் காலத்தைக் கழிப்பதைவிட, நமதுஅருமை,பெருமை தெரிந்த அரசர்களையடுத்துச் சொற்பஜீவனம்செய்து, காலத்தைக் கண்யமாகக் கழிப்பதே மேல். ஆகையால்; இனி அரைநாழிகைப்

பொழுதாகிலும் அற்பனாகிய விடப்பன்மனிடத்தில் நாம்தாமதிக்க லாகாது என்று கூறினாள்.

சுக்கிராசாரி தன்மகளுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி அவள்மனத்தைத்தேற்றி, பின்மகளைப்பார்த்து: என்கண்ணே! நீயும்சிறுபெண், சன்மிஷ்டையும் சிறுபெண், உங்களிருவருக்குமுண்டான சச்சரவினால் யான் தயாளகுணசீலனாகியவிடப்பன்மனை வெறுக்கவென்ன நியாயமிருக்கின்றது? நீ சொல்லுவது பெரும் பிசகு. ஆகையால், அவ்வண்ணம் செய்வது கூடாது; என்றாலும் உன்னைக்கொல்லவெண்ணிய சன்மிஷ்டைக்கும், அவள் தோழியர்களுக்கும் நல்லபுத்தி புகட்டுவிக்கிறேனென்று சொல்லி அவ்விடத்திற்றானே யோராச்சிரமத்தை யுண்டுபண்ணி மகளோடு அங்கே வாசம் பண்ணினான்.

## சன்மிஷ்டை தன்தாதியர்களோடு தெய்வயானைக் கூழியப்பெண்களான சரித்திரம்.

இப்படிச் சிலதினங்கள் சென்றபின் ஓர் நாள் விடப்பன்மன் தன் சபைக்குச் சுக்கிராசாரி வராததைக்கண்டு விசாரணைசெய்து காரணத்தைச் சாரதியின் வாய்மொழிகளாலறிந்து, கவலை கொண்டு சுக்கிராசாரி யிருக்குஞ் சோலையிற் சென்று, அவனைக்கண்டு சாஷ்டாங்க தெண்டனிட்டுச்சுவாமீ! யான் அதிவல்லமையோடு அரசியற்றிவருவது தங்களது கடாட்சத்தினாலன்றோ? தேவரீர் இங்குற்ற செய்தியை என் சாரதியின் வாய்ப்பிறப்பாலறிந்து மிகு கவலை கொண்டேன். ஓ சுவாமீ! என் மகள்புரிந்தகுற்றத்தைமன்னித்துத் தாங்கள் தங்களது செல்வக்குமாரத்தியோடு என் நகருக்கெழுந்தருளவேண்டுமென்று மன்றாடினான்.

சுக்கிராசாரி அரசனுக்கு அநேக ஆசீர்வசனங்கள் கூறியபின் அரசனை நோக்கி: மன்னா! உன்னிடத்தில் எனக்குக்கிஞ்சித்தேனும் மனவருத்தங் கிடையாது. என் மகளிடத்தில் கேட்டுக்கொள்ளென்று கண்சாடை காட்ட, இறைவனும் அவ்வாறே தெய்

வயானையினண்டையிற் சென்று அவளை வணங்கி, ஓ அம்மா! அறியாச் சிறுமியாகிய சன்மிஷ்டை செய்த குற்றத்தை க்ஷமித்தல் வேண்டுமென்று மன்றாடினன். அப்போது தெய்வயானை அரசனை நோக்கி: அசுரர்கள் குலத்தலைவனே! உன்மகள் சன்மிஷ்டையும் அவள்தோழியர்களும் எனக்குச்செய்த கொடுமை க்ஷமிக்கத்தக்கதன்று. ஓ, இறைவனே! அவர்கள் எனக்குப் புரிந்தகொடூரச்செய்கையை நினைக்குந்தோறும் என்னிதயம் நடுங்குகின்றது. நல்லது போனதுபோகட்டும். யானும், எனது பிதாவும் உனது நகருக்கெழுந்தருளவேண்டுமாயின் நான் சொல்லுவதைக்கேள். அதாவது உன் குமாரத்தியும், அவள் பாங்கியர்களும் எனக்குச்செய்த அநீதியின் பொருட்டு அவர்களெல்லோரையும் பணிப்பெண்களாக்குவேனென்று சத்தியத்தைச்செய். அப்படி உனக்குச் சத்தியத்தைச்செய்யப்பிரியமில்லாத பட்சத்தில் வந்தவழியே சென்று உனது நகர் போய்ச் சேரென்று கடுகடுத்துக் கூறினாள். அரசனும் அவள் விரும்பியவாறே சத்தியத்தைச்செய்து, அவர்களிருவரையு மழைத்துக்கொண்டு, நகரையடைந்து தன் மகள் சன்மிஷ்டையையும், அவள் பாங்கியர்களையும் அழைப்பித்து, நீங்கள் குருபுத்திரியாகிய தெய்வயானைக்குச் செய்த துரோகத்தின்பொருட்டு இன்றுமுதல் அவளுக்கு ஊழியப்பெண்களாகக் கடவீர்கள் என்று சொல்லி, அவர்களைச் சுக்கிராசாரியின் மகளோடனுப்பி வைத்தான். அன்றுமுதல் சன்மிஷ்டையும், அவள் தாதியர்களும் தெய்வயானைக் கூழியப்பெண்களானார்கள். தெய்வயானை குளிர்ச்சி பொருந்திய திங்கள் குலதிலகனாகிய யயாதி மகராஜனின் தயாள குணத்தையும், அவனது அழகையும் ஒருக்ஷணப் பொழுதாகிலும் மறந்தவளல்லள்.

# யயாதிமகாராஜன் தெய்வயானையை மணம்புரிந்த சரித்திரம்.

சங்கம்போன்ற கழுத்தினையுடைய சன்மிஷ்டையும், தேனொழுகும் மலர்மாலை சூடிய நெடிய கூந்தலையுடைய தெய்வயானையும், ஒல்கிய இடையினையுடைய அவளுடைய தாதியர்கள் புடைசூழ, ஓர்நாள் நந்தவனத்திற்குச் சென்று, சுகந்த பரிமள மிகுந்த மலர்களைக்

கொய்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அந்தவேளையில் மதிகுல மன்னனாகிய யயாதிமகாராஜன் அவ்வன விநோதங்களைப் பார்த்துக்கொண்டு கன்னியர்கள் விளையாடிக்கொண்டிருக்கு மிடத்திற்குச்சென்று, அவர்களைக்கண்டு, இவர்களார்? தெய்வஸ்திரீகளோ! நாக கன்னியர்களோ! அல்லது பூமாதர்கள் தானோ வென்று ஆலோசித்துக்கொண்டு நின்றான். அல்லும்பகலும் அவனையே மனதிற்றியானம் பண்ணிக்கொண்டிருக்குந் தெய்வயானை, திடீரென அங்கு வந்தெய்திய யயாதிமகாராஜனைக் கண்டு, சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல மனம் பூரிக்க, அரசனைச் சேவித்து, அவனது அழகிய கன்னங்களில் முத்தமிடும் பாவனையாக மலர்களை முகர்ந்துகொண்டு அவனுக்குப் பக்கத்தில் நின்றாள்.

முத்தைப்போன்ற அழகிய பற்களையுடைய தெய்வயானையையும், சந்திரவிம்பம்போன்ற வதனத்தையுடைய சன்மிஷ்டையையும், அன்னத்தைப் பழிக்கும் அழகிய நடையினையுடைய தோழியர்களையுங் கண்டு வியப்புற்ற வேந்தன், தன்னைவந்து வணங்கிய பெண்ணைநோக்கி ஆரணங்கே! நீயார்? உன் பெயரென்ன? ஆகாயத்தில் சந்திரனைத் தாரகைகள் சூழ்ந்து நிற்குமாப்போல் உன்னைப் புடைசூழ்ந்து நிற்குமிக்கன்னியர்களார் என்றுகேட்டான்.

அப்போது தெய்வயானை அரசனை வணங்கிச் சொல்லுகிறாள்: ஓ சத்தியசந்தவரூத சந்திரகுல திலகனே! நான் அசுரர் குருவாகிய சுக்கிராசாரியின் மகள். என்பெயர் தெய்வயானை. இதோ நிற்கின்றவள் அசுரர்குலத்தலைவனாகிய விடப்பன்மன் மகள் சன்மிஷ்டை. மற்றவர்கள் அவளுடைய பாங்கியர்கள். சிறிதுகாலத்திற்கு முன் நானிச் சன்மிஷ்டையுடன் அவள் பாங்கியர்கள் புடை சூழத்தாமரைத் தடாகத்திற்குச் சென்று தீர்த்தமாடி வெளியில் வந்தபோதுண்டான பிணக்கினாலிவ ளென்னையோர் பாழுங்கிணற்றிற்றள்ளிச் செல்ல, திங்கள் குலதிலகனாகிய நீர் என்னை யப்பாழுங் கிணற்றினின்றிரக்ஷித்ததுமக்கு இன்னமும் ஞாபகமிருக்கலாம். சன்மிஷ்டை எனக்கிழைத்த தீங்கின்பொருட்டு இப்பொழுது அவளும், அவள் தாதியர்களும், எனக்கூழியப் பெண்களானார்கள். ஓ பரவை சூழுலகையாளும் பார்த்திபனே! உமது அடியாளாகிய யான் பாழுங்கிணை

ற்றினின்றுயிர் தப்பிப் பிழைத்ததும், தேவலோகத்தார் நடுநடுங்கத் தக்க வாளாயுதத்தையுடைய பராக்கிரம சிங்கனாகிய விடப்பன்மன் மகள் சன்மிஷ்டை யென்பவள் அவள் தாதியர்களோடு எனக்கூழி யப் பெண்களானதும், உமது கிருபையினாலன்றோ? ஒளிபொருந்திய வாளாயுதத்தையுடைய வள்ளலே! அன்று நீரென்னையந்தப் பாழுங் கிணற்றினின்று கரையிற்சேர்த்து மகிழ்வித்ததுபோல் இன்று என்னை மணம்புரிந்து சதா ஆதரிக்கவேண்டுமென்று வணங்கினாள்.

இந்திரகாவிற் கொப்பாகிய அந்த நந்தவனத்தினழகையும், வாசனைபொருந்திய மலர்களினின்றெழும் நற்கந்தத்தைக் குளிர்ச்சி பொருந்திய தென்றற்காற்றானது நிறையவுண்டு நாற்றிசையிலும் பரப்புவதையும், மலர்களிலே நின்றொழுகுந்தேனை வண்டுகளுண்டு இனிய கீதங்கள் பாடுவதையும், இந்திர தனுவைப்போல் பலவர்ண ப்பட்டாடைகளை யணிந்து மங்கையர்கள் உலாவுவதையுங் கண்டு, காமமுற்ற அரசன் தெய்வயானையின் வாய்மொழிகளைக் கேட்டு, கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென மகிழ்ந்து, அவள் மனதைச் சோதிக்கக் கருதி, காமமென்னுங் கரியை ஞானமென்னு மங்குசத்தாலடக்கிச் சொல்லுகிறான். ஓ பெண்ணே தெய்வயானை! நானோர் க்ஷத்திரிய குலத்தவன். நீயோர் பிராமணகுலத்தவள். க்ஷத் திரியன் பிரம்மகுலப் பெண்ணை விவாகஞ்செய்வது மனுதர்ம சாஸ் திரத்திற்கு விரோதம். ஆகையால் நீ அவ்வெண்ணத்தையறவே துறந்துவிடென்று சொன்னான்.

என்றுங் குன்றாத கீர்த்தி வாய்ந்த சந்திரகுல திலகனாகிய யயாதிமகாராஜனை எப்போது காண்பேன் என்னுவலைத் தீர்ப்பே னென்று அல்லும், பகலும் அதே எண்ணத்தோடு தன் குலதெய்வ த்தைப் பூஜித்துவந்த தெய்வயானை, அரசன் சொன்னசொல்லைக் கேட்டு, இடியோசை கேட்ட சர்ப்பம்போல மனம் பதைபதைத்துத் துடிதுடிக்க, ஆ தெய்வமே! இலவுகாத்த கிளிபோலானேனே! நான் செய்த பூஜையின் பலனெல்லாம் வியர்த்தமாயிற்றே! என்று புலம்பி அப்பால், தன் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு, நாம் நமதுகரு த்தை அரசனுக்குத் தெரிவித்து இன்னமும் மன்றாடுவோம். அத ன்மேல் தெய்வசித்தம் போலாகிறதென்று தேறி, இறைவனை நோக்

கிச் சொல்லுகிறாள். ஓ, மன்மத கணைகளால் மயங்கித் தியங்கு மங்கையர்களின் கொங்கைக ளழுந்த லீலைபுரிய வல்லகோமானே! நீர் மனுசாஸ்திரவிதிப்படி அரசியற்று மரசனென்று பெரியோர்கள் சொல்லக்கேள்வியுற்றேன். சங்கு, முத்து, பவளமுதலியவற்றை நிரை நிரையாய்க்கொண்ட குளிர்ச்சிபொருந்திய நெடிய சமுத்திரத்தை யாடையாய்ப் புனைந்த புண்ய நாவலந் தீவைப் புரையறப் புரக்கும் பெருமானே! அறம் முப்பத்திரண்டினுள் பெண்போகமொன்றல்லவோ? பேதையாகிய யான் அப்போகத்தை விரும்பினால் பெருமானாகிய நீர் எனக்கதை யளிப்பது கடமையன்றோ? வாளைப் பிடித்து வடுவேறிய கரத்தையுடைய வள்ளலே! நீர் இவைகளையெல்லாம் நன்கறிந்திருந்தும் ஒன்றுமறியாதவரைப்போல் விடையளிப்பதுமது குன்றாத நீதிக்கொக்குமோ? ஓ, மலைபோன்ற புயத்தையுடைய மன்னனே! கைநிறைந்த பொன்னினுங் கண்ணிறைந்த கணவனே மேலெனக் கருதுகின்ற பேதையர்களுள் பேதையாகிய யான் ராஜபோகத்தை விரும்புகின்றேன் ஆகையால் நீரெனக்கதையளிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள்.

காமன்கணைகளினுங் கூர்மைபொருந்திய தெய்வயானையின் வாய்மொழிகளைக் கேட்டுத் தேனில்விழுந்த ஈயைப்போற்றியங்கிய மன்னன் தெய்வயானையைப்பார்த்துச் சொல்லுகிறான்: ஓ, தேமற் படர்ந்து பருத்த திருஸ்தனங்களையுடைய கோதாய்! நீ பெரும் பேதாய். காந்தள்மலர்போன்ற திருக்கரங்களை யுடையமானே அறம் முப்பத்திரண்டினுள் பெண்போகமொன்றெனப் புகன்றனையே, அஃதுண்மைதான். கவனி. ஆதியில் எங்கள் ஜாதித்தலைவனாகிய சந்திரன், பிரகஸ்பதியின் மனைவியாகிய தாரையென்பவள் விரும்பிய பெண்போகமென்னும் தர்மத்தைச்செய்து, புல்லும் பூமியுமுள்ளவரையில் குருத்துரோகி யென்னும் பொல்லாத பெயருக்குள்ளான சரித்திரத்தை நீ யறியாயோ என்றான்.

அதற்குத் தெய்வயானை புன்முறுவல்கொண்டு அரசனைநோக்கி ஓ மலை நிலை குலையினும் மனநிலைகுலையாத மதிகுலமன்னனே! உமது பிதா மகனாகிய அந்தச்சந்திரனென்னுமரசன் பிரகஸ்பதிக்கு வாழ்க்கைப்பட்ட தாரையென்னுந் தையலைத்தழுவியதாலன்றோ பழிமொ

ழிக்காளானன். நானோ இன்னுமொரு புருஷனுக்காவது வாழ்க்கைப்பட்டவளல்லவோ? நீவிர் என்னை யெனது பிதாவினனுமதியின் மேல் மணஞ் செய்துகொள்வீராயின் உலகினரும்மைப் புகழ்வரே யன்றி இகழாரென்றாள். தெய்வயானையின் வாய்மொழிகளைக்கேட்ட அரசன் புன்னகைபுரிந்து பின்னும் சொல்லுகிறான்: பாலொத்த மொழியையும், வேலொத்த விழியையுமுடைய பாவாய்! அன்று க்ஷத்ரியகுலப் பெண்ணாகிய சன்மிஷ்டையினுடையைத்தொடுவதற் கஞ்சிப் பின்வாங்கிய நீ, இன்று என்னை மணஞ்செய்யத் துணிந்து முன்வந்ததெங்ஙனமெனவினவினான்.

ஆரியர்குலத்துதித்த வேதியன் மகளாகிய தெய்வயானை அழகொழுகும் அரசனின் திருவதனத்தைச் சற்றுநேரம் உற்றுநோக்கியபின் சொல்லுகிறாள்: ஓ, என்மனதைக் கொள்ளைகொள்ளவந்த கோமானே! பகைவர் நடுங்குகின்ற வேலாயுதத்தைப் பிடித்துக்காய்ப்பேறிய கரங்களால் என்றென்னைத் தொட்டீரோ, அன்றுமுதற்கொண்டேயான் க்ஷத்ரியபெருமானாகிய வும்மை மணஞ்செய்யக் கருதி முன்னே வந்தேன். சன்மிஷ்டையின் சரித்திரம் அதற்கு முந்தியதாகையால் அதைக் கவனிக்கத்தேவையில்லையென்றுசொன்னாள்.

வெற்றிமாலையணிந்த யயாதிமகாராஜனனவன் தெய்வயானையின்மனதை நன்றாய்ச்சோதித்தறிந்தபின் அவளைநோக்கி: ஓ, பூரண சந்திரனைப்போன்ற முகத்தையுடையபெண்ணே! நீவிரும்பியவாறே நானுன்னை மணஞ்செய்துகொள்ளத் தடையொன்றுமில்லை, ஆனால் உன் பிதாவினது அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டிய தவசியம். ஆகையால் காலதாமதமன்றி உன் தந்தையின் உத்தரவைப்பெற்றுக்கொள்ளென்றான்.

தெய்வயானை அரசனது அந்தமாகிய மொழியைக் கேட்டுச் சந்தோஷமுற்று, அவனது ஆக்கினைப் பிரகாரம் தன் பிதாவினிடத்தில் உத்தரவைப் பெற்றுக்கொள்ள வெண்ணிச் சுக்கிராசாரியை யழைத்துவரும்படி தாதியர்களை யனுப்பினாள். பாங்கியர்கள் தெய்வயானையின் கட்டளைப்பிரகாரம் அசுரர்குலகுருவாகிய சுக்கிராசாரியை யழைத்துவந்தார்கள். அப்போதுதெய்வயானை தன்பிதாவை

வணங்கிச் சொல்லுகிறாள்: ஓ, அசுரர்குலத்தாருடைய ஆசாரத்திற்குரிய என் பிதாவே! இதோ உம்மெதிரில் நிற்கின்றாரே இவர்தான் நூறுயாகங்களைச் செய்து, ஆடகலோகத்திறைவனை யோடியொளிக்கச்செய்து, இந்திரபட்டத்தைப்பெற்ற நகுஷமகாராஜனின்புத்திரர். புரூரவச்சக்கரவர்த்தியால் பரவர்என்று பரியாயநாமம்பெற்ற பார்த்திபர்கோத்திரத்தின் நிகழ்காலத்தரசர். கொலை, களவு, காமம், சூது, வாது, அக்கிரமமுதலியவற்றை யறவே துறந்த துஷ்டநிக்ரக சிஷ்டானுக்கிரகர். வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடையவர். உமது குமாரத்தியாகிய என்னை முந்த முந்தக் கைதொட்டவர். தன்னுயிர்போல் மன்னுயிரனைத்தையுமிரக்ஷிக்கும் மன்னாதிமன்னர். மகாவுத்தமர். இவரையான் மணம்புரிய அனுமதி தரவேண்டுமென்றுமன்றாடினாள்.

சுக்கிராசாரி தன் குமாரத்தியினுடைய சாதகத்தைக்கணித்து, இவள் மதிகுலமன்னனுக்கே மனையாளாவாளென முன்னமேயுணர்ந்தவனாகையால் மகிழ்ந்து, மகளைப்பார்த்து: ஓ, என் கண்ணே! உன் சாதகமும் அவ்வாறே யிருக்கின்றமையால், நீஉன்னெண்ணப்படியே திங்களங்குலதிலகனை மணஞ்செய்துகொள்ளத் தடையொன்றுமில்லையென்றுசொல்லி, மகள் கையைப் பிடித்து மன்னனதுகரத்தில்வைத்துத் தாரைவார்த்து, நீவிர் இருவரும் இமயமாதும், இறைவனும் போல் நீடுவாழக்கடவீர்களென்று வாழ்த்தி, விடைபெற்றுத் தன்னிருப்பிடத்திற்கேகினான்.

புஜபலபராக்கிரமனாகிய யயாதிமகாராஜனானவன் தெய்வயானையையும் அவள் பணிப்பெண்களையு மழைத்துக்கொண்டு தன்நகருக்குச்சென்று, அசுரர்குலத் தலைவனாகிய விடப்பன்மன் மகள் சன்மிஷ்டைக்கு ஓர் மாளிகையை யுதவி, அசுரர் குலகுருவாகிய சுக்கிராசாரியின் மகள் தெய்வயானையோடு மற்றோர் விசித்திர மண்டபத்தில் வாசம்பண்ணினான்.

## யயாதிமகாராஜன் சுக்கிராசாரியின் சாபத்தையேற்ற சரித்திரம்.

இந்துவின்குலத்துதித்த இறைவனாகிய யயாதிமகாராஜன் அசுரர் குலகுருவாகிய சுக்கிராசாரியின்மகள் தெய்வயானையினிடமாய்

யது, துர்வசு என்னும் இருகுமாரர்களையும், தெய்வயானையறியாமல் அசுரர்குலத்தலைவனாகிய விடப்பன்மன்மகள் சன்மிஷ்டையினிடமாகத் துர்க்காயு, அன்னு, பூரு என்னும் மூன்று மைந்தர்களையும் பெற்றான்.

கார்மேகம்போன்ற கரிய கூந்தலையுடைய தெய்வயானை யோர்நாள் தன்மதிக்குலத் தலைவனோடு வசந்தமண்டபத்தின் மேலுப்பரிகையில் உலாவிக்கொண்டிருக்கும்போது, தெருவில் விளையாடிக்கொண்டிருந்த சன்மிஷ்டையின் மைந்தர்களைக்கண்டு, இச்சிறுவர்களார்? நம் கணவனுடைய சாயலாகவிருக்கின்றார்களே! ஒருவேளை இவர்கள் நம் புருஷனுக்குப் பிறந்தவர்களாக விருப்பார்களோ! வென்று சந்தேகித்து, அரசனைநோக்கி; ஓ, உலகுபுகழ் காவலனாகிய என் காதலனே! அதோ வீதியில் விளையாடிக்கொண்டிருக்குஞ் சிறுவர்களாரென்று வினவினாள்.

சோமகுலசேகரன் சற்றுநேரம் அச்சிறுவர்களை யுற்றுநோக்கியபின், ஓகோ! இன்று மோசம்வந்ததேயென்று மனதிலெண்ணி உண்மையைத் தெரிவித்தால் தெய்வயானை நிந்திப்பாளே யென்றஞ்சி, அச்சிறுவர்களை யறியேனென்றான்.

அப்பால் தெய்வயானை தாதியர்களைக்கொண்டு அச்சிறுவர்களை யழைத்து, அவர்களைநோக்கி: ஓ, முச்சுடருக் கொப்பாகிய புத்திரர்காள்! நீங்களார்? உங்கள் பெயரென்ன? என்று கேட்டாள்.

தெய்வயானையின் வினவுக்கு மூவரில் முதியோனாகிய துர்க்காயு என்பவன் பின்வருமாறு விடையளிக்கலானான். அஃதெவ்வாறெனின், ஓ, அம்மா! நாங்கள் மூவரும் திங்கள் குலதிலகனாகிய யயாதி மகாராஜனுக்கு, அசுரர்குலத்தலைவனாகிய விடப்பன்மனுடையமகள் சன்மிஷ்டையின்பாற் பிறந்தவர்கள். என்பெயர் துர்க்காயு, என்பின்னோன்பெயர் அன்னு, அவனுக்கிளையவன் பூரு என்று விடைகூறினான்.

தெய்வயானை சிறுவர்களுக்கு உத்தரவுகொடுத் தனுப்பிவிட்டு, பொன்முடிசூடிய மன்னாதிமன்னர்களெல்லாம் நித்தம் பாதத்தில் வீழ்ந்து வணங்குவதால் தேய்ந்த பாதங்களையுடைய யயாதிமகா

ராஜனைநோக்கி: ஓ, மன்னனே! சந்திரகுல சிம்மாசனாதிபதியாகிய ராஜாதிராஜனுக்குரிய மனையாளானேனென்றும், சந்திர, சூரியனைப் போலிரு புத்திரர்களைப் பெற்றேனென்றும், இனிச் சந்திரநாடு என் மைந்தர்களுக்குச் சொந்தமென்றுமெண்ணி, எல்லையில்லா மகிழ்ச்சி யுற்றிருந்தேனே! ஓ, இறைவனே! என்னையறியாமல் என்னூழியப் பெண்ணைக் கூடி மூன்று புத்திரர்களைப் பெற்று, அவர்களையும் என் மக்களது சொத்துக்குப் பங்காளிகளாக்கிவைத்தாயே; ஓ தெய்வமே இவ்வநீதியை யாரிடத்திற் சொல்லுவேனென்று மூர்ச்சையாகிக் கீழேவிழுந்தாள்.

புவியையாளும் மன்னன்றேவி மூர்ச்சித்துப் பூமியில் விழுந்தவுடனே அவள் தோழியர்கள் அவளுக்குச் செய்யவேண்டிய ஆசார உபசாரங்களைச்செய்து மயக்கத்தைத்தெளிவித்தபின் தெய்வயானை தாதியர்களைக்கொண்டு தன் தந்தையாகிய சுக்கிராசாரியைத் தருவித்து, நடந்த விருத்தாந்தமனைத்தையும் அவனுக்குச் சொல்லி அழுதாள்.

சுக்கிராசாரி மகளது துக்கத்தைக்கண்டு மனதுருகி, அரசனது அடாத செய்கைக்காகக் கோபமுற்று, கண்களில் நெருப்புப் பொறி பறக்க இறைவனைச் சற்றுநேரமுற்றுநோக்கியபின் சொல்லுகிறான், "ஓ, யயாதி! நீ செய்த அடாத செய்கையின்பொருட்டு வார்த்திகத்தையடையக்கடவாய்" என்று சபித்தான். அப்போது அரசன் மனவருத்தமுற்றுச் சுக்கிராசாரியின் பாதங்களில் விழுந்து, தான் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று மன்றாடினான். சுக்கிராசாரி அவனது வேண்டுகோளிற்கிரங்கி மன்னனைநோக்கி: ஓ, இறைவனே! உன்மைந்தர்களனைவரும் வாலிபதிசையை யடையுமளவும் நீ கிழத்தன்மையை யனுபவிக்கத்தான் வேண்டும். அவர்களெல்லோரும் யௌவனதிசையையடைந்தபின், நீ உன்னுடைய முதுமையை யவர்களிலொருவனுக்குக் கொடுத்துவிட்டு, அவனிளமையைப்பெற்று வாழக்கடவாய். உனக்கிஷ்டமானபோது மீண்டும் உன் யௌவனத்தை யவனுக்களித்து வார்த்திகத்தைப் பெற்றுக்கொள்ளலாமென்று சொல்லிப் போய்விட்டான்.

பார்ப்பானின் சாபத்திற்குள்ளான பார்த்திபர்கோத்திரத்தோன்றலாகிய யயாதிமகாராஜனுக்கு நரை, திரையுண்டாகி இருமல்வா

திக்க, வாயில்நின்று குழ, குழ்வென வொழுகிய கோழைகளானவை, வைரமணிபூணும் வஜ்ரமாாபின்மேல் வழிந்தோட, நெடியகடல்சூழுலகையோர் குடையின்கீழாளும் வேந்தன் மனச்சோர்வுற்று, மஞ்சத்திற்பரப்பிய பஞ்சணையின்மீது சாய்ந்து சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தான். சந்திரநாட்டுக்குடிகள் அரசனுக்கு வார்த்திகமெய்தியதைக் கேள்வியுற்று, இறைவனுக்கு நல்ல சுகத்தையளிக்கும்படி தத்தங்குல தெய்வங்களுக்கு நித்ய நைவேத்ய பூஜாராதனைகளை நடத்தி வந்தார்கள்.

## யயாதிமகாராஜன் தன் கருத்திற்கிணங்காத மைந்தர்களைச் சபித்தகற்றிவிட்டு, தன் வேண்டுகோளிற்கிணங்கிய

# பூருவை யாசீர்வதித்து அரசனாக ஆசனமேற்றிய சரித்திரம்.

இவ்வண்ணம் சிலவருஷங்கள் சென்றபின் ஓர்நாள் யயாதிமகாராஜனானவன் மைந்தர்களனைவரும் வாலிபதிசை யடைந்ததைக் கண்டு சந்தோஷமுற்று, அவர்களையழைத்து என்னருமைக்கண்மணிகாள்! உங்கள் தந்தையாகிய யான் இன்னுமோராயிரம் வருஷம் இப்புவியில் உயிரோடிருக்க விரும்புகிறேன். ஆகையால் உங்களிலொருவன் உங்கள் மாதா மகனாகிய சுக்கிராசாரியினால் எனக்கெய்திய வார்த்திகத்தை யேற்றுக்கொண்டு, யௌவனத்தை யளிக்க வேண்டுமென்று மன்றாடினான். அரசனுடைய வேண்டுகோளிற்கு, யது, துர்வசு, துர்க்காயு, அன்னு வென்னும் நான்கு மைந்தர்களும் இணங்கினார்களில்லை. ஆனால் கடைப்பட்டோனாகிய பூரு என்பவன் தந்தையின் மன்றாட்டிற்கிசைந்து, தன்னிளமையை அரசனுக்குக் கொடுத்து, அவனது முதுமையைத் தான் பெற்றுக்கொண்டான்.

பூருவினது யௌவனத்தைப் பெற்ற யயாதிமகாராஜனானவன் மகிழ்ந்து, பூருவை வாழ்த்தி, மற்றவர்களைத்தாழ்த்தி, சிரேஷ்டனாகிய யதுவைநோக்கி: யது! நீ என் சிரேஷ்டபுத்திரனாகவிருந்தும் என்கஷ்டத்தை நிவிர்த்திக்கக் கொஞ்சமு மிணங்கினாயில்லை. ஆகையால் நீ உன்னுடைய சிரேஷ்ட சுதந்தரமத்தனையுமிழந்து,

என்னிராஜ்யத்தினின் றப்புறப்படக் கடவாய். உன் சந்ததியார் யாதவர்களென்னும் நாமத்தைப்பெற்று, மது (பால்) விற்று ஜீவனம் பண்ணக்கடவர்கள். நீ அந்தயாதவகுலத்தவர்க் கரசனுயிருக்கக்கடவாயென்றும், இரண்டாவது குமாரனுகிய துர்வசுவைப் பார்த்து: துர்வசு! நீ இந்நாட்டை நீத்துத் தென்னுட்டையடைந்து, தென்னவனென்னும் பெயரைப்பெற்று வாழக்கடவாய். உன் சந்ததியார் அங்கே மீனைப்பிடித்து விற்று ஜீவனம் பண்ணக்கடவர்கள். நீ அம்மீனவர்களுக்கு இறைவனுயிருக்கக் கடவாயென்றும், மூன்றுவது குமாரனுகிய துர்க்காயுவை நோக்கி: துர்க்காயு! நீ இந்நாட்டை விட்டுக் காட்டிற்குச் சென்று காந்தாரகனென்னும் நாமத்தைப் பெற்று வசிக்கக்கடவாய். அங்கே உனது சந்ததியார் வேட்டையாடி ஜீவனம் பண்ணக்கடவர்கள். நீ அந்த வேடுவ வம்சத்தவர்க்கு அதிபனுயிருக்கக் கடவாயென்றும், நான்காவது குமாரனுகிய அன்னுவைப்பார்த்து: அன்னு! நீயுமுன் மூத்தசகோதரர்களைப்போல் என்னிராஜ்யத்தினின் றப்புறப்படக்கடவாய். உன் சந்ததியார் புதியராஜ்யங்களையுண்டுபண்ணி அவைகளில் வாசம்பண்ணக்கடவர்கள். நீ இவர்களுக்கு நிருபனுயிருக்கக்கடவாயென்றும் சபித்தகற்றிவிட்டு, தருமவிரோத மின்றித்தக்க காலங்களில் தனக்கிஷ்டமானபடி சகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டு செங்கோலையும் செவ்வையாகச் செலுத்திவந்தான்.

காம போகங்களானவை நாளுக்கு நாள் மிக இனிமையாகவே அரசனுக்குத்தோன்றினமையால், காம சுகத்திற்கு ஓர் முடிவில்லையெனஅவன் ஆயிரம் வருஷ அனுபவத்தாலறிந்து, பூருவையழைத்து, தான் முன் அவனிடமிருந்து பெற்றுக்கொண்ட யௌவனத்தையவனுக்குக் கொடுத்துத், தான் முதுமையைப்பெற்று, அவனை ஆசனத்திலேற்றி மகுடத்தைச் சூட்டிவைத்துவிட்டு தவத்தைச் செய்து வீடடைய எண்ணி வனத்திற்குச்சென்றுன்.

பூருவென்னுமரசன் கேகய இறைவனின் புதல்வியான கௌசலையை மணந்து சந்திரநாட்டுக்குடிகளுக்கோர் குறைவும் வாராமல் பாதுகாத்துவந்தான்.

---

# துர்வசுவின் சரித்திரம்.

யயாதி மகாராஜனுக்குத் தெய்வயானையின்பா லுதித்த இரண்டாவது புத்திரனாகிய துர்வசு என்பவன், தன் தந்தையின் கற்பனைப் பிரகாரம் தன் சுற்றத்தாரோடு தென்னாட்டை வந்தடைந்து, தாம்பிரவருணி நதியோரத்தில் கொற்கை யென்னு மோர்நகரை ஸ்தாபித்துத்தென்னவனென்னும் பெயருற்றுச் செங்கோல்செலுத்திவந்தான். இவன் முதல் சந்திரகுலத்தவராகிய பரவருக்குத் தென்னவரென்றும், இவர்கள் மீனைப்பிடித்து ஜீவனம் பண்ணினமையால் மீனவரென்றும், இக்குலத்தலைவனுக்கு மீனவர்கோனென்றும் பெயர்வழங்கலாயிற்று. இந்தத் துர்வசுஎன்னும் தென்னவனுக்கு வன்னியும், வன்னிக்கு பார்க்கனும், பார்க்கனுக்கு திறையீசானனும், திறையீசானனுக்கு கரந்தைமனும், கரந்தைமனுக்கு அண்டதீரனும், அண்டதீரனுக்கு சேர, சோழ, பாண்டியர்களுமுற்பத்தியானார்கள்.

சத்திய வேதாகமத்தில் நோவாவினுடைய மக்கள் சேம், காம், யாப்பேத்தென்று சொல்லியிருப்பினும், யாப்பேத்தென்பவனே சிரேஷ்ட புதல்வனாவதுபோல், அண்டதீரனின் மைந்தர்கள் சேர, சோழ, பாண்டியர்களென்று முறையே குறிப்பிட்டிருப்பினும் பாண்டியனென்பவனே முதியனாவான். இவன் தன்பிதாவாகிய அண்டதீரனுக்குப்பின் அவனது மகுடத்தைப்பெற்று மிகுஆண்மையோடரசியற்றிவந்தான். இவனது பெருமைக்கு வால சூரியனும், தண்மைக்குப்பூரணசந்திரனும், நிலைமைக்கு மேருபர்வதமும், அறிவிற்கு ஆழிய சாகரமும் நிகரிலை யெனச் சரித்திராதியர்கள் மிகுதியுமிவனைப்புகழ்ந்து கூறியிருக்கின்றார்கள். இவ்விறைவனது கீர்த்தி உலகத்தி னெத்திசையிலும் பரவியதுமன்றி, இவன் குலத்தவர்க்குப்பாண்டியரென்றும், இவனாண்ட நாட்டிற்குப் பாண்டியநாடென்றும் பெயர் வழங்கலாயிற்று. வடக்கே வெள்ளாறும், கிழக்கே மன்னார்குடாக்கடலும், தெற்கே கன்னியாகுமரியும், மேற்கே மேற்குத்தொடர்மலையு மிந்நாட்டிற் கெல்லைகளாம்.

இந்தப் பாண்டியராஜ வம்சத்திற் றோன்றிய மன்னர்களிற் சிலர் மாறன் என்னும் பெயரால் கொற்கை நகரிற் செங்கோல்செலுத்திவந்தார்கள். இவர்களெல்லோரும் சமணமதஸ்தர்கள். கொற்

கையைக்கடைசியாயாண்ட மாறபூபதியினுடைய மகள் சுலோதை யம்மனைக் குலசேகர பாண்டியன் மணமுடித்தான். மாறனுக்குச் சுலோதை யென்னும் ஓர் பெண்ணை யொழிய வேறுணில்லாததால் தன்னிராஜ்யத்தை மருகனுக்குக் கொடுத்து ராஜபட்டமுங் கட்டி வைத்தான்.

## குலசேகரபாண்டியன் சரித்திரம்.

வடக்கே சிங்கக்கொடியையுடையசந்திரகுலராஜவழியில் சுராப்பாண்டியனென்னுமோர் அரசன் தோன்றிச் சக்கராபுரிப்பட்டணத்தை அரசாண்டு வந்தான். இவன் மகன் அமிர்தபாண்டியன். இந்த அமிர்தபாண்டியன் புத்திராபேட்சையினால் டம்பரசநதிக் கரையில் ஓர் காளிகோவிலையடுத்து, அரியதவத்தைச் செய்து, காந்தமாரிஷி யெனப்பெயர் பெற்று, சப்தமாதர்களினுதவியால் ஏழு புத்திரர்களைப்பெற்று, அவர்களைக் காளிதேவியினிடத்தி லொப்புவித்தான். காளிதேவி அப்புத்திரர்களெழுவருக்கும் முறையே காந்தவீரபாண்டியன், குலசேகரபாண்டியன், கூட்பாண்டியன், உக்கிரதிஷ்டிபாண்டியன், பரஞ்சோதிபாண்டியன், சினம்பலபாண்டியன், கவுண்டலீயபாண்டியன் என்று பெயரிட்டு, சொந்தமைந்தர்களைப்போற் பேணி வளர்த்து, பின், விந்தியமலைச் சாரலிலேயுள்ள காந்த விஞ்சைய நகரத்திலிவர்களையிருத்தி, தாருகாசுரன், சம்பாசுரன் என்னும் ராக்ஷதர்களைச் சங்கரிக்கவுத்தரவருளி, பிதா, மாதா முதலியபந்துக்களோடு மகிழ்ந்திருக்கச் செய்தாள்.

விதர்ப்ப தேசத்திலுள்ள தாரிசாபுரிப் பட்டணத்தையாண்ட விஜயபானு மகாராஜாவின் மனைவி மாணிக்கமாதேவி யென்பவள் சூரியகன்னிகை, சந்திரகன்னிகை, நாககன்னிகை, அமரகன்னிகை, சுரகன்னிகை, சுந்தரகன்னிகை, பாலகன்னிகையென்னும் ஏழுகன்னியர்களைப்பெற்றுத் தேகவியோக மாயினபின், அவ்வரசன் கேரள தேசத்து ஆடவராஜன் மகளாகிய வன்னமாதேவி யென்பவளைவிவாகஞ்செய்து கொண்டான். விஜயபானு மகாராஜன் வன்னமாதேவியோடு வாழ்ந்துவரும் நாளில், அவள் சொல்லிய துர்மதியை யரசனனுசரித்துப் புத்திரிகளெழுவரையும் வனத்திற் கொண்டுபோய் விட்டான். தந்திமாரிஷி அப்பெண்களெழுவரையும் வனத்திற்

கண்டு அழைத்துக்கொண்டுபோய்த் தமதாச்சிரமத்தில் வைத்தாதரித்து வந்தார். பிறகு நாரதமுனிவர் தந்திமாரிஷியைக்கண்டு ஓ, தந்திமாரிஷியே! ஆதிசத்தியாகிய காளிதேவிவளர்த்தபுத்திரர்களேழுபேரிருக்கின்றார்கள். அவர்கள் சக்கராபுரிப் பட்டணத்தையாளும் அமிர்தபாண்டிய மகாராஜனுக்குச் சப்தமாதர்களினுதவியாற்றோன்றியவர்கள். சுவர்னமதிலாற் சூழப்பட்ட காந்தவிஞ்சை நகரையாள்பவர்கள். மகாவீரப்பிரதாபம் பொருந்திய சூரர்கள். தாருகாசுரன், சம்பாசுரன் என்னும் ராக்ஷதர்களை ஜயித்து இரட்டைத்தேவதத்தமென்னும் சங்குபெற்றவர்கள். சிங்கக்கொடியையுடைய சந்திரகுலத்திலுதித்தவர்கள். இவர்களுக்கு உம்மிடத்திலிருக்கும் ராஜகன்னியர்களைத் தரவேண்டுமென்று கேட்க, தந்திமாரிஷியானவர் இது சேதியை விஜயபானு மகாராஜனுக்கறிவித்து அவனுடைய அனுமதியின் பேரில் சம்மதிக்க, அமிர்தபாண்டியனின் மைந்தர்களெழுவரும், விஜயபானுமகாராஜனின் கன்னியர்களேழுபேருக்கும் இரட்டைச்சங்குத் தாலிகட்டி, மிகுந்த கோலாகல சம்பிரமத்தோடு திருக்கலியாணச் சடங்கை நிறைவேற்றி வைக்க, எல்லாருஞ் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயிற்றல், போர் செய் திட்டலென்னும் அரசர்க்குரிய அறுதொழில்களில் பெரும் பார் புரத்தலின் பொருட்டாக ஏற்பட்ட கடல்வேட்டை, வனவேட்டைகளில் ஒன்றாகிய மிருகவேட்டையாடுவதற்குக் காந்தவீரபாண்டியன் தன் சகோதரர்களோடு புறப்பட்டான். இவர்கள் காட்டில் சில நாட்டங்கி வேட்டையாடிக்கொண்டு தெற்கே வெகுதூரம சென்றார்கள். காந்தவீரபாண்டியன் ஒரு நாள் வேட்டையாடிக் களைத்துத் தன்னிளையோனாகிய குலசேகரபாண்டியனைப் பார்த்து: தம்பி! தாகமேலிட்டமையால் விரைவில்தண்ணீர்கொண்டுவாவென குலசேகரபாண்டியன் ஜலம் கொண்டுவருவதற்குப் புறப்பட்டுப் போனான்.

அக்காலத்தில் பாண்டிநாட்டிலே தண்டகாரண்யமென்னும் விஸ்தீரணமான வனமிருந்தது. அந்தவனத்திலே வாசம்பண்ணி

வந்த ராக்ஷதர்களுக்குக் கள்ளிறக்கும் பொருட்டு * ஈழக்குலச்சாணர் அங்கேயுள்ள தால விருட்சங்களில் கலசங்களைக் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். குலசேகரபாண்டியன் அக்காட்டிலே தண்ணீர் தேடி அங்குமிங்குமலைந்து பார்த்தான்; நீரகப்படவில்லை. ஆகையால் பனைமரத்திலேறிக் கலசங்களிலிறங்கிய வமுதத்தைக் கீழேயிறக்கித் தானுண்டு மிகுந்ததைத் தன்தமையனுக்குக் கொண்டுபோய்க் கொடுத்தான். கள்ளுண்டமையால் குலசேகர பாண்டியனின் கண்கள் சிவந்திருப்பதை யறிந்த காந்தவீரபாண்டியன் அவனைநோக்கி: நீ உண்டுமிகுந்த எச்சிலையோ யெனக்குக் கொணர்ந்தாயென்றுகேட்டான்.

அதற்கு குலசேகரபாண்டியன் தன் தமையனாகிய காந்தவீரபாண்டியனைச் சற்றுநேரம் வெறிக்கப்பார்த்து, பின் சொல்லுகிறான்: ஆம், நானென்முகத்தைத் தவிர்த்தபின் உனக்குக் கொணர்ந்ததுண்மைதான். இது பழிபாகுமோவென்று மூர்க்கத்துடன் வினவினமையால், காந்தவீரபாண்டியன் கோபமுற்று, குலசேகரபாண்டியனைப் பார்த்து, நீசெய்த அடாதசெய்கையின் பொருட்டு நீ எங்களைவிட்டகன்று தென்றேயத்தின்கண் மீன்பிடித்து ஜீவனம் பண்ணக்கடவாய் போவென்று சபித்தகற்றினன்.

அப்போது குலசேகரன் வெறிதணிந்து, நிலையொடுங்கித் தன் விதியை நினைந்து, கண்ணீர்சொரிந்து, தன்னைவளர்த்த காளிதேவியினிடத்திற் சென்று, நடந்த விருத்தாந்த மத்தனையு மவளுக்கறிவித்தான். காளிதேவி குலசேகரனின் வாய்மொழிகளைக் கேட்டு விசனமுற்று அவனைநோக்கி: குழந்தாய்! தமையன் தந்தைக்குச் சமானமானவன். அவனிட்ட சாபத்தை மாற்றுவதற் கென்னாலாகாது. என்றாலும் மகனே! நானுனக்கோர் வரத்தைத் தருகிறேன் கேள்.

---

* சாணர் - ஓர் சாதியார். இவர்கள் சாண்நீளமுள்ள நாரைக்காலிற் சேர்த்துப் பனையேறுவோராகையால் (சாண் + நார்) சாணர் என்றும், ஈழமென்னும் கள்ளிறக்குவோராகையால் ஈழக்குலச்சாணர் என்றும் சொல்லப்படுவார்கள். நாடான் என்பது சாணருக்குரிய பட்டப்பெயர். இக்குலப்பெண்ணுக்குச் சாலினி என்றுபெயர். சாலினி என்னும் பதத்திற்குக் கள்வாணிச்சி என்றர்த்தமாகும். நாடான் என்னும் சொல்லை நாடன், நாட்டான்என்னும் பதங்களோடு பொருத்திப் பார்ப்பதுபேதைமையாகும்.

நீ மீன்பிடித்து ஜீவனம்பண்ணிய போதிலும் பொன்முடி பூண்டு பூமியையாளுவாயென் றாசீர்வதித்தாள்.

குலசேகரபாண்டியன் காளிதேவியினது ஆசிர்வாதத்தைப் பெற்று, பூமிதேவியின் முலைகளெனவிளங்கிய மலைகளையும், அம்முலைகளிலே நின்று பால் சுரந்தோடுமாப்போல் அம்மலைகளிலே நின்று வழிந்தோடும்அருவிகளையும், காறுகளையுந் தாண்டி, சங்கு, முத்து, பவளமுதலிய கடல்படு திரவியங்கள் ஏராளமாய்க்குவிந்து கிடக்கும் பாண்டிநாட்டில் தாமிரபருணி நதிக்கரையிலுள்ள தென் திருப்பதி என்னு மூரிலே வந்துசேர்ந்து, ஆற்றிலே மீனைப்பிடித்து விற்று ஜீவனம் பண்ணிவந்தான். இவன் இவ்வண்ணம் காலக்ஷேபம் செய்துவருகிறநாளில், ஓர்நாள் கொற்கைக் கரசனாகிய மாறன் அவ்வழியே வரும்போது நதியில் மீனைப் பிடித்துக்கொண்டிருந்த குலசேகரபாண்டியனைக்கண்டு, இவனார்? இராஜகுமாரனைப் போலிருக்கின்றானேயென்று அவனை அருகேயழைத்து, தம்பீ! நீ யார்? உன்னூரெது? என்று வினவினான். அப்போது ராஜகுமாரன் அரசனை வணங்கிச் சொல்லுகிறான்: ஓமன்னா! யான் சிங்கக்கொடியையுடைய சந்திரகுலராஜவழியில் சக்கராபுரிப்பட்டணத்தை யாளும் அமிர்த பாண்டியனுடைய மகன். என் பெயர் குலசேகர பாண்டியன். காந்தவிஞ்சைய நகரையாளும் காந்தவீரபாண்டியன் என் மூத்தசகோதரன். அன்னோன் எனக்கருளிய அரிய வரத்தைச் சிரமீது தாங்கி நானிங்கு மீன்பிடித்து ஜீவனம் பண்ணுகின்றேனென்றான். உடனே மாறன் அதிசயித்து, குலசேகரபாண்டியனைக்கொற்கைநகருக் கழைத்துப்போய், அவனுக்கு வேண்டும்உபசாரங்களைச் செய்து, தன் ஏக புதல்வியாகிய சுலோதையம்மனை அவனுக்குத் திருமணமுடித்து, இராஜ்யத்தையு மவனுக்கேகொடுத்து மகுடத்தையும் சூட்டிவைத்தான்.

குலசேகரபாண்டியன் மீன்பிடித்து ஜீவனம் பண்ணினமையால் மீனக்கொடிகட்டி, காளிதேவியி னனுக்கிரகத்தால் ஆண்மையோடரசு புரிந்துவந்தான்.

முதிர்வேனிற்காலத்தில் பாண்டிநாட்டின் தென்பாகத்துள்ள தாமிரபருணி நதியில் ஜலம்வற்றி, நன்செய், புன்செய்களெல்லாம்

வறண்டு, உஷ்ணம்பொருந்திய மேற்காற்றானது உக்கிரமாய் வீசி ஜீவசெந்துக்களை வாடிவதங்கச் செய்வது வழக்கமாகையால், குலசேகரபாண்டியன் தான் வசிப்பதற்குக் கொற்கைநகர் தகுதியற்ற தெனக்கண்டு, தன் நாட்டிலே வடபாகத்துள்ள மணலூரையடைந்து, செங்கோல் செலுத்திவருநாளில் திருவுள கற்பனைப்பிரகாரம் வைகையாற்றங்கரையில், நீர்வளம், நிலவளமுள்ள ஓர் நல்லிடத்தில் மதுரையென்னும் திருநகரையுண்டுபண்ணி, அதைப்பாண்டி நாட்டிற்கு ராஜதானியாக்கினான். அன்றியும் இவ்வரசன் தன் நாட்டிலே கடற்கரையோரமாய்த் தனதுபெயரால் ஓர்பட்டணத்தைக் கட்டி அங்கேயும் வசித்துவந்தான். (இதுவே குலசேகரபாண்டியன் பட்டணம்.)

இவ்விறைவன் சிவபக்தனாகையால் அக்காலத்தில் பாண்டிநாட்டிலே மிகப்பிரசித்தி பெற்று விளங்கிய சமண மதத்தை அதம்பண்ணக் கருதிக் காசிக்குப்போய்ச் சைவப்பிராமணர்களைக் கூட்டிவந்து, இடத்திற்கிடம் சிவாலயங்களைக்கட்டி, அவர்கள் ஜீவனத்திற்கு ஏராளமான பூமியையும் மானியமாகக்கொடுத்து, நித்தமும் நைவேத்ய பூஜாராதனைகளை நடத்திவரும்படி ஆக்ஞாபித்தான். அதன்பொருட்டுச் சமணர்கள் குலசேகரபாண்டியனைக் கொல்ல வகைதேடினார்கள். அரசன் அதி ஜாக்கிரதையுடனிருந்து சமணர்களின் துர்ச்செய்கைகளுக்குத் தப்பித்துக் கொண்டான். இவனே பாண்டி நாட்டில் சைவசமயத்தை ஸ்தாபித்த முதலரசன். இவன் உடலும் உயிரும்போலும், மணியும் ஒளியும்போலும், பூவும் மணமும்போலும் மாறபூபதியினுடைய மகள் சுலோதையம்மனோடு பொருந்திவாழ்ந்து, நெடிய கடல்சூழ்ந்த இப்புடவியையாண்டிடஓர் மகவைப்பெற்று, அவனுக்குச் சித்திராங்கத பாண்டியனென்று பெயரிட்டு, தக்கபிராயத்தி லவனுக்கு முடியைச்சூட்டித்தான் அரிய தவத்தைச் செய்து வீடடையும் பொருட்டு வனத்துக்குச் சென்றான்.

## சித்திராங்கதபாண்டியன் சரித்திரம்.

சித்திரத்தை யொத்தவனாகிய சித்திராங்கத பாண்டியனென்னுமிவன்: தமிழ் முனிவனாகிய அகத்தியனைக் குருவாகக்கொண்டு,

சகல சாஸ்திரங்களையுமையந்திரிபறக் கற்றுணர்ந்து, குருபக்தி மேவிட்டபடியினாலே அம்முனிவன் வாழும் மலயமலையைக் கொடியிற்றீட்டி, மலயத்துவஜபாண்டியனென்று உலகோர் போற்றத் தர்ம செங்கோல் செலுத்திவந்தான். இவ்வரசன் சூரியகுலத்துதித்த சூரசேனமகாராஜனின் புதல்வியாகிய காஞ்சனமாலையைக் கலியாணஞ்செய்து, அநேக காலம் பிள்ளையில்லாமல் அரிய தவத்தைச்செய்து, ஓர் பெண்குழந்தையைப் பெற்று, அவளுக்குச் சித்திராங்கி என்று பெயரிட்டு அதிகச்செல்வமாக வளர்த்துவந்தான். சிலர், இவளை அல்லியென்றும், இவளைப் பாண்டவரில் நடுவுள்ளோனாகிய அர்ச்சுனராஜன் மணமுடித்தானென்றும், வேறு சிலர் இவளை தடாதகைப்பிராட்டியென்றும், இவளைப் பரமேசுவரன் மணந்து, சோமசுந்தரபாண்டியனென்னும் பெயருடன் பாண்டிநாட்டை யாண்டானென்றும் சொல்வார்கள்.

---

# பூருமகாராஜனுக்குப்பின் ஆண்ட சந்திரகுலத்தரசர்கள் சரித்திரம்.

சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவன் பிரஜாசிருஷ்டி செய்யவெண்ணி, நவப்பிரமாக்களைப் படைத்தானன்றோ? அந்நவப்பிரமாக்களிலொருவனாகிய அத்திரி பிரஜாபதியின் புத்திரனாகிய சந்திரனுக்கு புதனும், புதனுக்கு புரூருவனும், புரூருவனுக்கு ஆயுவும், ஆயுவுக்கு நகுஷனும், நகுஷனுக்கு யயாதியும், யயாதிக்கு பூருவும் தோன்றிச் சந்திரநாட்டைச் சக்கர நெறிப்படி ஆண்டுவந்தார்களென்றும், பூருவென்னு மிறைவன் கேகய அரசனின் புதல்வியாகிய கௌசலையை மணம்புரிந்தானென்றும் முன்னமே சொல்லியிருக்கின்றோம். அந்தப்பூருவென்னு மரசனுக்கு செனமேசெயனும், செனமேசெயனுக்கு பிராசீனனும், பிராசீனனுக்கு சயாதியும், சயாதிக்கு சார்வபூமனும், சார்வபூமனுக்கு செயசேனனும், செயசேனனுக்கு, நயுதனும், நயுதனுக்கு குரோதனும், குரோதனுக்கு தேவாபியும், தேவாபிக்கு உருசகனும், உருசகனுக்கு அரிசகனும், அரிசகனுக்கு, மதிவானும், மதிவானுக்கு திடனும், திடனுக்கு நீலனும, நீலனுக்கு, அரதனமாலையினிடமாய்த் துஷ்டியந்தமகாராஜனும் பிறந்தார்கள்.

# துஷ்டியந்தபாரதமகாராஜர்களின் சரித்திரம்.

துஷ்டியந்தமகாராஜன் இளமையிலேயே தன் பூமியில் விளைநிலத்தில், உயர்ந்து பெருத்து விளங்கிய மலைகளையெல்லாம் பெயர்த்தெறிந்து, குடிகளுக்கு யாதொரு குறைவும் வராமல் பாதுகாக்குந் தன்மையுடையவனாய் விளங்கினான். மகுடாபிஷேகமானபின், தன்னுயிர்போல் மன்னுயிரனைத்தையு மிரக்ஷிக்குங் கருத்துடையவனாய் மனுசாஸ்திர விதி பிசகாமல் செங்கோல் செலுத்திவருகிறநாளில் ஓர்நாள், பதினெண்ணாயிரம் மந்திரிகளும், ஆறுலக்ஷத்தறுபத்தாறாயிரம் பட்டவர்த்தனரும், மூன்றுலக்ஷத்து முப்பத்தீராயிரம் மகுடவர்த்தனரும், இமபண்டிதர், இராஜபுரோகிதர் முதலானவர்களும் புடைசூழக் கோடிசூரியப்பிரகாசமான சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கின்ற தருணத்தில், சந்திரநாட்டுக்குடிகள்யாவும் திரண்டுவந்து, தங்களது வரவைக் காவலாளிகளால் அரசனுக்குத் தெரிவித்து, அவனது அனுமதியின்மேல் கொலுமண்டபத்திற்சென்று அரசனை வணங்கி நின்றார்கள். அரசன் குடிகளுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச்செய்து, யோகக்ஷேமமுங் கேட்டான். குடிகள் அரசனைக் கும்பிட்டு ஓ, அரசனே! நல்ல குலஸ்திரீகளுக்குக் கணவனே தெய்வமென்றும், அறியவேண்டியவற்றை யறிந்த புத்திரர்களுக்குத்தெய்வம் தந்தைதாயே யென்றும், முழுதும் துறந்த மஹாத்துக்களுக்கெல்லாம் தெய்வம் ஆசிரியனேயென்றும், மற்றவர்களுக்கெல்லாம் தெய்வம் அரசனே யென்றும், நூல்கள் முறையிடுகின்றன. ஆகையால் எங்களுக்கு யாதொரு குறைவும் வராமல் பாதுகாப்பதற்கு இறைவனாகிய நீரே உரித்தாளியென்பதற்குக் கிஞ்சித்தும் ஐயமின்று. ராஜமகாராஜ ராஜேஸ்வரா! நாங்களிடும் பயிர்களைப்பன்றி முதலிய வனவிலங்குகள் வந்து நாசஞ்செய்து போயினமையால் அதைத் தேவரீரவர்களுக்குத் தெரிவிக்க வந்தோமென்றார்கள்.

அரசன் குடிகள் மகிழ்வடைய நல்ல பரிசளித்து. நீங்களுங்களில்லங்களுக்குச் செல்லுங்கள். மிருகபய மில்லாதிருக்கத்தக்க ஏற்பாடுகள் செய்வோமென்று சொல்ல, குடிகள் அரசனை வணங்கிச் செலவுபெற்றுச் சென்றார்கள்.

பின்பு ராஜா மந்திரி முதலானவர்களைப் பார்த்து : நாம் சீக்கிரம் வேட்டைக்குச் செல்லவேண்டும். வேடர் முதலானவர்களை வருவியுங்கள். நீங்களும் பிரயாணத்துக்கு முயலுங்களென்று கட்டளையிட்டுத் தான் அந்தப்புரத்துக்குச் சென்று, வேட்டைக்குரிய உடையும், முடியும், பல ஆபரணங்களும் தரித்துக்கொண்டு வில், அம்பு, வாள், தண்டு முதலியவைகளைத் தாங்கி, வாயுவேகத்திலும் அதிகமாயோடுங் குதிரையின்மேலேறி வெளிப்பட்டான். அதற்குள்ளே மந்திரி முதலானவர்கள் : தேர், யானை, குதிரை, காலாளாகிய சதுரங்க சேனையையும், வேடர், வலைஞர் முதலியவர்களையும் விரைவாய் அழைத்துக்கொண்டு வந்து வேந்தனோடு கலந்துகொண்டார்கள். அவர்களெல்லாரு மொன்றாகக் கூடிக்கொண்டு முரசு, பேரிகை, டம்மாரம், டங்கா, பூரி முதலாகிய வாச்சியங்கள் சமுத்திரம் போலொலிக்க, மிகுந்த களிப்புடனே பிரயாணப்பட்டுப் போனார்கள், வலைஞர்களும், வேடர்களும் முன்னேபோய்க் காட்டிலெங்கும் வலைகளைக்கட்டி, மிருகங்களெல்லாம் ஓரேமுகமாய்வருவதற்கான சூழ்ச்சியைச் சீக்கிரத்திற்செய்தார்கள். அப்படியே ஒரு முகமாக வரும் சிங்கம், புலி, கரடி, செந்நாய், மான் முதலியவைகளை அரசன் முதலானவர்கள் பார்த்து : உடனே தங்கள்தங்கள் வில்லை வளைத்து, நாணேற்றிக் குணத்தொனி செய்து, அர்த்த சந்திரபாணம், முள்ளம்பு முதலியவைகளைச் சீக்கிரமாகத் தொடுத்து இரண்டிரண்டு துண்டாக்கியும், வரையாடு, பன்றி, முட்பன்றி, யானை முதலியவைகளை ஈட்டியாற் குத்திப் பூமியில் வீழ்த்தியும், எண்காற்புள் முதலிய பெரிய பக்ஷிகளினிறகுகளை அம்புகளினால் அறுத்துத்தள்ளியும் மனம் விரும்பியபடி வேட்டையாடினார்கள்.

இவ்விதமாக வேட்டையாடிக்கொண்டு வரும்போது ஒரு மானானது அந்த அரசன் பார்வைக்குத் தோன்றியது. அரசன் அதன் மேல் ஒருஅம்பை விட்டான். அந்த அம்பு மானினுடலிற்றைத்தது. மான் மிகுந்த வருத்தத்துடன் அக்கணையைத் தன்னுடலிலேற்று ஓடிற்று. அதனை அரசன் கண்டு தன் மந்திரிமாருடன் அந்த மானைத்துரத்திச் சென்றான். அது அதிவேகமாகவோடி மறைந்தது. அப்போது அரசன் வெயிலினகோரத்தால் மெய்ம்முழுதும் வியர்த்

துத் தாகக்களை தாங்கிப் பக்கத்தில் நிற்கும் மந்திரிமாரைப் பார்த்து: ஓ மந்திரிமாரே! மானைத் துரத்திக்கொண்டு பாலைநிலத்தில் வந்து சேர்ந்தோம். இங்கே எலிகளுக்குப் பாம்பின் படத்தினிழலொழிய வேறு நிழல் காணக்கூடவில்லை. தாகவிடாய் அதிகரிக்கின்றது. வியர்வை நீரையொழிய வேறு நீரிங்கில்லையே! நாமிப்போதென்னசெய்வோமென்று கேட்டான். மந்திரிமார்களும் சற்றாலோசித்துக்கொண்டிருந்தார்கள். அந்த வேளையில் ஒரு பக்கத்திலிருந்து குளிர்ச்சியான காற்றுப் பரந்துவந்து இவர்கள் மேல் வீசிற்று. அந்தக்காற்று வந்த திசையை நோக்கி: அரசனும் அமைச்சர்களும் சென்றார்கள். இவர்களுக்கெதிரே நல்ல கங்காநதி தோன்றிற்று. அவர்கள் அதைக் கண்டு மகிழ்ச்சியை யடைந்து, அதிற்படிந்து தாகவிடாய் நீங்கி, அங்கேயோர் விருக்ஷ நிழலிற் சற்றே இளைப்பாறினார்கள்.

பின்பு அரசன் அந்நதியின் விநோதங்களைப் பார்த்துக்கொண்டு சற்று முன்னேறிச் சென்றான். அங்கே சூதவனமொன்று அரசன் பார்வைக்குத் தெரிந்தது. அவன் அதைச் சற்று உற்றுநோக்கும் போது சில முனிவர்களெதிரேவரக்கண்டு அவர்களையடுத்து நமஸ்காரம்பண்ணினான். முனிவர்கள் அரசனுக்கு ஆசீர்வாதமளித்தார்கள். பின்பு மன்னவன் அவர்களை நோக்கி: ஓ, சுவாமிகளே! இந்த வனம் மகா விந்தையாயிருக்கின்றதே! இது யாருடையது? என்று கேட்டான். அதற்கு அவர்கள்: இது கண்ணுவமகாமுனிவருடைய ஆச்சிரமமுள்ளவனம் என்று பதில் சொன்னார்கள். அதுகேட்டு வேந்தன் உடனே திடுக்கிட்டு ஓ, சுவாமிகளே! நான் சந்திரகுலத்தரசன். என்பெயர் துஷ்டியந்தன். மிருகவேட்டையாடவந்தவிடத்தில் வழிதப்பிஇங்கே வந்துவிட்டேன். முனிவர்களிருக்குமிடத்துக்கு, அரசர்கள் வரலாகாதே! நானிங்கே வந்ததை ஒருவேளை கண்ணுவர் அறிந்தால் கோபிப்பாரோ? அல்லது போகட்டுமென்று மனங்கொள்ளுவாரோ? என்று பயபக்தியுடன் கேட்டான். அந்த முனிவர்கள் அரசன் சொன்னதைக்கேட்டு ஓ, மதிகுலமன்னனே! கண்ணுவமகா முனிவர் காசிபர்கோத்திரத்திலவதரித்த புண்ணியமூர்த்தி. அவர் எல்லாரிடத்தும் சாந்தமாயிருக்கின்றவர். வேந்தர்களிடத்தி லதிக அன்புடையவர். அதிலும் உம்மிடத்தில் விசேஷ பிரீதிகொண்டிருக்கின்றவர். ஆதலால் உமதுவிஷயத்தில் கோபங்கொள்ளாமல்

மனமகிழ்ந்து ஆசீர்வாதம்பண்ணுவார். நீர்போய் அம் மஹாமுனிவரைத் தரிசித்து ஆசீர்வாதம் பெற்றுப்போம். இப்புவிமுழுமையும் ஓர்குடையின்கீழ் ஆளவல்ல வோராண்மகவைப் பெறுவீர், என்று ஆசீர்வதித்துக் கங்காஸ்நானத்திற்குப் போய்விட்டார்கள். அரசன் மந்திரிகளைக் கூப்பிட்டு, நான் கண்ணுவமஹாமுனிவருடைய ஆச்சிரமத்துக்குப்போய், அவரைத் தரிசித்து வருமளவும் நீங்களிங்கேதானேயிருங்களென்று சொல்லி அவர்களைநிறுத்திவிட்டுத் தான் அந்த வனத்திற்குட் சென்றான்.

அவ்வனத்தின் சிறப்பை அரசன்கண்டு மகிழ்ந்து, அங்குள்ள யாகசாலைகளையும், ஓமகுண்ட முதலியவைகளையுங் கடந்து, கண்ணுவமுனிவரது பன்னசாலைக்குவந்தான். அங்கே மின்னற்கொடியைப் போன்ற வோர் கன்னியைக்கண்டு, திக்பிரமைகொண்டு, அசையாமல் சற்றுநேரம் நின்று, இது பரிசுத்தவான்களிருக்குமிடம். ஆகையால் இங்கு இக்கன்னிகையைக்கண்டு மையல்கொள்ளப் படாதென்றுணர்ந்து, தனக்குள் ளாலோசிக்கலானான். கண்ணுவமஹாமுனிவர் பிரம்மச்சாரியாச்சுதே! அவருடைய ஆச்சிரமத்தில் இப் பெண்ணிருக்கவேண்டிய காரணமென்ன? நாம் வரும்வழியில் முனிவர்களைச் சந்தித்தபோது, அவர்கள் இப்புவி முழுமையும் ஓர்குடையின்கீழாளவல்ல வோராண்மகவைப் பெறுவீரென்றுசொல்லி ஆசீர்வதித்துச் சென்றார்களே! அந்த மகாபாக்கியம் இந்த மங்கையினிடத்தினின்றுதான் தோன்றுமோ! என்னவோ! இக்கன்னிகையை நெருங்கி உண்மையை யறிந்துகொண்டு, அதன்பின் நமது கருத்தை வெளியிடுவோமென்று அம்மாதினருகிற் குறுகினான்.

சகுந்தலாதேவியானவள் முன்னமே கண்ணுவராலும், அக்கண்ணுவரிடத்துவரு முனிவர்களாலும் துஷ்டியந்த மகாராஜனது அருமை, பெருமையையும், திருவுருவத்திறத்தினையுங் கேள்விப்பட்டவளாதலால், இவனே துஷ்டியந்தமகாராஜனென்றுணர்ந்து, ஒரு பொற்பீடங் கொண்டுவந்து அரசனுக்குக்கொடுத்து, அதிலிருக்கச்சொல்லி நாணத்தோடு ஓர் தூண்மறைவிற்போய் நின்றாள். அரசனும் விருப்பத்துடன் அப் பொற்பீடத்தமர்ந்து, தன் கண்ணையும், கருத்தையும் அப்பெண்ணின் பேரழகாகிய சமுத்திரத்திலேசெலுத்தி, அக்

கன்னிகையைநோக்கி: ஓ, பெண்ணே! கண்ணுவமஹாமுனிவர் எங்கேபோனார்? சொல்லென்று கேட்டான். அதற்கு அம்மங்கையானவள்: ஓ, மகாராஜாவே! இன்னேரம்வரை ஐயர் இங்கேதானிருந்தார். இப்போதுதான் சதானந்தர்வந்து அழைத்துப்போயினர். இன்னும் சற்றுநேரத்திற்குள் வருவாரென்று கூறினாள். அரசன் அதுகேட்டு மீண்டும் வினவுகிறான்: ஓ, பெண்கள்சிகாமணியே! நீயார்? உன் பெயரென்ன? வென, அக்கன்னிகை: நான் கண்ணுவமஹாமுனிவரது புத்திரி, என் பெயர் சகுந்தலையென்று பதில் சொன்னாள். அரசன் அவள் வார்த்தையைக்கேட்டுத் திடுக்கிட்டு ஆ, பெண்ணே; ஆணவம், மாயை, காமியமென்னும் மும்மலத்தையுமடக்கி, என்றும் பிரம்மசாரியத்தைப்பெற்ற பரிசுத்தவான்களுள் பரிசுத்தவானாய்விளங்கும் கண்ணுவமஹாமுனிவர்க்கு நீ புதல்வியானதெங்ஙனம்? உனக்குச் சகுந்தலையென்றுபெயர்வரக் காரணமென்ன? சொல்லென்று கேட்டான்.

அப்போது சகுந்தலை அரசனைநோக்கி: ஓ, மன்னர்கள்மன்னனே! சிலதினங்களின்முன்னே சதானந்தமுனிவரிங்கேவந்தார்; அவரைத் தரிசித்தேன். அவர் என்னைப்பார்த்துவிட்டு, இந்தக்கன்னிகை யாரென்று கண்ணுவமஹாமுனிவரைக்கேட்டார். அதற்கு அவர் என்னுடைய விருந்தாந்தத்தை அவருக்குச் சொன்னார். அப்போது நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அதைச் சொல்லுகிறேன் கேளும். ஓ ராஜேஸ்வரா! மாகூதிமைபொருந்திய மாதவராய் விளங்கும் விஸ்வாமித்ர முனிவரானவர் ஒருகாலத்தில் இமயமலைச்சாரலில் ஐம்பொறிகளையும் ஒருவழிப்படுத்தி, அறிவைப் பிரம்மத்தினிடத்தே செலுத்தி, அரிய தவத்தைச் செய்துகொண்டிருந்தார். இந்த ராஜரிஷியினுடைய தவமானது இந்திரனுடைய இருதயத்துக்கு மிகுந்த துன்பத்தை விளைத்தமையால் அவன் இவரது தவத்தை யழித்துவரும்படி மேனகையை யேவினான். அவள் நல்லதென்று இந்திரனை வணங்கி, இமயமலைச் சாரலில் விஸ்வாமித்திரர் தவம் செய்யுமிடத்திற்குச்சென்று தென்றற்காற்று வாடையில் நின்றாள். அவளணிந்து நின்ற சந்தனம், புழுகு, கஸ்தூரி, சவ்வாது முதலியவைகளின் வாசனை இவர் நாசியிலேலறவே கண்ணைத்திறந்து

அங்குமிங்கும் பார்த்தார், ஒருவரையுங் காணவில்லை, ஆதலால் அவ் வாசனை வரும்வழியே போகும்போது ஓர் சந்தனமரத்தின்கீழ் மேனகையைக்கண்டு தவநிலை குலைந்த முனிவர் காம வெறிகொண்டு, அவள் சமீபத்திற் சென்று ஓ, பெண்ணே! மன்மத பாணங்களால் வருந்துகின்ற வென்னை யாதரிக்கவேண்டுமென்று மன்றாடினார். அவளும் அவருடைய மன்றாட்டிற்கிணங்கினாள். இவ்வண்ணம் விஸ்வாமித்ர முனிவர்க்கு மேனகையினிடம் யான் பிறந்தேன். என் மாதாவும், பிதாவும் என்னிடத்தில் பிரீதியில்லாமல் என்னையோரிடத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். வெயிலினுஷ்ணத்தினாலெனக்கு வருத்தமுண்டான போது, நானழுத குரலைக்கேட்டுச் சகுந்தலைப்பக்ஷிகள் வந்து என்மேல் வெயில்படாதபடி தம்மிறகுகளை விரித்துப் பந்தலிட்டிருந்தன. அப்போது அவ்வழியே வந்த கண்ணுவமஹா முனிவர் என்னைக்கண்டெடுத்துத் தமதாச்சிரமத்திற்குக்கொண்டுவந்து சேர்த்து, எனக்குச் சகுந்தலையெனப் பெயரிட்டு, அதிக அன்புடன் இந்நாள்மட்டும் வளர்த்து வருகின்றார். இதுவே என் வரன்முறையெனச்சொல்லி, அதி நாணத்தோடு தலை குனிந்து நின்றாள்.

அரசன் சகுந்தலையின் வாய்மொழியைக்கேட்டு, பரமானந்தமடைந்து, இந்தப்பெண் கௌசிக மகாராஜனுக்கு மேனகையென்னும் தெய்வலோக ஸ்திரியின்பாலுதித்தவளாகையால் இவ்வளவு அழகாயிருக்கின்றாள். நம் விருப்பத்தின்படி இவளைக் கூடுதல் தகுதியேயென்று மனதிலெண்ணிக்கொண்டு, சகுந்தலையைப்பார்த்து ஓ, பெண்ணே! நீ க்ஷத்திரியபெருமானாகிய கௌசிகமகாராஜனது குமாரத்தியே யாதலின் நானுன்னைக் கூடத்தகும்; ஆகையால் நீ என்னை யாதரிக்கவேண்டுமென்றான்.

அப்போது சகுந்தலை அரசனின் வாய்மொழிகளைக்கேட்டு, மிகுந்த நாணத்தால் முகத்தை முந்தானையினால் மூடிக்கொண்டு சொல்லுகிறாள்:—மஹத்வம் பொருந்திய மன்னர் பெரும! இது முழுதுந்துறந்த மஹாத்மாவாகிய கண்ணுவ முனிவருடைய ஆச்சிரமம். நீவிர் இவ்விடத்தில் வந்து, முன் பின் யோசியாமல் என்னைக்கூடவென்று சொல்லுவது நிருபராகியவுமக்கு நீதியல்ல. அவ்வாறு கூடு

வோமாயின் என்னை அருமையாக வளர்த்த தந்தையாகிய கண்ணு வமஹா முனிவரறிந்தால் அதிக வருத்தப்படுவார். அவர் உம்மை நேரிற் கண்டு வினவுவாராயின் நீவிர் அவருக்கென்ன பதில் சொல் வீர்? என்று கேட்டாள்.

அதற்கு அரசன்:—ஓ, பெண்ணே! நீயேனஞ்சுகிறாய்? நீ பெ ண்ணாய்ப் பிறக்குமுன்னமே உனக்குப் புருஷனாயொருவன் பூவில் பிறந்திருப்பானன்றோ? மேலும் பெண்ணைப் பெற்றவர்கள் வேறொ ரு புருஷனைத்தேடி விவாகஞ்செய்து கொடுப்பாரேயொழிய மனையி ல் வைத்திருக்கப் போவதில்லை. கண்ணுவரோ மஹா தவசிரேஷ் டர்; மேலும் பிரம்மச்சாரி. அவரிடத்தில் வருகிறவர்களும் காமத் துரோகிகள்; ஆதலால் அவர்களுமுன்னை விரும்பப் போவதில்லை. உன்னை எம்மைப்போன்ற ஒருவர்க்கே மணஞ்செய்விக்கப் போகின் றார். க்ஷத்திரிய வம்சத்துதித்த சந்திர குலாதிபனாகிய யானே உன்னை மணம்புரிய நேரில் வந்துவிட்டேன். வலியவந்த சீதேவி யைக் காலாலுதைத்துத் தள்ளுவதுபோல் என்னை அலட்சியம் செ ய்வது சரியன்று, ஆகையால், என்னை யாதரிக்கவேண்டும். இதை க்கண்ணுவமஹா முனிவர் அறியாமலிருக்கப்போவதில்லை. அறிந்தா ற் களிப்படைவாரேயன்றிக் கோபங் கொள்ளாரென்று மறுமொழி கூறினான்.

சகுந்தலை அரசன் சொல்லியவைகளைச் சற்றுநேரம் தியானித் து, பின் மன்னனை நோக்கிச் சொல்லுகிறாள்:—ஓ, உலகுபுகழ் காவ லா! உத்தம க்ஷத்திரிய புருஷோத்தமா! நான் சொல்லுவதைக்கே ளும். ஒரு ஸ்திரியானவள் ஒரு புருஷனை மணஞ்செய்யாது கூடி னால் உலகினர் பழிப்பதுமன்றி பிறக்கும் புத்திரனுக்கும் வசவு நே ரிடும். ஆதலால் எனது தந்தையாகிய கண்ணுவர் வந்தவுடன் தங் கள் கருத்தைத் தெரிவித்து விவாகத்தை நிறைவேற்றி அப்பால் என்னைக்கூடுவது தங்களைப்போன்ற காவலர்களுக்குத் தகுதியேய ன்றி, தாங்கள் சொல்லும் வண்ணம் செய்தால் நிந்தைக்கிடமுண் டாகுமென்றாள்.

துஷ்டியந்த மகாராஜனானவன் சகுந்தலா தேவியை நோக்கிப் பின்னும் சொல்லுகிறான் :—ஓ, பெண்ணே ! உன்பிதாவாகிய கண்

ணுவமஹாமுனிவர் வருந்தனையுங் காத்திருந்து, கலியாணஞ்செய்து பின் கூடென்று கூறுவது எவ்வாறிருக்கிறதென்றால்; விஷம் தலைக்கேறி மயங்கிப் பூமியில் விழுந்த வொருவனைச்சொஸ்தமாக்க அவன் சிநேகிதன் மந்திரங்கற்றுவர மலைவாசிகளிடத்திற் சென்று சூரியகிரஹணத்தை யெதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பது போலிருக்கின்றது. அதுவரை நான் எவ்வாறு சுகித்திருக்கக்கூடும்? ஆனால் உனது கருத்துக்கும், கண்ணுவ முனிவரது எண்ணத்துக்கும், நம்மிருவருடைய வசதிக்கும் பொருந்த நானோர் உபாயம் சொல்லுகின்றேன் கேள். அதாவது; விவாகமானது பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என எட்டுவகைப்படும். இவற்றுள் கேட்பாருங் கொடுப்பாருமின்றி ஆணும் பெண்ணும் தனியிடத்தெதிர்ப்பட்டு, இருவருமனமொத்துக் கூடுவது காந்தருவமண மென்று சொல்லப்படும். ஆகையால் நாமிருவரும் அந்த விவாகத்தை யனுசரித்துக் கூடுவோமென, சகுந்தலை அரசனை நோக்கிப் புன்னகை காட்டிச் சொல்லுகிறாள் :— நன்றாய்ச் சொன்னீர். நீர் என்னைக் கூடி, இப்போ துமக்கேற்பட்டிருக்குங் காமநோயைத் தீர்த்துக்கொண்டு, மேலே யெழுந்து இறகையாட்டி உள்ளிருக்கும் மீனை வெளிப்படுத்தி, வீழ்ந்துராஞ்சிக்கொண்டு தேகத்தில் ஜலம் ஒட்டாமல் உதறிவிட்டுப் போகின்ற மீன்கொத்திப் பறவையைப்போல் பசையற்று, பற்றற்று, எமக்கென்னவென்று சும்மா விருந்துவிடுவீராயின், அப்பால் எனக்கும், என் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைக்கும் புகலென்ன வென்று கேட்டாள்.

அதற்கு அரசன் புன்னகை புரிந்து சகுந்தலையைப்பார்த்து :— ஓ பெண்ணே சகுந்தலை! எம்மைப்போன்ற மன்னவர்களுக்கு வெற்றியையும், பாக்கியத்தையுங் கொடுப்பது தூய்மையாகிய வாய்மையேயாம். அந்த வாய்மையை மறப்பவர்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டை வருவித்துக் கொள்ளுகின்றார்கள். நானோ சத்தியம் பொருந்திய சந்திரகுலத்திறைவன். வாய்மையை யணுவளவும் மறக்கேன். பெண்ணே! உன்னையும் உன் வயிற்றிற் பிறக்கும் பிள்ளையையும் ஒருபோதுங் கைவிடமாட்டேன்; இது சத்தியம் என்று சொன்னான். அப்பால் சகுந்தலை அரசனைநோக்கி :—ஓ, பௌரவ

குலோத்தமா! நான் உம்மையோர் வரங்கேட்கிறேன். நீர் அந்த வரத்தை யெனக்களிப்பீராயின், நான் உம்மைக் கூடத்தடையில்லை யென்று கூறினாள், அரசன் அதற்கிசைந்து, சகுந்தலையைநோக்கி: ஓ தேனொழுகும் மலர்மாலையையணிந்த கோதாய்! உனக்கு வேண்டிய வரத்தைக்கேள். தருகிறேனென்றான். சகுந்தலை இறைவனை வணங்கி, ஓ, மன்னாதி மன்னர்களெல்லாம் பொன்முடி சூடிய சிரம் புவியிற் படவணங்கும் பெருமானே! யானே உமது மகுடத்தரசி யென்றும், எனது வயிற்றிற் பிறக்கும் புத்திரனே உமது மகுடத்திற்குரியவ னென்றும் ஆகாயவாணி, பூமிதேவி யிவர்களறியச்சத்தியத்தைச் செய்து என்னைக் கூடுமென, அரசனும் அவள் விரும்பியவாறே சத்தியத்தைச் செய்து, ஐந்துவித ஆலிங்கனத்தாலும், பதினெருவித அதரபானத்தாலும் அவளைக்கூடி மகிழ்வித்து, பின் அவளைப் பார்த்து :—ஓ, என் அன்பிற்குகந்த அணங்கே! காலதாமதமாயிற்று, மந்திரி முதலானோர் என் வருகைக்கெதிர்பார்த்துக்காத்திருப்பார்கள். ஆகையால் நானவர்களோடு என் நகருக்குச் சென்று அப்பால் மந்திரிமார்களையனுப்பி உன்னைத் தருவித்துக்கொள்ளுகிறேன். வருத்தமின்றி விடை கொடென, சகுந்தலை மனவருத்தமுற்று அரசனைப்பார்த்து :—ஓ, என் தலைவனே! தாங்கள் செல்லத் தடையொன்றுமில்லை, ஆனால் என்னைமாத்திரம் மறக்காதிருக்கப் பிரார்த்திக்கிறேனென்றாள். இறைவன் அவள் மனதைத் தேற்றிச் செலவுபெற்று மந்திரிமார்களுடன் கலந்து, காட்டில் நாலாபக்கங்களிலும் பிரிந்து நின்ற சேனைகளனைத்தையு மொருங்கேதிரட்டித் தன்னகர் போய்ச் சேர்ந்தான்.

இங்கே சகுந்தலாதேவியானவள்: சந்திரகுலாதிபனுக்குரிய மனைவியானேமென்றொரு பக்கம் சந்தோஷித்தாலும், கணவனைப் பிரிந்த வருத்தமும், கண்ணுவர்கேள்விக்கென்ன விடைசொல்வோமென்னும் பயமும் அவளை மறுபக்கம் வாதிக்க, அவள் ஒருவகையுந்தோன்றாமல் என்ன செய்வதென்றேங்கிப் பயந்திருந்தாள். அந்தவேளையில் திரிகாலக்கியானியாகிய கண்ணுவர் அங்கே வந்துவிட்டார். உடனே கலவியால் வெளுத்த இதழையும், வியர்வையால் நிறைந்த முகத்தையும், வேகத்தாற் சிவந்தவிழியையும், பற்களினாற்பட்ட குறியையும், ஆலிங்கன முதலியவற்றால் கலைந்த

அளகத்தையுமுடைய சகுந்தலை: நாணமும் பயமுமுடையவளாய், கண்ணுவருடைய பாதங்களில் விழுந்து, தன்னை மன்னிக்கவேண்டுமென்று மன்றாடினாள்.

கண்ணுவர்: வெளியிற் சென்றது முதல் ஆச்சிரமத்தில் நடந்தயாவையும் ஆதியோடந்தமாகத் தமதுஞான திருஷ்டியாலறிந்தவராகையால் மகிழ்ந்து, சகுந்தலையை நோக்கி: ஓ, அம்மணீ! கல்வியையும், வல்லமையையும், அழகினையும், வாலிபத்தையும், செல்வத்தையுமுடைய குரிசிலைக் கூடிச்சற்புத்திரர்களைப் பெறுவதுதான் உலகில் பெண்கள் பெறும்பேறு. இந்தப்பேறுஎல்லாப்பெண்களுக்குங்கிடையாது. நீ ராஜரிஷியாகிய விசுவாமித்ர முனிக்குத் தெய்வலோகஸ்திரியாகிய மேனகையினிடத்துப் பிறந்தவளாகையால், அவர்கள் மூலமாகச் சகல பாக்கியங்களையும் சம்பாதித்துக் கொண்டாய். இனி உனக்கொரு குறைவுமில்லை. உன்னுதரத்திலிருக்கின்ற புத்திரனோ! நெடியகடல் சூழ்ந்த இவ்வுலகை யொருகுடையின் கீழாளும்படியான வல்லமையையுடையவன். உன்னைக் காந்தருவமணம் புரிந்து கூடினவனோ! சத்தியம்பொருந்திய திங்கள் குலதிலகனாகிய துஷ்டியந்தமகாராஜன். நீ அவ்வரசனோடு செய்துகொண்ட வுடன்படிக்கையோமேலானது. இதுவிஷயமாகஉன் பேரில் மகிழ்வேயன்றிமனவருத்தமில்லையென்றார். சகுந்தலை: முனிவரிடத்தில் செலவுபெற்றுத் தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தாள்.

சகுந்தலையானவள் கர்ப்பத்தையடைந்த பத்தாம்மாதம் கர்ப்பவேதனையுண்டாகி யாவரும் விரும்பத்தக்கவோர்புத்திரனைப்பெற்றாள். கண்ணுவமகாமுனிவர் அப்புத்திரனுக்குப்பல ஆசிகள் கூறி, செய்யவேண்டிய சடங்குகளத்தனையுங் கிரமப்படி நிறைவேற்றி, பரதன் (பூலோகநாதன்) என்று பெயரிட்டு, ஐந்துவயதுக்குமேல் வேதாகமங்கள் முதலியவற்றைப்போதித்து, ஏழாம்ஆண்டு முதல் வில்வித்தை, அம்புவித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றைக்கற்பித்து மஹா விருப்பத்துடன் வளர்த்து வந்தார்.

பரதனுக்குப் பன்னிரண்டு வயதான காலத்தில் கண்ணுவர் சகுந்தலையையழைப்பித்து ஓ, அம்மணீ! இனி நீ உன் கணவனாகிய துஷ்டியந்த மகாராஜனிடத்திற் சென்று வாழ்ந்திரு. உன்னை மந்

திரிகளால் அழைப்பித்துக்கொள்ளுகிறேனென்று சொல்லிப்போன வர் இதுவரை அவ்விதம் அழைக்க மறந்துவிட்டார். ஆகையால், இதோ நிற்கின்ற எனது சிஷர்களிற் சிலரையனுப்பிவைக்கிறேன்; நீ அவர்களை வழித் துணையாகக்கொண்டு காண்டவப் பிரஸ்தம் போய்ச் சேரென்று கட்டளையிட்டார்.

சகுந்தலை கனவருத்தமுற்று, கண்ணுவமஹாமுனிவர்க்குச் சாஷ்டாங்க தெண்டனிட்டு, ஓ, சுவாமிகளே! இதுகாலவரை யாதாமொருகுறைவும் வாராமல் என்னை அன்புடன் பாதுகாத்துவந்தீர்கள். எனக்கு மாதா, பிதா, குரு, தெய்வம் தாங்களேயன்றி வேறில்லை. தங்களுத்தரவுப்படியே காண்டவப்பிரஸ்தம் செல்லுகின்றேன். தாங்களிதுவரை என்மேலெப்படிக் கிருபை வைத்திருந்தீர்களோ, அப்படியே இனிமேலும் தயைமறக்காதிருக்கப் பிரார்த்திக்கின்றேனென்று சொல்லி விடைபெற்றுப் புத்திரனைக் கையிற் பிடித்துக்கொண்டு, கண்ணுவரின் சீடரோடு காண்டவப்பிரஸ்தம் போய்ச் சேர்ந்து, அவர்களை ஆச்சிரமத்துக் கேகும்படி விடைகொடுத் தனுப்பிவிட்டுத் தான் மகனோடு ராஜசபைக்குச் சென்று, அரசனைக்கண்டு வணங்கிநின்றாள். அங்கே கூடியிருந்த ஐம்பத்தாறு தேசத்தரசர்களும், மந்திரிமாரும், மகுடவர்த்தனரும், பட்டவர்த்தனரும், இமபண்டிதர், இராஜபுரோகிதர் முதலானவர்களும் சகுந்தலையையும், பரதனையும் உற்றுநோக்கி: ஆ, ஹா! இவர்களார்? இவர்கள் இராஜசபைக்கு வரவேண்டியகாரணமென்ன? இவர்களுக்கு யார் என்ன தீங்குசெய்தார்களோ! வென்று ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளாலோசித்துக்கொண்டிருந்தார்கள்.

துஷ்டியந்தமகாராஜன் சகுந்தலையையும், மகன் பரதனையும் சற்றுநேர முற்றுநோக்கி: ஆ, ஹா! நாம்முன்னொருகாலத்தில் வனத்துக்கு மிருகவேட்டையாடச் சென்றபோது இவளைக் கண்ணுவமஹாமுனிவரது ஆச்சிரமத்திற்கண்டு, காந்தருவமணம்புரிந்து கலந்து பிரியும்போது மந்திரிகளையனுப்பி யழைப்பித்துக் கொள்ளுகிறேனென்று சொல்லிவந்தபின் இதுவரை யழைப்பிக்காதிருந்ததினால் மகனோடு இங்கேவந்தாள். வந்தவளைத் தனியே ஏற்போமாயின் இதோ நிற்கின்ற நமது புத்திரனுக்கு நமக்குப்பின் மந்திரிமுதலா

ஞோர் பட்டங்கட்டிவைக்க மாட்டார்கள், இவ்விருவர்களையும் அப்புறப் படுத்திவிடுவோமாயின் மனம் நோவார்கள். அதனால்அரசுக்கு கெடுதிநேரிடும். ஆகையால் நாமிவர்களை நிராகரிப்போம். அப்போது நாம் சாக்ஷிகளாகவைத்த ஆகாயவாணி, பூமிதேவிஇவர்களில் ஒருவர்வந்து இச்சபையாரறியும்படி சாக்ஷிசொல்லட்டும், என்று மனதுக்குள்ளே தீர்மானித்து, சகுந்தலையைப்பார்த்து: ஓ, பெண்ணே! நீயார்? உன் பெயரென்ன? உன்னருகில்நிற்குஞ் சிறுவனார்? உன்னிருப்பிடமெது? நீவிரிருவரும் இங்கு வரவேண்டிய காரணமென்னவென்று கேட்டான்.

சகுந்தலை திடுக்கிட்டு ஆ! இதென்ன அரசன்நம்மை யாரென்று வினவுகிறார்! இவர் நம்மைப் பகற்காலத்திற் சாவகாசமாய்க் காந்தருவமணம்புரிந்து கூடியவர் தாமே! குறி அறியாதவரைப்போல் வினவுகின்றாரே! இவர் இப்படிக்கேட்குங் காரணமியாது? இவர் தமது செல்வச்செருக்கினால் நம்மை அவமானப்படுத்தக் கருதியிருக்கின்றாரோ? அல்லது உண்மையில் மறதிதானோ? என்னவோ! எல்லாம் இன்னம் சற்றுநேரத்திற்குள் தெரியவருகிறது. நாம் உண்மையைக் கூறினால் தெய்வம்விட்ட கதியாகிறதென்று தன்னைத்தானே தைரியப்படுத்திக்கொண்டு, அரசனைவணங்கி ஓ, மன்னர்கள்மன்னரே! நானுமதுமனைவி, இதோநிற்கின்ற சிறுவன் உமதுபுத்திரன், என்னிருப்பிடம் கண்ணுவர் ஆச்சிரமம் என்று கூறினாள்.

அரசன் அவள் வாய்மொழியைக்கேட்டு மனைவியையும், மகனையுங் கண்ணுற்ற மகிழ்ச்சியைப் பரிகாசச்சிரிப்பாகக் காட்டிச் சொல்லுகிறான்: பளா! பளா!! நிரம்ப நேர்த்தி! வெகு யோக்யம், நன்றாயிருக்கிறது, மந்திரிகளே! இதென்ன! ஆச்சரியம்! இதோ நிற்கின்றாளே! இவள் என் மனைவியாம், அவளருகில்நிற்குஞ் சிறுவன் என் முடியைத்தாங்கும் புத்திரனாம், இவள் முன்னும் பின்னுமாகக் கட்டிப்பேசுவது நிரம்ப மேலாயிருக்கிறது, பொய்யை மெய்போலுங் கூச்சமின்றிக் கூறுகின்றாள். பாருங்களென்று ஏளனஞ்செய்து, பின்னும் சகுந்தலையைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ, பெண்ணே! நீ எனக்கு மனைவியான தெங்ஙனம்? அவ்வரலாற்றை இச் சபையாரறிய வுரையென்று சொன்னான்.

அரசனது மர்மமொழிகளைக் கேட்டபோது சகுந்தலையின் மனமானது துன்பத்தால் துடிதுடித்துப் பதைபதைக்கச் சோர்வுற்றுச் சொல்லுகிறாள்: ஓ அரசரே! நீவிர் இற்றைக்குப் பன்னிரண்டு வருடங்களுக்குமுன்பு காட்டில் வேட்டைக்குவந்து யாவரையும் நீங்கி ஒருவராய்த் தனித்துக் கண்ணுவமுனிவரது ஆச்சிரமத்துக்கு வந்தபோது நானுமக்கு வந்தனம்செய்து பொற்பீடமளித்து உட்காரச்சொல்ல, நீவிருட்கார்ந்து என் வரலாற்றைக்கேட்டு மையலாகி ஆகாயவாணி, பூமிதேவி இவர்களைச் சாக்ஷிகளாகவைத்து நானே உமது பட்டத்துத் தேவியென்றும், என்வயிற்றிற்பிறக்கும் புத்திரனே உமது முடிக்குரியவனென்றும் சத்தியத்தைச்செய்து, காந்தருவமணம்புரிந்து என்னைக்கூடித் திரும்பும்போது ஆட்களையனுப்பி உன்னை வருவித்துக்கொள்ளுகிறேனென்று சொல்லிவந்தபின் அதை முற்றும் மறந்திருந்துவிட்டீர். அப்பால் நான் கருப்பவதியாகி ஓர் புத்திரனைப் பெற்றேன். கண்ணுவமஹாமுனிவர் அப்புத்திரனுக்குச் செய்வனவாய சடங்குகளையெல்லாம் குறைவறச்செய்து பரதன்என்று பெயரிட்டு நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்கு கலைக்யானம், மனுவிக்யான முதலியவைகளையுங்கற்பித்து அப்பால் என்னையும், புத்திரனையும், உமதுநகரில் விட்டுவரும்படி தனது சீஷர்களுக்குச் சொல்ல, அவர்களும் அவ்வாறே எங்களையழைத்துவந்து உமது நகரத்தில்விட்டுப்போயினர். நான் மைந்தனோடு உமது சபைக்கு வந்தேனெனக் கூறினாள்.

இறைவன் இவ்வசனங்களைக்கேட்டுத் தனது கருத்து நிறைவேறக் கருதி முகம் வேறுபடச் சொல்லுகிறான்: ஓ பெண்ணே! நானென்ன அரசனல்லவா? நான் வேட்டையாடப் புறப்பட்டால் ஒருவனாகத் தனித்துப் புறப்படுவேனா? மேலும் நான் முனிவரிருக்கும் ஆச்சிரமத்துக்கு வரவேண்டிய காரணமென்ன? ஒருவேளை அப்படி வந்தபோதிலுங்கூட அவ்விடத்திலோர் பெண்ணைக்கண்டால் மோகிக்கலாமா? அப்படி மோகித்தபோதிலும் அவ்விடத்தில் சம்போகஞ்செய்யலாமா? அது பரிசுத்தவான்களிருக்கும் ஸ்தலமல்லவா? இவற்றையெல்லாம் நீ நன்றாயூன்றி யோசித்துப்பார்; அப்படி ஆராய்ந்து பார்ப்பாயானால் இவையெல்லாம், பொய்யாகுமே யன்றி உண்மையென வுன்னருகில் நிற்குஞ் சிறுவனு மொப்புக்கொள்ள மாட்டான்.

இன்னமும் ஆகாயவாணி, பூமிதேவி இவர்களறிய வுன்னைக் கந்தருவமணம் புரிந்தேனென்கிறாய். அது சபைக்கேற்குமா? நான் சத்தியந்தவறாதரசியற்றும் சந்திரவம்ச இறைவனல்லனோ? நீ என்னை இவ்வண்ணம் அவமானப்படுத்துவது நியாயமாகுமா? உலகாதிபனாகிய என்மேல் வல்லடி வழக்காடத் துணிந்து வந்த வுன்னை இன்னும் சற்றுநேர மிச்சபையில் நிற்கப்பார்த்திருந்தால், என்ன தெல்லாமுன்னதெனக் கைக்கொள்வாய். ஆட்சேபனை யில்லை. இனி அரைநொடிப் பொழுதாகிலும் இவண் நிற்கவேண்டுவதில்லை. வந்த வழியே செல்லென்று கூற, சகுந்தலை கனவருத்தமுற்று, ஆ! ஹா!! தெய்வமே! ஆதியிலிந்த அரசனைக்கண்டபோது பெண்கள் பெறும்பேறு பெற்றேனென்று அதி விருப்புற்று அன்புடன் கூடிக் களிப்படைந்திருந்தேனே! இற்றைத்தினம் இவ்வரசன்சொல் அளவற்ற களிப்பை அதமாக்கிச் சகிக்கக்கூடாத துன்பத்தைக் கொடுத்ததே! இதற்கென்ன செய்வேனையா! இன்னும் சற்றுநேரமிருந்து மற்றுங் குறையையும் விவரித்துக் கூறுவோமென்றால் ஏவலாளிகளைக்கொண்டு தள்ளிவிடுவார்போல் தோன்றுகிறதே! இனி நானென்ன செய்வேனென்று தியங்கி, தனக்குத்தானே துணிவுகொண்டு அரசனைப்பார்த்துச் சொல்லுகிறாள்: ஓ அரசசிகாமணீ! உலகில் யாராவதொருவர் கொலை, களவு, காமம், சூது, வாது முதலிய அக்கிரமங்களிலொன்றைச் செய்தால் அவர்களைத் தண்டிக்கிறது அரசர் செய்கை. அவ்வரசரே சூது, வாது முதலிய அக்கிரமங்களுக்குப் பாத்தியப்பட்டால் அவர்களைத் தண்டிக்கிறதார்? ஒருவருமில்லை. நீர் உலகாதிபர், உமது வாக்கிற் கெதிர்வாக்குண்டா? இல்லை. பயிருக்காதாரமாயிடப்பட்டவேலிதானே பயிலர மேய்ந்தால் பயிர் விளைவதெங்ஙனம்? மலைபோன்ற புயங்களை யுடைய மன்னர் திலகமே! நீர் என்னைக் கண்டபோது சத்தியவாக்குடனும், நிலைபெற்ற அறிவுடனும் இன் சொல்லுரைத்து என்னைக் கலந்து பிரிந்தபின் கல்லைப்போல் மனமும், கரவடமுங் கற்று இப்படிப் பேசுவீரென்று அப்போது பேதையாகிய யான் சிறிதும் அறியாமற் போனேனே! மாரிபோற் பொழியுங் கரத்தையுடைய வள்ளலே! உடலும் உயிரும், மலரும் மணமும், இரத்தினங்களும் அதனது தேஜஸும்போல இங்கிதமான கணவனுடன் பொருந்தி ஸ்திரீகள்

வாழ்வதல்லாது, அன்னியரைப்போல் பிரிவுற்றுத் துன்பத்தால் வருந்தித் துயரப்படாநின்ற தோகைமார் என்போலு முண்டோ? இறைவனே! தனக்கு வழிபடுகடவுள், தனக்குண்டாகிய இன்பம், தன்னுடைய வலிமை, அழகு இன்னுமுள்ள சுபங்களியாவும் தனது நாயகனென்றே வந்தித்துச் சிந்திக்கும் பதிவிரதைகளை மனநோவச் செய்வது விவேகமோ? நீதியோ? தருமமோ? ஐயோ! அநீதியும், அசத்தியமும் உம்மிடத்திலிருக்குமாகில், நன்னீதியும், சத்தியமுமிருக்குமிட மெங்கே? இராஜரேறே! அரசருக்குண்டாகிய பெருமை, கீர்த்தி, இன்பம், பேறு, யாகம், வெற்றி முதலிய சகல கருமங்களும் கற்புடைய மனைவியைப் படைத்தவர்க்குண்டென்றும், அவர்கட்கே உரிமை யென்றும் வேதத்திற் சொல்லி யிருப்பதை நீரறிந்திருந்தும் என்னையும், அருமை மகனையும் அவமதித்துத் தள்ளிவிடுவது நியாயமோ? அண்ணலே! வாழ்வைப் பெற்றாலும், தாழ்வைப்பெற்றாலும், இருந்தாலும், இறந்தாலும் கூடப் பொருந்தி யநுபவிப்பவளாகிய குலநாயகியின்மனந்தளரும்படிபசையற்றுப் பற்றற்றுப்போகின்றபுருஷரையடுத்தால் அவர் காப்பாரோ? காவலரே! ஒரு புத்திரன் பிறக்கவேண்டுமென்று புத்திர காமேஷ்டியாகமென்ன, தருமமென்ன, விரதமென்ன, நோன்பென்ன, சத்திரமென்ன, சாவடியென்ன, மடமென்ன, தடமென்ன, சோலையென்ன, சாலையென்ன, தெய்வ பிரார்த்தனை யென்ன, மந்திரமென்ன, இயந்திரமென்ன, சக்கரமென்ன, ஔஷதமென்ன இன்னும் என்னென்னவெல்லாமோ செய்து பிள்ளையைப் பெற்றுக்கொள்வார்கள். திவ்யமானகுமாரனைக்கண்டு நீ யாரோ நானாரோவென்று வெறுத்தபேர்களைக் காசினியிலுங்கண்டறியேன். கதையிலுங் கேட்டறியேன். வெற்றி பொருந்திய வேலாயுதமுடைய வேந்தே! இச்சிறுவனை யாரோவென்று அவமதித்தால் அந்த அவமதிப்பு உம்மதன்றோ? என்னிறைவரே! ஏனிதை யோசிக்கவில்லை? நூறுவாவி வெட்டியபலன் ஒரு துரவெடுத்தாற் கிடைக்கும், நூறு துரவெடுத்த பலன் ஒரு தடாகம் வெட்டினாற் கிடைக்கும், நூறு தடாகம் வெட்டியபலன் ஒரு யாகஞ்செய்தாற் கிடைக்கும், நூறு யாகஞ்செய்தபலன் ஒரு சற்புத்திரனைப் பெற்றாற்கிடைக்கும், நூறு சற்புத்திரர்களைப் பெற்றபலன் சத்தியந்தவறாதிருக்கிற் கிடைக்குமென்று சுருதிமுறை

யிடுவதை நீருணர்ந்திருந்தும் சொற் சோர்வுபடப்போமோ? தோன்றலே! இதன்றியும், அரசர்களுக்கு முக்கியமாயிருக்கவேண்டியது குற்றமற்ற இல்லாளும், சொல்லுதற் கருமையான மைந்தனும், சத்தியவாக்கும், நன்னீதியும், நடுவு நிலைமையுமாம். அஷ்டதிக்கும் புகழ்ஸ்தம்பம் நாட்டிய பட்டாபிஷேக பார்த்திபர் குலதிலகமே! உமது புத்திரன் பிறந்தபோது இவன் ஆழிசூழ்ந்த அம்புவியனைத்தும் ஓர்குடையின்கீழாள்வான், செய்தற்கரியயாகங்களையெல்லாஞ் செய்வானென்று அசரீரிவாக்குப்பிறந்ததே! அந்தோ! அப்பேர்க்கொத்த அருமை மைந்தனையும், அம்மைந்தனை யதிகஅன்புடனீன்ற என்னையும் ஆதரிக்கவேண்டும் ஆண்டவரே யென்று வணங்கினாள்.

சகுந்தலை சொற்ற மொழியனைத்தையுஞ் செவியுற்ற துஷ்டியந்தமகாராஜன் சிறிது நேரம் மௌனஞ்சாதித்து, பின்பு சொல்லுகிறான்: ஓ, பிறை போன்ற நெற்றியையுடையமின்னே! முன்னே, நானுன்னை யின்னாளென்றறிய மாட்டேனே! ஏன் சும்மா பன்னிப் பன்னிப் பேசுகின்றாய்? நீ அன்னம்போல் நடந்து முன்னமிருந்த இடம்போய்ச் சேரென்றணங்கிற்குச் சொல்லிவிட்டு, வேறுசிந்தனை செய்து கொண்டிருப்பவன் போல அரசன் உள்ள முடைந்து விசனப்பட்டுக்கொண்டிருந்தான்.

சகுந்தலை அரசனைநோக்கி: ஓ, மின்னொளி பொருந்திய வாளாயுதத்தையுடைய மன்னவரேறே! நீர் பூர்வத்தில் கண்ணுவர் ஆச்சிரமத்துக்குவந்து சத்தியஞ்செய்து, என்னைக்காந்தருவமணம் புரிந்து, சரச வார்த்தைகள் மொழிந்து, இருவர் மனமும் ஒன்றெனக்கலந்து என்னை இல்லாளாக அனுபவித்ததுண்டு. அப்போது சொல்லிய சத்தியத்தை இப்போது மறந்து பேசுவது தர்மமோ? உமதுமர்மமோ? எனது கர்மமோ? அறியேன். இதுவுமது குற்றமில்லை. என்னுடைய தீவினைப்பயனேயாகும். அறிவிற் சிறந்த என் தாயும், தந்தையும், நான் பிறந்தஅன்றே என்னைத் துறந்துவிட்டார்கள். இப்போது என்பர்த்தாவாகிய நீரும் என்னை வெறுத்துவிட்டீர். என்னைப்போலும் தீயபாவிகள் உலகில் வேறிருக்க மாட்டார்கள். கௌசிகமகாராஜனுக்கும், மேனகைக்கும் பெண்ணாய்ப்பிறந்தும், கண்ணுவமுனிவரால் வளர்க்கப்பெற்றும், திங்களங் குலதிலகனாகிய வுமக்

குரிய மனைவியாய்ச் சிறந்தும், சூரியனைப்போன்ற வீரியனைப்பயந்தும் என் துன்பம் நீங்கிற்றில்லை! ஆகிலும் இவ்வுலகில் நல்லோர், புல்லோர், புருஷாள், ஸ்திரீகள், பசு, பட்சி முதலிய எல்லாவற்றையுங் காத்தழிக்கும் வல்லோனாகிய கடவுள் ஒருவனுண்டன்றோ? அவன் சித்தம்போலாகட்டும். என்று சொல்லிச் சகுந்தலை தன் மகன் கையைத்தன்கரத்தாற்பற்றி, அரசனைப்பார்த்து: மதிகுலந் தழைக்கவந்த மன்னரே! நீர் சுகமாய் வாழ்ந்திரும். நாங்கள்செல்லுகின்றோமென்று சொல்லி மகாவருத்தத்தோடு ராஜசபையைவிட்டு இரண்டடி யெடுத்து வைத்தாள்.

மலைபதுமிலை குலைபினும் மனநிலை குலையாத மதிகுல மன்னவனின் சித்தம் வேறுபட, அரசன் இன்னமும் ஆகாயவாணி, பூமிதேவி ஏன் வரவில்லை! நாம் பொய்முதலாகிய குற்றங்களை நீக்கி அரசு செய்தாலும் தற்போது இந்தச்சகுந்தலைக்காக இச்சபையாரறிய உள்ளதை இல்லையென மறுத்தோமே! அதனால் தானோ வரவில்லை? அல்லது இன்னுமென்ன நேரிடப்போகின்றதோ தெரியவில்லையே! கண்ணுவர் சாபாநுக்கிரக சாமர்த்தியரன்றோ? அவர் இவ்விருத்தாந்தத்தை யறிந்தால் கனவருத்த மடைவாரே! என்று பல பல சிந்தனைகள் செய்து தன் கருத்தைச் சகுந்தலையின் மீது வைத்து வாடியிருந்தான். அந்தத்தருணத்தில் மேக சஞ்சாரமற்ற நீனிறம் பொருந்திய ஆகாயமானது திடீரெனக் கர்ச்சித்து ஓ, அரசனே! இந்தச் சகுந்தலை மகாபதிவிரதை. ஆதியிலிவளை நீ கூடும்போது என்னைச் சாக்ஷியாக வைத்துக்கூடினை. இவள் சொல்லியவை யாவும் உண்மையே. இனித்தடையின்றி அவளையேற்று அச்சிறுவனுக்குப் பட்டங்கட்டு. அவனால் உன் வம்சத்துக்குப் பெருமையுண்டாகு மென்று சபையாரறியக்கூறிய அசரீரி வாக்கை அரசன் கேட்டு ஆனந்தங்கொண்டு ஆசனம் விட்டெழுந்தோடிவந்து சகுந்தலையினது கரங்களைப்பற்றியழைத்து ஆசனத்திருத்தி, சிறுவனாகிய பரதனை வாரித்தழுவி முகத்தோடு முகமணைத்து முத்தமிட்டு, சபையாரைப்பார்த்துச் சொல்லுகிறான்: கேளுங்கள் சபையோர்களே! சிலகாலத்துக்கு முன்னம் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றபோது கண்ணுவ மகாமுனிவருடைய ஆச்சிரமத்தைக்கண்டு அங்கே

சென்றேன். அவ்விடத்தில் இந்தச் சகுந்தலையைக்கண்டு மையல் கொண்டேன். அப்பால் இவள் விரும்பிய வண்ணம் இவள் வயிற் றிற் பிறக்கும் ஆண் மகவுக்கே என் மகுடத்தைச்சூட்டுவதாக வாக் களித்து, ஆகாயவாணி, பூமிதேவி இவ்விருவரையும் சாக்ஷியாகவை த்துக் காந்தருவமணம்புரிந்து கூடினதுண்மைதான். ஆனால் ஆட்க ளையனுப்பி யழைப்பித்துக்கொள்ளுகிறேனென்று சொல்லி விட்டு வந்தேனே யொழிய, கூறியபடி யழைப்பித்துக் கொள்ளவில்லை. அதன் மேல் இன்று இவள் என் சபைக்கு வந்து விட்டாள். வந்த வளைத்தனியே யேற்பேனாகில், எனக்குப்பின் என்மைந்தனாகிய இச்சிறுவனுக்குக்கிஞ்சித்துமரியாதைத்தாழ்வுவருமோவென்றுயோ சித்து, அன்று சாக்ஷிகளாக வைத்த ஆகாயவாணி, பூமிதேவி இவர் களிலொருவர் வந்து சாக்ஷி சொல்லுந்தனையு முண்மையை வெளிப் படுத்தாதிருக்க வேண்டு மென்று தாறுமாறான உத்தரவு கொடுத்து வந்தேன்.

இப்போது அசரீரி உங்கள் முன் சாக்ஷி கூறியபடியால், இனி இப்புத்திரனை எனக்குப் பின்னரசனாகக்கொண்டு, என்னிடத்தில் நடந்துகொண்டது போல இவனிடத்திலும் நடந்து கொள்ளுங்க ளென்று சொல்லி, பின்பு அரசன் மனைவியையும் மகனையுமழை த்துக்கொண்டு, அந்தப்புரத்துக்குச் சென்று, மனைவியைக் கூடிக் குலாவிச் சகல இன்பத்தையு மனுபவித்து, உலக இன்பத்தின்மேல் வெறுப்புற்று பின் மறுமைப்பயனையடையக் கருதி, தன் மைந்த னாகிய பரதனை அழைத்து ஆசனத்தில்வைத்து, வேத வேதியர்க ளாசிகூற, ஐம்பத்தாறு தேசத்தரசர்களும், மந்திரி, பிரதானி முத லானோரும் வணங்கிக் கொண்டாட, மகுடத்தைச் சூட்டிவைத்து விட்டு; தான் மனைவியோடு காட்டிற்குச்சென்று கடுமையான தவத் தைச்செய்து சில நாட்களுக்குப்பின் னிருவரும் பரமபதஞ் சேர்ந் தார்கள்.

இங்கே பரதமகாராஜனானவன் மனுசாஸ்திரவிதி பிசகாமல் செங்கோல் செலுத்தித் தேவர்களாலுஞ் செய்தற்கரிய யாகங்களை யெல்லாஞ்செய்து, "ஸாம்ராட்" என்னும் மாட்சிமைப்பட்டத்தைப் பெற்று, தன்னுயிர்போல் மன்னுயிரனைத்தையும் பாதுகாத்து, கேகயமகாராஜனின் புதல்வியாகிய சுனந்தை என்னும் மாதை மண

ந்து பரிந்து வாழ்ந்தான். இவ்வரசன் முதல் சந்திரவம்சத்தாருக்கு பரதரெனவும், அம்மரபினர் காதைக்குப் பாரதமெனவும், அவனரசியற்றிய நாட்டிற்கு பரதகண்டம் அல்லது பாரதவருஷமெனவும் பெயர் வழங்கலாயிற்று. கடலாடையுடுத்த நிலத்தையன்பொடு தாங்கிய வெற்றிமாலையணிந்த புயத்திணையுடைய பரதனுக்கு இணையாவார், பூத பவிஷ்ய வருத்தமானமெனுந் திரி காலங்களினு மனுநூல்வழியாண்ட மானில மன்னருளொருவருமிலர் என்றே பலருங் கூறுவர்.

## பரதமகாராஜனுக்குப் பின்னுண்ட அரசர்கள் சரித்திரம்.

பரதமகாராஜனின் புதல்வன் பௌமன், இவன் தசானவர்த்தன் மகளாகிய விசையை மணந்து சுகோத்ரனென்பவனைப் பெற்றான். சுகோத்ரன் வீமராஜனின் புதல்வியாகிய கௌசலையைக் கலியாணஞ்செய்து அவளிடமாக அஸ்தனைப்பெற்றான். இவனே அஸ்தினாபுரியைக் கட்டுவித்து அந்நகரையே ராஜதானியாகக்கொண்டு அரசியற்றிய முதலரசன். இவ்வரசனுக்கு நிகும்பனும், அவக்கு அரசர்மீளியும், அரசர்மீளிக்கு சவ்வருணனும், சவ்வருணனுக்கு சூரியனின் குமாரத்தியாகிய தபதி என்பவளிடமாகக் குருவென்பவனும் பிறந்தார்கள். இந்தக்குருவென்னும் அரசனால் பரதவம்சத்தாரெல்லோரும் குருகுலத்தார் அல்லது கௌரவர்களென்று அழைக்கப்பட்டதுமன்றி இவனாண்ட நாட்டிற்குக் குருக்ஷேத்ரமென்றும், பெயர் வழங்கலாயிற்று. இவ்வரசன் மகத தேசாதிபதியின் மகளாகிய சுவாலையை மணம்புரிந்து பரிச்சித்தென்னும் மன்னவனைப் பெற்றான். பரிச்சித்து என்பவன் கேகய ராஜனின் புதல்வியாகிய சுபத்திரையை விவாகஞ்செய்து பிரத்தீபனென்பவனைப் பெற்றான். பிரத்தீபன் வீமன் புதல்வியாகிய சுனந்தையை மணந்து சந்தனு என்னுமரசனைப் பெற்றான். இந்தச்சந்தனுவென்பவன் வசுராஜனுக்குப் பிறந்தவளும், தாசராஜனால் வளர்க்கப்பட்டவளும், வியாசமுனிவனைப் பயந்தவளும், சகல சற்குணங்களுமொருங்கே வாய்ந்தவளும், அழகிற் சிறந்தவளும், சத்தியவதியென்றும்,

மச்சகந்தியென்றும், பரிமளகந்தியென்றும் முப்பேர்கொண்டவளு மாகிய உத்தமியைக்கூடி, சித்ரவீரியனென்னு மன்னவனை யீன்றான். இவ்வரசனுக்கு திருதராஷ்டிர மகாராஜனும், பாண்டுமகாராஜனும் மைந்தர்களாய்ப் பிறந்தார்கள். திருதராஷ்டிர மகாராஜன் காந்தாரதேயத்திறைவனின் குமாரத்தியாகிய காந்தாரியை மணஞ்செய்து துரியோதனாதியர்களைப் பெற்றான். பாண்டுமகாராஜன் குந்திதேவி, மத்திராதேவியென்னு மிரு மங்கையர்களை விவாகஞ்செய்து தருமன், வீமன், அருச்சுனன்,நகுலன், சகாதேவன் என்னும் ஐந்து புத்திரர்களைப் பெற்றான். இவர்களே பஞ்சபாண்டவர்கள். இவ்வைவருள் நடுவுளோனாகிய அருச்சுனராஜன் தீர்த்தயாத்திரையாகத் தெற்கே வந்தபோது தென்னாட்டிற் செங்கோலோச்சிய சித்திராங்கத பாண்டியன் மகளாகிய சித்திராங்கியை மணமுடித்தான். (இவளையே அல்லியென்றும், தடாதகைப் பிராட்டியென்றும் இவளைச் சிவபெருமான் விவாகஞ்செய்து மதுரையை யாண்டாரென்றும் சில நூல்கள் கூறுவதாக முன்னமே சொல்லியிருக்கின்றேன்.) அருச்சுனமகாராஜனுக்குச் சித்திராங்கியினிடமாகப் பப்புருவாகன பாண்டியனுதித்தான். இவனை உக்கிரபாண்டியனென்றும், புலேந்திர பாண்டியனென்றும் சொல்வாருமுளர்.

## பாண்டியராஜாக்களின் வம்ச வரலாறு.

பப்புருவாகனனெனப் பெயர்வழங்கிய புலேந்திரபாண்டியன் வணங்காமுடிமன்னனாகிய துரியோதன மகாராஜனின் ஏக சகோதரியாகிய துற்சடையின் குமாரத்தி கலந்தாரி என்பவளைக் கலியாணம்செய்து வீரபாண்டியனென்னுங் குமாரனைப் பெற்றான். (இவனைத் தென்றிசை இந்திரனென்றும், சின்ன அருச்சுனனென்றும் சில நூல்கள்கூறுகின்றன.) இந்தவீரபாண்டியனுக்கு அபிஷேகபாண்டியனும், அபிஷேகபாண்டியனுக்கு விக்கிரமபாண்டியனும், விக்கிரமபாண்டியனுக்கு இராஜசேகரபாண்டியனும், இராஜசேகரபாண்டியனுக்கு குலோத்துங்கபாண்டியனும், குலோத்துங்கபாண்டியனுக்கு அனந்தகுணபாண்டியனும், அனந்தகுணபாண்டியனுக்கு குலபூஷணபாண்டியனும், குலபூஷணபாண்டியனுக்கு இராஜேந்திரபாண்டியனும், இராஜேந்திர பாண்டியனுக்கு இராஜேசபாண்

டியனும், இராஜேசபாண்டியனுக்கு இராஜகெம்பீரபாண்டியனும், இராஜகெம்பீர பாண்டியனுக்கு பாண்டியவங்கியதீப பாண்டியனும், பாண்டியவங்கியதீப பாண்டியனுக்கு புரந்தரசித்தபாண்டியனும், புரந்தரசித்தபாண்டியனுக்கு பாண்டியவங்கியதாபபாண்டியனும், பாண்டியவங்கியதாப பாண்டியனுக்கு சுந்தரேசபாதசேகரபாண்டியனும், சுந்தரேசபாதசேகரபாண்டியனுக்கு வரகுணபாண்டியனும், வரகுணபாண்டியனுக்கு இராஜராஜபாண்டியனும், இராஜராஜபாண்டியனுக்கு சுகுணபாண்டியனும், சுகுணபாண்டியனுக்கு சித்திரவிரதபாண்டியனும், சித்திரவிரதபாண்டியனுக்கு சித்திரபூஷணபாண்டியனும், சித்திரபூஷணபாண்டியனுக்கு சித்திரத்துவஜபாண்டியனும், சித்திரத்துவஜபாண்டியனுக்கு சித்திரவருமபாண்டியனும், சித்திரவருமபாண்டியனுக்கு சித்திரசேனபாண்டியனும், சித்திரசேனபாண்டியனுக்கு சித்திரவிக்கிரமபாண்டியனும், சித்திரவிக்கிரமபாண்டியனுக்கு இராஜமார்த்தாண்டபாண்டியனும், இராஜமார்த்தாண்டபாண்டியனுக்கு இராஜசூடாமணிபாண்டியனும், இராஜசூடாமணிபாண்டியனுக்கு இராஜசார்த்தூலபாண்டியனும், இராஜசார்த்தூலபாண்டியனுக்கு துவஜராஜமாறனும், துவஜராஜமாறனுக்கு இராஜகுலோத்தமபாண்டியனும், இராஜகுலோத்தமபாண்டியனுக்கு அயோதனப் பிரவீணபாண்டியனும், அயோதனப்பிரவீணபாண்டியனுக்கு இராஜகுஞ்சரபாண்டியனும், இராஜகுஞ்சரபாண்டியனுக்கு உக்கிரசேனபாண்டியனும், உக்கிரசேனபாண்டியனுக்கு சத்துருஞ்சயபாண்டியனும், சத்துருஞ்சயபாண்டியனுக்கு வீரபராக்கிரமபாண்டியனும், வீரபராக்கிரமபாண்டியனுக்கு பிரதாபமார்த்தாண்டபாண்டியனும், பிரதாபமார்த்தாண்டபாண்டியனுக்கு விக்கிரமகஞ்சுகபாண்டியனும், விக்கிரமகஞ்சுகபாண்டியனுக்கு சமரகோலாகலபாண்டியனும், சமரகோலாகலபாண்டியனுக்கு அதுலவிக்கிரமபாண்டியனும், அதுலவிக்கிரமபாண்டியனுக்கு அதுலகீர்த்திபாண்டியனும், அதுலகீர்த்திபாண்டியனுக்கு கீர்த்திபூஷணபாண்டியனும், கீர்த்திபூஷணபாண்டியனுக்கு வம்சசேகரபாண்டியனும், வம்சசேகரபாண்டியனுக்கு வம்சசூடாமணிமாறனும், வம்சசூடாமணிமாறனுக்கு பிரதாபசூரியபாண்டியனும், பிரதாபசூரியபாண்டியனுக்கு வம்சத்துவஜபாண்டியனும், வம்சத்துவஜபாண்டியனுக்கு விரிபுமர்த்

தனபாண்டியனும், விரிபுமர்த்தனபாண்டியனுக்கு சோழவம்சாந்தகபாண்டியனும், சோழவம்சாந்தகபாண்டியனுக்கு சேரவம்சாந்தகபாண்டியனும், சேரவம்சாந்தகபாண்டியனுக்கு பாண்டியவம்சேசபாண்டியனும், பாண்டியவம்சேசபாண்டியனுக்கு வம்சசிரோமணிபாண்டியனும், வம்சசிரோமணிபாண்டியனுக்கு பாண்டீச்சுரபாண்டியனும், பாண்டீச்சுரபாண்டியனுக்கு குலத்துவஜபாண்டியனும், குலத்துவஜபாண்டியனுக்கு வம்சவிபூஷணமாறனும், வம்சவிபூஷணமாறனுக்கு சோமசூடாமணிமாறனும், சோமசூடாமணிமாறனுக்கு குலசூடாமணிமாறனும், குலசூடாமணிமாறனுக்கு இராஜசூடாமணிமாறனும், இராஜசூடாமணிமாறனுக்கு பூபசூடாமணிமாறனும், பூபசூடாமணிமாறனுக்கு குலேசபாண்டியனும், குலேசபாண்டியனுக்கு அரிமர்த்தனபாண்டியனும் தோன்றிப் பாண்டியநாட்டைப் பாதுகாத்துவந்தார்கள்.

## பரமசிவனே பரதனாகவந்து மீனைப் பிடித்து, பரதன்மகளை மணம்புரிந்த சரித்திரம்.

இந்த அரிமர்த்தனபாண்டியன் மாணிக்கவாசகரென்னும் திருவாதவூரரை மந்திரியாகக்கொண்டு மனுசாஸ்திர விதிபிசகாமல்செங்கோல் நடாத்திவருங்காலத்தில் சங்கு, முத்து, பவளமுதலியவற்றை நிரைநிரையாய்க் கற்பத்துட்கொண்ட குளிர்ச்சிபொருந்திய நெடிய சமுத்திரக்கரையருகேயுள்ள தண்டுறைப்பாக்கத்தைத் திரியம்பகனென்னும் அடப்பனொருவர் பராமரித்துவந்தார். இவர் மதுரை மீனக்கொடிநாயகனுக்கு மெய்யன்பரும், மற்றைய அடப்பனார்மாரைக்காட்டிலு முன்னதபதவிபெற்றவரும், நற்குணசீலருமாக விளங்கினர். இவர்க்கு எல்லாப் பாக்கியங்களுங் குறைவில்லாதிருந்தும் புத்திரபாக்கியமாத்திரமில்லாதிருந்தது. அதனால்அடப்பனார் மனம்வருந்தித்தமது பத்தினியாகிய வருணவல்லியோடு ஒருமனப்பட்டு அனேகவிதமான தருமத்தைச்செய்துவந்தார். இவர்கள் இப்படிப் பிள்ளைக்காக வருந்தி அரிய தவத்தைச் செய்துவருங்காலத்தோர்நாள் வெள்ளிபங்கிரிக்கிறைவனாகிய பரமசிவன் நனதுபத்தி

னியாகிய பார்வதிதேவிக்கு வேறே தனியிடத்திருந்து சித்தர்களும் அறிய அரிதாகிய நான்குவேதத்தின் சிறந்தபொருளை விவரித்துச் சொல்ல, அத்தருணம் அங்கயற்கண்ணம்மை எக்காரணத்தினாலோ பகவான்சொல்லுவதை அசட்டைசெய்து அன்பில்லாமற்கேட்க, அதுதெரிந்து சிவபெருமான் கோபங்கொண்டு தேவியைப்பார்த்து, அஞ்ஞானத்தையுடைய பெண்களைப்போல நாம் சொல்லுகின்ற வேதத்தினுடைய பொருளைப் பொருட்செய்யாது அசட்டைசெய்த குற்றத்திற்குத் தண்டனையாக நித்தமுங் கொலைசெய்வதையே தொழிலாகக்கொண்ட தண்டுறைப்பாக்கத்தலைவனுக்கு நீ மகளாகக்கடவாயென்று சபித்தார். அப்போது தேவி நடுக்கமுற்றுப் பரமசிவனது பாதங்களைப்பணிந்து ஓ, சுவாமீ! உம்மைவிட்டுப்பிரிந்து பேதையாகியயான் ஜீவிப்பதெங்ஙனம்? அலைதஅடியாளுக்கருளுமென, பசுபதி தனது பத்தினியைப்பார்த்து: ஓ, பாகம்பிரியாளே! எமது சடாமுடியின்மேல் படாடம்பரத்துடன் விளங்காநிற்கும்வெண்மதிக் குலத்துதித்த குலசேகரபாண்டியன் தன் தமையனின் சாபத்தால் மீனைப்பிடித்து ஜீவனம் செய்துவருங்காலத்தில், அதேகுலத்திற் றோன்றிய கொற்கைக்கரசனை யாறன்மகளைமணம்புரிந்து தென்மதுராபுரியில் தருமசெங்கோல் செலுத்திவந்தானன்றோ? அவன் வம்சத்துதித்த அரிமர்த்தனபாண்டியனென்பவன் இப்போது அம்மதுரையில் கிரீடாதிபதியாய் வீற்றிருக்கின்றான். அவன் குலத்தார் சங்கு, முத்து, பவள முதலிய கடல்படு திரவியங்களைக் கைக்கொள்ளும்பொருட்டு அங்கே சமுத்திரக் கரையோரமாய் வாசஞ் செய்கின்றார்கள். அவர்களுக்கு யாதொரு குறைவும் வராமல் பாதுகாக்கவும், அவர்கள் கைக்கொள்ளுந் திரவியத்தில் ஆறிலோர் பகுதியை யறவிட்டு மதுரைமீனக் கொடியோனுக்குச் செலுத்தவும், அங்கங்கே பட்டங்கட்டிமார்களையும், அடப்பன்மார்களையும் நியமித்திருக்கிறார்கள். இந்த அடப்பன்மார்களுள் திரியம்பகனென் றொருவன் தர்மவானாக தாழை சூழ்ந்த தண்டுறைப்பாக்கத்தில் வாசம் பண்ணுகின்றான். அவனுக்குக் குழந்தையில்லை. ஆகையால் அவன் மிகவும் மனம் வருந்தித் தனது மனைவியாளோடெம்மை நோக்கி அரிய தவத்தைச் செய்து வருந்துகின்றான். அவன் மேலியாங் கிருபைகூர்ந்தோம். ஆதலின் நீ அந்த அடப்பனின் மனைவியாகிய வருண

வல்லியின் பாற்சென்று மகளாய்ப் பிறக்கக்கடவாய். நீ அந்தத் தலைவனுக்கு மகளாய்ப் பிறந்து அவனன்பு பெருகும்படி வளர்ந்து பக்குவமான காலத்தில் நாம் வந்து உன்னைக் கலியாணஞ் செய்து கொள்வோம். நீ வருத்தப்படவேண்டாம். போவென்று தேவிக்குச்சொல்லி விடை கொடுத்தனுப்பிவிட்டு, தான் தனித்தோரிடத்திலிருந்து மனைவியைப் பிரிந்த வருத்தத்தால் துக்கித்துக்கொண்டிருந்தார். அத்தருணம் அங்கு வந்தெய்திய விநாயகரும், வேளும் மாதாவைக் காணுமையால் கவலைகொண்டு வாயில் காப்பவனுகிய நந்தி தேவனை வினவ, அவன் நடந்த சமாசாரத்தை யிருவருக்குந் தெரிவித்தான். அப்போது சிறுவர்களிருவருங் கோபங்கொண்டு தங்கள் தாதை வைத்திருந்த வேத சாஸ்திரங்களைக் கொள்ளைகொண்டு இவைகளினுலல்லவோ இப்படியாயிற்றென்று அவைகளைச் சமுத்திரத்திற் போய்விழும்படி யெறிந்தார்கள். பரமசிவன் இது சேதியையறிந்து நந்தியை நோக்கி: ஓ! இத்தருணம் சிறுவர்களை இங்கு என் வரவிடுத்தாய்? அவர்களை வரவிடுத்ததாலல்லவோ இப்படியாயிற்றென்று கோபித்து, நீ செய்த பிசகிற்காக நீ ஒரு சுரு மீனுருக் கொண்டு கடலிற்சென்று சாஸ்திர ஏடுகளை யுனது சிரமீது சுமந்து தண்டுறைப்பாக்கத்தருகே ஜீவிக்கக்கடவாய். போவென்று சபிக்க நந்தியும் அவ்வண்ணமே சென்றுன்.

இவ்வண்ணமாய் வருணவல்லியின் பாலுற் பவித்துப் பிறந்த பார்வதி தேவிக்கு, திரியம்பகனென்னும் அட்டப்பனுர் முத்தும் பவளமுங் கலந்து கோத்தமாலையும், உட்கட்டுத் தாலி முதலிய ஆபரணங்களையுங் கழுத்திலும், சவடிக்கடுக்கன், சனிவளையம், உருக்குமணி, தண்டொட்டி, மேலீடு, ஒன்னப்பூ, கன்னப்பூ முதலிய நகைகளைக்காதிலும், காண்டைக்காய் மோதிரம், காப்பு, கைக்கட்டுப்பவளம், வங்கி முதலியவைகளைக் கையிலும், பாடகம், தண்டை, பீலி, சிலம்பு முதலியவற்றைக் காலிலும், இன்னமும் தங்கள் குலத்துக்கேற்ற ஆடையாபரணங்களையுஞ் சூட்டி அன்போடு வளர்த்து வந்தார். உலக மாதாவானவள் அட்டப்பனுரின் அன்பு பெருக மாணிக்கத்தீபம்போல் ஜொலித்து, கொங்கைகள் சொர்ணக்கும்பம் போல் புடைத்து கண்டவர்மனமுங் கண்ணுங் கவர்ந்திட வனப்பு வாய்ந்து வளர்ந்து பெதும்பைப்பருவத்தை நீத்து மங்கைப்பருவத்தை யடைந்தாள்.

சிவபெருமானது சாபத்தை யேற்ற நந்திதேவன் கடலிலெறியப்பட்ட சாஸ்திர நூல்களைத் தனது சிரமேற்கொண்டு, அச்சமுத்திரத்திலோடும் கப்பல், தோணி முதலியவற்றை வேகங்கொண்டு மோதியுடைத்து அதுகளிலேற்றிய சரக்குகளுடன் கவிழ்த்தியும், அக்கடலில் சஞ்சரிக்கின்ற மீன் முதலிய ஜந்துக்களை யெல்லாந் தன் கொம்பினாற் பீறி நாசமாக்கியும், கடலைக் கலக்கி மேலே பாய்ந்தெழுந்து மேகக்கூட்டங்களைக் கலைத்தோட்டியும் இவ்வண்ணமாக ஓயாதொழியாது தொல்லைகள் செய்து வருவதைக்கண்ட பரதரும், ஏனைய வலைஞர்களும் மனமூர்க்கங்கொண்டு அந்த மீனைக் கொல்லத் தங்களாலானமட்டும் முயற்சி செய்து பார்த்தார்கள்; கூடவில்லை. அதுகண்டு அவர்களெல்லோருமொன்றாகத்திரண்டு தங்க ளடப்பனாரண்டை சென்று முறையிட்டுக் கொண்டார்கள். அப்போது அடப்பனார் மனவருத்தமுற்று அம்மீனைப் பிடிப்பதற்குத் தனது கிளைஞர்கள் புடைசூழ அலைவாய்க் கரைக்குச்சென்று ஓர் படவிலேறி நின்று பெரிய வோர் கயிற்று வலையைக்கொண்டு வீசினார். அந்த மகரமீனானது அவரேறிநின்ற படவைத் தன் கொம்பினாற் குத்தி யுடைத்தது. அப்போது அடப்பனார் படகு உடைந்ததைக்கண்டு, மற்றோர் தோணிமேற் பாய்ந்து நின்று வேறோர் வலையை வீசினார். அந்தத் துஷ்டஜந்து அந்தத் தோணியையும் மோதியுடைத்தது. அதுகண்டு கடற் சேர்ப்பனாகிய அடப்பனார் இன்னொரு சோங்கிலேறி நின்றுகொண்டு மற்றோர் வலையை யெறிந்தார். அந்தச் சுறாமீன் அவரேறி நின்ற அந்தச் சோங்கையும் சுக்கல் சுக்கலாயுடைத்தது. துறைக்காவலனாகிய அடப்பனார் ஒரு உயிரே பலவுடல்களிலும் புகுந்தாற்போல வெவ்வேறு தோணி, படகு, சோங்கு முதலியவைளிற் பாய்ந்து, பாய்ந்து நின்று வலைகளைப் பாய்ச்சினார். அந்த மீன் அவரெறிந்த வலைகளிலகப்படாமல் முன்னே வீசினால் பின்னே கிளம்பியும், பின்னே யெறிந்தால் முன்னே யெழுந்தும், வலப்புறஞ் சென்றால் இடப்புறங் காணப்பட்டும், இடப்புறஞ்சென்றால் வலப்புறந் தோன்றியும் பலவாறு தொந்தரை செய்ததேயொழிய அகப்படவில்லை. அதனால் அடப்பனார் மனச்சோர்வுற்று எஞ்சிய தன்னினத்தவரோடு கரையிற்சேர்ந்து இதற்கென்ன செய்வதென்றாலோசித்தும் ஒன்றுந் தோன்றாதவராய்

மனஞ் சலித்துக் கடைசியாய் அந்த மீனைப்பிடிக்கும் பரதனெவனோ அவனுக்குத் தனது செல்வக்குமாரத்தியாகிய திரைசேர் மடந்தையைக் கலியாணஞ் செய்துகொடுப்பேனென்று பறையறைவித்தார்.

அந்தக்காலத்தில் கயிலையங்கிரியிலெழுந்தருளியிருக்கும் பரமசிவன் பார்வதி தேவியைத் தம்மிடத்துக் கழைத்துக்கொள்ளச் சித்தமானார். அஃதெவ்விதமோவெனில்:

மீதல, பூதல, பாதலமென்னுந் திரிலோகங்களிலுந் தங்களுக்கிணையான ஜாதியாரில்லை யென்றகங்கார சிந்தையுடையவராகிய பரதர் குலத்திலே பிறந்த திரைசேர் மடந்தையாகிய பார்வதியைப் பசுபதி மணம் புரிவதெப்படியென்று தனக்குள்ளே சிந்திக்கலானார். அதாவது நாம் நமது முழுச்சம்பிரம கோலாகலத்துடன் தண்டுறைப்பாக்கம் சென்று தலைவனைக்கண்டு நாம் பரமசிவனென்று அவனுக்குச் சொல்லி, திரைசேர்மடந்தையை மணமுடித்துக்கொடென்று கேட்போமாயின்இவனாரடா ஜாதியற்றவன் இங்குவந்து பெண்ணைக் கேட்கிறான், இந்தச்சடையாண்டிக்குக்கட்டிக்கொடுக்கவோ நான்நேராத கோவிலெல்லாம் நேர்ந்து தவமிருந்து ஓவியம் போன்றவோர் பெண்ணைப்பெற்றேன் சீச்சீ! போ போவென அவமதித்தால்பின்னை யாமென்ன செய்வது? அத்தால் நமக்கும் நம்மோடுவந்த தேவர்களுக்கும் அவமானமாகுமே! என்று பலவாறாகப் பலமுறை யோசித்துக்கடைசியாய் பரதனுருக் கொண்டுபோய்ப் பரதனென்று சொல்லி, பரதன் வீட்டில் பெண்ணைக் கொள்வதே யுக்தி யெனத்தீர்மானித்து ஓர் தோளிலே மீன்கூடையும், மறுதோளிலே மணிவலையும், இடுப்பிலே இருண்ட கச்சையும், அதிலே சொருகிய சிற்றரிவாளுந் துலங்க மீசையை முறுக்கி ஒய்யார நடைநடந்து, சங்குகளையடுக்கி, முத்துக்களைச் சுண்ணமாக்கிக் கட்டப்பட்ட ஆகாயமளாவிய உப்பரிகைகள் மேலே சமுத்திரத்தின் கண்ணுண்டாகிய செம்பவளச் செடிகள் கொடிகளை வீசி அழகைச் செய்கின்ற செல்வம் பொருந்திய தண்டுறைப்பாக்கத்திலே வந்து சேர்ந்து, அலைகடற்றிரவியங்களெல்லாம் அளவின்றிக் குவிந்து கிடக்கும் அடப்பனார் வீட்டுவாயிலிற் சென்று தனது வரவைக் காவலாளிகளால் சேர்ப்பனுக்கறிவித்து அவருடைய அனுமதியின்மேல் அரண்மனைக்குட் சென்று தலைவனை வணங்கி நின்றார்.

அப்போது அடப்பனார் தம்மை வந்து வணங்கிய பரதனது யௌவனத்தையும், அவனது அழகையுங் கண்டு ஆனந்தங் கொண்டு தம்பி! நீயார்? உன்னூரேதென்று வினவினார். அப்போது பரதனுருக்கொண் டெழுந்தருளிய சிவனானவர் அடப்பனாரைப்பார்த்து: ஐயா! நான் சப்த சமுத்திரங்களுஞ் சூழ்ந்திலங்கும் பூவில் வசிக்கும் பரதருக்கெல்லாம் தலைவனாக மதுரையில் வாழும் பெரிய பரதனுடைய மகனென்று சொன்னார். அதுகேட்டு அடப்பனார் அவரைப்பார்த்து: ஐயா! நங்குலத்தார் யாவராலும் அகப்படுத்தக்கூடாத பெரிய சுறா மீனொன்று இவ்வூரருகில் கடலிற் கிடந்து பாற்கடலை மந்தரகிரி எவ்வாறு கலக்கியதோ அவ்வாறு கலக்கிக் கஷ்டப்படுத்துகின்றது. அம்மீனை நீ பிடிப்பாயாகில் மகாலக்ஷ்மிக்கொப்பாய் விளங்குகின்ற எனது ஏக புதல்வியை யுனக்குமணஞ்செய்து தருவேனென்றார். அதுகேட்டு பரமசிவன் அவ்வண்ணமே ஆகட்டுமென்று அடப்பனாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சமுத்திரக் கரைக்கு விரைந்துசென்று, அங்கே கரையில் வைக்கப்பட்டிருந்த வோர் வள்ளத்தைக் கடலிற்றள்ளி அதிலேறிக்கொண்டு சங்குகளை வீசுகின்ற சமுத்திர அலைகளைக்கீறிக்கொண்டோடும்படியாய் வள்ளத்தைச்செலுத்தி வலையைக்கையிலெடுத்து ஓ வேலை! என்றுச்சரித்துக்கொண்டு மார்புரள வீசினார். அந்தக்ஷணமே கொடிய சுறாவானது தனது துஷ்டசெய்கையனைத்தையுமொழித்து, தலை நசுங்குண்ட சர்ப்பம்போல மிகவும் அமரிக்கையுடன் அந்தவலைக்குட்சிக்கியது. முக்கண்ணனாகிய சொக்கலிங்கப்பெருமானானவர் அதைக் கரையிற்கொண்டுவந்து சேர்த்தார். அப்போது மீனவன் குலமாக்களும், ஏனைய வலைஞர்களும் தேனைக்கண்டு வண்டுகள் மொய்க்குமாப்போல் அம்மீனைக் கண்டு வந்து கூடினார்கள். இதுசேதி அடப்பனார் செவிக் கெட்டியபோது அவர் மிகவும் ஆச்சரியத்துடன் வாரிக்கரைக்கெழுந்தருளி வந்து அம்மகர மீனைக் கண்ணுற் கண்டு களிப்புற்று, இவனே எமது மகளுக்குகந்த மணாளனென்று சொல்லி அனைவரு மகிழ அவனை யரண்மனைக்கழைத்துப்போய் ஆசனத்தி லெழுந்திருக்கச் செய்து, கள்ளொழுகும் வாயையும், நுண்ணிய இடையையுமுடைய வலைச்சியர்கள் குரவையிடவும், வண்டுகள் மொய்க்குங் கூந்தலையும், தேமற்படந்த பருத்த கொங்கைகளையுமுடைய கடைசியர்கள் கொம்மையாட்டயரவும், பஞ்

சப் பறைகளும் சப்த சமுத்திரங்களுக் கொப்பாய் முழங்கவும் படங்கொண்ட பாம்புக் கச்சையணிந்த அந்தப் பரதனுக்குத் தடம்பொருந்திய முத்து மாலையணிந்த மாபரத்தியைத் திருக்கலியாணஞ் செய்து கொடுத்தார். இச்சம்பவத்தைக் கண்ணுற்ற பரதர் யாவரும் மகிழ்ச்சியுற்று இவன் நம் குலத்திலோர் தெய்வத் தன்மைபொருந்திய புருஷோத்தமனென்று சொல்லி அவனுக்குத் தூப, தீப ஆராதனைகளைச் செலுத்தினார்கள். அப்போது திருக்கலியாணக் கோலங்கொண்ட பரமசிவனானவர், பார்வதி தேவியோடு ஆகாசத்திலே விடைமேலேறித் தங்கள் தங்கள் சுபாவ வடிவுகொண்டு தோன்ற, சுறவுருக்கொண்டு கரையிற் கிடந்த நந்தி தேவனும் தன்னுருக்கொண்டு முன்னே நிற்க இத்திருக்காட்சியைக் கண்ணுற்ற அடப்பனும், அவர் குலமாக்களும், ஏனையோரு மதிசயித்து வணங்கித் தோத்திரிக்க, பார்வதி தேவியும், பசுபதியும், நந்திதேவனும் அவர்களையாசிர்வதித்து மறைந்தார்கள்.

# அரிமர்த்தன பாண்டியனுக்குப்பின் மதுரையை யாண்ட மன்னர்கள் சரித்திரம்.

பின்பு அரிமர்த்தன பாண்டியன் அதிவல்லமையோடரசியற்றி, புஜபல பராக்கிரமம் பொருந்திய வோர் புத்திரனைப் பெற்று அவனுக்கு ஜெகநாத பாண்டியனென்று பெயரிட்டு, தக்க பிராயம்வந்த போது மகுடத்தைச் சூட்டி ராஜ்யத்தை யொப்புவித்துத்தான் தவத்தைச் செய்து வீட்டையும் பொருட்டுக் காட்டிற்குச் சென்றான். இந்த வுலகம் புகழும்ஜகநாதபாண்டியனுக்கு வீரவாகுபாண்டியனும், வீரவாகு பாண்டியனுக்கு விக்கிரமவாகு பாண்டியனும், விக்கிரமவாகு பாண்டியனுக்கு பராக்கிரமவாகு பாண்டியனும், பராக்கிரமவாகு பாண்டியனுக்கு சுரதபாண்டியனும், சுரதபாண்டியனுக்கு வாகுவலபாண்டியனும், வாகுவலபாண்டியனுக்கு குங்குமபாண்டியனும், குங்குமபாண்டியனுக்கு கருப்பூரபாண்டியனும், கருப்பூரபாண்டியனுக்கு காருண்யபாண்டியனும், காருண்யபாண்டியனுக்கு புருஷோத்தம பாண்டியனும், புருஷோத்தம பாண்டியனுக்கு

சத்துருசாதன பாண்டியனும் புத்திரர்களாய்த் தோன்றிப் பாண்டி நாட்டை முறையாய் ஒழுக்கத்துடன் செங்கோல் செலுத்தியாண்டு உலகத்திலுள்ள சத்துருக்களெல்லாரு மஞ்சும்படி வெகு கீர்த்தி யோடு வாழ்ந்திருந்தார்கள்.

அப்பால் இந்த சத்துருசாதன பாண்டியன் குலமகளாகிய தன் பட்டத்துத் தேவியினிடம் சுந்தர பாண்டிய னென்னுமோர் குமாரனையும், தன் தாசியினிடம் வீரபாண்டியனென்னுமோர் புத்திரனையும் பெற்றான் இந்தவீரபாண்டியனென்பவன் அதிவீரம் பொருந்தியவனும் மகா தந்திரசாலியுமாயிருந்தபடியினாலே சத்துருசாதன பாண்டியன் தனக்குப்பின் தனது பட்டத்துக்குரியவன் வீரனே யாவானெனக் குறித்தான். அதனால் சுந்தரபாண்டியன் தன்பிதாவாகிய சத்துருசாதன பாண்டியனைப்பகைத்துக் கொன்றுவிட்டு அவன் மகுடத்தைத்தான் சூடிக்கொண்டான். அப்பால் தனது வலிமைபொருந்திய சேனைகளைக்கொண்டு சேர, சோழராஜாக்களை ஜயித்து, வீரபாண்டியனையும்மதுரைராஜ்யத்தினின்றப்புறப் படுத்தி வெற்றிமாலை புனைந்து விஜய லட்சுமி கொண்டாட அரசியற்றிவருங் காலத்தில் பனைமாலையணிந்த சேரபூபதி யானவன் இரத்னதிகளையும், அழகிய தோழியர்களையும் அவனுக்கு வரிசையாகக்கொடுத்து, தன் மகளை விவாகஞ்செய்வித்து அவன் காலில் விழுந்து சமாதானஞ் சொல்லித் தன்னாட்டை முன் போலச் சொந்தமாகப் பெற்றுக் கொண்டு தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

இது செய்தியை யறிந்த சோழன் குலச்சிறையென்னும் தன் மந்திரியையும், அளவற்ற திரவியங்களையும், ஆனை தேர் முதலியவைகளையும் பாண்டியனுக்குச் சீதனமாகக் கொடுத்து, தன்குமாரத்தியையும் மணஞ் செய்வித்துத் தன்னாட்டைப் பெற்றுக் கொண்டு திரும்பிப் போனான்.

பாண்டியராஜன் நன்மையிற் சிறந்த குலச்சிறையென்னும் மந்திரியைத் துணையாய்க் கொண்டு உலகத்தை யாண்டுவருங் காலத்தில், முன் செய்த தீவினைப்பயனாக உடம்பிலே கூனுண்டானது. அப்போது அரசன் தன் சமணகுருக்களை யழைத்துத் தன் கூன் நிமிரும்படி பல மந்திர யந்திரங்களைச் செய்வித்தும் அது சுகப்பட

வில்லை. அப்பால் தன் மந்திரியாகிய குலச்சிறையினுடைய வேண்டுகோளுக் கிசைந்து சைவ குருக்களையழைத்து அவர்கள்வசம் தன்னை யொப்புவித்தான். அவர்கள் அரசனுடைய கூன் நிமிரும்படிசெய்தார்கள். அரசன் அதுகண்டு சைவசமயமே மெய்யென்றும், சமணர்மதம் பொய்யென்றுஞ் சொல்லி, தனது நாட்டில்வாழும் சமணர்களையெல்லாங் கழுவிலேற்றுவித்து, தான் சைவமதத்தை யனுசரித்து வந்தான்.

இவ்வரசன் தன்மனைவியர்களான மங்கையர்க் கரசியோடும், வாணீ தீசுவரியோடும் மிகுகுணமாய் வாழ்ந்துவருங்காலத்தில்புத்ர சந்தானமில்லாமையால் மனவருத்த முற்று உண்டியைத்துறந்து, உடுப்பதை மறந்து, அரசைவெறுத்து அல்லற் பட்டுக்கொண்டிருந்தான்.

---

# பாண்டியநாடு அநுலோமர்வசமான சரித்திரம்.

சத்துரு சாதனபாண்டியனுக்குத் தாசிவயிற்றிலுதித்த வீர பாண்டியனென்னும் அநுலோமன் சமயம்பார்த்திருந்து, சேனைகளைத்திரட்டிக்கொண்டுபோய்ச் சுந்தரபாண்டியனை யெதிர்த்துக்கடும் போர்புரிந்து அவனைச் செயித்து மதுரைக் கரசனானான். இவ்வண்ணம் பாண்டியநாட்டிற்கிறைவனான அநுலோமபாண்டியனைப் பூர்விகபாண்டியவம்சத்தார் அங்கீகரிக்கவில்லை. அதனால் வீரபாண்டியன் அவர்களை மதுரைநகரினின்றப்புறப்படுத்தி அவர்களுக்குத் தன்னாற் கூடியமட்டும் தீங்கு செய்துவந்தான். மதுரைநகரினின்று துரத்தப்பட்ட பாண்டியவம்சத்தார் தங்களினத்தார்வாசஞ்செய்துவந்தபவித்திரமாணிக்கநகர், வேம்பாறு, வைப்பாறு, தூத்துக்குடி, காயல், பின்னைக்காயல், காயல்ப்பட்டணம், கொற்கை, ஆத்தூர், முக்காணி, வீரபாண்டியன்பட்டணம், திருச்செந்தூர், ஆலந்தலை, குலசேகரன்பட்டணம், மாப்பாடு, தாழை, கூடுதாழை, கூட்டப்பனை, உவரி, இசைந்தகரை, கூட்டப்புளி, கன்னியாகுமரிமுதலிய வூர்களிற்போய்த் தங்கினார்கள். சிலர் சோழமண்டலத்திலும், வேறு

சிலர் சேரமண்டலத்திலும், மற்றவர்கள் இலங்கைத்தீவிலும்போய்க் குடியேறினார்கள். இந்த வீரபாண்டியனைக் குலோத்துங்க சோழனவன் கி-பி 1064ம்ஆண்டு ஜயித்து அவனைத் தனக்குக் கப்பங் கட்ட ஏற்பாடுசெய்துவிட்டு, அப்பால் காஞ்சிபுரத்திலதி பிரபல்யமாகவிருந்த பல்லவரையும் ஜயித்து வடக்கே துங்கபத்திரி நதியையும் தெற்கே கன்னியாகுமரியையுந் தன்னாட்டிற் கெல்லைகளாக ஏற்படுத்தினான்.

மதுரைக் கரசனாகிய வீரபாண்டியன் புத்திரசந்தானமில்லாமலிறந்தபடியால் பழையபாண்டியர்களுடைய வைப்பாட்டிபிள்ளைகள் கிளம்பிவந்து தாங்களே பாண்டியநாட்டிற்குச் சொந்தக்காரரெனச் சோழனிடத்தில் வாதித்தார்கள். சோழனும் அவர்களை யொப்புக் கொண்டு 1100ம்ஆண்டு சோமசேகரனென்னும்அநுலோமனைப்பாண்டியநாட்டிற்கரசனாக்கி வைத்துவிட்டுச் சோழன் 1113ம்வரு மரணமானான்.

---

# மதுரை ராஜ்யம் மகம்மதியர்வசமான சரித்திரம்.

---

சின்ன ஆசியாவில் மதினபுரியில் அரசுசெலுத்திய கபிபுமுகம்மது வம்சத்தில் கி-பி 1122ம்வருஷம் செயித்திபுராகீம் என்னும் சுல்தான் பிறந்தான். இவனிளமையிலேயே சகல சாஸ்திரங்களையுமையந்திரிபறக் கற்றுணர்ந்து தக்க பிராயத்தில் மகுடத்தைத் தரித்து அரசியற்றிவந்தான். அக்காலத்தில் வர்த்தகவிஷயமாய் வெளிநாடுகளுக்குச் சென்று சுயநாட்டிற்குத் திரும்பிய அரபிதேசத்து வர்த்தகரிற்சிலர் சுல்த்தானிடத்திற்குச் சென்று ஓர் முத்துமாலையையவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தார்கள். அரசன் அம்மாலையை மகிழ்ச்சியோடேற்று இம்மாலையை நீங்களெங்கே கொண்டீர்களென வர்த்தகர்களை வினவினான். அதற்கு அவர்கள் உத்தரமாக ஓ, மன்னா! இந்துமஹாசமுத்திரத்தில் இலங்கைத்தீவுக்கு நேர்மேற்கே கன்னியாகுமரிக்கு நேர்வடக்கில் பாண்டியநாடென்

ரோ ரிராஜ்யமிருக்கின்றது. அதுமிகுந்த செல்வ வளமுள்ளது. அதற்கு ராஜதானி மதுரை; மீனகேதனத்தையுடைய ஓர் அரசன் பாண்டியனென்னும் பெயராலங்கே அரசுசெலுத்தி வருகின்றான். அங்கே சங்கும், முத்தும், பவளமு மெத்தவுண்டு. அந்நாட்டில் இம்மாலையைக் கொண்டோமென்றார்கள். அரசன் அன்புடன் வர்த்தகர்களுக்கு ஆசார உபசாரங்களைச்செய்து அவர்களை யனுப்பிவிட்டுப் பாண்டியநாட்டின்மேல் பேராவல்கொண்டு அதை எவ்விதமுங் கைக்கொள்ளவேண்டுமென்றெண்ணி தனது மைத்துனனாகிய செயினுலாப்தீன் என்பவனோடும், மதிவல்லோர்களாகிய செயித்காதிறு, செயித்முகைதீன் என்பவர்களோடும் பாண்டியநாட்டின்மீது படையெடுத்துப்போக ஆலோசனை பண்ணினான். அவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். பாண்டியநாட்டின்மீது படையெடுத்துச் செல்லுவதற்குத் தனதுசேனை போதாதிருப்பதைச் சுல்த்தான்கண்டு றாம்நகர் பாதுஷாவுடைய வுதவியை வேண்டினான். பாதுஷாவும் அவனது வேண்டுகோளிற்கிசைந்து தன்னுடைய தளகர்த்தர்களி லதிபராக்கிரமசாலியாகிய அப்பாஸ் என்பவனையும், அவனுடைய கையின்கீழ் ஓர் தொகையான சேனையையும் சுல்த்தானுக்குக் கொடுத்துதவினான். இபுராகீம் சுல்த்தான் தன் சிரேஷ்டகுமாரனைப் பட்டத்தில் வைத்துவிட்டு 1164ம்௵ மதினபுரியைவிட்டுப்புறப்பட்டு மக்காநகரையடைந்து அந்நகர்த்தலைவனாகிய சாம்சுதீன் என்பவனை அவன் சேனைகளோடு தன்சேனையில்வந்து சேரும்படி அழைத்துக்கொண்டு கடற்றுறைப் பட்டணமாகிய சிட்டாநகர் வந்துசேர்ந்து அந்நகர்த் தலைவனாகிய சிக்கந்தரையும் அவன்சேனைகளோடு தன்சேனையில் வந்து சேரச்செய்து, அத்துறையிலேயே கப்பல்களைக் கூலிக்கமர்த்தித் தன்னுடன்வந்த சேனைகளையும், சேனைத்தலைவர்களையு மவைகளிலேற்றிக்கொண்டு தான் தன் பத்தினிமார்களோடு மற்றோர் கப்பலிலேறிக்கொண்டு கீழ்திசையைநோக்கிப் பிரயாணமானான். கப்பல்கள் யாதோர் வருத்தமுமின்றிக் கண்ணூர்த்துறையில்வந்து சேர்ந்தன. இதையறிந்த கண்ணூர்த்தலைவன் சுல்தானிடம் தூதுவர்களையனுப்பி வந்தகாரணமென்னவென்று கேட்டான். அதற்கு இபுராகீம் சுல்தான் தான்வந்த நோக்கத்தைத் தூதுவர்களுக்குத் தெரிவித்து, பாண்டியநாட்டிற்குச் செல்லும்வழியைக்காட்

டும்படி அவர்களை வேண்டினான். தூதுவர்க ளிதுசெய்தியைக் கண்ணூர்த்தலைவனுக் கறிவித்து அவனுடைய அனுமதியின்பேரில் சுல்தானைச் சேனைகளோடழைத்துக்கொண்டு கொச்சி, கொல்லம், விளிஞ்சி யென்னும் நகரங்களைத் தாண்டிப்பாண்டியநாட்டெல்லையிற் கொண்டுவந்து சேர்த்துவிட்டுச் சுல்தானிடத்தில் செலவுபெற்றுச் சென்றார்கள். சுல்த்தான் தன் சேனைகளோடு பாண்டியநாட்டினுட் பிரவேசித்தான்.

அப்போது அநுலோமபாண்டிய வம்சத்துதித்தோனாகிய திருப்பாண்டியனென்போன் பாண்டியநாட்டிற்கிறைவனாக மதுரையில் வாசஞ்செய்தான். அவன் சகோதரர்களிருவர். அவர்களிலொருவனாகிய விக்கிரமபாண்டியன் பவித்திரமாணிக்கநகரில் (கீழக்கரை) இளவரசாய் வீற்றிருந்தான். மற்றவன் கோப்பாண்டியன். இவன் சேனைகளுக்கெல்லா மதிபதியாகக் காயல்ப்பட்டணத்தில் வசித்துவந்தான். பாண்டியநாட்டெல்லையுள் இபுராகீம் சுல்தானின் சைனியம்வந்து புகுந்தமையைத் தூதுவர்கள்வந்து கோப்பாண்டியனிடம்சொல்ல, அவன் திடுக்கிட்டு மதுரைக்கோடி அரசனாகிய திருப்பாண்டியனுக் கறிவித்தான். திருப்பாண்டியன் மதுரைராஜ்யம் உள்நாட்டுக் கலகத்தால் பலவீனமுற்றிருப்பதையுணர்ந்து சுல்த்தானை எதிர்ப்பதிற் பயனில்லையெனக்கண்டு கோப்பாண்டியனோடு தன் மனைவிமக்களையு மழைத்துக்கொண்டு திருப்பதிக்கோடி யொளித்துக்கொண்டான்.

அப்பால் பாண்டியநாட்டெல்லையுட்புகுந்தஇபுராகீம் சுல்த்தான் பாண்டியசேனா வீரர்களோடு போர்தொடுத்து அவர்களை முறிய அடித்துக் கொற்கைக்கோட்டையை அக்கினிக் கிரையாக்கி இடைக்கிடையே சிறு சிறு யுத்தங்கள் செய்துகொண்டு வைப்பாற்றாருகில்வந்து சேர்ந்தான். அநுலோமபாண்டியரின் அரசாட்சியையடியோடு தொலைத்துப்போடவேண்டுமென்று அல்லும் பகலுமதே சிந்தையாய்க் கங்கணங்கட்டிநின்ற பழையபாண்டியரின் சந்ததியாராகிய அவ்வூர்வாசிகள் இபுராகீம்சுல்த்தானின்வரவையறிந்து தங்களெண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள இதுவேதருணமென்றுன்னி எதிர்சென்று சுல்த்தானுக்கு நல்வரவு கூறினார்கள். சுல்த்தான் அவர்

களை அன்போடேற்று அனேகஉபசாரங்களைச்செய்துஇந்நாட்டரசன் யாவன்? அவனது விருத்தாந்தமென்ன வென்று வினவினான். அதற்கு அவர்களுத்தரமாக பிரபுவே! தற்காலம் இந்நாட்டிற்கிறைவன் திருப்பாண்டியன், அவனது ராஜதானி மதுரை, இவன்பேருக்கரசனேயொழிய உண்மையிலிவனைச் சட்டைசெய்வா ரொருவருமிலர். அவனுக்கிளைய சகோதரர்களிருவர், அவர்களிலொருவன்பெயர் விக்கிரமபாண்டியன், அவன் பவித்திரமாணிக்கநகரில் இளவரசாய் வீற்றிருக்கின்றான். மற்றவன் கோப்பாண்டியன், இவன் சேனைத் தலைவனாகக் காயல்ப்பட்டணத்தில் வாசஞ்செய்துவந்தான். உமது சேனை தென்முகமாகப் பாண்டியநாட்டினுட் புகுந்ததைத் தூதுவர்கள்வந்து அவனுக்கறிவித்தார்கள். இதைக் கேட்டவுடனே அவன் திடுக்கிட்டு மதுரைக்கோடித் திருப்பாண்டியனுக்குத்தெரிவித்தான், திருப்பாண்டியன் உம்மை எதிர்ப்பதற்குப்போதிய பலமற்றவனாயிருந்தபடியால் தன் மனைவிமக்களோடு கோப்பாண்டியனையழைத்துக்கொண்டு திருப்பதிக்கோடி யொளித்துக்கொண்டான். பவித்திரமாணிக்கநகரிற்சென்று விக்கிரமபாண்டியனை ஜயிக்கில்பாண்டியநாடு உங்களதேயென்று சொன்னார்கள். இவர்களது வாய்மொழிகளால் கன்னிநாட்டின் நிலைமையையுணர்ந்த சுல்த்தான் மகிழ்ச்சியுற்று நல்லது மித்திரர்காள்! பாண்டியநாட்டை ஜயித்தபின்னுங்கட்கு நல்லபரிசளிப்போமென்று ஆசைவார்த்தை சொல்லியவர்களை யனுப்பிவிட்டு, றாம்நகர் பாதுஷாவின் சேனைத்தலைவனாகிய அப்பாஸ் என்பவனையும், சிட்டாநகர்த்தலைவனாகிய சிக்கந்தர் என்பவனையும் ஓர் பெருந்தொகையான சேனைகளோடு மதுரைக்கனுப்பி அந்நகர்க்கோட்டையைப்பிடித்து நமக்கறிவியுங்களென்று கற்பித்தான். அவ்வண்ணமே அப்பாஸ் சேனைகளை நடத்திக்கொண்டு மதுரைக்குச்சென்று கோட்டையைப்பிடித்து சிக்கந்தரை மதுரைக்கதிபதியாக மகுடாபிஷேகம்பண்ணி அங்கே வைத்துவிட்டு, தான் சுல்த்தானிடம் போய்த்தெரிவித்தான்.

இபுராகிம் சுல்த்தான் மகிழ்ந்து அப்பாஸ் என்பவனையும், மற்றைய சேனைத்தலைவர்களையும், சேனைகளோ டழைத்துக்கொண்டு பவித்திரமாணிக்கநகர் போய்ச்சேர்ந்து பத்துநாள் கொடிய போரியற்றி, விக்கிரமபாண்டியனையும், அவன் புத்திரர்களான இந்திரபாண்

டியன், சந்திரபாண்டியன் என்பவர்களையும், அவன் மருமக்களையும், சேனைத்தலைவர்களோடு சேனாவீரர்களையுங் கொன்றுபவித்திரமாணிக்க நகரைக்கைக்கொண்டு அங்கே மனைவிமக்களோடு மகிழ்ந்து வாழ்ந்திருந்தான். இவன் அன்னியமதஸ்தர்களைப் பலாத்காரமாய்த்தனது மார்க்கத்திலுட்படுத்திப் பாண்டியநாட்டிலே அநேகம் பள்ளிவாசல்களைக் கட்டிக் கொடுங்கோலரசு புரிந்துவந்தான். இவனரசு பாண்டியநாட்டில் பன்னிரண்டு வருஷமும் ஏழுமாதமும் நிலைத்திருந்தது.

## மதுரைராஜ்யம் மீண்டு மநுலோமர் வசமான சரித்திரம்.

அப்பால் வடக்கே திருப்பதிக்கோடியொளித்திருந்த திருப்பாண்டியன் பாண்டியநாட்டின் சீரைத் தூதுவர்களாலறிந்து, பூர்வீக பாண்டியவம்சத்தாருக்கு வேண்டிய உதவிசகாயங்களைச் செய்வதாகச் சத்தியவாக்களித்துச் சமாதானப்படுத்தி, தெலுங்கு தேசாதிபதியினிடமிருந்துபெற்ற ஐந்துலட்சம் சேனாவீரர்களோடு பாண்டியநாட்டிற் பிரவேசித்து மதுரையையாண்டிருந்த சிக்கந்தரையோடத்துரத்தி, கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு பின்பு பவித்திரமாணிக்க நகரமெப்திக்கொடியபோரியற்றி இபுராகிம் சுல்த்தானைக்கொன்று தானும் போரில் காயப்பட்டு தன்குமாரனாகிய சமரகோலாகல பாண்டியனுக்கு முடியைச்சூட்டி வீர சுவர்க்கத்தையடைந்தான். இபுராகிம் சுல்த்தானுடைய சடலத்தைப் பவித்திரமாணிக்க நகருக்கருகேயுள்ள ஏர்வாடி என்னும் மூரிலடக்கம் பண்ணினார்கள். அந்தக்கல்லறையை நாளிதுவரையிலங்கே காணலாம். சுல்த்தான் மரணமானபின் சிக்கந்தர் சுல்த்தானுடைய சந்ததியாரோடு சமரகோலாகலனிடம் சரண்புகுந்தான். அவ்வரசனவன் இபுராகிம் சுல்த்தானுடைய சந்ததியாருக்குச் சில கிராமங்களைமானியமாய்க் கொடுத்துதவினது மன்றிச் சிலரை இராணுவவீரர்களாகவும் சேர்த்துக்கொண்டான். சிட்டாநகரத் தலைவனாகிய சிக்கந்தரிறந்த பின்னவன் சடலம் மதுரைக்குத் தெற்கே திருப்பரங்குன்றத்திற் கருகேயுள்ள ஓர் சிறு மலையிலடக்கம் பண்ணப்பட்டது.

ஆகையால் அன்றுமுதலின்று வரை அம்மலைக்குச் சிக்கந்தர் மலையெனப் பெயர் வழங்கலாயிற்று.

## பரதர்நாடு பிரிக்கப்பட்ட விவரம்.

சமரகோலாகலபாண்டிய னென்பவன் மிகுந்த புத்திக்கூர்மையுள்ளவனுகையால், அவனது காலத்தில், பாண்டிய நாடெங்கும் சமாதான முண்டாயிருந்தது. இவன் பூர்வீக பாண்டியவம்சத்தாருக்குத் தன்பிதா வாக்களித்தபிரகாரம் தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கேபாம்பன் வரையில் கடற்கரையோரமாய் நூற்றெண்பது மயில் நீளமுள்ள பூமியை யவர்களுக்குக் கொடுத்து, தானும், தனக்குப்பின் மதுரைக்கதிபதியாக வரும் தனது சுற்றத்தாரும் அவர்களிடத்திலியாதா மொரு கப்பமும் வாங்குவதில்லை யென்றும், அவர்கள் கையாடிவருஞ் சமுத்திரத்திலும் அச்சமுத்திரத்திற் கொழிக்கப்படும் சங்கு, முத்து, பவளமுதலிய பொருள்களிலும் தனக்கும் தன் பின்சந்ததியாருக்கும் யாதொரு பாத்தியதையுமில்லை யென்றும், 1176-ம்வூ ஒருடன்படிக்கை பண்ணிக்கொண்டான். இந்த வுடன்படிக்கையால் பூர்வீகபாண்டிய வம்சத்தாருக்கும், அநுலோமபாண்டியவம்சத்தாருக்குமுள்ள பிணக்குத் தீர்ந்தது. பாண்டியர்களென்னும் பெயரானது பூர்வீக பாண்டியவம்சத்தாருக்கும், அநுலோமபாண்டிய வம்சத்தாருக்கும் பொதுவாய் வழங்கிவந்தமையால், பூர்வீக பாண்டியவம்சத்தார் தங்களைச் சுத்த சந்த்ர வம்சத்தாரெனக் காட்டும்பொருட்டு, தங்களைப் பரதகுலபாண்டியர்களெனச் சொல்லிவந்ததுமன்றித் தாங்களநுலோமரிடமிருந்து பிரித்துக்கொண்ட பூமிக்குப் பரதர்நாடு அல்லது பரவர்தேசமெனவும் பெயரிட்டழைத்து வந்தார்கள்.

பரதகுல பாண்டியர்கள் தங்களுள் அரசாட்சிசெய்ய வல்லமையுள்ளவர்களாக ஐவரைத்தெரிந்தெடுத்து அவர்களைத் தங்களுக்குத் தலைவர்களா யேற்படுத்தினார்கள். இவர்களைவரும் பஞ்ச திருவழுதியர்களென்னும் பெயரால் கொற்கைக்கருகேயுள்ள காயல் கட்டூரில் வாழ்ந்திருந்தார்கள். இவர்கள் தங்கள் நாட்டைப் பாதுகாப்பதற்குப் புதியபட்டங்கட்டி மார்களையும், அடப்பனார்மார்களையும் ஏற்ப

டுத்தி மிகு வல்லமையோடாண்டு வந்தார்கள். இந்தத்தலைமை யரசானது நாகமநாய்க்கனின் புத்திரனாகிய விசுவநாதநாய்க்கன் காலம் வரை நிலைத்திருந்தது. (இந்தத்தலைமைவழக்கத்தை யனுசரித்துத் தான் நமது தற்காலத்திறைவர்கள் பிறவூர்களுக்குத் தலைவர்களை யேற்படுத்தும்போது ஐவரைத்தெரிந்து கொள்ளுகிறார்கள். முதலாவது கொம்பஞ்ஞ அடப்பனார் (மாறுத்தலைவர்) இரண்டாவது அடப்பனார், மூன்று, நாலு சிதாதிக்காரரிருவர், ஐந்தாவது ஊர்க்கணக்கப்பிள்ளை.)

# மதுரை ராஜ்யம் நாய்க்கன்மார் வசமான சரித்திரம்.

மதுரையையாண்ட அநுலோமபாண்டியருள் கடைசியாயாண்டவன்பெயர் சந்திரசேகரபாண்டியன். இவன் கல்விச்செல்வத்திலும், பொருட்செல்வத்திலும் மிகவுங் குறைந்தவனாயிருந்தான். வீரசோழனென்பவன் தஞ்சையிலிருந்து படையெடுத்துவந்து இவனை ஜயித்து நாட்டையும் பறித்துக் கொண்டான். தனது ஆசனத்தையிழந்த அநுலோமனானவன் அக்காலத்தில் வெகு பிரபலமாயிருந்தவிஜயநகராதிபனாகிய வீரசிம்மராயலு என்பவனிடம்போய்முறையிட்டான். ராயலு சந்திர சேகரனின் வேண்டுகோளுக்கிசைந்து, தன் சேனைத்தலைவர்களிலொருவனாகிய நாகமநாய்க்கனையழைத்துநீசேனைகளோடுசென்று சோழனை வென்று அவன் வசப்படுத்திக் கொண்டிருக்கும் பாண்டிய நாட்டை மீட்டு, அதைச் சந்திரசேகரனிடமொப்புவித்துவா என்று கட்டளையிட்டான். நாகமநாய்க்கனும் அவ்வண்ணமே படை யெடுத்துச் சென்று சோழனை வென்று அவன் வசப்படுத்திக்கொண்டிருந்த பாண்டியனுடைய நாட்டை மீட்டு, அதைச் சந்திரசேகரனிடமொப்புவிக்காமல் தனதாக்கிக்கொண்டான். இது செய்தி விஜயநகராதிபனுக் கெட்டியபோது, அவன் அதிக கோபங்கொண்டு நாகமநாய்க்கனுடைய மகன்விசுவநாதநாய்க்கனையழைத்து நீ சேனைகளோடு மதுரைக்குச் சென்று உன் பிதாவைக்கொன்று அவன் சிரத்தைக் கொய்துவாவென்று சொல்லியனுப்பினான். விசுவநாதனும் அவ்வாறே சென்று தன் பிதாவைக்கொன்று அவனது

பிரவேச வீரசிம்மராயலு அண்டையிற் கொண்டுபோய்ச் சேர்த்தான். இதனிடையே சந்திர சேகர பாண்டியன் புத்திர சந்தானமில்லாமலிறந்து போனபடியால் ராயலு பாண்டியநாட்டை விசுவநாதநாயக்கனுக்குக் கொடுத்து ராஜபட்டமுஞ் சூட்டிவைத்தான். அநுலோமருடைய ராஜ்ய பாரமானது இவ்வண்ணம் நாயக்கன்மார் வசமாயிற்று.

## பரதர்நாடு நாயக்கன்மா ராதீனப்பட்டு மகமதியர்வசமான சரித்திரம்.

மதுரைக் கரசனான விசுவநாத நாயக்கன் காஞ்சிபுரத்திற் கருகேயுள்ள மெய்ப்பேடு என்னுங் கிராமத்தில் ஓர் ஏழை வேளாளன் குடும்பத்திற் பிறந்த அரியநாயக மென்பவனைத் தன் சமஸ்தானத்திற்கு முகாமைக்காரனாகச் செய்து அவனுக்கு முதலியார் என்னும் பட்டத்தைச்சூட்டி, அவனைத் தென்னாட்டில் திக்குவிஜயம்செய்து ஆங்காங்குள்ள சிற்றரசர்களிடம் கப்பம்வாங்கி வரும்படி கற்பித்தனுப்பினான். அரியநாயகமுதலி விசுவநாத நாயக்கனுடைய உத்தாரப்படி சென்று கப்பம்வாங்கிக்கொண்டு பரத நாட்டெல்லையுட் புகுந்தான். அப்போது காயலென்னுமூரில் வாசஞ்செய்துவந்த பஞ்ச திருவழுதியர்கள் அரியநாயகமுதலி வந்தகாரணத்தை விசாரித்தறிந்து தாங்கள் பூர்வீக பாண்டியருடைய சந்ததியாரென்றும், சந்திர குலதிலகனாகிய யயாதி மகாராஜனின் மைந்தன் துர்வசுமுதற்கொண்டின்னாட்டைப் பாரம்பரையாயாண்டு வருகிறவர்களென்றுஞ்சொல்லிக் கப்பங் கட்டுவதற்கு மறுத்துவிட்டார்கள். அது கண்டு அரியநாயகமுதலி பஞ்சதிருவழுதியர்களைப் பயங்காட்டியும், புத்திமதிகளைச் சொல்லியும், தன்னாற்கூடிய சாமர்த்தியங்களை யெல்லாஞ்செய்தும் பார்த்தான். வெல்லக் கூடாமற் போயிற்று. அதனால் அவன் கவலை கொண்டு மதுரைக்குத் திரும்பிப்போய் வேந்தனாகிய விசுவநாதநாய்க்கனைக்கண்டு வணங்கி ஓ! மன்னனே! உமது கட்டளைப் பிரகாரம் நமது நாட்டில் திக்குவிஜயம்செய்து கொண்டு பரவர் தேசம்சென்றேன். அது கன்னியாகுமரிக்கு வடக்காய் கீழ்க்கரை யோரமாய் பாம்பன் வரையில் வியாபித்திருக்கின்றது. அதின் நீளம் நாற்றெண்பது மைல். அந்த பூர்வீக பாண்டியவம்சத்தி லுதித்தவர்களான

ஐவர் பஞ்ச திருவழுதியர்களென்னும் பெயரா லாண்டு வருகிறார்கள். அவர்களைவரும் திருநெல்வேலிக்குக் கிழக்கே பாண்டியர்களுடைய பழைய ராஜதானியாகிய கொற்கை நகரத்திற் கருகே காயலென்னுமூரில் வாசஞ்செய்கிறார்கள். அவர்கள் புஜபலம் பொருந்தியவர்கள். அவர்களிடத்திற் போய்க் கப்பங்கேட்டேன். அவர்கள் அம்புலிக் குலத்தோனாகிய யயாதி மகாராஜனின் சந்ததியாரென்றும், ஆதிமுதற் கொண்டு அந்நாட்டையாண்டு வருவோரென்றுஞ்சொல்லிக் கப்பந் தர மறுத்துவிட்டார்கள். அவர்களிடத்திலெவ்விதமுங் கப்பம் வாங்கிவர வேண்டுமென்னு மெண்ணத்தோடு நான் கற்றவித்தைகளை யெல்லாஞ்செய்து பார்த்தேன். பலிக்கவில்லை. ஆகையாலிது செய்தியைத் தங்களுக்குத் தெரிவிக்க இங்குவந்தேனெனக்கூறினான். அந்தக்ஷணமே விசுவநாத நாயக்கன்நால்வகைத் தானைகள் சூழப்புறப்பட்டுக் காயல்தட்டேருக்கருகேவந்துசேர்ந்தான். விசுவநாத நாயக்கனுடைய சேனைப்பலத்தைப் பஞ்சதிருவழுதியர்கள் கண்டு அவனோடெதிர்ப்பதற்குத் தங்கள் சேனைப்பலம்போதாதென்றுணர்ந்து, தங்களைவரிலொருவரோடு விசுவநாத நாயக்கன் மல்யுத்தம்புரிந்து ஜயிப்பானாயின் அவன் சொல்லுகிறபடி நாங்கள் கப்பங்கட்டுகிறோம்; அப்படி ஜயிக்காத விஷயத்திலவன் எங்களுக்குக் கப்பங்கட்டவேண்டும். இந்த உடன்படிக்கை அவனுக்குச்சம்மதமாகில் யுத்தத்திற்கு வரச்சொல்லென்று தூதனிடஞ் சொல்லியனுப்பினார்கள். விசுவநாத நாயக்கனும் அதற்குச் சம்மதித்தான். பஞ்ச திருவழுதியர்களில் முதன்மையான உக்கிர பாண்டியனென்பவனுக்கும்,விசுவநாதநாயக்கனுக்கும் மாறமங்கலத்தில்மல்யுத்தம் நடந்தது. இருவரும் ஒருவரையொருவர் வெற்றிகொள்ள வெண்ணி வெகுநேரம் யுத்தம் செய்தார்கள். கடைசியாய் நாயக்கனே ஜயித்தான். அதனால் மற்றையநான்கு வழுதியர்களும் மனவருத்தமுற்று இனி பரதநாட்டையாளுவதிற் பயனில்லையென்று நாட்டை நாயக்கன் வசம்விட்டுக் காட்டிற்குச் சென்றார்கள். இவ்வண்ணம் பரதர் நாடு நாயக்கன்மார்வசமாயிற்று. அப்பால் மகாமொகலாய வம்சத்தைச் சார்ந்த தாமர்லேன் என்பவனுடைய சந்ததியிலுதித்த பேபர் என்பவன் டில்லிக்குச் சக்கரவர்த்தியானகாலத்தில் பாண்டியநாடு அச்சக்கிரவர்த்தியின் வசமாயிற்று.

# பரதகுல பாண்டியர் கிறிஸ்து மதானு

## சாரிகளான விவரம்.

நித்தமுமுத்தொழில் நடாத்துமா வுத்தமனாகிய கர்த்தாதிகர்த்தர் ஆதியிலே ஆண் பெண்ணிருவரைப் படைத்து அவர்கள் மூலமாயனந்தகோடி பிரஜைகளைப் பிறப்பித்து அவர்களை யுலகத்தினெத்திசையிலும் பரவச்செய்தாரன்றோ? அவ்வண்ணம் பரவிய பிரஜைகள் தங்களைச் சிருஷ்டித்த தேவனைமறந்து அவருடைய கற்பனைகளைத் துறந்து பல பாதகங்களையும் செய்பத் துணிந்தமையால் சர்வ வல்லவர் கோபமுற்று அவர்களை ஜலத்தாலழித்துத் தமது பக்தனாகிய நோவாவினுடைய சந்ததியைக்கொண்டு திரும்பவும் உலகத்தை நிரப்பினாரென்றும், நோவாவின் மைந்தர்கள் மூவரில் நடுவுள்ளோனாகிய சேம் என்பவனுடைய சந்ததியில் யொக்தான் என்பவனுக்குப் பிறந்த பதின்மூன்று மக்களில் ஒருவனாகிய ஒப்பீர் என்பவனே முந்தியவனா யிந்தச் சிந்துதேசத்தை வந்தடைந்தவனென்றும், அவன் சந்ததியில் பல பிரபுக்களும் அரசர்களுந்தோன்றி வெகு செல்வத்துடன் வாழ்ந்திருந்தார்களென்றும், அவர்களெல்லோரும் மெய்ஞ்ஞான மற்றவர்களாயிருந்தார்களென்றும், அப்பாலவர்கள் ஆரியருடைய போதகத்தைக் கைக்கொண்டார்களென்றும் முன்னமே சொல்லியிருக்கின்றோம். இங்ஙனம் அஞ்ஞானமென்னும் அந்தகாரத்திலமிழ்ந்திய ஒப்பீருடைய சந்ததியாரைச் சர்வ வல்லவ சருவேசன் மீண்டும் இரக்ஷிக்கக் கருணைகூர்ந்தார். அஃதெவ்விதமோவெனில்; மகமதியர்கள் பரதகுல பாண்டியருக்குமிகவும் நெருக்கிடை செய்து, அவர்களனுபவித்துவந்த சலாபங்களையும், கப்பல், தோணி, படகு முதலியவைகளையும் தனதாக்கிக்கொண்டு, தங்கள் மார்க்கத்தை யவர்கள் கைக்கொள்ளும் பொருட்டுப் பலாத்காரஞ்செய்து வந்தார்கள். ஆகையால் பரதர் தங்கள் தேசத்தையும், வருமானத்தையு மிழந்ததுமன்றித் தாங்கள் அனுசரித்து வரும் வேதத்தையுங் கைநெகிழக் காலம் வந்ததைப்பற்றி மிகவுந் துக்கித்தார்கள்.

அந்தக்காலத்தில் திருமந்திர நகரில் விக்கிரம பாண்டியனென்றோர் கோமகனிருந்தான். இவன் மகா யூகி, செல்வமுள்ள புரு

ஷோத்தமன், அடக்கமும் விடாமுயற்சியு முடையவன். இவன் பரத நாட்டினின்று மகமதியர்களை யப்புறப்படுத்தும் விதமென்னே வென்று புலநாட் சிந்தையிற்கொண்டு கடைசியாய், போர்த்துக்காலி றைவனின் உதவியைநாடிச் செல்லுவதே உத்தமமென்று தனக் குள்ளே தீர்மானித்து, கடல்படு திரவியங்களையும், தன் நாட்டின் அபூர்வ பொருள்களையும் கப்பலொன்றில் வெகுவா யேற்றிக்கொ ண்டு, பல வளமும் பொருந்திய போர்த்துக்கால் நாட்டை நாடிப் புறப்பட்டான். இவனேறிய கப்பலானது பலநாளுங் கடலலையைத் தாண்டிக் கடைசியாய் போர்த்துக்கால் நாட்டை யடைந்து, தேசஸ் நதியிற்சென்று லிஸ்போன்மாநகர் போய்ச் சேர்ந்தது. அந்தக் காலத்தில் இமானுவேலரசருடைய குமாரனாகிய மூன்ருவது ஜொவாம் என்பவர் போர்த்துக் காலிராஜ்யத்தை ஆண்டுகொண்டிருந்தார். இவ்வரசனது பெயரும் கீர்த்தியும் உலகத்தி னெத்திசையிலும் பரவியிருந்தன. பரதகுலபாண்டியனாகிய விக்கிரமபாண்டியன் தான் கொண்டுவந்த பாண்டியநாட்டின் செல்வப்பொருள்களைக் கொண்டு போய் அவ்வரசருக்குக் கொடுத்து அவரைக் கண்டுகொண்டான்.

போர்த்துக் காலிறைவர் கீழ்த்திசைச் செல்வனை அன்போடு வரவேற்று, புலம்பனுக் காசனமளித்து அவனது ஆடையாபரணங் களையும் அவன் கொணர்ந்த அபூர்வப்பொருள்களையும் பார்த்து அதிசயித்து நீவிர்யாவர்? உமது தேசம் யாது? இங்கெழுந்தருளிய காரணமென்ன? வென்று வெகு ஆவலுடன் கேட்டார். அப்போது விக்கிரமபாண்டியன்: மன்ன! நான் பொன்விளையும் பூமியெனப் பெயர் வழங்கிய பரதகண்டத்தின்கண் செல்வம் பொருந்திய பாண்டியநாட்டைப்பாரம்பரையாயாண்டுவந்த பரதகுலத்திலுதித்தவன். என் பெயர் விக்கிரமபாண்டியன். வன்மன மூர்க்கராகிய வடுகரும், மகமதியரும் படையெடுத்துவந்து எங்கள் நாட்டை யபகரித்துக் கொண்டதுமன்றி, எங்கள் ஜீவனத்துக்கும், கீர்த்திக்குங் காரணமாயிருந்த சலாபங்களையுந் தனதாக்கிக்கொண்டு எங்களை நாளுவிதங்களாலும் துன்பப்படுத்தி வருகின்ருர்கள். ஆகையால் அவர்கள் செய்யும் கஷ்ட நிஷ்டூரங்களைச் சகிக்கக்கூடாமல் தங்களுதவியைநாடி மிகுந்த கஷ்டத்தோடிங்குவந்து உமது திருமுக தரிசனம் பெற்றேன். ஓ, மாட்சிமைபொருந்திய மண்டலாதிபா! தேவரீர் கிரு

யை கூர்ந்து எங்கள் பகைவரை எங்கள் நாட்டினின் ஹேரூட்டி எங்களிராஜ்யத்தை யெங்களுக்களிக்கவேண்டுமென்று சொல்லி வணங்கினன். மதிகுலப்பிரபுவின் சாதுரியமான வசனங்களைப் போர்த்துக்கால் மன்னர் கேட்டு மகிழ்வோடு கூடிய மனக்கவலைகொண்டவராய்க் கடற் சேர்ப்பனின் திருமுகத்தைப் பார்த்து: பிரபு! நீர் மலங்கவேண்டாம். கடவுள் கிருபை செய்வார். ஆனால் நாமும்மிடத்திற் கேட்டுக்கொள்வதொன்றுண்டு. அதாவது; நீருமது மூதாதைகள் வழிபாயனுசரித்துவரும் இந்து மார்க்கத்தைத் துறந்து, மெய்யான சருவேசனுற் போதிக்கப்பட்ட சத்திய வேதத்தைக் கைக்கொள்ளுவீராகில் நீவிர் கேட்டுக்கொண்ட அத்தனையும் சத்தியமாய்ச் செய்வோம். மேலும் உமக்கும், எமக்கும் இப்போதேற்பட்ட சிநேகமானது எப்போதும் நீடித்திருக்குமென்று கூறினர். பரதகுலபிரபு போர்த்துக் காவலரசனை வணங்கி ஓ, மன்ன! உமது விருப்பத்தின்படியே யாகட்டுமென்றேப்புக்கொண்டான்.

அப்பால் ஜொவாம் அரசர் ஓர் நாளைக்குறிப்பிட்டு, தமது பந்துக்களும், பிரபுக்களும், சேனுவீரர்களும் புடைசூழ, பரதகுல பிரபுவை யழைத்துக்கொண்டு போர்த்துக்காலென்னும் பதுவை நாட்டிற்கு விசேஷ அடைக்கலமும், பாதுகாவலுமாகிய அர்ச்சியசிஷ்ட அந்தோனியார் தேவாலயத்திற்குச் சென்று, தானும் தன் பத்தினியும் அந்தத்துறைச் செல்வனுக்கு ஞானப்பிதாவும் மாதாவுமாய் நிற்க, லிஸ்போன் நகரதிமேற்றிறாணியார் அப்பிரபுவுக்கு போர்த்துக்கால் மன்னருடைய திருநாமத்தைச் சூட்டித் திரித்வைகதேவாதிதேவனின் நாமத்தால் ஞானஸ்நானம் கொடுத்தார். மெல்லனுகிய பிரபு சிறிதுகாலம் அவ்விறைவருடைய அதிதியாக அங்கு தங்கி வேண்டும்போது தனக்கும் தன்னினத்தவர்க்கும் வேண்டுமுதவி தருவோமென்னும் பலமான வார்த்தைப்பாடும், அதிவிசேஷமும் நூதனமுமான அத்தேசத்துப் பொருள்களையும் அரசர் கொடுக்கப் பெற்றவனுகி, ஜொவாம் என்னும் பரதகுலப்பிரபு திரும்பித் திருமந்திரநகர் வந்து சேர்ந்தான். அதன் பின் போர்த்துக்காலிறைவர் தமது பிரதிநிதியாக கொச்சியில் வாழ்ந்த கவர்னருக்கு ஓர் நீண்ட கடிதத்தை யெழுதி அதில் முத்துக்குளித்துறையில் வாழும் பரதகுலபாண்டியருக்கும், விசேஷமாய் தூத்துக்குடியில் வசிக்கும் தமது

ஞானப்புத்திரனாகிய ஜொவாம் என்பவருக்கும் வேண்டும்போது வேண்டுமுதவிபுரியவேண்டு மெனக்குறிப்பிட்டிருந்தார்.

இந்நிருபத்தைக் கண்ணுற்ற கொச்சி கவர்னர் ஓர் தூதுவனைத் தூத்துக்குடிக்குப் புதுக்கிறீஸ்துவனாகிய ஜொவாம் என்னும் பிரபுவின்பாலனுப்பி உமக்கும், உமது குலத்தவர்க்கும் வேண்டும்போது வேண்டுமுதவிபுரியும்படி போர்த்துக்கால்நாட்டில் லிஸ்போன் நகரரண்மனையி லெழுந்தருளியிருக்கும் மாட்சிமைதங்கிய எங்களரசர் நிருபமனுப்பியிருக்கிறார். ஆகையால் நாங்கள் செய்யவேண்டிய உதவி யென்னவென்று அறிந்துவரும்படி சொன்னார். அத் தூதுவனானவன் தூத்துக்குடித் துறைமுகத்தை யடைந்து போர்த்துக்கால் நாட்டிற்குச்சென்றுவந்த பிரபு ஆரென்று விசாரித்தறிந்து கொச்சிக்கவர்னர் அறிந்துவரும்படி சொல்லியனுப்பிய விஷயங்களை அவன் முன் விண்டான். தூதுவன் சொல்லியவற்றைப் பரதகுல பிரபு கேட்டு அகமகிழ்ந்து அத்தூதுவன்கையிலோர் முத்துமாலையைக் கொடுத்து, கூடியசீக்கிரம் கவர்னரண்டைக்குத் தூதுவர்களை யனுப்பி யறிவிப்பேனென்று அவருக்குத் தெரிவித்து, இந்த முத்துமாலையை அவருக்கு நான் வெகுமதியளித்ததாகக்கொடு என்று சொல்லியனுப்பினான். தூதுவனும் அவ்வண்ணமே கொச்சிக்குச் சென்று கவர்னரைக்கண்டு ஜொவாம் சொல்லியனுப்பியபடியே செய்தான்.

பரதகுலபாண்டிய வம்சத்தார் தங்கள் நாட்டில் மிகுந்த சஞ்சலத்தோடு மகமதியருடைய கொடுங்கோலின் கீழ் வாழ்ந்துவரும் நாளில், தூத்துக்குடியில் ஓர் மகமதியன், ஓர் பரதன் காதுகளிலணிந்திருந்த குண்டலங்களிலொன்றைப் பலாத்காரமாய் ஈர்த்தெடுத்துவிட்டான். அந்தக்காலத்தில் இச்செய்கையானது பரதகுலத்தவருள் மகா நிந்தையாய்க் கருதப்பட்டுவந்தமையால் அந்தப் பரதன் அவ்விடத்திற்றானே அந்த மகமதியனை யடித்துக் கொன்றுபோட்டான். இதனால் மகமதியர்களுக்கும், பரதர்களுக்குமிடையில் சண்டையுண்டானது. அநேகமாயிரம் பரதருயிரிழந்தார்கள். அப்பால் பலவூர்களினின்றும் பரதருக்குப் படைத்துணைவர மகமதியர்களைக்கொன்று பழிக்குப் பழிவாங்கினார்கள். அப்போது கரைதுறைகளிலிருக்கப்பட்ட பரதகுலத்தவரைக் கருவறுக்கக் கருதி

மகமதியர்கள் கடல்மார்க்கமாய்வந்து பலத்த யுத்தமுஸ்திப்புகளைச் செய்தார்கள். மகமதியர்களுடைய யுத்தமுஸ்திப்பானது பரதகுலத்தவரை நடுநடுங்கச் செய்தமையால் பரதகுல பிரபுக்கள் தங்கள் பிரஜைகளைத் தாங்களே தண்டிக்கிறதென்னு முடன்படிக்கையின் பேரில் மகமதியர்களைச் சமாதானப்படுத்திக்கொண்டார்கள்.

இந்த வுடன்படிக்கை பரதகுலப் பிரபுக்களிலொருவனாகிய ஜொவாம் என்பவனுக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்தபடியால் அவன் பரத குலத்தார் வாழும் ஒவ்வொரூரினுமுள்ள கொண்கன்மார்களை யெல்லாம் திருமந்திர நகரில் வந்து கூடும்படி ஓலையெழுதியனுப்பினான். ஜொவாம் என்பவன் அஞ்சாத துணிவும், எஞ்சாத தைரியமும், தொடுத்த காரியத்தைச் சிதைவுறாது முடிக்கும் வீரப்பிரதாபமும் பொருந்தியவ னென்பதைச் சேர்ப்பன்மாரெல்லோரும் நன்கறிந்தவர்களாகையால் அவன் விடுத்த ஓலையைக்கண்ணுற்றவுடனே புறப்பட்டுத் தூத்துக்குடியில் வந்து சேர்ந்தார்கள். இவ்வண்ணம் வந்து கூடிய துறைவன் மார்களையெல்லாம் ஜொவாம் வரவேற்று விருந்தளித்து, அவர்களுக்குத் தேனினுமினிமை பொருந்திய வோரரிய பிரசங்கத்தைச்செய்து சுதேசாபிமானத்தையும், சுஜனாபிமானத்தையுமூட்டி, நாமேன் மகமதியர்களுக்குக்கீழ்ப்படிய வேண்டும்? அரசனிருக்கப் பட்டணமழிந்த கதையாகவன்றோ இருக்கிறது. இதோ கொச்சிநகரில் போர்த்துக்கீஸ் கவர்னரொருவரிருக்கின்றார். அவர்பால் சென்று மகமதியர்களால் நமக்கேற்பட்டிருக்கும் கஷ்டநிஷ்டூரங்களையெல்லா மெடுத்துரைத்து அவரிடத்திலுதவிகேட்போமாயின் அவர் தடையின்றி நமக்குதவி செய்வார் என்று சொன்னான். இவ்வாலோசனையானது எல்லோருடைய மனதுக்கும் திருப்திகரமாயிருந்தபடியால் புலம்பன்மாரெல்லோருமதற்குச் சம்மதித்தார்கள். ஆகையால் அந்தக்ஷணமே கொச்சிக்குச் சென்று போர்த்துக்கீஸ் கவர்னரிடத்திலுதவி கேட்கும்படி எழுபது தலைவன் மார்களைத் தூதனுப்பத் திட்டஞ்செய்தார்கள். ஜொவாம் என்னும் பிரபு கொச்சிநகர்க்கவர்னருக்கு ஓர் நிருபத்தை எழுதி, அதில் "பிரபுவே! இதோ வுமது உதவியை நாடி உம்மிடத்தில் வருகிற எனது சகோதரர்களுக்கு நீர் வேண்டுமுதவி புரிவதோடு அவர்கள் பரகதியடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து அனுப்ப

வேண்டியது" என்று குறித்து, அதைத் தூதுவர்கள் கையிற் கொடுத்தான்.

திருமந்திர நகரினின்று கொச்சி நகர்க்குப் புறப்பட்ட பாண்டியஸ்தானுபதிகள் எழுபதின்மரும் பூமாதேவியின் முலைகளென விளங்கி ஆகாயமளாவிய மலைகளைத்தாண்டிக் கொச்சிநகரையடைந்து, போர்த்துக்கீஸ் கவர்னரைக் கண்டு வணங்கி ஜொவாம் கொடுத்த நிருபத்தையவர்வச மளித்து தாங்கள் வந்த வரலாற்றைக்கூறி எவ்விதமுந்தங்களுக் கபயந்தந்திரக்ஷிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள்.

காருண்ய பிரபுவாகிய கொச்சி கவர்னர் பரதகுல பிரபுவாகிய ஜொவாம் என்பவனுடைய கடிதத்தைப் பார்த்துவிட்டு மகிழ்ச்சியோடு அவர்களுக்குச் செய்யவேண்டிய சங்கையைச்செய்து, பின் சொல்லுகிறார்: பரதகுலபாண்டிய பிரபுக்களே! ஆதிநடுமுடிவில்லாதவரும், ஆக்கல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழில் வல்லவரும், அதிநல்லவருமாகிய கடவுள் அனேகமாயிரமைல்களுக் கப்பாலுள்ள போர்த்துக்காலி ராஜ்யத்தினின்றெங்களை இச்சிந்து தேசத்திற்கொண்டுவந்து சேர்த்ததற்காக நானெனது முழுமனப் பூர்வமாயவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துகிறேன். ஸ்தானுதிபதிகளே! எங்கள் மாக்ஷிமைதங்கிய போர்த்துக்கால் மன்னராகிய சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன் ஜொவாம் என்பவருக்காவது அவர்பிதாவாகிய முதலாவது இமானுவேலரசருக்காவது உங்களுடைய சிந்துதேசத்தை ஜயித்து அதன் செல்வத்தைத் தானும், தனது தேயத்தவர்களு மனுபவிக்கவேண்டு மென்கிற எண்ணம் அணுவளவுங்கிடையாது. அந்தத் துரெண்ணத்தோடு நாங்களிந்தியாவுக்கு வரவுமில்லையென்று மெய்யாகவே யுங்களுக்குச்சொல்லுகிறோம். நாங்களிங்குவந்ததினுண்மையான நோக்கமென்னவென்றால்; உங்கள் ஆசியாகண்டத்திலே யுதித்து, உலகத்திலுள்ளமதங்கள் யாவும் பொய்யென்று தமது போதனைகளாலும், செய்கைகளாலும் பிரத்திபட்சமாயெல்லோருக்கு மெண்பித்த மெய்யான கடவுளாகிய இயேசுகிறிஸ்துவினுடைய வேதத்தைப் போதித்து, உலகத்தாரெல்லோரையும் சத்தியதிருச் சபையென்னுமோர் குடை

நிழலின்கீழ் நிலைநிறுத்தி அவர்களை நற்கதியடையச் செய்யவேண்டுமென்கிற நல்லெண்ணமேயொழிய மற்றப்படியல்ல. கன்னிநாட்டின் புதல்வரே! கடவுளுக்குச் சித்தமுண்டானால் உங்கள் நாட்டில்மட்டுமல்ல, சூரியனுடைய ஒளி எங்கெல்லாம் வீசுமோ அங்கெல்லாம் சென்று போர்த்துக்கால் வீரர்களின் வீரச்செய்கைகளைக் காட்டி வென்று சத்தியவேதத்தைப் போதிக்கவே நாங்கள் கங்கணங்கட்டிப் புறப்பட்டோம். தொன்ஜொவாம் அரசர்காலத்தில் உலகமெல்லாம் ஜயிக்காவிடினும் உலகத்திலுள்ளவர்களெல்லோரும் கிறிஸ்துவினுடைய வேதத்தைத் தங்கள் செவிகளாற் கேட்கும்படியாவது செய்வோம். சேரப்பன்மாவே! உங்களிடத்தில் நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளும் மன்றாட்டொன்றுளது. அதாவது: உங்கள் சகோதரனாகிய விக்கிரமபாண்டியன்; எங்கள் மன்னனாகிய ஜொவாம் என்பவரிடத்திற்சென்று, அரசருடைய விருப்பத்தின்படி ஞானதீட்சை பெற்று ஜொவாம் என்னும் பெயரோடு திரும்பிவந்து சுயதேசம் சேர்ந்தாரன்றோ? அந்த நாள்முதலாக எங்கள் மாட்சிமைதங்கிய போர்த்துக்கால்மன்னர் தமது ஞானப்புத்திரனாகிய அந்தப்பிரபுவின் மேலும், அவர் பந்துக்களாகிய வுங்கள் மேலும் வெகு கவனத்தைச் செலுத்திவருகின்றார். உங்கள் சகோதரராகிய அந்தப்பிரபு மாட்சிமைதங்கிய போர்த்துக்கால் மன்னரின் சபையில் அம்மன்னருடைய வேண்டுகோளுக் கமைந்து எவ்வாறு நடந்துகொண்டாரோ அவ்வாறே நீங்களும் இன்று என் விண்ணப்பத்திற்கிசைந்து எனக்குச் செவிசாய்க்க மன்றாடுகிறேன். அதாவது: உண்மையும், சத்தியமும் பொருந்திய கிறிஸ்துமார்க்கக் கொள்கையின்படி நாமெல்லோரும் ஒரே தாய்தந்தையின் பிள்ளைகள். எப்படியென்றால், ஆதாமென்னும்ஆதித்தந்தைக்கு ஏவாளென்னும் ஆதித்தாயின் வயிற்றிற் பிறந்தவர்கள் ஆகையால் நாமெல்லோரும் ஏக சகோதரர்களென்பதற்குக் கிஞ்சித்தும் ஐயமின்று. சகோதரர்களாகிய நாம் ஒருவரையொருவர் சிநேகிக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். சர்வ வல்லவ சர்வேஸ்வரனின் கற்பனையுமதுவே. எங்ஙனமெனில்; முதலாவது, எல்லாவற்றையும் பார்க்க சர்வேஸ்வரனைச் சிநேகிக்கிறது. இரண்டாவது, தன்னைத்தானே சிநேகிக்குமாப்போல் மற்றெல்லோரையும் சிநே

கிக்கிறது. எனது பிரிய சகோதரர்களே! நீங்களுங்கள் சத்துருக்க ளால் நெருக்கப்பட்டு வருந்தும்போது உங்கள் சகோதரனுகியநான் உங்களை யவர்கள்வசமிருந்து மீட்க வல்லவனுயிருந்தும் மீட்காதி ருப்பேனுயின் நான் கிறிஸ்துவனுயிருந்தும் கிறிஸ்துவினுடைய கற் பனையைக் கைக்கொள்ளாத பாதகனுகின்றேன். அடைக்கலம்புகுந் தோரை அபயங்கொடுத்துக் காப்பதுவே அரசருக்கழகு. அதுவே க்ஷத்திரியர்களுக் கிருக்கவேண்டிய முக்கியகடமைகளிலொன்ருகும். சகோதரர்களே! நாமெல்லோரு மேகோபித்துப்பாண்டியநாட்டில் நடத்தப்போகின்ற யுத்தத்தில் கடவுள் நம்பக்கம் வெற்றியையளிக் கும்பொருட்டு நீங்களெல்லோரும் அவருடைய சத்தியகத்தோலிக் கு திருச்சபையிற் சேர்ந்து அவரை ஆராதிக்கவேண்டும். அப்பால் நாம் யுத்தமுஸ்திப்புச் செய்வோமென்று சொல்லியகன்ருர்.

கொச்சிதேசாதிபதியினுடைய வாய்ப்பிறப்பைக்கேட்ட பட்ட ங்கட்டிமார்கள், கனவருத்தமுற்று, ஆ தெய்வமே! இதென்ன? பனையேறிவிழுந்தவனை மாடேறிமிதித்தகதையாகவல்லோ இருக் கின்றது. அங்கேயகம்மதமதத்தைக்கைக்கொள்ளமாட்டோமென்று மறுத்துவிட்டு இங்கேவந்தோம். இவர் கிறிஸ்துமார்க்கத்தை யனு சரிக்க வற்புறுத்துகின்ருர். இதென்னஅநீதி! என்று மனங்குழைந் தார்சிலர், திக்கற்றவனுக்குத் தெய்வமேதுணையென மவுனஞ்சா தித்தார்சிலர், நமது பிதாமாதாக்களனுசரித்துவந்த வேதத்தை என் ன தான்வந்தபோதிலும் கைநெகிழ விடப்படாதென்ருர்சிலர், நம் குலத்தவர்யாவராலு மகப்படுத்தக்கூடாத சுறவைப்பிடித்து, தான் பரதனென்று சத்தியத்தைச்செய்து தண்டுறைப்பாக்கத் தலைவனு கிய திரியம்பகனென்னும் அடப்பனுர்மகளுக்கு வாசனைபொருந்திய மலர்மாலைசூட்டி நம் குலத்தாரோடு ஐக்யமான பரமசிவனைத் தொழுவதை விடோமென்ருர்சிலர், துவாரகாபுரிக் கிறைவனுகிய ஸ்ரீகோபாலகிருஷ்ணனையும், அவன் பாரதயுத்தத்தில் நம்மவர்க்குச் செய்த சகாயத்தையும் மறக்குதல் நியாயமோவென்ருர்சிலர், திவ் யநதிகளில் ஸ்நானம்செய்து, திருக்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டுபோய்க் காசிவிஸ்வநாதனைத் தோத்தரிக்கும்பாக்யம் போச் சுதேதன்பார் சிலர், பாதலமுழுவதும் வியாபித்து வேர்கள்செல்ல வும், மீதலமுழுவதுந் தழைகள்வியாபித்துத் தளிர்க்கவுஞ் சமுத்தி

ரத்திலே மாமரவடிவமாகநின்ற சூரபன்மனைமாய்த்த வெற்றிபொருந்திய வேலாயுதத்தைக் கையிற்பிடித்து, தெய்வானைபோர்பக்கமும் வள்ளிநாயகி மற்றோர்பக்கமும் வீற்றிருக்கச்செயந்தியென்னுந் திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியக்கடவுளைத்துதிக்கும்பாக்கியம் போச்சுதேயென்றார் சிலர், இவ்விதமாகப்பலரும் பலவிதமாய்ச்சொல்லித் துக்கிப்பதைக் கண்டசிலர் நீங்களென்ன எதற்காக இங்கு வந்தீர்கள்? சமயோசிதமென்னுமுபாயத்தை மறந்தீர்களா? இந்தவேளையில் நாம் கவர்னர்கருத்துக்கிசைந்து ஞானதீக்ஷையைப் பெற்றுக்கொள்வோம். நம்நாட்டினின்று மகம்மதியர்களைத் துரத்தியோட்டியபின் புதியமார்க்கத்தையகற்றிப் பழையவேதத்தைக்கைக்கொள்வது வருத்தமல்லவே? இப்பொழுது கவர்னர் கருத்துக் கிணங்காவிடிலோ துலுக்கர்தொல்லையொழிந்தபாடில்லை. ஆகையால்நாமெல்லோருமேகோபித்து கவர்னர்துரையினிடம்சென்று அவர்சொல்லுகிறபடியே கிறிஸ்துசமயத்தை யங்கீகரிப்போம் என்று சொன்னார்கள். இந்தக் கருத்தானது எல்லோருக்கு மொத்திருந்தபடியால் யாவருமதற்குச் சம்மதித்தார்கள்.

அந்தக்ஷணமே பாண்டியஸ்தானாதிபதிகள் கொச்சிதேசாதிபதியினிடத்திற்குச் சென்று மாட்சிமைதங்கிய தேசாதிபதியே! நாங்கள் யாவரும் உமது விருப்பத்தின்படியே கிறிஸ்துவின்மறையைக் கைக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறோமென்று அவருக்குத்தெரிவித்தார்கள்.

அப்போது அந்தக் கவர்னர்துரை அகமகிழ்ந்து அவர்களைத்தேவாலயத்திற்கழைத்துப்போய் சுவாதீனகுருக்களாகிய சங்கைக்குரிய பீ. மிக்கேல்ஸ் என்னுங் குருவானவரையும், சங்கைக்குரியயாக்கோபு பொர்ப்பரவென்னுங் குருவானவரையுங்கொண்டு அவர்கள் எழுபதின்மருக்கும் ஞான தீட்சையீந்து பின் கவர்னர் யுத்தமுஸ்திப்பு செய்து மேலேசொன்ன இருகுருக்களோடு கொண்கன்மார்களையும், சேனைவீரர்களையுங் கப்பலிலேற்றிக்கொண்டு தூத்துக்குடித் துறைமுகத்தில் வந்துசேர்ந்து மகம்மதியரோடு கொடியபோரியற்றி அவர்களைச் சிறைப்படுத்திப் பரத நாட்டை மீட்டார். அப்போது மகம்மதியர்கள் கொச்சிக் கவர்னரை வணங்கித் தாங்கள் பரதரிடமிருந்து அபகரித்த கப்பல், தோணி முதலியவற்றைக் கவர்னரிடமொப்புவித்து

இனி அவர்களைப் பகைக்கோமென்று சத்தியத்தைச் செய்து பரதர் நாட்டினின்று மீண்டார்கள்.

இவ்வண்ணம் கவர்னர் மகமதியர்களிடமிருந்து பெற்ற கப்பல், தோணி முதலியவற்றைப் பரதருக்குத் திரும்பக்கொடுத்து மூப்பது, ஊர்களிலே இருபதினாயிரம் பரதரை சத்தியவேதத்திலுட்படுத்தி, அவர்களுக்குத் தங்கள் தேசத்தில் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் வழங்கிவரும் எத்வார்த்து, ரூபின், மொறால், தெக்குரூஸ், பீரிஸ், மெந்தீஸ், பர்னாந்து, லேயோன், மிராந்த, வாயிஸ், வாஸ், சொவ்சா, பிம்மேந்த, கோஸ்தா, கர்வால்யோ, பல்தானு, மிசியோர், காகு, கோமஸ், ரோச், டிவோட்டா, டாட்ரூஸ், பிரீத்து, மொங்தேர், வல்தாரிஸ், பிங்தோ, ரவ்பேல், தமேல், பச்சேக், ரொட்ரீகோ, கொறெய்யா, அல்போன்சோ, லம்போர்த்து, மோத்தா, மஸ்கிறேஞ்ஞு, போபால், மொறாயிஸ், தகி, லோப்ஸ், மச்சாடோ முதலான பட்டப்பெயர்களை யளித்து, சத்யகத்தோலிக்கு திருச்சபையினின்று வழுவாது நடப்பதற்கான புத்திமதிகளை யவர்களுக்குச் சொல்லி, தேச காப்பின்பொருட்டு தூத்துக்குடி, பின்னைக்காயல், மாப்பாடு, கன்னியாகுமாரி, வேம்பாறு, வேதாளைமுதலிய விடங்களில் கொஞ்சம் சேனைகளையும், அந்தச் சேனைகளுக் கதிபதியாயப் பின்னைக்காயலிலோர் தளகர்த்தனையும் வைத்துவிட்டுத் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

இச்சம்பவமானது கி-பி 1532ம் ௵ நடந்தேறியது. பரதகுல பாண்டியர்கள் தேசத்தில் சத்துரு பயமின்றி மகா சந்தோஷத்தோடு சங்கு, முத்து, பவள முதலிய கடல்படுதிரவியங்களைக்கைக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இவர்கள் முன் தீர்மானித்தவாறே கத்தோலிக்க மார்க்கத்தைக் கைசோரவிட்டுப் பழைய அஞ்ஞான மார்க்கத்தைத் தழுவிக்கொண்டு கும்பமெடுத்தாடுவாரும், காவடிசுமந்து திரிவாருமாயினர். இவர்கள் செய்யும் அலங்கோலத்தைக் கண்ட கத்தோலிக்குக் குருக்கள் இவர்களுக்கு ஞானோபதேசம் செய்து இவர்களின் செய்கையைக் கண்டித்த போதிலும் குருக்களுடைய வார்த்தைகளை இவர்கள் செவியிற் கொள்ளவில்லை. இவ்விதமாய் அம்புலியின்குல அரசமைந்தர்கள் அஞ்ஞானமெனும் அந்தகாரத்தில் ஓர்பத்து வருஷகாலம் அலைந்து திரிந்தார்கள். சர்வ வல்லப

சருவேசுரன் இவர்களை இரட்சிக்கக் கருணை கூர்ந்து பிராஞ்சீஸ்கு சவியேரென்னும் சற்குருவை யிவர்களுக்காக வனுப்பிவைத்தார்.

---

# அர்ச்சியசிஷ்ட பிராஞ்சீஸ்கு சவேரியார் சரித்திரம்.

இவர் இரக்ஷண்யாப்தம் 1506ல் ஸ்பாஞியாவைச் சேர்ந்த நவாரென்னும் இராச்சியத்தில் உத்தமகோத்திரத்திலுதித்து அர்ச்-இஞ்ஞாசி லொய்யோலாவினுடைய சற்போதனைக் குட்பட்டு இலௌகிகசுக செல்வங்களை வெறுத்து மோட்ச பேரின்பத்தை மாத்திரம் ஆசித்தவராய் சன்யாசத்தை யனுசரித்து ரோமூரு மென்ற மேற்றிராணியார் கையினால் குருப்பட்டத்தைப் பெற்றுப் போர்த்துக் கால் நாட்டையடைந்து, மூன்றாவது ஜோவாம் அரசரின் அனுமதியைப் பெற்றுச் சிந்துதேசம் வந்து கோவைப்பட்டணத்தில் வேதோபதேசஞ்செய்து கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் தென்தேசத்திலேயுள்ள பரதகுலத்தார் தாங்கள் புதிதாய்க் கைக்கொண்ட கிறிஸ்துவினுடைய மார்க்கத்தைக் கைதுறந்துவிட்டு அஞ்ஞானிகளோடு கூட அஞ்ஞானிகளா யலைந்து திரிகிறார்களென்று கேள்விப்பட்டார்.

இந்தச்செய்தி இவர் செவியிற்பட்டவுடனே அந்தப் பரமாத்மாவானவர் தான் எப்படியாவது அந்தப்பரதர் தேசஞ்சென்று அந்த ராஜகோத்திரத்தாரைப் பழுதற்ற வேதநெறியில் நிலைநிறுத்தவும், அஞ்ஞானிகளுக்கு கிறிஸ்துவினுடைய வேதத்தைப் போதித்து ஞானஸ்நானங் கொடுக்கவும் வேண்டுமென்கிற ஆசையினால் கோவை மேற்றிராணியாரிடம் சென்று அவருடைய உத்தரவைப் பெற்றுக் கப்பலேறிச் சங்கும், முத்தும், பவளமும் வெகுவாய்க் குவிந்து கிடக்கும் பரதர்தேசத்திலே வந்து சேர்ந்தார். அவர் அங்கே தமிழ்ப்பாஷையைக் கற்றுப் பரதர்வாழும் ஒவ்வோரூரிலுஞ் சென்று வேதோபதேசஞ் செய்து, பழைய கிறிஸ்துவர்களை நன்னெறியில் நிலைநிறுத்தி, அநேக அஞ்ஞானிகளுக்கும் புதிதாய் ஞானஸ்நானங் கொடுத்து, பரதருடைய குடுமியையும், பூணூலையும் களைவித்து அவர்களைச் சைவநெறியினின்று முற்றும் மாற்றியபின், அவ்வளவு தொகையான கிறிஸ்துவர்களை விசாரிக்கவும், அனுதினம் புதி

தாய் சத்தியவேதத்திற் சேர விரும்புகிறவர்களுக்கு ஞானோபதேசங்கற்பிக்கவும் தன்னாலே தனிமையாய்க் கூடாதென்று கண்டு, மீனவன் கோத்திரத்தில் உத்தம நற்குணமுள்ளவர்களாய் குருப்பட்டத்திற்கு யோக்கியமான சில வாலிபர்களைத் தெரிந்து அவர்களைத் தன்னோடு அழைத்துக்கொண்டுபோய் கோவைப்பட்டணத்தில் அர்ச்சிய சிஷ்ட சின்னப்பர் (சம்பாவுல்) கல்விசாஸ்திர மடத்தில் விட்டுப்பின் அவ்விடத்திலிருந்து சில குருக்களை ராயல் பதுர்வாத மிஷன்மேற்றி ராணியாருடைய அனுமதியின்மேலழைத்துக்கொண்டு வந்து, தூத்துக்குடி, காயல், பின்னைக்காயல், மாப்பாடு முதலியூர்களிலுள்ள கிறிஸ்தவர்களை விசாரிக்க நியமித்து, பின் தென்னன் கோத்திரத்தாரின் சிறுவர்க்கு வேதசாஸ்திரத்தைப் போதிக்க ஓர் குருமடத்தை மாப்பாட்டிலே ஸ்தாபித்து, சூரபன்மனென்னும் இராக்ஷதன் வசித்ததும், அந்தராக்ஷதன் மாமரவடிவமாகச் சமுத்திரத்திலே நின்றதும், சுப்பிரமண்யன் தனது வலிமைபொருந்திய வேலாயுதத்தால் அம்மாமரத்தைப் பிளந்து வீழ்த்தியதும், அதனால் "மாப்பாடு" என்று பெயர் வழங்கிவந்ததுமாகிய அந்நகரத்திற்கு மணப்பாடு (மணம் - மகிழ்ச்சி, பாடு - இடம், மகிழ்ச்சிபொருந்திய இடம்) என்று பெயரிட்டு யாவரும் அப்பெயரால் தானே அவ்வூரையழைக்கும்படி செய்தார். அன்றுமுதலின்றளவும் அவ்வூருக்கு மணப்பாடென்றே பெயர் வழங்கிவருகிறது. அதனருகேயுள்ள மலைக்குக் கந்தமாதன மலையென்று பெயர். அந்தமலையிற்றான் சூரபன்மனுடைய மாளிகையிருந்தது. ஓர்காலத்தில் அந்த மலை வெகு செல்வங்களையுடையதாயிருந்ததாகப் புராணங்கள் சாக்ஷிக்கின்றது. இப்பொழுது அங்கு நமது இரக்ஷகராகிய கிறிஸ்து சிலுவைப் பத்திராசனங் கொண்டெழுந்தருளியிருக்கின்றார்.

சவேரியார் பரதருக்காக எவ்வளவு சிரமப்பட்டாரென்றும், அவர் இக்காலத்திலுள்ள கத்தோலிக்கக் குருக்களைப்போல் பரதரைத் தூஷித்து இமிசிக்காது நேசித்தாரென்றும் காட்டும் பொருட்டு அவர் சேசுசபையை ஸ்தாபித்த அர்ச் இஞ்ஞாசி லொயோலாவுக்கெழுதிய கடிதங்களுள் ஒன்றை இங்கே தமிழில் மொழிபெயர்த்துத் தருவாம்.

நிர். ௰௩ (13)

**1543**-ஆம் வசந்தகாலமாகிய மேய்மீ **23**உ

தூத்துக்குடி.

"உராமாபுரியில் (சேசு) சபையதி சிரேஷ்டரும் சங்கைக்குரிய பிதாவுமாகிய இஞ்ஞாசியூஸ் அவர்களுக்கு.

நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் அனுக்கிரகமும், புண்ணியத்தின் பெறுபேறும் சதாநமக்குதவியாகவிருந்து சகாயிக்கக் கடவன ஆமென்

போர்த்துக்காலிலிருந்து இந்தியாவிற்கு நாங்கள் செய்த எங்களுடைய யாத்திரையைப்பற்றி யோர் நீண்ட கடிதம் நான் கோவைப் பட்டணத்திலிருந் துமக்கெழுதினேன். ஏனென்றால், அதுவே உமது விருப்பமாகவிருந்தது. எனது உத்தம மதுரமான பிதாவே! நானிப்பொழுதுசெய்த கன்னியாகுமரிப் பிரயாணத்தில் நேரிட்ட சில விசேஷ சம்பவங்களையும் உமக்கறிவிக்கிறேன்.

கோவைப்பட்டணத்தின் மடத்திலிருந்து சில சுதேச மாணுக்கருடன் நான் புறப்பட்டேன். இந்த மாணுக்கர் தங்கள் பாலிய முதலே தேவாலய ஊழியங்களுக்கு வேண்டிய சட்டதிட்டங்களைக் கற்றுக்கொண்டிருந்தவர்களும், இப்பொழுது குருபட்டங்களுக்கடுத்ததானங்களி விருப்பவர்களுமேயாம். சிலவருஷங்களுக்குமுன் மனந்திரும்பிக் கிறிஸ்துவர்களானவர்களின் ஒவ்வொரு கிராமங்களையும் சந்தித்து ஊடறுத்துக்கொண்டே சென்றோம். போர்த்துக்கீசர் வாசம்பண்ணுவதற்கு இந்த இடங்கள்மிகவும் பாழும், பலனற்றதுமாகவிருக்கின்றது. இங்கிருக்குங் குடிஜனங்களாகிய கிறிஸ்துவர்களுக்குப் போதிக்கக் குருக்களில்லை. அவர்கள்பேருக்குமட்டுங் கிறிஸ்துவர்களேயொழிய மற்றொன்றும் அவர்களுக்குத் தெரியாது. பூசை சொல்லுவதற்கு அவர்களுக் காருமில்லை; விசுவாசமந்திரம், பரமண்டலமந்திரம், பிரியதத்தமந்திரம், சருவேஸ்பரனுடைய பத்துக் கற்பனைகள் இவைகளைப் படிப்பித்துக் கொடுப்பதற்கு அவர்களுக் காருமில்லை. ஆகையால் நானிங்குவந்த நாள்முதல் இதுவே இராப்பகல்வேலையாயிருக்கிறேன். நான் வெகு சுறுசுறுப்புடன் ஊரூர்தோறும் ஒன்றன்பின் னொன்றாய்ப்புகுந்து, இன்னமும் ஞா

னஸ்நானம்பெறாத குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுத்தேன். இவ்விதமாய் இடதுகையிதுவென்றும், வலதுகையிதுவென்றும் விவரம்தெரியாத சிறுவர்களைக் கிறிஸ்துவர்களாக்கினேன். அப்பொழுது அந்தச் சிறுவர்கள், ஏதாவது சிலமந்திரங்களை அவர்களுக்கு நான் படிப்பித்துக் கொடுத்தாலொழிய என்னைச் செபம்பண்ணவாவது, சாப்பிடவாவது, நித்திரைசெய்யவாவது விடமாட்டார்கள். "பரலோகவிராச்சியமானது இப்படிப்பட்டவர்களுடையதாக விருக்கின்றது." என்றதை முதன்முதல்நான் அநுபோகத்தாலறியும்படியாயிற்றென்று கண்டுகொண்டேன். நான் தெய்வபற்றுதலற்றவனானாலேயன்றி அவர்களுடைய பத்திக்குரிய விண்ணப்பத்தைத் தள்ளிவிட என்னாற் கூடவில்லை. அப்படியே நானும் பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துவுடையவும் நாமத்தினாலேயென்ற மந்திரத்திலடங்கியிருக்கும் விசுவாச இரகசியத்தைஇவர்களுக்குப் படிப்பிக்கத்தொடங்கி, இப்படியே என்னலுவலையும்தொடங்கிக்கொண்டேன். அப்பால் அவர்களுக்கு அப்போஸ்தலர்களுடைய மந்திரமாகிய விசுவாசப் பிரமாணத்தையும், பரமண்டலமந்திரத்தையும், பிரியதத்தமந்திரத்தையும் படிப்பித்தேன். அவர்களுள் மிக்கமேலான புத்திக்கூர்மையுள்ள பிள்ளைகளைக்காண்கிறேன். வேதபோதகங்களைப் படிப்பிக்கும்படியான திராணியுள்ள யாவரேனும் அவர்களுக்குக் கிடைக்குமானால் அவர்கள் மேலான கிறிஸ்துவர்களாவார்களென்பதற் கையமில்லை.

ஒருநாளென் னியாத்திரையில் வழிவிலகி அஞ்ஞானிகளிருக்குமோர் கிராமத்திற்குப் போனேன். அங்கே கிறிஸ்துவனாகும்படி ஒருவனுக்கேனும் மனதிருக்கவில்லை. இதையடுத்த சுற்றுப்புறங்களிலுள்ள ஊர்களில் சகலரும் மனந்திரும்பிக் கிறிஸ்துவர்களாகவேயிருந்தும், இவர்களதற்குட்படாதிருந்தார்கள். ஏனென்றால் இன்னமும் அஞ்ஞானியாகவேயிருக்கிற தங்களதிபதி தன் ஜனர்களப்படியாகக்கூடாதென்று ஆக்ஞாபித்திருக்கிறதாகச் சொன்னார்கள். அங்கே கற்பிணியாகவிருந்த வோரிஸ்திரீ மூன்றுநாளாகப் பிரசவவேதனைப்பட்டுப் பிழைக்கவேமாட்டாளென்று அநேகரெண்ணவும் அப்படியே கைவிடவும்பட்டிருந்தாள். அவளுக்காக அவர்கள்வேண்டிக்கொண்ட வேண்டுதல்கள் அங்கீகரிக்கப்படவில்லை. ஏனென்

றல் அஞ்ஞானிகளின் தெய்வங்களெல்லாம் பசாசுகளாகையால் அப்படிப்பட்ட பசாசுகளை வணங்கும் கெட்டவர்களாகிய அவர்களுடைய வேண்டுதல் சருவேசுவரனுடைய பார்வைக்கு அருவருப்பாக விருந்தது. நான், என்னோடு வந்தவரொருவருடன் வியாதிக்காரியின் வீட்டிற்குப்போய், நம்பிக்கையோடு கடவுள் நாமத்தையழைக்கவாரம்பித்தேன். நானோர் அன்னியதேசத்தி லிருக்கிறேனென்பதை மறந்துவிட்டேன். “ பூமியும் அதிலடங்கிய சகலமும் கடவுளுடையவே, பூச்சக்கரவாளமும் அதில் உஜ்ஜீவிக்கும் சகல பிராணிகளும் அவருடையவே” என்னும் அந்தவாக்கியம் என்ஞாபகத்திற்கு வந்தது. ஆகையால் நான் அவளுக்கு ஓர் துவிபாஷியைக் கொண்டு நம்வேத விரகசியத்தின் பிரிவுகளை விவரித்தறிவிக்கும்படி செய்தேன். தேவ கிருபையால் நாங்களிவளுக் குபதேசித்ததை விசுவாசித்தாள். கடைசியாக, நீ, கிறிஸ்துவளாக விரும்புகிறாயா? என்று நானவளை வினவினேன். வெகு சந்தோஷத்துடன் நான் அப்படியாக விரும்புகிறேனென்று அவளெனக்குப் பதில் சொன்னாள். அப்பொழுது நான் அவள் முன்பாக ஓர் சுவிசேஷத்தைவாசித்தேன். இப்படிப்பட்ட வசனங்கள் இப்பிரதேசங்களில் வாசிக்கக் கேட்கப்பட்டது முதன்முதல் இப்பொழுது தானென்றெண்ணுகிறேன். நானவளுக்கு முறைப்படி ஞானஸ்நானங் கொடுத்தேன். சங்கதிகளை நீட்டாமல் யேசுக்கிறிஸ்துவை விசுவாசித்து அவர்மேல் தன் முழுநம்பிக்கையாவும் வைத்த இந்த நல்லாத்துமா உடனே பிரசவித்தாள்! அப்பால் நானவள் புருஷனுக்கும், அவள்பிள்ளைகளுக்கும், குழந்தைக்கும், (பிறந்த அன்றுதானே) முழுக்குடும்பத்திற்கும் ஞானஸ்நானங் கொடுத்தேன். சருவேசுவரன் இந்தவீட்டிற் செய்த புதுமையானது அக்கிராமம் முழுவதும் அதிசீக்கிரத்திற் பரவிற்று. அப்பொழுது நான் அவ்வூர்த்தலைவர்க ளிடத்திற்போய் சருவேசுவரனுடைய நாமத்தினால், அவருடைய குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவின்மேல் மாத்திரம் சகலபாவிகளின் இரட்சண்யம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதினால், அவரையே கைக்கொள்ளவேண்டுமென்று கற்பித்தேன். அதற்கவர்கள் தங்களெஜமானனுடைய உத்தரவில்லாமல் தங்கள் முன்னோர்க ளனுசரித்துவந்த வேதத்தைக் கைவிடக்கூடாதென்றார்கள். அப்பால் நானந்த வெஜமானனுடைய பிரதா

னிபிடத்திற்குப் போனேன். இவன் தன்னாண்டவனுக்கு அவ்வூரார் செலுத்தவேண்டிய வரிப்பணத்தை வசூல்செய்ய அங்கு வந்திருந்தான். நான் வேதத்தைப்பற்றிப் பேச இவன் கேட்டபோது கிறிஸ்தவனாயிருப்பது நல்லதென்றே நானும்விரும்புகிறேன் என்று வெளியிட்டதுமல்லாமல், யேசுகிறிஸ்துவின் வேதத்தை அனுசரிக்க விருப்பமுள்ளவர்கள் யாவரும் அதைத் தழுவிக்கொள்ளலாமென்று அனுமதியுங்கொடுத்தான். ஆனால் மற்றவர்களுக்கிவன் இந்த நல்லாலோசனையைச் சொல்லிக்கொடுத்து அனுமதி தந்தானாயினும், தானதின்படி நடந்தானில்லை. எப்படியும் அவ்வூரிலுள்ள பிரதானிகள் சகலரும் குடும்பசகிதங் கிறிஸ்தவர்களானார்கள். இந்த முன்மாதிரிகையை யனுசரித்து அந்தந்த வகுப்பாரும், பிராயத்தாருமாகிய சகலரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். இந்த அலுவலை இப்படி முடித்துக்கொண்டு நேரே தூத்துக்குடிக்குப் போனோம். அங்கிருந்த ஜனங்கள் எங்களை யதிக பக்ஷத்தோடு கைக்கொண்டார்கள். ஆதலால் இந்தவிடங்களில் அனேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளலாமென்னும் நம்பிக்கை எங்களுக்குண்டாக ஆரம்பித்தது.

புதுக்கிறிஸ்துவர்களான இவர்கள் மட்டில் *கவர்னர் மிகவும் மிஞ்சின பக்ஷமுள்ளவராகவிருக்கிறார். மகமதியரால் இவர்களுக்கு நேரிட்ட சல்லியங்களில் நின்றும், இவர்களைக் காப்பாற்றும்பொருட்டு மகமதியர்களுக்கு விரோதமாக இவர்களுக்கு வேண்டியவுதவி கொடுத்துக் கொஞ்சக்காலந்தானாயிற்று. கடற்கரையோரமாக வசிக்கும் இவர்களில் பெரும்பாலாரும் முத்துக்குளிப்போர் தங்களையும், தங்கள் சமுசாரங்களையும் முக்கியமாக முத்துக்குளிக்குந் தொழிலாற் காப்பாற்றுவோர். இப்படியிவர்கள் இந்தச் சிலாபங் குளிக்க உபயோகப்படுத்திவருங் கப்பல்களைக் கொஞ்சக்காலத்திற்கு முன்னே மகம்மதியர் அபகரித்துக் கொண்டுபோயிருந்தார்கள். கவர்னர் இதையறிந்த பொழுது பலமான கப்பற் கூட்டங்களுடன் படையெடுத்துவந்து மகம்மதியரைத்தாக்கி, அனேகரைக்கொன்று கொலைப்படுத்தி, மற்றவர்களைப் புறங்காட்டியோடும்படி செய்து, அவர்களுடைய கப்பல்களனைத்தையும் பிடுங்கிக்கொண்டார். இதில் தனவா

* இவர் கொச்சிக் கவர்னரேயாம்.

ன்களுக்கு அதாவது: தனவான்களாயிருந்த புதுக்கிறிஸ்துவர்களுக்கு அவரவர் சொந்தக்கப்பல்களைத் திருப்பிக்கொடுத்தது மல்லாமல் ஏழைக்கிறிஸ்துவர்களுக்குத் தாம் மகம்மதியரிடத்திற் பறித்துக்கொண்ட மரக்கலங்களை நன்கொடையாகவும் கொடுத்துத், தமது வெற்றியை இப்படிப்பட்ட உதாரத்துவம் பொருந்திய செய்கையால் முடிசூட்டினார். ஏனென்றால், இந்தவெற்றியில் கடவுள் தமக்குச் செய்தவுதவியைத் தாமறிந்தனுபோகப்பட்டது போலவே, கிறிஸ்துவர்களும் தாமவர்கள் மட்டிற் கொண்டிருக்கும் பெரிதான சிநேகத்தை அனுபோகத்தாலறிந்து தம்மையும், அவர்கள் அப்படியே சிநேகிக்கும்படியாக இப்படிச்செய்தார். மகம்மதியரில் எவரேனும் பரதனை ஏறெடுத்துப்பார்க்கவியலாத விதமாக அடியோடு அறுப்புண்டு தரையோடு தரையாய்க் கீழே விழுந்தார்கள். எவனெவன் அவர்களில் பலசாலிகளாய்க் காணப்பட்டானோ, அவனவனும், அவனுடைய தலைவர்களும் கொல்லப்பட்டார்கள். இப்படிப்பட்டகாரணங்களைக்கொண்டு புதுக் கிறிஸ்தவர்களாகிய அவர்கள் கவர்னரைத் தங்கள் பிதாவாகவே பாவிக்கிறார்கள். கவர்னரும் அவர்களைத் தமது பிள்ளைகளாகவே பாவிக்கிறார். புதிதாக நடுவல் செய்யப்பட்டிருக்கிற கர்த்தருடைய முந்திரிகைத் தோட்டமாகிய இவர்களை என்னுடைய பராமரிப்புக்கு இவர் எவ்வளவு இரக்கவுருக்கத்துடன் ஒப்படைத்தாரென்றுமக்கு நான் சொல்ல மிகவும் அசாத்தியமாகவேயிருக்கின்றது. சத்திய வேதத்திற்கு நித்திய பிரயோஜனமும், சரித்திராகமத்திற்குச் சரியான சங்கதியுமாக மதிக்கத்தக்க ஓர் பெரிதான ஏற்பாடானது அவரது சித்தத்தில் உறுதியாய்ப் பதிந்திருக்கின்றது. (அதாவது) ஒருவர்க்கொருவர் அநேகதூரமகன்று, சிதறுண்டு கிடக்கும் இப்புதுக்கிறிஸ்துவர்களைத் திரட்டிக் கூட்டி ஓர்தீவில் பெயர்த்துநாட்டி நாகரீகப்படுத்த நாட்டமுடையவராயிருப்பதுமன்றி அவர்களுடைய க்ஷேமலாப சீர்திருத்தங்களையும், நீதிநியாய நேர்மைகளையும் விசாரணைசெய்து நியாயஞ்செலுத்தின் காப்பாற்றத்தக்க ஓர் அரசனையும் அவர்களுக்குக்கொடுக்க எண்ணங்கொண்டிருக்கின்றார்.

இந்த இந்தியாவின் கவர்னராகிய இவர், வேதத்தின் பரம்புதலுக்காகவும், பரிசுத்த நாமத்தி னிமித்தமாகவும் படும் பெரிதான

பாடுகளையும், பிரயத்தனங்களையும் பரிசுத்தபிதா (அர்ச்-பாப்பு)மாத்திரம் அறிவாரேயானால், இப்படிப்பட்ட இவருடைய இடையரு முயற்சிக்கும், ஜாக்கிரதைகளுக்குந் தக்கபடி வியந்து காட்டுமோர் அடையாளத்தைக் கற்பிக்காது விடாரென்று நானுறுதியாக நம்புகிறேன். உமக்கு மிது நன்மையாகத் தோன்றுமாயின், இவருடைய ஊழியங்கள் தமக்கெவ்வளவோ சந்தோஷத்தைக்கொடுக்கிறதென்று இவருக்கெழுதும்படி செய்ய நீர் தெண்டிக்கலாம். இதனால் கிறிஸ்துவர்களை இந்தக் கவர்னருடைய பராமரிப்புக்கு ஒப்புவிக்கவேண்டுமென்பது என் கருத்தன்று, இந்த விஷயத்தில் பரிசுத்தபிதாவி னிருதயத்திற் பற்றி யூன்றியிருக்கும் பாசப்பற்றுதல் போல் மற்றெவருக்கு மிருக்கவே மாட்டாது; அது நிச்சயம். ஆனால் நமது கர்த்தராகிய யேசுவின் மந்தையாடுகளாகிய இந்தப் புதுக் கிறிஸ்துவர்களை அஞ்ஞானிகளாகிய ஓநாய்கள் பீறிக் கீறிப்போடாதபடி ஓயாக்காவலும், உழைப்பும், விசுவாசப் பரப்புதலுக்கு வேண்டிய இடையரு முயர்ச்சியும், எடுத்துக் கொள்ளுகிற வேதப் பற்றுதலும் கரிசனமுமுள்ள இந்தக் கவர்னரை மெச்சிக் கொள்ள வேண்டியவிதமாய், புகழ்ந்து கொண்டாடவேண்டிய அளவாய்,வந்தனஞ்சொல்லவேண்டிய முறையாய் மாத்திரஞ்செய்து உற்சாகப் படுத்தவேண்டு மென்பதே என்னுடைய கருத்து. எப்படியும் நீராவது இவருக்கோர் காகிதமெழுத வேண்டுமென்று நான் உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன். ஏனென்றால் அப்படி நீரெழுதுமோர் கடிதமானது இவருக் கெவ்வளவோ மனவுற்சாகத்தைப் பிறப்பிக்குமென்று எனக்கு நன்றாய்த் தெரியும்.

இது வன்றியே நீரும், சபையார் சகலரும் தேவவூழியத்திலிவர் செய்யுமுதவிக்காகவும், இவருடைய நல்ல காரியங்களில்இடையரு முயற்சிக்காகவும் இவருக்காகக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் " நன்றாய்த் தொடங்கினவ னல்லவே, கடைசிபரியந்தம் அதைக் கடைப்பிடித்து உறுதி சாதிப்பவனேஇரட்சிக்கப் படுவான்." நானேனென்றால் தெய்வத்தின் முடிவற்றநன்மைத்தனத்தை முற்றும் நம்பிக்கொண்டும், உம்முடையவும் இன்னும் சபையார் சகலருடையவும் ஜப, தப, பிராயச்சித்தப் பெறுபேறுகளிலும், நம்பிக்கையுள்ளவனாக விருப்பது மன்றி, இங்குஇச்

சீவியத்தில் இல்லா திருந்தாலும், இங்குள்ள வெல்லாப் பாக்கியங்களையும் வென்று வெட்டும்படி செய்யும் அந்த மேலானபாக்கியசிலாக்கியம் அமைந்ததும், ஆசீர்வதிக்கப் பட்டதுமாகிய அங்கு, அவ்வுலக ஜீவியத்திலாவது நாம் ஒருவரை யொருவர் தரிசிப்போமென்று நம்பியிருக்கிறேன்.

இப்படிக்கு

**சேசுக்கிறீஸ்வில் உமதுகுமாரன்**

**பிரான்சீஸ்.**

இன்னமும் இந்த மகாத்துமா எழுதிய கடிதங்களும், செய்த அற்புதங்களும் பலவுள. அப்பால் சேசுசபையைச் சேர்ந்த சங்கைக்குரிய அந்தோணிக் கிரிமினலி என்னும் குருவானவர் 1546ம் வரு பரதர் தேசத்தில் வந்து சேர்ந்தார். சவேரியார் அவரை அக்காலத்தில் பரதர் தேசத்தில் வசித்துவந்த சுவாதீன குருக்களுக்கும், துறவறவார்த்தைப் பாடுகொடுத்த (சுவாதீனமற்ற) குருக்களுக்கும் சிரேஷ்டராக நியமித்துத், தான் திருவாங்கோடு ராஜ்யத்தில் வேதம்போதிக்கச் சென்றார். அங்கேயிவர் வேதத்தைப் போதித்து வருங்காலத்தில் இந்தியாவிலுள்ள போர்த்துக்கால் உத்தியோகஸ்தர்கள் நாளுக்கு நாள் கர்வங்கொண்டு அஞ்ஞானிகளின் முன்பாகவும், புதுக்கிறிஸ்துவர்களின் முகதாவிலும் நடத்தி வரும் பலவித துஷ்டாட்டங்களும், துர்நடத்தைகளும் சத்தியவேதத்துக்கு நிந்தையையும், அவமானத்தையும் வருவிக்கிறதையும், பெரிய உத்தியோகஸ்தர்கள் பண ஆசையினால் கைக்கூலிவாங்கிக் கொண்டு அஞ்ஞானிகளை மேலான உத்தியோகங்களுக் குயர்த்தியும் கிறிஸ்துவர்களைத் தாழ்த்தியும் சில ஏழைக்கிறிஸ்துவர்களை மிருகங்களைப்போல் அஞ்ஞானிகளுக்கு அடிமைகளாக விற்றும், கொச்சி அரசன் போர்த்துக் கீசருக்குப் பகுதி கட்டுகிறவனாயிருக்க அங்கு ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்துவர்களின் சொத்துக்களை யெல்லாம் அவ்வரசன் பறிமுதல் செய்வதைக் கவனியாமலும் இப்படியான அனேக காரணங்களால் கிறிஸ்துவேதம் தழைக்கத் தடைப்பட்டிருப்பதை இந்தியாவின் ராஜ பிரதிநிதி (விசிறே) அவர்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு பிரயாணம் போகவுத்தேசித்து, தூத்துக்குடிக் கெழுதி அங்கேயிரு

ந்த சங்கைக்குரிய பீ. மான் சில்லாஸ் (P. mansilhas) என்ற குருவானவரைத் தருவித்து அவ்விடத்து ஞானகாரியங்களை மேற் பார்க்கும்படி அவருக்கொப்புவித்து விட்டுத், தான்கொச்சிக்குச் சென்று இந்தியாவின் (வைகர் ஜெனரல்) அதி சிரேஷ்ட குருவாகிய பீ. மிக்கேல்வாஸ் என்பவரைச் சந்தித்து தம்முடைய யாத்திரையின் காரணத்தை அவருக்கறிவித்தார். அப்போது சங்—பீ. மிக்கேல்வாஸ் என்ற அந்தமூப்புக் குருவானவர் தாம் போர்த்துக் காலுக்குப் புறப்பட ஆயத்தமாயிருப்பதாகவும், தாம் அங்குபோய்ச் சேர்ந்தவுடன் போர்த்துக்கால் மன்னராகிய மூன்றாவது ஜொவாம் அரசரைச் சந்தித்து இது செய்தியை யவருக்குத் தெரிவித்துத் தகுந்த ஏற்பாடு செய்வதாகவும் சொன்னதின்மேல் சவேரியார் போர்த்துக் காலரசருக்கு இந்தியாவில் போர்த்துக்காலதிகாரிகள் செய்யும் அக்கிரமங்களைப் பற்றியும், யாழ்ப்பாண அரசனின் அக்கிரமமான செய்கையைப்பற்றியும் ஓர் நீண்டகடிதத்தை வரைந்து அதை அரசருக்குக் கொடுக்கச் சொல்லி பீ. மிக்கேல்வாஸ் என்னுங்குருவானவர் கையிற் கொடுத்து அவரைப் போர்த்துக் காலுக்குக் கப்பலிலேற்றி யனுப்பி விட்டுத், தாம் இன்னொரு உருவிலேறிக் கொண்டு இந்தியாவின் வைசிராயைச் சந்திக்கச் சென்றார். அப்பொழுது இந்தியவைசிராயாகிய தொன் அல்பொன்சோ தெ சொயிசா என்பவர் கம்பாயா வென்னும் நகரிலிருந்தமையால் சவேரியார் அங்கே போய்ச் சேர்ந்து அவரைச் சந்தித்து, தாம் வந்த வரலாற்றை யவருக் காதியோடந்தமாயறிவித்து, பின்பு மன்னார் தீவிலுள்ள ஜனங்கள் தம்மை அங்கு வந்து வேதோபதேசஞ்செய்யும் படி கேட்டுக் கொண்டதாகவும், தமக்கு அங்கு போவதற்கு வசதிக் குறைவாயிருந்த படியால் தூத்துக்குடியிலிருந்த குருவானவரொருவரையங்கே யனுப்பி வேதோபதேசஞ் செய்து அநேகருக்கு ஞானஸ்நானங் கொடுத்ததாகவும், மன்னார் தீவு யாழ்ப்பாணத் தரசனின் ஆட்சிக்குட் பட்டிருக்கின்றமையால் அவ்வரசன் தன்றேயத்தில் கிறிஸ்து வேதம் பரம்புவதைக் கேள்விப்பட்டுப் பொறாமைகொண்டு, புதுக்கிறிஸ்துவர்களைப் பலவித சரீரதண்டனை பண்ணியும், அவர்களுடைய காணி பூமி முதலியவைகளைப் பறிமுதலாக்கியும், இன்னமும் அவர்களை விலங்கிட்டு வல்லபத்திற் கிரையாக்கியும் இவ்வண்ணம் பேசாலையென்னுமூரில்

கடையரில் புதுக்கிறிஸ்துவர்களான ஆண்,பெண் அறுநூறுபேரைக் கொன்றும், இந்துமதக் குருக்களைத்தவிர வேறெந்தமதக் குருக்களும் அங்குவந் தடிவைக்கப்படாதென்று பறையறைவித்தும் சருவ வல்லவசருவேசுரன் அந்த ராஜாவின் குமாரனையும், அவன் மந்திராலோசனைச் சபையாரனைவரையும் கிறிஸ்துவின் மெய்யான வேதத்தை யனுசரிக்கச் செய்தமையால் அரசன் கோபங்கொண்டு அவர்களெல்லோரையுங் கொன்றானென்றும், இவ்வண்ணம் அவன் செய்த அடாவடியான செய்கைகளனைத்தையும் வகுத்துரைத்து அவ்வரசன் தன்றமயனிடமிருந்து அபகரித்துக்கொண்ட அவனது ராஜபட்டத்தைப்பறித்து அவன் தமையனுக்குக் கட்டுவோமாயின் கிறிஸ்துவேதம் அவ் விலங்கைத்தீவில் மேன்மேலும் தழைத்தோங்குமென்றும், அதற்காகவேண்டிய யுத்த வெத்தனங்களை யுடனே செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இந்தியாவின் வைசிராயாகிய சோஸிசா என்பவர் சவேரியாரைப்பற்றி முன்னமே கேள்விப்பட்டிருந்தவராகையால் அவர் தம்மைச் சந்தித்து நேரிற் பேசிக்கொண்டபின் அவர்மேலதிக நம்பிக்கையுண்டாகி கன்னியாகுமரியிலும், தூத்துக்குடியிலு மிருந்த சேனைத் தலைவர்களுக்கு நிருபமனுப்பிக் கூடியஅளவு சேனைகளைத் திரட்டி நாகப்பட்டணம்சேர்ந்து சமயம்பார்த்து யாழ்ப்பாண நாட்டைப்பிடித்து அரசனைக் கைதிப்படுத்தி அவன் தமையனை ஆசனத்திலேற்றிச் சத்துருக்களைச் சவேரியாரிடத்தி லொப்புவிக்கக் கட்டளையிட்டார்.

பிரான்சிஸ்கு சவேரியார் கம்பாயாவிலிருந்து புறப்பட்டு, மலையாளக்கரையில் அனேக அற்புதங்களைச்செய்து, ஆயிரக்கணக்கான அஞ்ஞானிகளுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, கிறிஸ்துவேதத்திலுட்படுத்திக் கொச்சியில்வந்து அங்கே மூன்றுமாதகாலமாய்த் தாமதித்திருந்தபின், இதுவரையில் நாகபட்டணத்தில் படை யாயத்தப் படுத்திருக்குமென் றெண்ணி, அங்குபோக உருவிலேறி, நெடுந்தீவு, மன்னார்தீவு முதலிய விடங்களிலிறங்கி, அனேகபுதுமைகளைச் செய்து, அங்குள்ளவர்களைக் கிறிஸ்துவர்களாக்கி, நாகபட்டணஞ் சேர்ந்து காரியங்களைப் பார்க்குமளவில், அங்கே யாதாமொரு யுத்த

ஆயத்தமுமின்றிப் போர்த்துக்கீசருடைய கப்பல்கள் தொகையிற் குறைந்தும், முதலிற் சுத்தவீரர்களாய் விளங்கிய சேனதிபதிகள் தாங்கள் போர்த்துக்கீசரென்பதையும், கிறிஸ்துமதாநுசாரிகளென் பதையும் மறந்தும், ராஜநிந்தனையும், தேவதூஷணமும் பேசக்கேட்டு ஆச்சர்யமடைந்தார்.

இன்னமும் படையாயத்தமில்லாதகாரணமென்னவென்று சவேரியாராராயும்போது, கொஞ்சகாலத்துக்குமுன் பைகோவாவிலிருந்து விலையேறப்பெற்ற சரக்குகளை யேற்றிக்கொண்டுவந்தகப்பலொன்று கடும்புசலிலடிபட்டு யாழ்ப்பாணத் துறையிற்போய்ச் சேர, அக்கப்பல்மாலுமியும்,அவனேடுகப்பலிலிருந்தவர்களும் யாழ்ப்பாணத்தரசனுக்கு ஓர் பெரும் தொகையான பணத்தைக் கொடுத்துத் தங்களையும், தங்கள் கப்பலையும் மீட்டதுமன்றி, அக்கப்பற்காரர்களே அரசாங்கத்தார் அவ்வரசன்மேல் படையெடுப்பதையும் தடைப்படுத்தியதாயறிந்து வெகு கவலைப்பட்டார்.

அப்பால் சவேரியார் திருவாங்கோட்டுக்கு யாத்திரையாகி உருவிலேறிப் போகும்வழியில், சமுத்திரத்தில் வெகுதூரத்தில் இலங்கைத்தீவு அவர் பார்வைக்குத் தென்பட்டது. அப்போது சவேரியார் அத்தீவுக்குநேரே தமதுகரங்களையுயர்த்தி "ஆ! நிர்ப்பாக்கியமானதீவே! நீ குற்றமற்ற கிறிஸ்துவர்களின் பிரேதங்களால் மூடப்பட்டிருக்கிருப், உன் பலபக்கங்களிலுமிருந்து உதிரம் ஆறுயோட வுன்னைத் தரிசிக்கிறே"னென்று புலம்பியழுதார். பின் மன்ஞர்தீவில் அவர்வந்து சேர்ந்தபோது கண்டியிலிருந்து தன் விரோதிகளுக்குத் தப்பி அங்கேவந்து ஒதுங்கியிருந்த கண்டிராஜனை அவன் குடும்பத்தோடு சத்தியவேதத்தி லுட்படுத்தினர்.

அப்பால் சவேரியார் மனத்துணிவோடுயாழ்ப்பாணநகர்சென்று அந்தக் கொடிய அரசனுக்குச் சத்தியவேதத்தைப் போதித்தார். அவ்வரசன் தான் கேட்கும் இரண்டு கேள்விகளுக்குப் போர்த்துக்கீச ருடன்படுவாராயின் தான்கிறிஸ்துவனுகத் தடையில்லையென்று சொன்னன். சவேரியார் அதென்ன கேள்விகளென்று வினவ, அரசன் முதலாவது, போர்த்துக்கீசர் இந்தியாவிலுள்ள அரசர்களோடு என்ன உடன்படிக்கை பண்ணிக்கொண்டிருக்கிருர்களோ

அதே உடன்படிக்கைப்பிரகாரம் என்னாட்டிலும் நடந்துகொள்ள வேண்டும். இரண்டாவது வேதமாறுதலின்பொருட்டுஉண்டாகுங் கலாபனையை யடக்க ஓர் கூட்டம் போர்த்துக்கீஸ் போர்வீரர்களைத் தனது பராமரிப்பிலிருக்கச் செய்யவேண்டுமென்றான். சவேரியார் அதற்குப் பதிலுத்தாரமாக இந்தியாவின் வைசிராய்க்குச் சொல்லி அப்படியே செய்வேனென்று அவ்வரசனனுப்பிய ஸ்தானாபதியோடு புறப்பட்டு 1548ம் வரு பங்குனிமீ 20உ கோவைப்பட்டணம் போய்ச் சேர்ந்தார்.

இதன்மத்தியில் சவேரியார் போர்த்துக்கால்அரசருக்குச் சங். பி - மிக்கேல்வாஸ் என்னுங் குருவானவர் வசம் கொடுத்தனுப்பிய கடிதத்துக்கு நல்லமறுமொழி கிடைத்ததுமன்றி "யாழ்ப்பாணத் தரசன் செய்த பழிக்குப்பழி இதுவரை இந்தியாவின் வைசிராயாகிய சொயிசா வாங்கா திருப்பாராயின் இப்பொழுது அந்த வைசிராய்ஸ்தானத்தைக் கைக்கொள்ளுகிற தொன்காஸ்திரோ வென்பவர் அதை நிறைவேற்றக் கூடவர்" என்று அதிற் குறிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் புதிய வைசிராயாகிய காஸ்திரோ என்பவர் பாசிம்பட்டணத்தில் வந்திருக்கும் செய்தியைச் சவேரியார் கேள்விப்பட்டு தம்மோடு வந்த ஸ்தானாபதியை அவ்விடத்திற்றானே நிறுத்திவிட்டுத் தாம் பாசிம்பட்டணத்தைச் சேர்ந்து, வைசிராயைத் தரிசித்தார். புதிய வைசிராயும் மிகுந்த ஆவலோடவரை வரவேற்று, அவர் வந்தகாரணமென்ன வென்றுகேட்டார். சவேரியார் யாழ்ப்பாணத்தரசனின் இருகேள்விகளையுந் தெரிவித்து, இதுவிஷயமாய் அவ்வரசன் தம்மோடனுப்பிய ஸ்தானாபதிகோவையில் காத்திருக்கிறானென்றும் அறிவித்தார். புதிய வைசிராய் யாழ்ப்பாணத்தரசனின் இருகேள்விகளுக்குமிசைந்து, அந்தோனியு மோனிஸ்வரேத்து என்னும் தளகர்த்தனை நூறு போர்த்துக்கீஸ வீரர்களோடழைத்துச் செல்லவும், கோவையில் தாமதித்திருக்கும் ஸ்தானாபதிக்கு ஓர் விருந்தளிக்கவும், அவ்வரசனுடைய பிரசைகளெல்லோரும் ஞானஸ்நானம் பெற விரும்பினால் அக்கொண்டாட்டத்திற்குச் செல்லும் செலவிற்குப் பின்வாங்காதிருக்கவுங் கற்பித்தனுப்பினார்.

சவேரியார் இந்திய வைசிராய் சொல்லியபடியே கோவைவயில் ஸ்தானுபதிக்கு ராஜவிருந்தொன்றளித்து, அங்கேயிருந்த தளகர்த்தனையும் அவனுக்குதவியாய் நூறு வீரர்களையு மழைத்துக்கொண்டு, ஸ்தானுபதியோடு யாழ்ப்பாணம்போய்ச் சேர்ந்தார். ஆனால் யாழ்ப்பாணத்தரசன் முன்சொன்ன வாக்குப்பிசகி அவர்கள் அங்கு வந்து சேர்ந்தபின் யுத்தஞ்செய்து துரத்தினபடியால் சவேரியார் மனவருத்தமுற்று, நாகபட்டணத்தையடைந்து, அங்கே நின்று மயிலாப்பூருக்குப்போய் அவ்விடத்தில் அர்ச்தோமையாருடைய கல்லறையைத் தரிசித்துக்கொண்டு, இன்னமும் இந்தியாவுக்குக் கிழக்காயிருக்கும் தேசங்களில் சென்று வேதம் போதிக்கப் பிரயாணமானார்.

## தொஜாவாம் தெக்குருஸ் பரதவர்மபாண்டியன் என்னும் விக்கிரம பாண்டியனின் மகுடாபிஷேகம்.

அந்தக்காலத்தில் தூத்துக்குடியில் தொன்குசை அராஞா என்று ஓர் போர்த்துக்கீஸ் பட்டவர்த்தனரிருந்தார். பரதர் தேசத்தினின்று மகம்மதியர்களைத் துரத்திப் பரதகுலபாண்டியர்களுக்கு வேண்டுமுதவிகளைச் செய்தவரான கொச்சிக் கவர்னர் தமது உத்தியோகத்தினின்று விடுபட்டு போர்த்துக்கால் சென்று ராஜதரிசனம் பண்ணினார். போர்த்துக்காலரசர் அவருக்கோர் விருந்தளித்து இந்தியாவின் சிறை விசாரித்தார். கவர்னர் தமது காலத்திலிந்தியாவில் நடந்த சம்பவங்களை யெல்லாம் அவருக்குச் சொல்லி, பரதகுலத்தாருக்கோர் அரசனைக்கொடுக்க வேண்டுமென்று தம்மிறைவனிடத்தில் மன்றாடினார். செல்வம் பொருந்திய போர்த்துக்காலரசராகிய சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் ஜொவாம் என்பவர் கவர்னருடையவிருப்பத்திற்கிசைந்து தமது ஞானப்புத்திரனாகிய ஜொவாம் என்பவனையே பரதகுலபாண்டியருக்கரசனாக நியமிக்கக்கருணைகூர்ந்தார். அஃதெவ்விதமெனில்; தயாளகுண சீலனாகிய அவ்வரசர் இந்தியாவின் வைசிராய்க்குஓர்பொற்சிலுவையையும்,ஓர் நிருபத்தையும் அனுப்பி, அந்நிருபத்தில் நீர் தூத்துக்குடிக்குச் சென்று, அங்கே எமதுஞான

ய்புத்திரனாகிய ஜொவாம் என்னும் பிரபுவைச்சந்தித்து, அவரையே யாம் பரதகுலத்தவர்க்கு அரசனாய்த்தெரிந்து கொண்டோமென்று சொல்லி, நம்குலராஜாக்கள் ராஜஅடையாளமாய்த் தரித்துவருவதும், நாம் வெகுமதியாய் அளித்திருப்பதுமாகிய இரத்தின மழுத்திய இப்பொற்சிலுவையை அவரது திருவாபரணமாகச் சாத்தி, அவருக்குரிய நாமத்தின் முன்னே * சிஞ்ஞோர், சிஞ்ஞோர் † தொன்னென்னும் பட்டத்தையுங்கொடுத்து, மகுடாபிஷேகச் சடங்கை நிறைவேற்றியுமது ஸ்தானம்போய்ச்சேரும்'' என்று கற்பித்திருந்தார். அரசருடைய கடிதத்தைக் கண்ணுற்ற வைசிராயான தொன் காஸ்திரோ என்பவர் உடனே தூத்துக்குடிக் கவர்னருக்கு இதுசேதியை முன்கடிதத்தின் மூலமாயறிவித்துப் பின் தானோர் கப்பலிலேறித் தூத்துக்குடித் துறைமுகத்தில் வந்து சேர்ந்தார்.

தூத்துக்குடிக் கவர்னர் இந்திய வைசிராயை அன்போடும், கண்ணியத்தோடும் வரவேற்று, அவர் வந்தகாரணத்தைப் பரதர் தேசமுழுதும் அறிக்கைசெய்தார். இதையறிந்த ஒவ்வொரு ஊர்த் தலைவர்களும் நவநவமான ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு, தத்தம் பரிவாரங்களோடு பிரயாணப்பட்டுத் திருமந்திர நகர்வந்துசேர, அந்நகரோ அமராவதியையும், அழகாபுரியையும் இருபாதங்களால் மிதித்து மகாலட்சுமி கடாக்ஷம் பொருந்திவிளங்கிற்று.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலென்னும் ஐந்துநிலங்களுக்கும் பாண்டியனே தலைவனென்பதை அறிவிக்கு மாப்போல் பஞ்சபறைகளுமுழங்க 1548-ம் வருஷம் வைகாசிமீ சுபதினத்தில் பரதகுல பிரபுக்களும், பட்டவர்த்தனரும், மகுடவர்த்தனரும் இந்தியாவின் வைசிராயையழைத்துக்கொண்டு ஜொவாம் என்னும் கொன்கனுடைய மாளிகையிற் சென்று அப்பிரபுவுக்கு நறுங்கலவைகளைப் பூசி, உலகுவிலைமதித்தற்கரிய பூந்துகிலை மருங்கினிற் சாத்திப், பல

---

* சிஞ்ஞோர் சிஞ்ஞோர் என்பது போர்த்துக்கீலிய பாஷையில் இராஜாதிராஜன்.

† தொன் என்பது போர்த்துக்கீஸ் அரசகோத்திரத்தாரின் பட்டப்பெயர்.

விதரத்னாபரணங்களையணிவித்து, பகைவர்நடுநடுங்கத்தக்க வாளாயுதத்தை இடையிற்சேர்த்து, பன்னிரு சிங்கங்கள் தாங்கிய பொன்னாசனத்தின் முன்னே கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

அப்போது தொன்லூசை அராஞாவென்னும் தூத்துக்குடி கவர்னர் நவமணிகளழுத்திய பொற்கிரீடத்தையும், போர்த்துக்காலரசரானுப்பிய பொற்சிலுவையையும் ஓர் பொற்றட்டில் வைத்துத் தமது கரங்களிலேந்தி நிற்க, சங்கைக்குரிய என்றி என்றிக்கெஸ் என்னுங்குருவானவர் தூபத்தையும், சங்கைக்குரிய பீ. பிரான்சீஸ் என்றிக்கெஸ் என்னுங்குருவானவர் தீபத்தையும், சங்கைக்குரிய அல்போன்ஸ் சிப்பிரியானி என்னுங்குருவானவர் தீர்த்தத்தையு மேந்தியுதவிசெய்ய, முத்துக்குளித்துறையின் சிரேஷ்டகுருப் பிரசாதியாகிய சங்கைக்குரிய அந்தோனி கிரிமினலி யென்னுங்குருவானவர் வேதவாக்கியங்களை யுச்சரித்து தீர்த்தத்தையும், தூபத்தையும் சாத்தி மந்திரிக்க, இந்திய வைசிராயாகிய தொன் காஸ்திரோ என்பவர் தமது திருக்கரங்களால் பொற்சிலுவையைத் தொட்டெடுத்து ஜொவானது மார்பில் வனைந்து, பின் பொற்கிரீடத்தை யிருகரங்களாலும் தாங்கி நின்று யாவரும் கேட்கும்படி (போர்த்துக்கீஸ்பாஷையில்) "நாம் எமது மாக்ஷிமைபொருந்திய போர்த்துக்கால் மன்னவனாகிய மூன்றாவது ஜொவாம் அரசருடைய ஆக்ய கற்பனைப்பிரகாரம் உம்மை சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன் ஜொவாம் என்னும் நாமத்தோடு தெக்குரூஸ் என்னும் பெயரையும் சேர்த்து சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தோன்ஜோவாம் தெக்குரூஸ் என்னும் நாமத்தோடு பரதகுலத்திற் கதிபதியாகவும், பாண்டிநாட்டிற் கரசனாகவும் உமக்கு மகுடாபிஷேகம் செய்கின்றோம்" என்று சொல்லி, கொண்கனுடைய திருச்சிரமீது மணிமுடியைச் சூட்டினார். உடனே வேதவேதியர்கள் தேதேயூம் என்னும் தோத்திரப்பாடலைப் பாட, தென்னவன் குலமாக்கள் யாவரும் ஆர்ப்பரித்துத் தங்கள் தங்கள் சிரமிசை திருக்கரங்களைக் கூப்பி, பின்னமில்லாத மன்னனே! நீரென்றும் பெருமையாய் வாழ்கென வொலித்தார்.

அப்பால் வெண்முத்துக்களாற் செய்த சிங்கமுகத் தண்டிகை மீது அரசனை எழுந்திருக்கச்செய்து, இடையர்கள் அச்சிவிகையைக்

சுமந்துசெல்லவும், பட்டவர்த்தனரும், மகுடவர்த்தனரும், பரதகுலப் பிரபுக்களும், பெரியோரும் தண்டிகையைச் சூழ்ந்துவரவும், ஒரு புறம் போர்த்துக்காலதிகாரிகளும், அவர்கள் சேனைவீரர்களும், மறுபுறம் பரதசாது சேனைத்தலைவர்களும், சேனைவீரர்களும், அணியணியாய் நடந்துசெல்லவும், செம்பிநாட்டுத் தேவர்களென்னும் ஆப்பனூர் மறவர்கள்சேனை அம்பும், வில்லும், கதாயுதங்களுந் தாங்கி ஆயிரக்கணக்காக முன்னேசெல்லவும், மாக்ஷிமைபொருந்திய போர்த்துக்கேசியரின் ஐந்து திருக்காயக் கொடியும், மீனவர் துவஜங்களாகிய சேல், காளை, சேவல், மயில், யானை, கருடன், அன்னம், மகரம், கிளி, அரவம், கனகம், முரசு, சிங்கம், அநுமான், பன்றி, பனை, சங்கு, சிப்பி, கப்பல், புலி, யாளியுமாகஇருபத்திரண்டு கொடிகளும், யானை, தேர், ஒட்டகங்களின்மேல் நின்றசைந்து செல்லவும், பொன்னாற்செய்த பரிகைகளும், நெடிய வெண்முத்துக்குடைகளும், மயிலிறகுக்குடைகளும், ஆலவட்டங்களும், அசைதடிகளும் இடையிடையே பிடித்துச் செல்லவும், சேலைப்போன்ற கண்களையும், மலைகளுக்கொப்பாகிய முலைகளையுமுடைய மாதர்கள் வெண்சாமரைகளைக்கைகளிலேந்தி யிருபுறமுமிரட்டவும், தேனினுமினிமை பொருந்திய வாயையுடைய பாவையர்கள் ஆடவும், வெள்ளித்தடிகளை யேந்திக் கட்டியர்கள் எச்சரிக்கவும், அதிர்வெடிகள் அதிரவும், சங்குமணிபூண்ட கடைசியர்கள் குரவையிடவும், முத்துமணி பூண்டவலைச்சியர்கள் கொம்மையாட்டயரவும், பவளமணிபூண்ட அளத்தியர்கள் விளரிப்பாட்டைப் பாடவும், வண்ணார் இரட்டைப்பாவாடைவிரிக்கவும், தேவர்கள்மலர்களைச் சொரியவும், கடலொலியையும், மழையொலியையும்மாற்றப்பலவகை வாத்தியங்கள் முழங்கவும், இவ்வண்ணம் திருப்பொலியும் மந்திரநகரை வலம்பெறவந்து பரதபூபதியினுடைய அரண்மனையிற் போய்ச் சேர்ந்தார்கள். அரசன் சிவிகையை விட்டிறங்கி, பூர்வபரத சக்கரவர்த்தியைப் போல் சிங்காசனத்தி லெழுந்தருளினான்.

அப்போது முத்தமிழ் வித்வசிகாமணிகள் தசாங்கவாழ்த்தைக் கூறி, நானிலத்தில் பகைவரை வென்று அரசினை நடாத்தும் பொருட்டு மெய்யங் கடவுளாகிய வானவர் கோனல் வரங்களைப் பொழியவெனவாழ்த்தியபின், செந்நெல் வயல்சூழ்நகர் தொறும் வாழும்

மீனவன் குலத்துப் பட்டவர்த்தனரும், மகுடவர்த்தனரும் செறிந் தெழுந்து, தேவேந்திரனது முடிசிதறும்படி வளையையெறிந்த மன்னவனே! உமது பெட்புறுங் கற்பனைகளை எங்கள் சிரமேற் கொண்டு நாட்கழிப் போமென்று சத்தியத்தைச் செய்தார்கள். அப் பால் பரதகுலப் பெரியோரும், பிரபுக்களும், பிரசைகளும் அரச னைக் கும்பிட்டுவணங்கியபின், பரதநாட்டுக்குடிகள் யாவரும் அரச னைக்கும்பிட்டு நின்றார்கள். அரசன்அவரவர்க்குரிய ஆசனத்தில் அவர்களையமரும்படி கடைக்கண்ணுற் கணித்து, பொன்னுபரணங் களையும், வஸ்திராபரணங்களையும், வாகனவகைகளையும், எவரெவ ர்க்கெவையோ தகவெனவாராய்ந் தீந்தபின், குடிமகராகும்நாவிதர், வண்ணார், மறவர், குறவர், பறையர், பாணர், சாயவண்ணார், மாலைகட்டிகள், செம்மார், ஓச்சர், ஓட்டர் ஐந்துவகைக்கம்மியர், குயவர், பள்ளர், மூன்றுவகை வாணியர் இவர்களுக்குந்தக்கன கொடுத்தனுப்பியபின், போர்த்துக்காலதிகாரிகளுக்கும், சேனைவீரர் களுக்கும் விருந்தளித்து ஆசாரத்தோடு விடைகொடுத்து அவர்களை யும் அனுப்பி விட்டுத் தானும் தனது மந்திரிமாரும், மகுடவர்த்த னரும், பட்டவர்த்தனரும், பரதகுலப் பிரபுக்களும், பெரியவரும் போசன சாலையிற் சென்று, இந்திரலோகத் தமுதினுமேலாய அறு சுவையோடு கூடியவமுதை முக்கனியுந் தேனுங் கலந்தருந்திக் களி த்தபின்னர், யாவரும் அரசனிடம் விடைபெற்று மீண்டார்கள். இந்திய வைசிராயும் மீனவர் கோனிடம் செலவு பெற்றுத்தன்னி ருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன்ஜொவாம் தெக்குரூஸ் பரதவர்ம பாண்டியனென்னும் அரசன் தயை, தாட்சண்யம், நீதி, நெறிமுத லியவற்றில் வழுவற்றவனாய்ப் பூர்வவழுதியர்களுக் கொப்பத்தன்ன ரசை நடாத்திவந்தான்.

## வேதாவளை யுத்தம்.

சங்கைக்குரிய அந்தோனி கிரிமினாலி என்னுங் குருவானவர் யாரதர் தேசத்திலேயுள்ள குருக்களுக்கு சிரேஷ்டராய்ப் பின்னைக் காயலில் வாசஞ் செய்து வந்தார். அவர் அங்கே நின்று புறப்பட்

டுப் பரதர் தேசமெங்கும் சுற்றித்திரிந்து குருக்களை விசாரித்து வரு வது வழக்கம். இவர் இராமேசுவரத்திற்குச் சமீபத்திலுள்ள வே தாளை என்னுமூரில் வலையர், கடையர் முதலானவர்களுக்குப் புதி தாய் ஞானஸ்நானம் கொடுத்து அங்கே அர்ச்சிய சிஷ்டவிஞ் சேஞ் சியார் கோவிலையுங் கட்டுவித்தார். போர்த்துக்கால் தேசத்தார் தேயகாப்பின் பொருட்டு அங்கேயோர் சிறிய சேனையை வைத்தி ருந்தார்கள். அந்தக் காலத்தில் பரதர் தேசத்திலிருந்த போர்த்துக் கால் சேனைகளுக் கெல்லாம் தலைவனாகிய எம். ஜொவாம் பர்னாந்தீஸ் கொறேயா (M. Jeau Fernandez Correa) என்பவனும் பின்னைக் காயலிலேயே வசித்து வந்தான். இவனும் அடிக்கடி சிலகாப்புச் சேனைகளோடு வேதாளைக்கு வந்து போவது வழக்கம். இராமேசு வரமென்னுந் தீவானது இராமன் றிருவணை யென்று சொல்லப்படும் சேது அணையால் தேசத்தோடு சேர்க்கப் பட்டிருந்தது. அங்கே எழுந்தருளியிருக்குஞ் சேது நாதனைத்தெரிசிக்கப் பரதகண்டத்தின் பலபக்கங்களிலு மிருந்து திரள் திரளாக ஜனங்கள் வருவதுண்டு மதுரையை ஆண்டு வந்த பூர்வீக பாண்டிய ராஜாக்கள் மறவர்களை இந்தச் சேது அணைக்குக் காவல் காவலராக நியமித்து, அவர்களு டைய தலைவனுக்கு இராமநாதபுரத்தை மானியமாய்க் கொடுத்து, சேதுபதி என்னும் பெயரால் அவனுக்கு மகுடத்தைச் சூட்டி, ஆண்டு வரும்படி செய்தார்கள். இந்துக்கள் கூட்டங் கூட்டமாய் இராமேசுவரத்திற்குத் திருயாத்திரை செய்வதைக் கண்ணுற்கண்டு பொறாமைகொண்ட போர்த்துக்கால் சேனைத்தலைவன் அப்படிச்செல் லும் ஜனங்களைத் தடுக்கப்பன்முறையும் எத்தனித்தான். இவனது நோக்கத்தையறிந்த அந்தோனி கிரிமினலி என்னுங்குருவானவர் அவனை அப்படிச் செய்யவொட்டாமல் தடுத்து, அவனுக்குப்புத்தி மதிகளைச் சொல்லிக் கண்டித்து வந்தார். சேது அணையானதுஅகோ ரமான அலைகளால் மோதப்பட்டு, அனேகஇடங்களில் சேதப்பட் டிருந்தது. அந்த அணைமேல் ஜனங்கள் செல்லுவது இவனது மார்பின்மேல் நடப்பது போலிவனுக்கு அவ்வளவு வருத்தமாயிருந் தது. ஆனபடியால் துடுக்குப் புத்தியுள்ள அந்தத்தலைவன சற்குரு வின் நற்போதனையைக் கேளாது சமயம் பார்த்திருந்து அணையை யிடித்து யாத்திரைக் காரரைச் செல்லவொட்டாமற்றடுத்தான். இவ

னது துஷ்டத்தனமான செய்கையால் இராமேசுவரத்திற்கு ஜனங்கள் திருயாத்திரையாகச் செல்லுவது தடைப்பட்டது.

அக்காலத்தில் அந்தக் கோவிலின் வரும்படியைக் கொண்டு தங்கள் முழுக்குடும்பத்தையுங் காப்பாற்றிவந்த பிராமணர்களுக்குப் போர்த்துக் கீசர்பேரிலும், அவர்கள் அநுசரித்து வந்த கிறிஸ்து மார்க்கத்தின் பேரிலும், அவர்களுடைய மதத்தைக் கைக்கொண்டு, அவர்களுக்குத் தங்கள் தேசத்திலிடங் கொடுத்த பரதகுல பாண்டியர்கள் பேரிலுங் கோபமுண்டாகிப் போர்த்துக் கீசரையும், அவர்களால் ஞானஸ்நானம் பெற்றகிறிஸ்துவர்களையுங் கொன்று, தங்கள் தெய்வத்துக்குப் பலிகொடுக்கவேண்டு மென்று கங்கணங்கட்டிக்கொண்டு, சேது அணைக்குக் காவற் காரர்களாகிய மறவர்களை அவர்கள் மேல் போருக்கேவி விட்டார்கள். ஓர் உலக அதிகாரி புத்திக்குறைவாற் செய்த காரியத்தைப் பிராமணர்கள் வேதக்கலாதியாகச்சோடித்துவிட்டமையால், இராமநாதபுரத்தார் ஐஞ்ஞூறு பேரடங்கிய ஓர்சேனையைத் திட்டம்பண்ணி, திடீரென வேதாளையிற் சென்று தாக்கினார்கள். அவர்களை அங்கிருந்த போர்த்துக்கீஸ் வீரர்கள் பின்னிட்டோடும்படி செய்தமையால் தோற்றேடிய மறவர்கள் அக்காலம் மதுரையில் தேசாதிபதியாயிருந்த நாயக்கனிடத்திற் போய் உதவி கேட்டார்கள். நாயக்கன் அவர்களுக் குதவியாக ஆறுயிரம் வீரர்களையனுப்பினான். அவர்கள் போர்த்துக் கீசரால் வெட்டிவிடப்பட்ட சேது அணையைச் சீர்ப்படுத்த விரைந்து சென்றார்கள். இராமநாதபுரத்தாருடைய சேனையும் அந்தச்சேனையோடு சேர அப்படைவீரர்களின் தொகை பதினுபிரமாயிருந்தது.

அப்போது போர்த்துக்கீஸ் சேனாதிபதி சத்துருக்களின் வல்லமையைக் கண்டு பயந்து தன்னிருப் பிடமாகிய பின்னைக் காயலிற் போய்த்தன் புத்திக் குறைவான செய்கையை நினைந்து கவலைப்பட்டுக்கொண்டிருந்தான்.

இராமன் திருவணையைச் சரிப்படுத்தச் சென்ற வீரர்கள் அதைச் சீர்ப்படுத்தி விட்டு, வேதாளை என்னுமூரிற் புகுந்து அறுநூறு கிறிஸ்துவர்களை வாளுக்கிரையாக்கினார்கள். இது செய்தி தொன் ஜொவாம் தெக்குரூஸ் என்னும் பரதகுலாதிபதியினுடைய

செவிக் கெட்டியபோது அந்த அரசன் ஐயாயிரம் பரதவீரர்களை அங்கு அனுப்பத் தீர்மானித்தான். இதுசேதியைத் தூத்துக்குடிக் கவர்னர் அறிந்து பருனுந்தீஸ் கொறேயா என்னும் சேனைத்தலைவனையழைத்து, அவனுக்கு ஐஞ்னூறு போர்த்துக்கீஸ் வீரர்களைக் கொடுத்து, அவர்களை ஐயாயிரம் பரதவீரர்களோடு அழைத்துக் கொண்டு வேதாளைக்குப் போய்ச் சத்துருக்களோடு யுத்தஞ்செய்யக் கட்டளையிட்டார். சேனைத் தலைவன் கவர்னருடைய உத்தரவுப்படி வீரர்களோடு கடல் மார்க்கமாய் வேதாளையிற் போய்ச் சேர்ந்தான். அவர்களோடு அந்தோனிக்கிரிமினலி என்னுங் குருவானவரு மிருந்தார். இந்து மார்க்க வீரர்களோடு, கிறிஸ்துமத வீரர்கள் பன்முறைமோதியும் பலத்த சேதத்துடன் பின்னடைந்தார்கள். அப்போது போர்த்துக்கால் சேனைத்தலைவன் படகேறி யோடிப்போக யத்தனிப்பதைப் பரதவீரர்கள் கண்டு, தங்கள் சிரேஷ்டகுருவானவருக்கறிவித்தார்கள். அப்போதுஅவர் அந்தச் சேனைத்தலைவனிடம் சென்று, ஒ சேனாதிபதியே! இந்த யுத்தமானது உனதுமூடத்தனமான செய்கையாலுண்டானது. உன்னால் எத்தனையோ கிறிஸ்துவர்களுயிரிழந்தார்கள். நீ இப்பொழுது உன்னோடு வந்த சேனா வீரர்களையுத்த களத்தில் விட்டுவிட்டோடுவது நியாயமல்ல, சத்துருக்களுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதே உத்தமமென்று சொன்னார். அப்போது சேனாதிபதியானவன் குருவானவரைநோக்கி, "ஒ, சுவாமி! இந்தக் காட்டுமிராண்டிகளோடு சமாதான உடன் படிக்கை செய்து கொள்வதற்கு எனக்குச் சாத்தியப்படாது, அது எங்களரசுக்கும் யோக்கியதை யாகமாட்டாது. நீர் உயிர் தப்பிப்பிழைக்க வேண்டுமாயின் என்னோடு படகில் வந்து சேரும். நீ ரென்னோடு வராத பட்சத்தில்உமதுயிருக்குத்திங்குவந்து சம்பவிக்கும்" என்று சொன்னான்.

அப்போது அவர்சேனாதிபதியினுடைய அந்த மில்லாதபதிலைக் கேட்டு, மனவருத்த முற்று, மற்றைய வீரர்களையும்கப்பல், படகு முதலியவைகளிலேறித் தப்பியோடும்படி கட்டளையிட்டார். குருவானவருடைய கற்பனைப் பிரகாரம் எஞ்சிய போர்த்துக் கீஸ்வீரர்கள் மட்டும் தப்பியோடினார்கள். பரதவீரர்களதற்குடன்படவில்லை.

அதனால் குருவானவர் சேனாதிபதியோடு படகேறிச் செல்லுவதை நிறுத்திப் பரதரோடு நின்றுவிட்டார்.

அப்போது பரதவீரர் யாவரும் ஒன்றுகூடித் தங்களில் அதி சாமர்த்தியமுள்ள சூசை அந்திரைவரேத் என்பவனைத் தங்களுக்குத் தளகர்த்தனாக நியமித்து, யுத்தத்தை நடத்தினார்கள். அந்தோனி கிரிமிலி சுவாமியாரோ கடற்கரையோரமாய் நின்றுகொண்டு, காயம்பட்ட கிறிஸ்துவ வீரர்களுக்குத் தேவ திரவிய அநுமானச் சடங்குகளை நிறைவேற்றிக் கொண்டும், அவர்களைப் படகுகளிலேற்றி யனுப்பிக்கொண்டு மிருந்தார். அந்தத்தருணத்தில் எதிரிகளாற் சுடப்பட்ட வெடிக்குண்டுகளில் ஒன்று, சிறு பிராய முதலே தேவ வூழியத்திற்குழைத்து வந்தவரும், எங்கும் சங்—அந்தோனி கிரிமினலி என்னுங் குருவானவரைப் பின்தொடர்ந்து வந்தவரும், பின்னைக்காயலில் பரதகுல பிரபுக்கள் வம்சத்தைச்சேர்ந்தவருமாகிய லூயிஸ் அல்போன்சோ என்னும் உபதேசியார் மேலே பட்டது. அவர் அவ்விடத்திலேயே குருவினண்டையில் தமது பிராணனைவிட்டார். குருவானவர் உபதேசியாருடைய மரணத்தைக்கண்டு மனக்கிலேசங்கொண்டு, பரத வீரர்களை நெருங்கிவரும் சத்துருக்களைக்கண்டு பிரமித்து, கிறிஸ்துவ வீரர்களை நோக்கி: ஓ "கடவுளினிடத்தில் எனக்கு விசேஷபிரியமுள்ள சகோதரர்களே! நீங்கள் பயப்படாதேயுங்கள். நீங்கள் உங்களுடைய சுயநலத்தைக் கருதி யுத்தத்துக்குப் புறப்படவில்லை. கிறிஸ்துவர்களைப் பாதுகாப்பதற்காகவே புறப்பட்டீர்கள். கிறிஸ்துவர்களைக் காக்கும்பொருட்டு உங்களிரத்தத்தைச் சிந்தப் பின்வாங்காதேயுங்கள். இதோ மோக்ஷ ராஜ்யத்தினுடைய வாசல் திறந்திருக்கின்றது. நாம் நமது சத்தியவேதத்துக்காகப் பிராணனைக் கொடுப்போமாயின் நாம் மரணித்த அந்தக்ஷணமே அந்த மோக்ஷ ராஜ்யத்திற் போய்ச்சேருவோம்" என்று அவர்களுக்குச் சொல்லிச் சத்துருக்களுக்கு முன்னே சென்று முழந்தாட்படியிட்டு, இருகரங்களையும் விரித்து, வானத்தையண்ணாந்து பார்த்துமன்றாடினார். அப்பொழுது முதல் வந்த தண்டு அவரை யொன்றுஞ்செய்யாமற் றாண்டிப்போயிற்று. இரண்டாவது கூட்டமும் அப்படியே கடந்து சென்றன. மூன்றாவது கூட்டம் வந்தபோது அதிலிருந்த துலுக்கனொருவன் அவரை யீட்

டியாலே குத்தினன். மற்றவர்களவருடைய வஸ்திரத்தைக் கழற்றினர்கள். அப்போது அவர் அதிக வருத்தத்துடன் கோவிலுக்குப்போய் பிராணனைவிட உத்தேசித்து எழுந்திருந்தார். அந்த வேளையில் இன்னொருவன் அவருடைய மார்பில் ஈட்டியாற் குத்தினன். அந்தக்குத்தையும் அந்த மகாத்துமா வாங்கிக்கொண்டு திரும்பவு மெழுந்திருந்தார். மூன்றும் முறையாக மற்றோர் வீரன் அவரை யீட்டியாற் குத்தி அவர்கழுத்தையும் வெட்டிக்கொண்டுபோய் ஓர் கொம்பில் அந்தத்தலையைக் குத்தித் தங்களூர்க் கோபுரத்தின்மேற் கட்டி வைத்தான். முன்சென்ற இருகூட்டத்தாரோடும் சண்டையிட்டுக் கொண்டிருந்த பரதவீரர்கள் தங்கள் குருவானவருடைய பரிதாபமான மரணத்தைக் கேட்டு நடுக்கமுற்று, மேலும், மேலும், அதிகமதிகமாக வந்துகொண்டிருக்கும் சத்துருக்களுக்குத் தப்புவதற்காகக் கடற்கரைக்கோடி அங்கே நங்கூரமிட்டிருந்த கப்பல்களிலும், படகுகளிலுமேறி யோடினர்கள். பிந்திச் சென்ற தளகர்த்தனும் அவனுடைய காப்புச் சேனைகளும் சத்துருக்களால் கொல்லப்பட்டார்கள். மற்றவர்கள் அந்தச் சமுத்திரத்திலிருக்கப்பட்ட சிறு தீவுகளிலாவது நீந்திப்போய் உயிர்பிழைக்கலாமென்றுத் தேசித்துத் தண்ணீரிற் பாய்ந்தார்கள். அவர்களுள் நன்றாய் நீச்சுத்தெரிந்தவர்கள் தவிர மற்றவர்கள் கடலிலழுந்தி இறந்தார்கள். இந்த யுத்தத்தின்போது வெடிக்குண்டுக் கிரையானேரும், கடலிலழுந்தி இறந்தோரும் எத்தனைபேரென்று கணக்கிடப்பட்டபோது, நூற்றில் தொண்ணூறெனத் தெரியவந்தது, (இவ்வண்ணம் வேதானையில் வேதத்துக்காகப் பிராணனைக் கொடுத்த வேதசாக்ஷிகளினுற்சவத்தை நாம் கொண்டாடவேண்டியது கடனே) இந்தச் சம்பவமானது 1549-ம் வரு ஜூன் மாதத்திலே நிகழ்ந்தது. அப்பால் போர்த்துக்கீசர் பெருஞ்சேனைகளைத்திரட்டி, அதே வருஷத்திற்றனே மறு யுத்தந்தொடுத்து மறவர்களை முறியவடித்து, யுத்த நஷ்டத்துக்கீடாக இராமநாதபுரத்திலேயே மறவர்களுடைய செலவிலோர் கோவிலைக்கட்டி வாங்கிக் கத்தோலிக்குக் குருக்களால் அதைப் பிரதிஷ்டை பண்ணினர்கள்.

# திரிகோணமலை யுத்தம்.

எப்பெருமானுன சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன் ஜொவாம் தெக்குரூஸ் பரதவர்ம பாண்டியன் அரசனுக மகுடம்பூண்டு மூன்று வருஷங்கள் பூர்த்தியாவதற்குமுன் இரண்டு பெரும் யுத்தங்கள் செய்ய நேர்ந்தன. அவைகளிலொன்று, முன்சொன்ன வேதாளையுத்தம், மற்ருென்று, இலங்கை திரிகோண மலையுத்தமேயாம்.

திரிகோணமலை யுத்தத்தைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்வாம். அதாவது; அப்போது திரிகோணமலையை யாண்டிருந்த அரசன் தேகவியோகமாயினமையால், அவ்வரசனுடைய குமாரனுக்குக் குழந்தைப்பருவத்திற்ருனே முடியைச்சூட்டி, மந்திரி முதலான உத்தியோகஸ்தர்கள் அரசாட்சியை நடத்தி வந்தார்கள். சிறுவனுக்கு எட்டு வயதானபோது வேருெரு அரசன் படையெடுத்துவந்து இச்சிறுவனைத்துரத்தி ஊரைப்பறித்துக்கொண்டதுமன்றி அவனுடைய வுயிரையும் வாங்க வகைதேடினுன். ஆனுல் அந்தச்சிறுவனை ராஜவம்ச பிரபுக்களிலொருவன் வெகுதூரத்தில் வைத்து ஆதரித்துவந்தான். அந்தப்பிரபு அச்சிறுவனை அங்கு வைத்திருப்பது தனக்கு அபாயமெனக் கண்டபோது மிகவும் உண்மையும், விசுவாசமுமுள்ளவர்களான நாற்பது பௌத்த குருக்களைச் சிறுவனேடுசேர்த்து அவர்களைக் கப்பலிலேற்றித் தூத்துக்குடிக்கு அனுப்பிவைத்தான். அவர்கள் யாவரும் தூத்துக்குடியையடைந்து பரதகுலபாண்டிய அரசனிடத்தில் சரணம் புகுந்தார்கள். அந்த அரசன் இந்த அரசகுமாரனுடைய பிறப்பையும், பிராயத்தையும், குணத்தையும், சௌரியத்தையும் அச்சிறுவனுக்கு நேர்ந்துள்ள கொடுமையையுங் கண்டுருகி, அந்த வாலகுமாரனையும், அவனேடுவந்த பௌத்தகுருக்களையும் வெகு இரக்கத்தோடேற்று, அவர்களுக்குத் தன்னுலானமட்டும் உதவி புரிவதாக வாக்களித்து, அவர்களைத் தூத்துக்குடி விசாரணைக்குருவாகிய சங்கைக்குரிய என்றி என்றிக்கெஸ் என்னுங் குருவானவர்வச மனுப்பி, அவர்களுக்கு வேதோபதேசஞ்செய்து ஞானதீட்சை கொடுக்கும்படி கற்பித்தான். குருவானவர் அவர்களெல்லோருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தபின், தென்னவர்கோமான் ஓர் இராணுவத்தைத் திட்டம்செய்து, திரிகோணமலை அரசனையும், அவனேடுவந்த நாற்பது பேர்களையும் ஓர் கப்பலிலும், மற்றைய பரதவீரர்களை ஏழுகப்பல்

களிலுமேற்றி, திரிகோணமலைக்குச்சென்று அங்கே அரசுசெலுத்தி வரும் அரசனைத்துரத்தி, அந்தஸ்தானத்தில் புதிதாய் ஞானஸ்நானம் பெற்ற இந்த இளவரசனை வைத்துவிட்டு வரும்படி கப்பல் சேனைத் தலைவனாகிய சுவக்கின் மரியான் பீரிஸ் என்பவனுக்குக் கட்டளையிட்டான். அரசனது ஆக்யாபனைப் பிரகாரம் கப்பற்றலைவன் கப்பல்களை நடத்திக்கொண்டுபோய்த் திரிகோணமலையைச் சருவினான். அப்போது திரிகோணமலையை யாண்டிருந்த அரசனோ, தன் முழுப்பலத்தோடும் அந்நகரைத்தாங்கி நின்றமையால் பரதவீரர்களதை ஜயிப்பதற்குக் கூடாமற்போயிற்று. சர்வவல்லவரும் அதிநல்லவருமாகிய கடவுள், அந்த வாலிப அரசனையும், அவனோடு சேர்ந்த நாற்பதுபேர்களையும் தமக்கு ஊழியர்களாகத் தெரிந்துகொண்டமையால், பரதருடைய கப்பல்சேனை மிகுந்த சேதத்துடன் திரும்பித் தூத்துக்குடியை வந்தடைந்தது. அப்போது இளவரசனும், அவனோடு வந்த நாற்பதுபேர்களும் இவ்வுலக செல்வங்களைத் துறந்து கோவைக்குச்சென்று அங்கே சுங்கைக்குரிய சேசுசபைக் குருமாரால் நடத்தப்பட்டுவந்த அர்ச்சியசிஷ்ட சின்னப்பர் (சம்பாவுல்) கல்விசாஸ்திரமடத்தை யடைந்து கல்விப்பயிற்சியிலும், சன்மார்க்க வொழுக்கங்களிலும் தேர்ந்து, குருப்பட்டம் பெற்றுத் தனது சகோதரர்களான மற்றக்குருக்களோடு மிகுந்த பக்ஷத்தோடும், நல்ல சுகத்தோடும் வாழ்ந்திருந்தார்கள்.

## அர்ச் சவேரியாருடைய மரணம்.

பொன்விளையும் பூமியெனப் புகழ்பெற்ற இச்சிந்து தேசத்திலே சவேரியார் வேதத்தைப் போதித்தபின், கப்பலிலேறி மலாக்கா, தெர்நாட், அம்போயினு, மர்க்கசார், மோர்என்னும் தீவுகளிலெல்லாம் கிறிஸ்துவினுடைய மெய்யான வேதத்தைப் போதித்துக்கொண்டு பிலிப்பைன் தீவில் போய்ச்சேர்ந்தார். இந்தத்தீவானது 1521-ம் வருஷமுதற் கொண்டு (Spain) இஸ்பாஞ்யா தேசத்தரசனுடைய ஆளுகைக்குட்பட்டிருந்தது. அந்தத்தீவின் பிரதானபட்டணமாகிய மணிலாநகரில் வாசஞ்செய்யும் ஸ்பாஞ்யா தேசத்துக் கன்னியர்களைச் சந்திக்க அவர்களிருக்கும் மடத்திற்குப் போனார். அவர் அங்கே அவர்களைச்சந்தித்து அம்மடத்தைச் சுற்றிப் பார்த்

துக்கொண்டு வரும்போது ஓரறையில் அதிசயபனிமய மாதாவின் சொரூபமொன்று ஸ்தாபித்திருப்பதைக் கண்ணுற்றார். எப்பொழுதும் தமது ஞானப் புத்திரர்களாகிய பரதகுலத்தவரை மறவாத அவர், அப்பொழுது அந்தமடத்தின் சிரேஷ்டகன்னிகையை நோக்கி "அம்மா! தக்ஷண இந்தியாவின்கண் பரதரென்றோர் சாதியார் வசிக்கின்றார்கள். சர்வவல்லப சருவேசுரனுடைய கிருபையினால் நான் அவர்களிலொருவர் பாக்கியில்லாமல் எல்லோருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தேன். அவர்கள் கிறிஸ்துவினுடைய வேதத்தைக் கைக்கொண்டு கொஞ்சக்காலந்தானாயிற்று. என்றபோதிலும் அவர்களிலனேகர் வேதத்துக்காகப் பிராணனைக்கொடுத்த, வேதசாக்ஷிகளின் மகுடத்தைப் பெற்றார்களெனக் கேள்விப்பட்டு மிகுந்த சந்தோஷமடைந்தேன். அந்தக் குமரிகுல கிறிஸ்துவர்களுக்கு மாக்ஷிமை பொருந்திய போர்த்துக்காலரசர் ஓர் அரசனைக் கொடுத்திருப்பதாகவும், அவ்வரசன் தூத்துக்குடியில் வாசம்பண்ணுவதாகவும் கடிதங்களின் மூலமாயறிந்தேன். அந்தக்குலத்தார் மேல் எனக்குள்ளபாசபற்றுதல், இம்மையிலும் மறுமையிலும் மறக்கத்தக்கதன்று. அவர்களுடைய ஆத்தும, சரீர நன்மைக்காக நானென்னுடைய அநுதின ஜபத்தில் வேண்டிக்கொள்ளுகிறதுபோலவே, நீங்களும் உங்களோடு இம்மடத்தில்வசிக்கும் மற்றக்கன்னிகாஸ்திரிமார்களும் மன்றாடப் பிரார்த்திக்கிறேன். அவர்களுக்கு பரிசுத்த தேவதாயின் ஞாபகத்தை நினைப்பூட்டும்பொருட்டு இதோ இந்தப்பீடத்தின் மீது எழுந்தருளியிருக்கும் பரிசுத்த பனிமயமாதா சொரூபத்தைத் தூத்துக்குடிக்கு அனுப்பவேண்டுமென்றும்மை மன்றாடுகிறேன்." என்றார். அப்போது அம்மடாதிபதியானவள் அவரைப்பார்த்து: ஓ மாதவ முனிவரே! அந்த அதிசயபனிமய மாதாவின் சொரூபமானது இந்த மடத்தின்கண் வாழுங் கன்னியரின் விசேஷ பாதுகாப்பின் பொருட்டு ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றமையால், தாங்கள் விரும்பிய வண்ணம் தூத்துக்குடிக்கு அனுப்பிவைக்கக் கூடாததைப்பற்றி வருத்தப்படுகிறேன். ஆகையால் மன்னிக்க வேண்டுமென்று மிகுந்ததாழ்மையோடு மன்றாடினள். அந்த முனிவரானவர் அம்மடாதிபதியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு கப்பலிலேறிச் சப்போனியா (Japan) தீவிற்போய்ச் சேர்ந்தார். அங்கே அவர் இரண்ட

ரை வருஷமளவும் சுற்றித்திரிந்து அநேக புதுமைகளைச் செய்து அளவிறந்த ஆத்துமாக்களைச் சத்தியவேதத்திலுட்படுத்திக்கொண்டு வரும் நாளில் கோவைப்பட்டணத்திலிருந்த சேசு சபைக்குருக்கள் அவரைச்சில முக்கிய காரியங்களினிமித்தம் சீக்கிரத்திலே வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளின்படி அந்த மகாத்துமாவானவர் அத்தீவினின்று புறப்பட்டு வரும் வழியில் சீனக்கரையருகேயுள்ள சஞ்சியான் என்னும் தீவில் தங்கினர். அங்கேயும் அவர் கிறிஸ்துவினுடைய வேதத்தைப் போதித்துக்கொண்டு வரும் நாளில் நோயின் வாய்ப்பட்டு 1552-ம் ௵ டிசம்பர்மீ 3ம்௳யாகிய வெள்ளிக்கிழமை பகல், மத்தியானத்துக்குமேல் மரணமானார். இந்தப்பரிதாபமான செய்தி பரதர் தேசத்தில் வந்தெட்டியபோது அவர்கள் தங்கள் ஞானப்பிதாவுக்காகத் துக்கங் கொண்டாடினார்கள்.

தொன் ஜொவாம் தெக்குரூஸ் பரதவர்ம பாண்டியனென்னும் அரசனானவன் நீதி நிரையும், சாதிமுறையும் தவறாது ஐந்துவருஷம் அரசாண்டு மகுடத்தைத் தனது குமாரனுக் கொப்புவித்துத் தான் 1553-ம்௵ மரணமானான்.

## சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் மிக்கேல் ஜொவாம் தெக்குரூஸ் பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

மாக்ஷிமை தங்கிய இவ்வேந்தனை ஞானத்தில் சனகனுக்கும், தைரியத்தில் புத்தனுக்கும், சௌரியத்தில் இராமனுக்கும், வீரியத்தில் பாண்டவர்க்கும் இணையெனச் சொல்லலாம்.

இவ்வரசனுடைய பிதா அரசியற்றிய காலத்தில் பரதகுல பாண்டியர் சில இக்கட்டுகளையநுபவித்து வந்தபோதிலும் இவனுடைய காலத்தில் அவைகள் யாவும் நீங்கிக்குடிகள் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

இம் மகுடாதிபதியினுடைய காலத்தில் நிறைவேறிய சில சம்பவங்களை இங்கே சுருக்கமாகச் சொல்வாம்;

அர்ச்—பிரான்ஞ்சிஸ்கு சவேரியார் சஞ்சியானென்ற தீவில் மரணமானதையும், கடவுள் அவர்மூலயாயனேக அற்புதங்களைச்செய்துவருவதையும், மெனிலாப் பட்டணத்தின் மடாதிபதியானவள் கேள்விப்பட்டபோது, அந்தப் புண்ணியவானின் எண்ணத்தை நிறைவேற்றக்கருதி, அவர் விரும்பிய அதிசய பனிமயமாதா சொரூபத்தை யோர் பெட்டியில் வைத்து, சந்த எலேனு என்னும் கப்பலிலேற்றித் தூத்துக்குடிக்கு அனுப்பினாள். அந்தக் கப்பலானது 1555-ம்வரு ஜூன்மீ 9-ம்உ தூத்துக்குடியை வந்தடைந்தது. சங்கைக்குரிய பீ. மிங்கேல்வாஸ் எனனும் மூப்புக்குருவானவர் கப்பலுக்குச் சென்று அந்தத்திவ்யதாயின் சொரூபத்தையிறக்கிவந்து போர்த்துக்கீசரால் கட்டப்பட்ட அர்ச். சின்னப்பர் (சம்பாவுல்) தேவாலயத்தில் பரதர் மாதா வென்னும் பெயரால் ஸ்தாபித்தார்.

அக்பருக்கு 1556-ம்வரு ஜெனவரிமீ டில்லியில் சக்கரவர்த்தியாக மகுடஞ் சூட்டியபோது, அக்கொண்டாட்டத்திற்கு, இவ்வரசன் தனது ஸ்தானாதிபதியாக சவியேர் அல்போன்ஸ்ரூபின் என்பவனைத்தெரிந்து அவனிடமாய் விலையேறப்பெற்ற ஓர் முத்துமாலையைக் கொடுத்தனுப்பி அதை டில்லி சக்ரவர்த்திக்களிக்கச் செய்து அவனுடைய அன்பைப் பெற்றான்.

இம்மீனவர் கோமானுடைய காலத்தில் போர்த்துக்காலிராஜ்யத்தில் நடந்தவோர் முக்கிய சம்பவமாவது: யாதெனின், போர்த்துக்கா லிராஜ்பத்தாருடைய பேருக்கும், புகழுக்கும் காரணமாயிருந்த தொன் இமானுவேலரசருடைய புத்திரனாகிய தொன் ஜெரவாம் என்னும் அரசர் தனது சிரேஷ்ட புத்திரன் முன்னமே காலஞ்சென்று போயினமையால், காலஞ்சென்ற புத்திரனின் புத்திரனாகிய தொன் செபஸ்தியான் என்னும் மூன்று வயதுக் குழந்தைக்கு முடியைத் தந்து தாம் ராஜபட்டம் பெற்ற முப்பத்தாறும் வருஷமாகிய 1557ம் ஆண்டு மரணமானார். இது செய்தியை எங்குலத்தவர்களறிந்தபோது மகாவருத்தத்துடன் துக்கங்கொண்டாடினார்கள். தொன் ஜொவாம் அரசருடைய இளைய குமாரனாகிய கர்தினால் தொன் ஹென்றி என்பவர் நாலாவது பவுல் என்னும் பரிசுத்த பாப்பரசரின் அனுமதியைப்பெற்று தமது மூத்த சகோதரனின் புத்திரற்கு மகுடத்தைச் சூட்டித் தாம் ராஜ்பத்தையாண்டு வந்தார்.

1557ம் ஹு மாசிமீ 4ம்உ யைக்கொண்ட "Este Sancta" என்னும் நிருபத்தினுல் கோவைப்பட்டணத்தை அதிமேற்றி ராசனஸ்தானமாகவும், 'Pro Excllenti' என்னும்நிருபத்தினுல் கொச்சியை மேற்றிராசனஸ்தானமாகவுமுயர்த்தி, தென்னிந்தியாவையும், இலங்கையையும் கொச்சி மேற்றிராணியாருடைய ஞான ஆளுகைக்குட்படுத்தப்பட்டது மன்றி, கீழ் சமுத்திரத்தில் போர்த்துக்கீசருக்காதீனமான நாடுகளுக்கெல்லாம் கோவையை வைசிராய்ஸ்தானமாகவும் நியமிக்கப்பட்டது.

கோவையைச் சார்ந்த சல் சட்டீன் என்னும் மாகாணத்தில் வேதத்துக்காகப் பிராணனைத்தந்த ஐவரிலொருவராகிய பிரான்சீஸ் அராஞா வென்பவருக்குப் பிதாவின் சகோதரராகிய தொன்கஸ்பார் அராஞா வென்பவர் கோவைக்கு முதலதி மேற்றிராணியாராக 1560ம் ஹு தமது மேற்றிராசனம் வந்து சேர்ந்தார்.

தொன்மிக்கேல் ஜொவாம் தெக்குரூஸ் பரதவர்ம பாண்டியனென்னும் எம்மரசன் ஒன்பதுவருடம் தர்மசெங்கோலோச்சி தனதுபாலிய குமாரத்தியாகிய தோனுமரிய மார்கரீத்தெக்குரூஸ் ஆத்தாளுக்கு முடியைத்தந்து 1562-ம் வருஷம் மரணமானுன்.

---

# சிஞ்ஞோரா, சிஞ்ஞோரா தோனமரிமர்கரீத் தெக்குரூஸ் ஆத்தாளின் அரசியல்.

தொன்மிக்கேல் ஜொவாம் தெக்குரூஸ் பரதவர்ம பாண்டியனுக்கு ஒரே குமாரத்தியேயன்றி வேறுசந்ததியில்லாததால், பாசாளும் பரதகுலத்திற்கு இவளே அரசியாக நியமனம்பெற்றுள். இவள்காலத்தில் பின்னைக்காயலில் வாழ்ந்த பரதகுலத்தவர்க்குக் காயல் பட்டண மகம்மதியர்களால் நேர்ந்த அனேக இடையூறுகளினின்றவர்களை இரட்சித்து, மகம்மதியர்களை மடக்கி யொடுக்கினுள். இக்குமரியானவள் முன்னிந்தப் பாண்டிய நாட்டையாண்ட சித்திரவாகனபாண்டியனின் தவப்புத்திரியாகிய சித்திராங்கதை (அல்லி)க்கொப்ப ஆண்டு, அவள் (சித்திராங்கதையின்) பெயரால் இப்பாண்டியநாட்டிற்குக் கன்னிநாடு அல்லது குமரிநாடு என்றுவழங்கி

வந்த பெயரை யிவள்புதுப்பித்து, மூன்ருவது வருடம் பரதசேனைத்தலைவனும், தனது தாயின் சகோதர புத்திரனும் வீர கெம்பீர ஒய்யாரபுருஷோத்தமனுமாகிய லூயிஸ் எஸ்தேவான்பீரிஸை மணந்து, அம்மகா பிரபுவுக்கே மகுடத்தையும்சூட்டினுள். இந்தப்பிரபு சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்லூயிஸ் எஸ்தேவான் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியனென்னும் பெயரோடு ஆசனமேறினன்.

## சிஞ்ஞோர், சிஞ்ஞோர் லூயிஸ் எஸ்தேவான் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

இவ்வரசன் மகுடம் பூண்டமுதல் வருஷமாகிய 1565ம்ஆண்டு முதல் 1566, 1567, 1568, 1569, 1570ம் ஆண்டுகளிலும், அப்பால் 1575 முதல் 1576, 1577, 1578-ம் ஆண்டுகளிலும் அதன் மேல் 1581ம் ஆண்டுமுதல் 1582, 1583ம் ஆண்டுகளிலும் முத்துச் சலாபம் தொகுப்பாய்க் கட்டப்பட்டமையால், பரதநாடு செழித்து அதன் குடிகள் க்ஷேமமடைந்தார்கள். அரசனும் ஆறிலோர்கடமையைக் கைக்கொண்டு அநேககலாசாலைகளையும், கோவில்களையும் கட்டுவித்ததுமன்றி, போர்த்துக்கீசர் வேம்பாறு, தூத்துக்குடி, பின்னைக்காயல், ஆழ்வார்திருநகரி, மணப்பாடு, கன்னியாகுமரி முதலியவிடங்களில் கைத்தொழிற்சாலைகளை ஸ்தாபித்து அதிகலாபத்தைச் சம்பாதித்தார்கள்.

இந்த அரசன் பரதநாட்டை ஆண்டுவருங்காலத்தில் 1578ம் ௵ போர்த்துக் காலரசனுகிய தொன் செபஸ்தியான் துருக்கியரோடு போராடச் சென்றவிடத்திலிறந்தமையால், அவ்வரசனின் சிறிய பிதாவாகிய கர்தினுல் தொன் என்றிஎன்பவர் பட்டத்துக்கு வந்தார். இவருடையகாலத்தில் போர்த்துக்கா லரசாட்சிக்குட்பட்ட நாடெங்கும் கிறிஸ்துவேதம் முன்னிலு மெண் மடங்கதிகமாய்ச் செழித்தோங்கியது. இந்த அரசனும் 1580ம்௵ மரணமாயினமையால், போர்த்துச்காலரசர் குடும்பத்தில் மகுடத்திற்குப் பாத்தியஸ்தரொருவரு மில்லாமற் போயிற்று. அதுகண்டு போர்த்துக்கால் தேசத்தார் தங்களுக் கரசனுக தொன் அந்தோனி யென்னு

மோர்பிரபுவைத் தெரிந்துகொண்டார்கள். இதுசெய்தி இஸ்பாஞ்ஞியா (Spain) தேசத்தரசனாகிய இரண்டாவது பிலிப்பு என்பவனுடைய செவிக்கெட்டியபோது அவ்வரசன் விவாகசம்பந்த வுரித்தின்படி போர்த்துக்காலிராஜ்யம் தனக்காகவேண்டுமென்று அமராடி அத்தேசத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இதுவரை போர்த்துக்காலரசர்களா லாண்டுவந்த நாடுகளுக்கெல்லாம் இவனேயரசனானான்.

அக்காலத்தில் வழங்கிவந்த யுலியான்பஞ்சாங்கத்தைப் பரிசுத்தபிதாவாகிய பதின்மூன்றாம்கிரகோரியென்னும் பாப்பரசர்திருத்தி அப்பஞ்சாங்கத்திற் குறைவாயிருந்த பத்துநாட்களையுங் கூட்டி 1581ம்-வரு சத்தியவேத ராஜ்யமெங்கும் அதை வழங்கிவரும்படி கட்டளையிட்டார். (இதைத்தான் கிரகோரிபாப்புபஞ்சாங்கமெனச் சொல்லுவார்கள்.)

எம்மதிகுலத்திறைவன் எதிரொருவரில்லாமல் இருபத்தைந்து வருஷம் அரசாண்டு, உற்றார், பெற்றார், உறவினர்யாவரும் சூழ்ந்து நிற்க கிறிஸ்துவனுக்குரிய கடைசிக்கருமங்களையெல்லாங் குறைவறப்பெற்று 1590ம்ஆண்டு நித்திய சமாதானவீட்டை யடைந்தான்.

---

## இஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன்ஜெரோணிமூஸ் தெக்குரூஸ்பீரிஸ் பரதவர்மபாண்டியன் அரசியல்.

தேவர்களாலும் செய்தற்கரிய யாகங்களை யெல்லாம்செய்து "ஸாம்ராட்" என்னும் உன்னதபதவிபெற்ற பட்டாபிஷேக பரதனின்கோத்திரத்திற்கிறைவனாகிய, தொன்லூயிஸ்எஸ்தேவான் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்மபாண்டியனென்னும்அரசனுக்குப்பின், அவன் குமாரனாகிய தொன்ஜெரோணிமூஸ் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்மபாண்டியனென்பவன் பட்டத்துக்கு வந்தான்.

இவ்வரசனுடையகாலத்தில் கொச்சியில் மேற்றிராணியாராயிருந்த மகாசங்கைக்குரிய அந்திரேயாஸ் தெ. சாந்தமரியா என்பவர் போர்த்துக்காலுக்கும், ஸ்பாஞ்ஞியாவுக்கும் அரசனாகிய இரண்

டாவது பிலிப்புவுக்கு ஓர் நிருபத்தையெழுதி, கொச்சிமேற்றிராசன ஆளுகைக்குட்பட்ட வங்காளம், கொரமாண்டல்சமுத்திரக்கரை, ஒரிசா, பெகு முதலான தொலைதூரங்களுக்குச்சென்று ஞானவிசாரணை செய்வது வெகு கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் அங்கே கடற்கரையோரமாய் ஓர் மேற்றிராசனத்தை யேற்படுத்துவது வெகு பிரயோஜனமா யிருக்குமென்று வேண்டிக்கொண்டதின்பேரில், அவ்வரசன் இதுவிஷயத்தைப்பற்றி ஐந்தாம்பவுல்என்னும் அர்ச் - பாப்பானவருக்கு மிகு தாழ்மையாய் ஓர் விண்ணப்பத்தை யெழுதித் தெரிவிக்க, அதை அவர் மகா மேன்மைதங்கிய திருச்சபையின் கர்தினால் மாரோடுகலந்து ஆராய்ச்சி செய்தபின்,கொரமண்டல் கடற்றுறையில் மயிலாப்பூர் என்னுமிடத்திலுள்ள அர்ச் - தோமையார்கோவிலை மேற்றிராசனக்கோவிலாகவும், மகாசங்கைக்குரிய தொன் செபஸ்தியான் தெ. சாந்து பேதுரு என்பவரை அதின் முதல் மேற்றிராணியாராகவும் 1606ம்ஆு நியமித்து, அம்மேற்றிராசனத்துக் காதீனமாய் இரண்டுலட்சம் ரேயிஸ் என்னும் நாணயத்தையும், அம்மேற்றிராசனக்காரியங்களை நடத்துவதில் மேற்றிராணியாருக்குத் துணையாயிருக்கும்படி யேற்பட்டவேதியர் மூவரின் சம்ரக்ஷணைக்காக ஒவ்வொருவருக்கும் நாற்பதினாயிரம் ரேயிஸ்என்னும் நாணயத்தையும், பராமரிப்புக்காரர் அல்லது பிரதிபாலனர் என்னும் உத்தியோகத்தைப் பார்த்துவருவோரின் ஜீவனத்துக்காகத் தொண்ணூறாயிரம் ரேயிஸ்என்னும் நாணயத்தையும், பிலிப்புஅரசனுடை யவருமானத்தினின்று அல்லது இந்துதேச அரசாட்சியின் வருமானத்தினின்று கொடுக்கும்படியாகவும், மயிலைமேற்றிராணியார் குருவாட்சியிலும், அதிகாரத்திலும், வருமானத்திலும் கோவையதிமேற்றிராணியாருக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார். அதை ஒப்புக்கொண்டு ஸ்பாஞிய அரசனும் மயிலை மேற்றிராசனத்தை யாதரித்துவந்தான். இதேகாலத்தில் பரதர்தேசமானது மயிலை மேற்றிராசனத்துக்குள்ளானபோதிலும், அந்தத்தேசம் கொச்சிமேற்றிராசனத்துக்கு அதி சமீபமாயிருந்தபடியால், மயிலைமேற்றிராணியாருடைய வேண்டுகோளின்படி கொச்சிமேற்றிராணியாரே அடிக்கடி பரதர்தேசத்தில்வந்து ஞானகாரியங்களை நிறைவேற்றிப் போவது வழக்கம்.

மீனவர்கோமானான தொன்ஜெரோணி மூஸ்தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியன் இந்தியாவிலும், இலங்கையிலும், பாரவீசுத்திலும் அனேக சலாபங்களைக் கட்டித் தன் முன்னோர்களுக்கொப்ப வெகு கெம்பீரமாகச் செங்கோல் செலுத்தி, தான் மகுடம் பூண்ட இருபத்தைந்தாம் வருஷமாகிய 1615-ம்ஸு நாற்பத்தொன்பது பிராயமுள்ளவனாய் மரணமானான்.

---

# சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்மிக்கேல் ஜெரோணி மூஸ்தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

அழகு பொருந்திய மீனகேதனமானது அகன்ற ஆகாயத்திலே கெம்பீரமாய்ப்பறக்கவும், அழகிய அன்னப்பக்ஷிகள் தாமரைத் தடாகத்திலே நீந்தி விளையாடுமாப்போல் சங்கு, முத்து, பவள முதலிய கடல்படு திரவியங்களைக் கொள்ளும்பொருட்டு தூரதேசங்களினின்று தூய்மையான வெண்ணிறம் பொருந்திய பாய்களை விரித்தோடிவருங் கப்பல்களழகைச்செய்யவும், பசிய குதிரைகள் பூட்டிய ஒற்றையாழியையுடைய இரதத்திலே யெழுந்தருளிய செங்கதிரோனுடைய கிரணங்களால் பளபளவென சொலிக்குஞ் சமுத்திர அலைகளானவை பரதர்வாழ்க, பரதர்குல பிரபுக்கள் வாழ்க, பரதகுலத்திறைவன் வாழ்கவென்று சப்திக்கவும், பார்த்தவர் கேட்டவர் யாவரும் பரமானந்தமடையும்படி பரதர் நாடு செழித்து க்ஷேமமுற்றிருந்தது.

சொல்வதற்கரிய செல்வம்பொருந்திய இந்நாட்டைத் தொன் ஜெரோணிமூஸ் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியனென்னும் பார்த்திபனுக்குப்பின் ஆளுவதற்கு அவன் குமாரனாகிய தொன்மிக்கேல் ஜெரோணிமூஸ் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியனென்பவன் ஆசனமேறினான்.

இவ்வரசன் அரசினர்க்குரிய பஞ்சகுழுவினரோடுங்கூடி யரசியற்றிவருங்காலத்தில், செல்வம் பொருந்திய போர்த்துக்கால் நாட்டிலே சுய ஆட்சியின்பொருட்டுக் கலகமுண்டாயிற்று. போர்த்துக்

கால் தேசத்தார் ஸ்பாஞிய அரசனோடு அமராடித் தங்களிராஜ்பத்தைப்பிரித்து அதற்கு பிரகான்சாநாட்டின் பிரபு ஒருவரை நாலாவது ஜொவாம் என்னும் பெயரோடு 1640-ம்ஞு ஆசனத்திலேற்றினார்கள். போர்த்துக்கீசருடைய ஆதீனத்திலிருந்து ஸ்பாஞியருடைய அரசனின் ஆட்சிக்குள்ளான நாடுகளெல்லாந் திரும்பவும் போர்த்துக்கீசர் வசமாயிற்று.

பரதர்தேசத்திலே வசித்துவந்த போர்த்துக்கீசர் நாளுக்கு நாள் அகங்கார கர்வங்கொண்டு அந்நாட்டுக்குடிகளை மிருகங்களைப்போல் நடத்தத் தலைப்பட்டார்கள். செழியர் கோமானான தொன்மிக்கேல் ஜெரோணிமூஸ் தெக்ருஸ் பீரிஸ் பரதவர்மபாண்டியன் தன்னாட்டில் போர்த்துக்கீசர் செய்துவரும் அடாத செய்கைகளைக் கவனிக்கும்படி அக்காலத்தில் தூத்துக்குடியிலிருந்த போர்த்துக்கீசருடைய சேனைத்தலைவனுக்கும், கவர்னருக்கும் அடிக்கடி சொல்லி வந்தான். அவ்விரு உத்தியோகஸ்தர்களும் சுயநலங்கருதியவர்களாய், மற்றைய போர்த்துக்கீசரைக்காட்டிலும் அயோக்கியர்களுமாயிருந்தமையால், தென்னவர்கோமான் சொல்லியவைகளை யவர்கள் கவனிக்கவில்லை. ஆதலால் எம்மிறைவன் மேலாவிலறிவிக்கக் கருதி இந்திய வைசிராயிடமும், போர்த்துக்கால் மன்னவரிடமும் பிரியாது பண்ணினான். அவர்களும் அன்னவனுடைய முறைப்பாட்டைக் கவனித்தார்களில்லை. ஆகையால் பரதகுலாதிபதி கோபங்கொண்டு கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்குமென்னும் எண்ணத்தோடு முன்சொன்ன கவர்னரையும், சேனைத்தலைவனையும் தலை வேறு, உடல் வேறாகும்படி வெட்டி, மற்றவர்களை நடுநடுங்கும்படி செய்யென்று தனது சேனைத்தலைவனுக்குக் கட்டளையிட்டான். பரதகுலபாண்டிய சேனைத்தலைவனாகிய ஜொவாம் அந்தோனி எத்வார்த்து என்பவன் அரசனின் கட்டளையை நிறைவேற்றிப் போர்த்துக்கீசரைத் திடுக்கிடச்செய்தான்.

இது சேதி லிஸ்போனுக்கெட்டியபோது மாக்ஷிமை பொருந்திய நாலாவது ஜொவாம் என்னும் அரசர் உடனே பரதகுலபாண்டிய அரசனைக்கைது செய்தனுப்பும்படி கோவையிலிருந்த இந்திய வைசிராய்க்குக் கட்டளையிட்டார்.

இந்திய வைசிராய் தம்மிறைவரின் ஆக்யாபனைப் பிரகாரம் ஓர் கப்பற் சேனையை யாயத்தப்படுத்தி, தூத்துக்குடிக்குச் சென்று பரதகுலாதிபதியைக் கைது செய்து, அவனைப்போர்த்துக் காலரசரு க்குமுன்னே கொண்டுபோய் நிறுத்தும்படி அக்கப்பல் சேனைத்தலை வனாகிய கொஸ்தந்தீனு நொரோனா என்பவனுக்குக் கற்பித்தார்.

அந்தத்தளபதியானவன் தூத்துக்குடியை யடைந்து, பரத ரோடு போராடி, அவர்களுடைய அரசனைப்பிடித்து, அவனுடைய கைகளுக்கு வெள்ளி விலங்கிட்டுக் கப்பலிலேற்றிக்கொண்டு போய்ப் போர்த்துக்கால் தேசத்து மன்னருக்கு முன்னே நிறுத்தினான். அப்போது அவ்வரசர் எம்மிறைவனை நோக்கி: நீர் கவர்னரையும், சேனைத்தலைவனையுங் கொன்ற காரணமென்னவென்று வினவினார். அவருக்கு உத்தரமாக எம்பெருமான், போர்த்துக்காலதிகாரிகள் தன்னாட்டில் செய்துவந்த அக்கிரமங்களை யெல்லாம் வரிசையாய் எடுத்துச் சொல்லியபின், இவைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அவர்களை எச்சரிக்கும்படி தூத்துக்குடியிலிருந்த கவர்னருக் கும், சேனைத்தலைவனுக்கும் பன்முறை நேரிலும், எழுத்தின் மூல மாகவும் தெரிவித்தேன். அவர்கள் நான் சொல்லியவைகளைக் கவ னித்தார்களில்லை. ஆகையால் இது விஷயத்தைப்பற்றி இன்னின்ன தேதிகளில் இந்தியாவின் வைசிராய்க்கும், மாக்ஷிமை பொருந்திய மன்னவராகிய உமக்கும் எழுதித்தெரிவித்தேன். அந்த விண்ணப் பங்களை வைசிராயாவது, நீராவது கவனியாததால் என்னுடைய நாட்டில் எனக்கும், என்னுடைய பிரசைகளுக்குமுள்ள உரிமை யைப் பாதுகாத்துக்கொள்வதற்காக கவர்னரையுஞ் சேனைத்தலை வனையும் வெட்டிக் கொல்ல உத்தரவளித்தேன். அப்படி அவ்விரு வர்களையும்வெட்டிக்கொன்றது, எங்களுக்கும் போர்த்துக்கா லரசாங் கத்தாருக்கும் 1532-ம்ஆ நடந்தேறிய உடன்படிக்கையின்படி நியாயமேயொழிய, அநியாயமில்லை யென்று பதில் சொன்னான்.

பரதகுலத் திறைவனது வாய் மொழியைக் கேட்டபோது போர்த்துக்காலரசர் எம்மிறைவனின்மேற் குற்றமில்லை யென்று கண்டு, அம்மதிகுலமன்னவனைக் கைதிப்படுத்தியதற்காக அவனிட த்தில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதுமன்றி, அவனுக்கு அந்நாட்

டின் அபூர்வப் பொருள்களையும், தம்முடைய ஞாபகச் சின்னமாகப் பச்சைக்கறக்களழுத்திய வோர்பொற்குருசையும் வெகுமதியாகக் கொடுத்து, மிகுந்தமரியாதைகள் செய்து, பின், பரதர் தேசத்திற்குப் பயணப்படுத்தி யனுப்பிவைத்தார்.

வேப்பமாலையணிந்த வெண்மதிக்குலத் திறைவனுகிய மாக்ஷிமை பொருந்திய எம்மரசன், திருமந்திர நகர்வந்துசேர்ந்த மூன்றும் மாதமாகிய 1641ம்௵ ஆவணிமீ 28௳ பரதநாட்டைத் தனது புத்திரனுகிய தொன் சவியேர் மிக்கேல் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்மபாண்டிய னென்பவனுக் கொப்புவித்துப் பரலோக பிராப்தியானுன்.

---

# சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்சவியேர் மிக்கேல் தெக்குரூஸ் பீரிஸ் பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

மின்னெளி பொருந்திய வாளாயுதத்தையுடையமீனவர்கோமானுகிய இவன், தன்னுயிர்போல் மன்னுபிரஜைத்தையும் பாதுகாத்து, தனது ஏக புதல்வியாகிய தோனு ஆனுள் யரிய கிறீஸ்தியானுள் தெக்குரூஸ் பீரிஸ் என்னும் மாதைத் தனது சகோதரியின் புத்திரனுகிய சவியேர் ஹென்றி கொறேயா என்பவனுக்குத் திருமணமுடித்து, தன் மகுடத்தையு மவனுக்குத் தந்து, தான் ஆசனமேறிய ஐந்தாம் வருடமாகிய 1646ம் ஆண்டு மரணமானுன். இவ்வண்ணம் பீரிஸ் குடும்பத்தில் நான்கு மன்னர்கள் அரசு செலுத்தியபின், அவ்வரச பட்டமானது கொறேயா குடும்பத்துக்கு மாறியது.

---

# சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்சவியேர் ஹென்றி தெக்குரூவ்ஸ் கொறேயா பரத வர்மபாண்டியனின் அரசியல்.

குளிர்ச்சி பொருந்திய வெண்மதிக் குலத்திறைவனுகிய இவன் தன் நல்லம்மானுடைய மகுடத்தைப்பூண்டு நீதி, நிறை தவறாமல் செங்கோல் செலுத்திவருங் காலத்தில், செல்வம் பொருந்திய போர்த்துக் கீசரின் கீழ் நாட்டு வர்த்தக விருத்தியைக்கண்டு பொறாமை கொண்ட உலாந்தர் இந்தியாவிலும், அதைச்சேர்ந்த தீவுகளிலும் வியாபாரம் செய்யக் கருதி, அதற்காகவோர் வர்த்தக சங்கத்தை யேற்படுத்தி வியாபாரத்தை நடத்திவந்தார்கள். இந்த வர்த்தகக் கூட்டத்தார் தங்களுக்குத் தலைநகரமாக உலாந்தஅரசாங்கத் தாருக்குக் கிழக்குத் தேசங்களிலுள்ள காணியாட்சிகளுக்கெல்லாம் தலைநகரமாய் விளங்கிய ஜாவா தீவின் வடகரையோரமாயுள்ள பத்தாவியா என்னும் நகரத்தைத் தெரிந்து கொண்டார்கள். இவர்கள் முகாந்தரமின்றிப் போர்த்துக் கீசரோடு அடிக்கடி சண்டையிட்டு வந்தார்கள்.

உலாந்தருடைய சேனுதிபதியாகிய (WM. Jacobson caster) வில்லியம் ஜாக்கப்சன் காஸ்டர் என்பவன் இலங்கையிலடைந்த வெற்றியானது பரதர்நாட்டிலும்அவர்கள்கால்வைக்கக்காரணமாயிற்று.

அஃதெப்படியெனில் :—ஆதிகாலந்தொடங்கி இந்தியாவிலும், இலங்கையிலும், பாரஸீகத்திலும் பரதகுலத்தவரே முத்துச்சலாபத்தைக் கட்டி வந்தார்கள். அவர்களாலெடுக்கப்படும் முத்துக்களே உலகத்தில் முதல்தரமானது. பரதர் இலங்கையில் மறிச்சுக்கட்டி, கொண்டச்சி, குதிரைமலை, மன்னார் முதலிய விடங்களிலும், இந்தியாவில் பவித்திர மாணிக்கநகர், தூத்துக்குடி,காயல்,வீரபாண்டியன் பட்டணம், கன்னியாகுமரி, திருவனந்தபுரம் முதலிய விடங்களிலும் குளிக்கப்படும் முத்துக்களின் வருமானத்தை விசாரித்தறிந்த, வில்லியம் ஜாக்கப்சன் காஸ்டர் என்னும் உலாந்தருடைய சேனுதிபதி எவ்விதமும் அந்தச் சலாபத்துறைகளைக் கைக்கொள்ளவேண்டு

மென்று கருதி, எழுகடற்றுறைக்கும் அதிபனாகிய பரதகுலாதிபதி வாசம்செய்யும் தூத்துக்குடியில் ஓர் கூட்டம் கப்பற்சேனையோடு 1646ம் ௵ வந்திறங்கினான். எம்பெருமானான தொன் சவியேர் ஹென்றி தெக்குரூஸ் கொறேயா பரதவர்ம பாண்டியன் ஆசனமேறி இன்னமும் ஐந்து மாதங்கள் பூர்த்தியாகவில்லை. அதற்குள்ளாக உலாந்தரோடுயுத்தம் செய்ய நேரிட்டது. அந்தக்காலத்தில்பரதருடைய தேசத்திலே போர்த்துக்கீஸ் வீரர்கள் மிகவும் சொற்பமாயிருந்தார்கள். பாண்டியர்கோன் தன்னால் கூடிய அளவு சேனைகளைத் திரட்டி உலாந்தரோடுயுத்தம் செய்து அவர்களை ஜயிக்கமாட்டாமல் பின்னடைந்தான். உலாந்தர் தூத்துக்குடியைஜயித்தபின், அங்கேயிருந்த போர்த்துக்கீசரை அப்புறப்படுத்திவிட்டு, பரதர் போர்த்துக்கீசரோடு பண்ணிக்கொண்டிருக்கும் உடன்படிக்கையை ரத்துச்செய்துவிட்டு, தங்களோடு ஓர் புதிய உடன்படிக்கை செய்து கொள்ள வலுவந்தம் பண்ணினார்கள். செழியர்கோமான் அதற்குச் சம்மதியாததால் பரதருக்கும், உலாந்தருக்கும் மீண்டுங் கலகமுண்டானது. உலாந்தரோ வெனில், பரதகுலத்தவரையும், அவர்களனுசரித்து வரும்ரோமான் கத்தோலிக்கு மார்க்கத்தையும் அடியோடு தொலைத்துப் போடவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டார்கள்.

உலாந்தருடைய தீர்மானத்தையறிந்த கைதவன் அர்ச் - சின்னப்பருடைய தேவாலயத்தில் சங், பீ. மிக்கேல்வாஸ்என்னுங் குருவானவரால் பரதர் மாதாவென்னும் நாமத்தோடு ஸ்தாபிக்கப்பட்ட பரிசுத்த பனிமயமாதா சொரூபத்தையும், அர்ச் - சின்னப்பர் (சம்பாவுல்) சொரூபத்தையும், போர்த்துக்கீசருடைய கோட்டைக்கோவிலில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த அர்ச் - மாதரசிமாதா, அர்ச் - அந்தோனியார், அர்ச் - ராயப்பர் (சம்பேதுரு) சொரூபங்களையும் எடுத்துக்கொண்டுபோய், தூத்துக்குடிக்குமேற்கே போர்த்துக்கீசருடைய ஆதீனத்துக்குட்பட்ட சிவன்தாள் குளத்தில் அர்ச் - ஸ்நாபக அருளப்பருடைய கோவிலில வைத்தான். அப்பால் மூன்றுவருடங்கள் சென்றபின், உலாந்தர் சிவன்தாள்குளத்தையும் பிடித்துக்கொண்டமையால், பரதகுலாதிபதி தூத்துக்குடியிலிருந்து கொண்டுபோன சொரூபங்களோடு அங்கேயிருந்த அர்ச் - ஸ்நாபகஅருளப்பருடைய சொரூபத்தையு மெடுத்துக்கொண்டுபோய்ப் பாண்டியருடைய பூர்

வீரராஜதானியாகிய கொற்கைநகரில் தேவாலயத்தில்ஸ்தாபித்தான். பதிதர்களான உலாந்தரோவெனில், தூத்துக்குடியிலிருந்த அர்ச் - சின்னப்பர்கோவிலையும், அர்ச் - மாதரசி மாதாகோவிலையும், சிவன்தாள்குளத்திலிருந்த அர்ச் - ஸ்நாபக அருளப்பர்கோவிலையுமுடைத்துத் தரையோடு தரையாக்கினார்கள். உலாந்தர் பரதர்தேசத்திலே பத்துவருஷகாலமாய்க் கொடுங்கோலோச்சியபின், 1656ம் வரு அந்நாட்டைப் போர்த்துக்கீசருக்கே ஒப்புவித்தகன்றார்கள். வாசனை பொருந்திய வேப்பமாலையணிந்த வெண்மதி குலதிலகனாகிய தொன் சவியேர் தெக்குரூஸ் கொறேயா பரதவர்மபாண்டியன் என்னும் அரசன் தூத்துக்குடியிலும், சிவன்தாள் குளத்திலுமிருந்து கொற்கைக்குக் கொண்டுபோன அர்ச் - சொரூபங்களையெல்லாம் திரும்பவும் தூத்துக்குடிக்குக் கொண்டுவந்து தனது மாளிகையின் மேலுப்பரிகையில் ஸ்தாபித்தான்.

அப்பால் அவ்வரசன் பரதர் மாதாவென்னும் பரிசுத்தபனிமயத்தாய்க்கோர் கோவிலைக் கட்டிமுடித்து, ஓர் சித்திரவிரதத்திலே அர்ச் - பனிமயமாதா சொரூபத்தையும், மற்ற அர்ச்சியசிஷ்டவர்களுடைய சொரூபங்களையும் எழுந்தருளச்செய்து, திருமந்திரநகரைச் சுற்றிவந்து தேவாலயத்திலே ஸ்தாபித்து, அந்த ஆலயத்தையும் பிரதிஷ்டைசெய்வித்தான். இச்சம்பவமானது 1658ம் ஆண்டு நிறைவேறியது.

அதேவருஷத்தில் போர்த்துக்கீசர் தூத்துக்குடி, யாழ்ப்பாணம், மன்னார்முதலியவிடங்களையெல்லாம், உலாந்தருக்குச்சமாதானத்தோடொப்புக்கொடுத்தார்கள். பரதகுலாதிபதி பரதநாட்டிலும், இலங்கையிலும் குளிக்கப்படும் சலாபத்தினுடைய வருமானத்திலிருந்து மூன்றிலொருபாகத்தை உலாந்தருக்குக் கொடுப்பதாக அவர்களோடு ஓர் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான்.

திருமந்திரநகர் தேவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் திவ்ய பனிமயத்தாய்: எழுகடற்றுறைகளில் வாழும் எமது திங்கள்கோத்திர குலமகராகிய பரதருக் கபயந்தந்தாதரித்து, அன்றுமுதலின்றளவு மநேக புதுமைகளைச் செய்துவருகின்றாள்.

பரவைபடியும் திருப்பாதங்களையுடைய திங்கள்குலக் கோமாஞகிய எம்மிறைவன், அநேக சலாபங்களைக்கட்டி அபரிமிதமான செல்வத்தைப்பெற்று, அநேக தானதர்மங்களைச்செய்து, அர்ச்-பனிமயத்தாயின் ஆசிர்வாதத்தைப்பெற்று, இருபத்தைந்துவருடம் தர்மசெங்கோல்செலுத்தி, தனது புத்திரஞகிய தொன் ஜோசப் ஹென்றி தெக்குரூஸ் கொறேயா பரதவர்மபாண்டியனுக்குத்தனது மணிமுடியைத்தந்து 1671ம் ஆண்டு மரணமாஞன்.

## சிஞ்ஞோர். சிஞ்ஞோர் தொன்ஜோசப் ஹென்றிதெக்குரூஸ் கொறேயா பரத வர்மபாண்டியனின் அரசியல்.

மாரனுக் கொப்பாகிய அழகையும், குபேரனுக்கொப்பாகிய சம்பத்தையும், சந்திரனுக்கொப்பாகிய கீர்த்தியையுமுடைய இவ்வரசன், சந்திரகுலத்தவராகிய பரதருக் கிறைவஞக ஆசனமேறிய காலத்தில் "வேதமோதிய வேதியர்க்கோர்மழை, நீதிமன்னர் நெறியினுக்கோர்மழை, காதல்மங்கையர் கற்பினுக்கோர்மழை" என்றவாறு மாதமும்மாரிபெய்து, வருஷமுப்போகம் விளைந்து பரதநாடு செழித்துக் குடிகள்யாவரும் க்ஷேமமுற்றிருந்தார்கள்.

கொக்கரைக்கிரீடம்பூண்ட கோமாஞகிய இவ்விறைவனுக்குச் சகலபாக்கியங்களுங் குறைவில்லாதிருந்தும், புத்திரசந்தானமில்லாமையால் மனக்கவலைகொண்டு 1680ம்ஞு கர்த்தருடைய நித்ய சமாதானவீட்டையடைந்தான்.

## சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன் எஸ்தேவான் தெக்குரூஸ் பூபாலராய பரத வர்ம பாண்டியனின் அரசியல்.

மீனவர்கோமாஞன தொன் ஜோசப் ஹென்றி தெக்குரூஸ், கொறேயா பரதவர்மபாண்டியன் புத்ரசந்தானமில்லாமலிறந்தமையால், பாண்டியநாட்டுப்பட்டங்கட்டிமார்களும், அடப்பன்மார்களும்,

பரதகுலபிரபுக்களும் திருமந்திரநகரில் ஓர் மகாசபையைக்கூட்டி மரணமான எம்மிறையவனின் சகோதரியின் புத்திரனும், சகலசற்குணங்களுமொருங்கே வாய்ந்தவனும், பரதநாட்டின் பொக்கிஷதாரியுமாகிய எஸ்தேவான் பூபாலராயன் என்னும் புருஷோத்தமனைப் பாரவைசூழுலகில்வாழும் பௌரவர்க்கிறைவனாகத் தெரிந்து அவனை சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன் எஸ்தேவான் தெக்குரூஸ் பூபாலராய பரதவர்ம பாண்டியனென்னும் பெயரோடு ஆசனத்தேற்றினார்கள்.

இவ்விறைவன் தனது ஏக புதல்வியான தோனா ஆனாள் மரிய அம்புரோசாள் தெக்குரூஸ் பூபாலராயாள்என்னும் மாதை உள்ளூர அடப்பனாரின் குமாரனாகிய கபிரியேல் கோமஸ் என்னும் பிரபுவுக்கு மணம் புரிவித்து, தானாசனமேறிய ஆறுமாண்டு (1686ம் வரு) மரணமாயினமையால், இவ்விறைவனின் மருமகனான கபிரியேல் கோமஸ் என்னும் புருஷோத்தமனை சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்கபிரியேல் தெக்குரூஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியனென்னும் பெயரோடு சிம்மாசனமேற்றினான்.

## சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன் கபிரியேல் தெக்குரூஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

பொதிய வெற்பனாகிய இவன் புதனின் புத்திரசிகாமணிகளாகிய பரதவம்ச சிரோமணிகளுக்கு அரசனாக ஆசனமேறிய ஏழாமாண்டு (1693ம் வரு மாசிமீ 4ம்உ) போர்த்துக்கா லிராஜ்யத்தில் ராஜவம்சத்திற் பிறந்து சேசு சபையிற் சேர்ந்து குருப்பட்டம் பெற்றவரான சங்கைக்குரிய ஜொவாம் ஹெக்தோர் தெபிரித்தோ பெரைரா வென்னும் அருளானந்த சுவாமிகள் சேதுநாட்டில் ஓரியூரில் வேதத்திற்காகத் தமது பிராணனைக் கொடுத்தார்.

மாக்ஷிமை பொருந்திய போர்த்துக்கா லரசாங்கத்தாருடைய உலக ஆட்சியானது பரதநாட்டில்நின்றெடுபட்டுப்போனபோதிலும், அவர்களுடைய மார்க்க ஆட்சியானது இன்றிருப்பதைக் காட்டிலும் அன்று நூறுமடங் கதிகம் செல்வாக்கைப் பெற்றிருந்தது. பரதகு

டைய தேசத்திலேயுள்ள கோவில், குருசபைகளை மேற் பார்க்கவும், அவைகளின் வருமானத்தைக் கையாடி அந்நாட்டிலுள்ள குருக்களைப் போஷிக்கவும், தேவாலயத்தின் ஊழியத்திற்கு வேண்டிய பணிவிடைக்காரர்களை நியமிக்கவும், ஆகாத கிறிஸ்தவர்களைத் தண்டிக்கவும் ஓர் அதிகாரப் பத்திரத்தை, முப்பது வருஷ காலமாய் மதுரை ராஜ்யத்திலுழைத்து வந்தவரும், அப்பால் போர்த்துக்காலி ராஜ்யத்தினின்று கிழத்திசைக் கனுப்பப்படும் குருக்களுக்கு அதிசிரேஷ்டருமாயிருந்த சங்கைக்குரிய பால்த்தசார் தெ. கோஸ்தா என்னும் குருவானவருடைய வேண்டுகோளின்படி மாக்ஷிமை பொருந்திய போர்த்துக்கால்மன்னவராகிய இரண்டாவதுபேதுரு(Peter II) என்பவர் பரதர் கோமானுக்கருளினர்.

மன்னர் புகழும் தென்னவர் கோமானாகிய இவன் மார்க்கவரசாட்சியிலும், உலக அரசாட்சியிலும் மகா ஞானவானும் நிறைந்த தர்மவானுமாய் விளங்கி, பதினைந்து வருஷம் செங்கோல் செலுத்தி, மகுடத்தைத் தனது மைந்தனாகிய தொன் சூசை லூவிஸ் தெக்குரூஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியனென்பவனுக்குத் தந்து, 1700ம் ஆண்டு பரமபதமடைந்தான்.

## சிஞ்ஞோர் சிஞ்ஞோர் தொன் சூசை லூவிஸ் தெக்குரூஸ்கோமஸ் பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

குமரிச் சேர்ப்பனாகிய இவ்விறைவன் தன் பிதாவின் மகுடத்தைத் தாங்கி அறிவுடைமை, அன்புடைமை, அருளுடைமை, பொருளுடைமை, பொறையுடைமை, வலியுடைமை, ஒழுக்கமுடைமை முதலியவற்றைப் பெற்று கடுஞ்சொல், அழுக்காறு, சினம், பேராசை, பொய்மை முதலியவற்றை நீக்கிப் பெரியோர்கள் துதிக்கும் நன்னெறிகளிற் சிறப்புற்று, ஸ்ரீ பரதர் மாதாவின் பாதாம்புஜங்களைத்தனது சிரமேற் கொண்டு பதினறு வருஷம் அரசு புரிந்து, பரதநாட்டைத்தனது புத்திரனாகிய தொன் கபிரியேல் ஆரோக்கியம் தெக்குரூஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியனென்பவனுக் கொப்புவித்து, 1716ம் வூ மரணமானன்.

# சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்கபிரியேல் தெக்குருஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

குளிர்ச்சி பொருந்திய நெடிய சமுத்திரத்தையும், சமுத்திரக் கரையையுமுடைய உசிதனாகிய இவன் அரசு புரிந்து வருங்காலத்தில், பிராஞ்சு ஈஸ்ட் இந்தியா கம்பேனியாருடைய அரசாட்சிக்குட்பட்ட சந்ரநாகூரில் வேதம் போதிக்க தூலூஸ் சேசு சபைக்குருக்கள் முதலாவதாக 1733ம் வருஷம் கம்பேனியாருக்கு விண்ணப்பம் செய்து கொண்டார்கள்.

ஒரிசா, வங்காளம், பெகு, கருமணற்கரை முதலான தேசங்களெல்லாம் 1606ம் வருஷம் முதல் திருமயிலை மேற்றிராணியாருடைய ஞானவாளுகைக்குட்பட்டிருந்தமையால், பிராஞ்சுகம்பேனியார் ஷ சேசுசபைக் குருக்களுடையவிண்ணப்பப் பத்திரத்தை, திருமயிலைநகரின் எட்டாவது மேற்றிராணியாராகிய மகா சங்கைக்குரிய தொன் சூசை பிஞ்ஞேரா என்பவர்க்கனுப்பினார்கள். அவர் அதைப்பார்வையிட்டு சில கண்டிப்பான நிபந்தனையின் பேரில் 1736ம் வருஷம் ஜனவரிமீ 16ம் உ அங்கீகாரம் செய்தார்.

குருகுலக் கோமானாகிய எம்மிறைவன் அநேக சலாபங்களைக்கட்டி, அபரிமிதமான சம்பத்தைப் பெற்று, ஆதிபரத சக்கரவர்த்திக்கொப்ப பரத நாட்டுக் குடிகளைப் பாதுகாத்து, செங்கோலைத் தன்சேயனுக் கொப்புவித்து, 1736ம் வருஷம் பாக்கியமான மரணத்தையடைந்தான்.

---

# சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்மிக்கேல் பேதுரு தெக்குருஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

அம்புலியின் குல அரசனாகிய இவன் தன் தந்தைக்கொப்ப தானும் வெகு கெம்பீரமாய் அரசியற்றி வருங்காலத்தில், மாக்ஷிமை

பொருந்திய இங்கிலீஸ்காரர் மசமது ஆலி என்பவனைத் தக்ஷணத்து க்கு நவாபாக ஏற்படுத்தி, அவனுக் குதவிபுரிந்து வந்தார்கள். இவன் டன்முறை பரதரைச்சருவித்,தோல்வியுற்றதனால், உரோசங்கொண்டு பலமான யுத்த எத்தனங்களுடன், கடைசியாக 1747ம்ஆு தூத்துக்குடியை வடபுறமாய் வந்து தாக்கினன்.

இந்த யுத்தத்தின்போது உலாந்தர் பரதருக்குதவிசெய்ய மறுத்துவிட்டார்கள். இதற்குக் காரணம் கத்தோலிக்கர்களான பரதர், உலாந்தருடைய புரோட்டஸ்டாண்டு மார்க்கத்தைக் கைக்கொள்ள மறுத்ததேயாம்.

பரதரோ தைரியத்தைக் கைவிடாமல் மகமதுஆலியை யெதிர்த்தார்கள். பரதர் தேசத்தின் நாலாபக்கங்களிலுமிருந்து பரதருக்குப் படைத் துணைவந்துகொண்டே யிருந்தது. இரண்டுநாளாக மகமதுஆலியோடு யுத்தம் செய்து களைத்த பரதசேனைத்தலைவனாகிய சூசை அந்தோனி மொந்தேர் என்பவன்,தனது பசியையாற்றிக்கொள்ளஅகத்திற்குச் சென்றபோது, அவன் மனைவி அவனைச் சற்றுநேரம்வெறிக்கப்பார்த்து: ஓ, வீரப்பிரதாபம் பொருந்தியஎம்மனா! நீவிர் சத்துருக்களை ஜெயிக்காது உம்முடன் வந்த வீரர்களை யுத்தகளத்தில்விட்டு அன்னமருந்த வந்தபடியால் நானுமக்கு அகப்பையைக் கையிற் பிடித்துச் சோறு போடமாட்டேனென்று கூறினாள். அப்போது சேனைத்தலைவன் தன் மனைவியின் க்ஷத்திரியத் தன்மையைக் கண்டு சந்தோஷமுற்று, அவளைநோக்கி: ஓ, பெண்ணே! உன்னெண்ணப்படியே இதோசென்று எதிரியைவென்று அதன்பின் வந்து அன்னமருந்துகிறேனென்று சொல்லிப் போர்முகஞ்சென்று, ஆலியைத் துரத்தியோட்டி அவன் சேனையை அதம்பண்ணி, மிஞ்சியவர்களைக் கெஞ்சும்படி சிறைசெய்து, மனைக்கேகி மனைவியினிடம் அன்னம் வாங்கிப்புசித்தான். அதன்பின் மகமதுஆலி பரதர்தேசத்தின்மீது படையெடுக்க ஒருபோதும் துணிந்தவனல்ல.

வாசனைபொருந்திய வேப்பமாலை யணிந்த கைதவனாகிய எம்பெருமான் தனது குமாரத்தியாகிய தோனமரிய ஆனாள் ஐடா (Edda) தெக்குரூஸ் கோமஸ் பூபாலராயாள் என்பவளை, கஸ்பார் அந்தோனிக்குரூஸ் வாஸ்விக்ரோரியா என்னும் மீனவனுக்கு மண

முடித்து, அவனுக்கே 1750-ம்ஹூ தன்து மணிமுடியையுஞ் சூட்டித் தானிளைப்பாறினன்.

இவ்வண்ணம் கோமஸ் குடும்பத்தில் நாலு மன்னர்களாண்டபின் அரசுரிமை வாஸ்கோத்திரத்திற்கேகினது.

## சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்கஸ்பார் அந்தோனி தெக்குரூஸ் வாஸ் விக்றோரியா பரதவர்மபாண்டியனின் அரசியல்,

புகழ், கல்வி, வலி, வெற்றி முதலாய பதினாறு பேறுகளையும் பதினாறு கலைகளாய்க்கொண்ட வெண்மதிக் குலத்திறைவனாகிய இவன் ஜொவாம் பிலிப்புவாஸ் என்பவனுடைய சிரேஷ்டகுமாரன். இந்தவாஸ் குடும்பத்தாருடைய வாசஸ்தானம் தாமிரபருணி நதிக்கரையின் சங்கம ஸ்தானத்திலிருக்கும் பின்னைக்காயல். இவன், ஞானம், கல்வி, கேள்வி, தானம், பொறை, ஈவு, இரக்கம், தேவதாபக்தி முதலியவை யாவும் ஒருங்கே வாய்ந்த உத்தமன். கார் நிறமேனியையும், ஆண்சிங்கத்தின்பார்வையையுமுடையவன். இவன் பரதகுலாதிபனாய் விளங்கிய தொன்மிக்கேல் பேதுருதெக்குரூஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியனென்பவனுடைய குமாரத்தியை மணந்து சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்கஸ்பார் அந்தோனி தெக்குரூஸ் வாஸ் விக்றோரியா பரதவர்ம பாண்டியனென்னும் பெயரோடு செழியர்க்கிறைவனாகச் சிம்மாசனமேறினன்.

இவ்விறைவன் அரசுபுரிந்து வருங்காலத்தில் தலைமுறை தலைமுறையாய் இலங்கைத்தீவில் வர்த்தகஞ்செய்துவந்த பரதவர்க்கு இக்கட்டுண்டானது. அஃதெவ்வாறெனின்; ஜெரார்ட்வான் விரிலாந்து (Gerard Van Vreeland) என்பவன் உலாந்திலிருந்து இலங்கைத் தேசாதிபதியாய்க் கொழும்புவந்து சேர்ந்தபின் இலங்கையில் ரோமான்கத்தோலிக்கு மார்க்கத்தை அடியோடு தொலைக்கவெண்ணிக் “ கத்தோலிக்கர் பொதுக்கூட்டங்கள் கூடப்படாதென்றும், அவர்கள் கத்தோலிக்குக் குருக்களைக்கொண்டு தேவ திரவிய அநுமானங்களை நிறைவேற்றப்படாதென்றும், உலாந்தருடைய எல்

லைக்குள் கத்தோலிக்குக் குருக்களாவது உபதேசிமார்களாவது இருக்கப்படாதென்றும்" கட்டளையைப் பிறப்பித்து "அதை மீறுகிறவர்களுக்கு முதல் தடவைக்கு ஐம்பது இறயால் (ஒரு இறயால் என்பது பன்னிரண்டணு) அபராதமென்றும், இரண்டாவது தடவைக்கு நூறு இறயால் அல்லது ஆறுமாதம் மறியல் என்றும், கத்தோலிக்குக்குருமார் உலாந்தருடைய எல்கைக்குள்இருப்பதாகக் காட்டிக்கொடுப்போருக்கு ஐஞ்ஞூறு இறயால் இனுமளிப்பதாகவும்" 1753-ம்ஆ ஓர் சட்டத்தை யுண்டுபண்ணி, அதை 1754-ம்ஆ ஜனவரிமீ முதல் தேதி முதல் அனுசரணைக்குக் கொண்டுவந்தான்.

இலங்கைக் கவர்னருடைய கொடிய சட்டத்திற்கஞ்சிக் கத்தோலிக்கரான பரதர் வர்த்தகவிஷயமாய் இலங்கைக்குச் செல்லுவதை நிறுத்தினர்கள். பரதர் தேசத்திலே நின்று நவதானியங்களாவது, துணிமணிகளாவது, ஆடுமாடுகளாவது (கப்பல்களில்) இலங்கைக்குப்போகாமல் தடைப்பட்டமையால் இலங்கையில் பெரும் பஞ்சமுண்டாயிற்று.

ஜெரார்ட்வான் விரிலாந்து என்பவனுக்குப் பதிலாக ஹூபர்ட் ஜேன் பாரன் வானெக் என்பவன் 1762ம் ஆ நவம்பர்மீ 11ம்உ கொழும்புவந்து சேர்ந்தான். இவன் 1763ம்ஆ கண்டி நகரைக்கைக் கொண்டபோது அங்குண்டாயிருந்த ஊர்க்கலகத்தையடக்குவதற்குக் கத்தோலிக்குக் குருக்களுடைய விசேஷ உதவி வேண்டியதிருந்தமையால் அவன் கத்தோலிக்கரைச் சமாதானம் பண்ணிக்கொண்டான். அத்தோடு இலங்கையில் கத்தோலிக்கருக்குண்டாயிருந்த இக்கட்டு நிவாரணமாயிற்று. பரதர் கைநெகிழ விட்டிருந்த வர்த்தகத்தை இலங்கையில் மீண்டும் ஆரம்பித்து நடத்திவந்தார்கள்.

அந்தோனி மோயார்த் என்பவன் யாழ்ப்பாணத்தில் மேலதிகாரியாயிருந்த காலத்தில் இவன் மன்னாரில் வசித்து வந்த பரத குலத்தவர்க் கென்று ஓர் புதிய சட்டத்தை யுண்டு செய்து அதை 1765ம் ஆ பகிரங்கப்படுத்தினன். அதில் "மன்னாரில் வசிக்கும் பரதர் உலாந்த அதிகாரியினுடைய உத்தரவின்றிக் கடல் படுதிரவியங்களைக் கைக்கொள்ளப் படாதென்றும், உத்தரவு பெற விரும்புவோர் வருஷமொன்றுக்கு இருபது இறயால் முன் பணங்கட்டி

யாழ்ப்பாணம் கொவான் மெந்து (Government) அதிகாரியினிடத்தில்அநுமதிச்சீட்டுப்பெற்றுக்கொள்ளலாமென்றும்" கண்டிருந்தது. இந்தப்புதிய சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிய மனதற்றவர்களான பரதகுலத்தார் தாங்கள் அவ்வூரில் பாரம்பரையாய் ஆண்டு அநுபவித்துவந்த வீடு, தோட்டம், துரவு முதலியவற்றை அதோகதியாய்ப் போட்டுவிட்டு தங்கள் பிதாமாதாக்களின் ஜெனன நாடாகிய பரதர் தேசத்திலே வந்து குடியேறினார்கள். ஐமென் வில்லியம் பால்க் (Iman Willem Falck) என்பவன் இலங்கைக்குத் தேசாதிபதியாய் வந்தபின் இக்கொடிய சட்டத்தை ரத்துச் செய்தமையால் மறுகரைக் கேகிய மன்னார் ஊரவர்கள் திரும்பி அவ்வூரிற் போய்க் குடியேறினார்கள்.

மீனவர் கோமானான எம்மிறைவன் இருபத்தொன்பது வருஷம் பரதர் தேசத்தைப்பராக்கிரமத்தோடாண்டுசெங்கோலேத்தன் குமாரனாகிய தொன்கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் கோமஸ் பரதவர்மபாண்டிய னென்பவனுக் கொப்புவித்து 1779ம் வூ நித்யசமாதான வீட்டை யடைந்தான்.

# சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் கோமஸ் பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

கூடற் கோமானாகிய இவன் தனது வயதுக்கேற்ற கல்வியும், க்ஷத்ரிய குலத்திற்குரிய உதாரமும், அரசியற்குரிய தந்திரமுமுடையவன். இவனுடைய காலத்தில் பரதர் தேசமெங்கும் அமரிக்கையும், சாமாதானமு முண்டாயிருந்தது. அக்காலத்தில் தூத்துக்குடிக்கு மேற்கே பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள பாஞ்சாலம் குறிச்சியைக்கட்டப்பொம்ம நாய்க்கன், ஊமைத்துரை என்பவர்களாண்டு வந்தார்கள். மாக்ஷிமை பொருந்திய ஆங்கிலேயரின் தளகர்த்தனாகிய கர்னல் அகினியூ என்பவன் 1799ம் வூ பாஞ்சாலம் குறிச்சியைக் கைப்பற்றிய காலத்தில் அங்கே நின்று தப்பியோடிய

ஊமையன் திருமந்திர நகரையடைந்து என் கோமானிடத்தில் சில காலம் அடைக்கலம் புகுந்திருந்து அப்பால் சிவகங்கைக்குச் சென்றான்.

எம்மிறைவனின் மாதாவாகிய தோனு மரியஆனாள் ஐடா தெக்குரூஸ் கோமஸ் பூபாலராயாள் 1800ம் ஆண்டு ஆவணி மீ 28ம்வ மரண மானாள்.

சேர்ப்பர் கோமானாகிய எம்பெருமான் பரிசுத்த பனிமயத் தாய்க்கு நாற்பதினாயிரம் பொன்வராகன் செலவிட்டு ஓர் சித்திரஇரதத்தைச் செய்வித்து அதை முதன்முதல் 1806ம்வரு ஆகஸ்றுமீ 5ம்வ ஓட்டுவித்து ஆத்தாளின் ஆசீர்வாதத்தைப் பெற்று ஆண்மையோடரசியற்றித் தன்னொளிர் மகுடத்தைத் தனது புத்திரனுக் கொப்புவித்து 1808ம்வரு மரண மானான்.

# சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்கஸ்பார் அந்தோனி தெக்குரூஸ் வாஸ் கொறேயா பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

பரவைபணியும் திருப்பாதங்களையுடைய பஞ்சவனாகிய இவன் சுயபாஷையில் பூரண பாண்டித்யமுடையவன். பரதர் தேசத்தின் பொக்கிஷதாரியாகிய சூசை அந்தோனிபல்தான் என்பவனுடைய மகள் இவ்விறைவனின் மனைவி. கல்விப்பொருளிலும், செல்வப் பொருளிலும் மிகச்சிறந்தவரான முத்துக்கண்ணுச்செட்டியார் இவ் வேந்தனின் முதன் மந்திரி. மணவாபுரி தொமாசவியேர்லேயோன் அடப்பனாரின் மைந்தனாகிய அஷ்டாவதானி சவியேர் ஹென்றிலேயோன் இன்ப கவிராயர் என்பவரும், வீரபாண்டிப் புலவரும் இம் மீனவர் கோமானின் சமஸ்தான வித்வான்கள். பாண்டிய சமஸ்தானத்தின் முதன் மந்திரியாகிய முத்துக்கண்ணுச் செட்டியார் தனது புத்திரனின் விவாக சமயத்து, பரதராஜனது வருகையை யெதிர்நோக்கியும் வாய்க்காமையால் அம்மணப்பந்தரின்கண்ணே தூது வருணனையாக ஓர் சீட்டுக்கவியை வரைந்து விடுத்தனர். அது வருமாறு :—

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாப்பு.

பல்லவி.

அன்னமே தேனே நான் சொன்னே னென்று மெல்ல
அழைத்துவாடி பெண்ணே.

அநுபல்லவி.

சென்னபட்டணத்தின் கவர்னர் போர்ட்டுச்
சீமைத்துரைமார் சகலரு மெச்சும்
மன்னன் தொன் கஸ்பாரந் தோனிதக் குருசு
வாசுக் கொற்றெர மகிபன் கொலுவினில் (அன்ன)

சரணங்கள்.

1. ஆசைவசமல்ல வென்று சோன்னே னவர்
அளப்பறிந்து வாடி
பாசமெல்லா மவர் மேலெனக் குண்டாச்சு
பாண்டியனைக் கூட்டிவாடி
காசுபணத்தின்மே லாசை யெனக்கில்லை
கருத்தறிந்து வாடி
தேசம்புகழ் தொன் கஸ்பாரந் தோணி
தெக்குருசு வாசுக் கொற்றெர சிகாமணி
ராஜாதி ராஜன் ராஜகெம் பீரன்
ராஜாவுத் தாண்டமா ராஜன் கொலுவினில் (அன்ன)

2. சிங்கமுகத் தண்டிகை மீதிலே வரு
சிங்காரப்பாண்டிய னடி
வங்கத்தார் கண்டு தரிசிக்குஞ் சந்திர
வங்கிஷபாண்டியனடி
சங்கத்தமிழ்ப்பிர சங்கமா மேடையின்
றரும பாண்டியனடி
அங்கத்துடனே சொற் கட்டிய முழங்கு
மருமைப் பாண்டியனடி
திங்கள்குலத்துக் கதிபன் தொன் கஸ்பாரந்

தோனிதக்குருசு வாசுக் கொறெர வேள்
தங்கப் பிரகாசன் சமஸ்தான போஜன்
சரசவுல்லாசன் சமுகந்தனிற் சென்று (அன்ன)

3. தேவ பத்தியினின் மாதிரவா னென்னும்
செல்வப் பாண்டியனடி
பூவுலகெங்கு மரசாட்சி செய்திடும்
பொன்னுப் பாண்டியனடி
சேவல் கயல்மயில் சிங்கமாம் பல்கொடிச்
செங்கோற் பாண்டியனடி
கோவளன்தொன் காபிரியேல்வாசு கோமசருள்
குபேரப் பாண்டியனடி
மேவலரை வெற்றிகொண்ட தொன் கஸ்பாரந்
தோனி தக்குருசு வாசுக் கொறெர வேள்
பாவலர் போற்றும் வணிகன் முத்துத் தமிழ்ப்
பாண்டியன் கொலுவினிற் பாராட்டி யிவ்வேளை (அன்ன)

---

இச்சீட்டுக்கவியைப்பார்த்த போது பாண்டியர் கோமான் மிக்க உவகைபூத்து அம்மஹோற்சவத்திற் கெழுந்தருளிச் சிறப்பித்ததுமன்றிப் பரிசுமளித்தான். இவ்விறைவனின் சமஸ்தான வித்வான்களிலொருவராகிய இன்பகவிராயர்: பல ராஜசபைகளிலும், சமஸ்தானங்களிலும் புகுந்து தனது வித்வத் திறமையைக் காட்டிப் பரிசுபெற்றுவரவேண்டுமென்னும் நோக்கத்துடன் சென்றார். இப்படிச் சென்றவர் தனது சுக செய்தியைப்பற்றி இருபத்தொரு வருஷகாலமாய்த் தனது மாதா, பிதா, மனைவி, மக்களுக்கறிவிக்காதிருந்தமையால் யாவரும் அவர் இறந்துபோனதாகவே எண்ணியிருந்தார்கள்.

ஒருநாள் பரதராஜன் தனது மந்திரி பிரதானிகளோடு வெகு உல்லாசமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருக்கும் வேளையில் தனது வாசல் வித்வானாகிய இன்பகவிராயருடைய ஞாபகம் வர, அரசன் மனம் சலித்தவனாய் வித்வசிரோமணியினுடைய மரணத்தை நினைந்து துக்கித்துக்கொண்டிருந்தான். மற்றவர்கள் இன்பகவிராயரினுடை

ய வித்யா சாமர்த்தியங்களையும், உடனுத்தார முதலான யுக்திவிசே ஷங்களையும் வியந்து பேசி வாயூறிக்கொண்டிருந்தார்கள். அந்தவே ளையில் திடீரென இன்பகவிராயர் அங்கே வந்து தோன்றினார். இவ ரைக்கண்ட யாவரும் பிரமித்து ! அடடா! இதென்ன ஆச்சரியம் ! இன்பகவிராயரன்றோ இதோ நிற்கின்றார் என்று சொன்னார்கள். அப்போது இறைவன் ஆவல்கொண்டு எழுந்தோடிப்போய் அவரை த்தழுவியழைத்துவந்து ஆசனம் நல்கிச் சொல்லுகிறான்: ஆ! இன்ப கவிராயரே ! நீவிர் இறந்துபோனதாக வன்றோவோர் வதந்தி உலா விற்றெனவே! கவிராயர் இறைவனின் வாயினின்று வந்த அந்த அபத்தத்தைச் சுபத்தமாக்கத் துணிந்து உடனே ஓர் கவியைப்பாடி னார். அதுவருமாறு:—

## கழி நெடில் விருத்தம்.

"பெலத்ததொரு வானவரை முனிவரரை யுலகிலுள்ள
பெரியோர் தம்மை
யலைத்துவிடு மெமராயன் முன்சென்றே னவனெனைப்பார்த்
தெவனீ யென்றான்
வலத்திலுயர் தொன்கஸ்பா ரந்தோனி வாஸ்வாசல்
வித்வா னென்றேன்
மலைத்தவனு முமதுநகர்க் கேகுமென்றா னுமிதோ
வந்திட் டேனே."

என்பதே. இக்கவியைக் கேட்டவுடன் சபையார் யாவரும் சந்தோஷித்து அவரை நோக்கி, கவிராயரே ! நீரிவ்வளவு காலம் இங்கில்லாதிருந்தமையால் உமது வாய்மொழியைக் கேளாமல் எங்க ள் செவிப்புலனுக்கு உணவு மிகவுங் குறைந்திருந்தது. ஆகையால் இனிக் கேட்கட்டும். தாங்களிவ்வளவு காலம் எங்கே சென்றிருந்தீர் கள்? அதை எங்கட்கறிவிக்கவேண்டுமென்றுகேட்டுக்கொண்டார்கள். அப்போது இன்பகவிராயர் சொல்லிய நிச வரலாறு:—

## பன்னிரண்டு சீரிரட்டை ஆசிரிய விருத்தம்.

"பவ்வநீ டிகபர மனைத்தும் புரப்பவொரு
பரமபொரு ளுறையாலயம்
படிபவ விருட்படல மிடிபொடி படக்கருணை
பாலிக்கு மருணோதயம்

பண்டொரு குமர்ச்சுதைக் கின்புறவே யேகப்
பதாம்புய விரகைக்ஷபீந்த
பாக்யமெனு மரியதசு நேவிசெம தன்னைபரி
பூரண கடாக்ஷமதனால்

செவ்விதழ்க் கமலவயல் திகழும்யாழ்ப் பாணநகர்
சென்றுசங் கத்தின்மிக்க
செய்யுட்பிர சங்கமது செய்துமச் சங்கச்
சிரேஷ்டர்முன் சீர்த்திபெற்றேன்
செப்பரிய தஞ்சைவளர் தத்தோஜி மந்த்ரிபாற்
சிவிகைப்ர திஷ்டைபெற்றேன்
சீர்பெருகு பெங்களூர் மைசூரி ரண்டிலுஞ்
செயராஜ விருதுபெற்றேன்

எவ்வரும் உனதடிமை யெனைவதன நோக்கியூ
ரேதுகுல மேதென்பர்யான்
இயல்புமிகு மத்தின புரத்தினது சக்ரபதி
எழுகடற் றுறைக்கதிபதி
எழிலுலவு சிம்மாச னதிபதி பரதகுல
வெஜமானின் வாசல்வித்வான்
இன்பகவி யென்பெய ரெனச்சொலியி வுலகெலா
மினிதுகன மேன்மைபெற்றேன்

திவ்யசோ டசகிரண சசிமுக வசீகரா
திருமந்த்ர நகராதிபா
சிஞ்ஞோர்தொன் கபிரியேல் வாசுகோ மிசுகுண
சிரோமணி வரத்தில்வந்த
சேயனே னதபய மெனவந் தடைந்திடுஞ்
சிறியனெனை யாளல்கடனும்
சிஞ்ஞோர்தொன் கஸ்பாரந் தோனிதெக் குரூஸ்வாசு
திடபுருட மாமேருவே!"

என்று இருந்த விருப்பி விக்கவியை மழைபொழியுமாபோல் மொழிந்தார். அப்போது என்னாண்டவன் ஆனந்தங்கொண்டெழுந்து தன்னிரு கரங்களாலும் பொன் நாணயங்களை வாரிக்கவிச்சிங்கத்தின் சிரசிற் கனகாபிஷேகஞ் செய்தான்.

பரதகோமானின் இரண்டாவது வாசல் வித்துவானாகிய வீரபாண்டிப் புலவரைப்பற்றிச் சிறிது சொல்வாம். இவர் தூத்துக்குடியிலே தையல் தைக்கும் பாணர் குலத்திலே பிறந்தவர். பாலியப் பிராயத்தே இவரது உள்ளத்தில் கல்வி ஆசை மேலிட்டமையால் தன் பிதாவின் புன்தொழிலை விரும்பாது கலாப்பியாசஞ்செய்து கவிவாணருள் ஒருவராகிப் பாஞ்சாலங்குறிச்சியை யாண்டிருந்த கட்டப் பொம்மய நாய்க்கனது தண்ணளியும் கடாட்சமும் பெற்று, அவன் வாசல் வித்துவானாயிருந்தார். அப்பால் பாஞ்சாலம் குறிச்சி நாதனற்றுப்போனமையால் அவ்வூரைவிட்டுத் தமதுஜெனனவூரை யடைந்து சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன் கஸ்பார் அந்தோனி தெக்குரூஸ் வாஸ்கொறெயா பரதவர்ம பாண்டியனின் சமஸ்தானத்தில் இரண்டாவது வித்துவானாக அங்கீகரிக்கப்பட்டு பாண்டியனது தயவைப்பெற்று காலக்ஷேபஞ் செய்துவந்தார்.

* "திருமந்திரநகர் அலங்காரக்கொம்மி, பிள்ளைத்தமிழ், மந்திரநகர் ஓடப்பாட்டு" முதலியவைகள் இவரியற்றிய நூல்களாகும். இவர் வாக்கு வல்லபத்திற் சிறந்தவர். தூததுக்குடியிலுள்ள † ஒரு மந்திரக்கூடம் என்னும் மண்டபத்தில் இப்புலவர் ஓர்முறை ஓர் தாசியின் நாட்டியம் பார்த்துக்கொண்டிருக்கும்போது இன்னோர் புலவர் இவர் குலத்தை இழுத்துக் கேலிபண்ணுவதற்காக இவரைக்கூவி, அத்தாசியைச் சுட்டிக்காட்டி "ஓய்புலவரே! தையல் நல்லதையல் பார்த்தீரா?" என்றார் இப்படிச்சொல்லியவர் சாதியில் இடையனாகலால், இவர் அவர்குலத்தைச் சுட்டுதற்கும் தருணத்துக்குத்தக்க

---

* இந்நூல்களும் இன்னும் சில பாடல்களும் எட்டுப்பிரதிகளாக இப்புலவர் குடும்பத்தாரிடமிருப்பதாயறிவோம். இவைகளை எமது சொந்தச் செலவிலச்சிடுவதாகக் கேட்டபோது அவர்கள் தரமறுத்துவிட்டார்கள், விசனம்.

† இம்மண்டபம் இப்போதழிந்துபோயிற்று. பரிதாபம்.

பொருள் பயத்தற்குமாக: ஓய்! என்னகாணும்! "ஆட்டுக்குத்திற மான தையல்" என்று சொல்லி எதிரியை நாணும்படி செய்தார்.

கனகமுடி வேய்ந்த கௌரியனாகிய எம்பெருமான் கௌரவமாய்ச் செங்கோல்செலுத்திவருங்காலத்தில், இவ்விறைவனுக்கு முதற் பேறாக தொன்சூசை அந்தோனி தெக்குரூஸ் வாஸ்பல்தான் என்பவனும், இரண்டாம் பேறாக தொன்சவியேர் தெக்குரூஸ் வாஸ்பல் தான் என்பவனும் பிறந்து ஸ்ரீராமலெட்சுமணரைப்போல் மிகவும் மேன்மையாய் வளர்ந்துவந்தார்கள். அக்காலத்தில் லுத்தர் மதானுசாரிகளான உலாந்தர் கத்தோலிக்கரான பரதரைத் தங்களுடைய மதத்தைக் கைக்கொள்ளச்சொல்லி நாளடைவில் வலுவந்தம் செய்துவந்தமையால், இதையறிந்த பரதகுலாதிபன் இதற்கோர் தீர்மானஞ் செய்யும்பொருட்டுத் தனது மந்திரசபையைக் கூட்டி ஆலோசித்துக் கீழே வருமாறு தீர்மானம் செய்தான். ' அதாவது; "பரதகுலத்தில் எவனாவதொருவன் தான் அநுசரித்துவரும் மெய்யான கத்தோலிக்கு மார்க்கத்தைக் கைநெகிழவிட்டுப் பதிதர்களான உலாந்தருடைய மதத்தை யநுசரிப்பானேயாயின், அவன் கொலையுண்ணக்கடவன்" என்றுஓர் கட்டளையைப் பிறப்பித்து, அதை ஊரெங்கும் பகிரங்கப்படுத்தும்படி அடப்பன்மார்களுக்குக்கற்பிக்க, அவர்கள் ஆறூர்பட்டங்கட்டிமார்களுக்கும், ஆறூர்பட்டங்கட்டிமார்கள் ஐந்தூர்பட்டங்கட்டிமார்களுக்கும், ஐந்தூர்பட்டங்கட்டிமார்கள் நாலூர்பட்டங்கட்டிமார்களுக்கும், நாலூர்பட்டங்கட்டிமார்கள் மூன்றூர்பட்டங்கட்டிமார்களுக்கும், மூன்றூர்பட்டங்கட்டிமார்கள் இரண்டூர்பட்டங்கட்டிமார்களுக்கும், இரண்டூர்பட்டங்கட்டிமார்கள்ஓரூர் பட்டங்கட்டிமார்களுக்கும் முறையேதெரிவித்து, பரதநாடெங்கும் பாண்டியனின் கற்பனையைப் பரவச்செய்து உலாந்ததேசாதிபதியும் அவன் சேகரத்தாரும் குலைநடுங்கும்படி செய்தார்கள். ஆகையால் உலாந்தர் கோபங்கொண்டு, எப்படியாவது ஒரு பரதனையாகிலும் தங்கள் மார்க்கத்தை யனுசரிக்கும்படி செய்யவேண்டுமென்று தருணம்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

தெய்வதூஷணை இராஜநிந்தனை பேசுவதும், பெரியோரை இகழ்வதும், பிறரை உதாசிப்பதும், அழிவழக்குச் சொல்லுவதும், மா

மூலைப்பழிப்பதும், நடுத்தெருவி லுட்கார்ந்துகொண்டு அவ்வழியே போகின்றவர்களை நையாண்டிபண்ணுவதும் ஈன ஜெனனமுற்றவர்களுக்கியல்பேயாம். எப்பொழுதும் அநுலோமபாண்டியராலேயே பாண்டியராசாட்சிக்குப் பல இக்கட்டுக்களுண்டாவது வழக்கம் அதுபோல் அக்காலத்தில் உயர்குலத்தோனாகிய பரதனொருவனுக்கு அவனது அடிமைப்பெண்ணின்பாலுதித்தோனாகிய அநுலோமனொருவன்; உலாந்ததேசாதிபதியினுடைய நயவஞ்சகமான வார்த்தைகளுக் கிசைந்து உயர்குலப் பரதனின் கட்டளையை உதாசனித்து உத்தமத ஆலயத்துட் பிரவேசித்தவனாகக் காணப்பட்டான். உடனே இச்செய்தியைத் தூதுவர்கள் மீனவர் கோமானுக்கறிவிக்க அவன் தனக்குண்மையுள்ளவர்களும், துப்பாக்கியைக் கைக்கொண்டவர்களுமான சில வீரர்களோடு இரண்டாவது வரிசைப் பரதனைப் பதிதர்களுடைய ஆலயத்தின் வாசலிலே சந்திக்கும்படி சென்றான். வாசனையொருந்திய வேப்பமாலையணிந்த வெண்மதிக்குலத் துதித்தவனாகிய எம்மிறைவன் கோவிலண்டையிற் குறுகியவுடனே புதிதாய்ப்பதிதமதத்தைக் கைக்கொண்டோனாகிய அநுலோமன் அந்த ஆலயத்தினின்று வெளியேவந்தான். அப்போது எம்மரசன் அந்த அநுலோமனைச் சுடும்படி தன்னுடன்வந்த வீரர்களுக்குச் சொல்ல, அவர்கள் அவனை அவ்விடத்திற்றானே சாகும்படி சுட்டுக்கொன்றார்கள். அப்பால் சேர்ப்பனாகிய எம்மிறைவனும், அவன் சேகரத்தாரும் இச்சம்பவத்தைக் கண்ணுற்கண்டு திகில்கொண்டு பிரமித்து நிற்கும் உலாந்தருடைய கூட்டத்தை ஊடறுத்துக்கொண்டு வெகு அமரிக்கையுடன் (மெல்லென), தாங்கள் வந்தவழியே திரும்பிச் சென்றார்கள்.

க்ஷத்திரிய கோமானுடைய இச்செய்கையானது உலாந்த கவர்னருடையவும், அவன் கூட்டத்தாருடையவும் நெஞ்சை ஈர்வாளைக் கொண்டறுத்ததுபோல் புண்படச் செய்தமையால், அவர்கள் கோபங்கொண்டு எவ்விதமும் எம்மிறைவனைக் கொல்லவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அன்று நடுநிசி வேளையில் உலாந்த தேசாதிபதியானவன் தன் மைந்தர்களெழுவருடன் உலாந்த வீரர்களையழைத்துக்கொண்டு இரகசியத்தில் எம்மரசனுயிரை வாங்கப் புறப்பட்டான். இச்செய்தி எவ்வாறோ ஜான் நெப்போமுஸ் மோத்தாவெ

ன்னும் பிரபுவின் செவிக்கெட்டவே, அவன் எம்மரசனின் மனைவியின் சகோதரனாகிய மிக்கேல் பேதுருபல்தானுக்குத்தெரிவித்து அந்தப்பிரபுவையும் தன்னோடு அழைத்துக்கொண்டுசெழியர்கோனிடம் சென்று சேதியை விண்டு எம்மிறைவனையும், அவன் மனைவியையும் மைந்தர்களையும் அரண்மனையைவிட் டப்புறப்படுத்தி அவர்களை இரகசியமாகத் தூத்துக்குடிக்கு மேற்கே மாக்ஷிமைபொருந்திய ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட மேலூரிற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

சேர்ப்பர்கோமான் தன்னரண்மனையினின்று வெளிப்பட்ட அரைநாழிகைக்குப்பின் உலாந்தர் வந்து அவனுடைய மாளிகையை முற்றுகை போட்டுக்கொண்டு முன்பன்னிரண்டுகட்டு வாசல்களையும் தாண்டி உட்சென்று சோதனைசெய்தும் தென்னவர் கோமானைக் காணமையாற் றிகைத்து பின் பன்னிரண்டு கட்டுக்களையும் ஆராய்ச்சி செய்துகொண்டு வெளியே சென்றார்கள்.

பூவுலகும் தேவுலகும் போற்றரிய பாண்டியர் கோமானாகிய எம்பெருமான் மேலூரிலிருந்துகொண்டு ஓர் நிருபத்தைவரைந்து தன்னுடன் பிறந்தோர், மந்திரிமார், பிரதானிகள், பிரபுக்கள், வித்வான்கள், வீரர்கள், குடிமைகள், அடிமைகள் யாவரையும்தருவித்தபின், உலாந்ததேசாதிபதிக்குக் கீழே வருமாறு ஓர் கடிதத்தை யெழுதலானான். அது வருமாறு: ஓ! "உலாந்ததேசாதிபனே! யான்சத்தியம் பொருந்திய சந்திரகுலத்திலே யுதித்த பாண்டியனுக்கு அவன் பத்தினியாகிய மாபரத்தியின் வயிற்றிற் பிறந்த புத்திரனேயாயின்: உன்னையும், உன்னினத்தவர்களையும், அரசாட்சியையும் என் நகரினின்று தொலைத்து மாக்ஷிமைபொருந்திய ஆங்கிலருக் கந்நகரளித்து அதன்பின் யானெனது ஆசனத்தி லடிவைப்பேனே யொழிய, உன்னைப்பணிந்து யான் இனி அரசுபுரிவதில்லை. இது சத்தியம். என்னுடைய சபதத்தை நீயே உன் கண்ணாற் காண்பாய்" என வரைந்து அதை உலாந்த தேசாதிபதிக் கனுப்பிவிட்டுத் தான் தன் பந்துக்களும், உத்தியோகஸ்தர்களும் பின்றொடர புன்னைப்பூவின் வாசனை கமழும் பின்னைக் காயலுக்குப் பிரயாணமானான்.

தூதுவர்கள் முன்னே சென்று பங்கயக்கயங்கள் சூழ்ந்த பழைய காயலூரவர்களுக்கும், பின்னைக்காயலூரவர்களுக்கும் எம்மிறைவ

னின் வருகையைத் தெரிவித்தார்கள். அப்போது பின்னைக்காயலடப்பனும், பாண்டிய கடற்சேனைக் கதிபனாகிய கிறிஸ்தியன் ரோச்சவும், பரதகுல பிரபுக்களு மொருங்கே திரண்டு மேளவாத்தியங்களுடனும், விருதுகளுடனும் தங்கள் கோமானை யெதிர்கொண்டழைக்கப்புறப்பட்டு, பழைய காயல் வந்துசேர, அவ்வூர் அடப்பனும் ஊரவர்களும் மகிழ்ச்சியை யடைந்து விருதுகளுடன் அவர்களோடு சேர்ந்து தென்னவர் கோமான் வரும் திசையை நோக்கிச்சென்று அவனைக்கண்டு கரங்களைக்கூப்பி ஆசாரத்தோடு அழைத்துவந்து பழைய காயலிலெழுந்திருக்கச்செய்து அவ்வூரவர்கள் வேண்டும் உபசாரங்களைச் செய்தபின், அரசன் வந்தனத்தோடு அவர்களி னுபசரிப்பையேற்று அவர்களை வாழ்த்திப் பின் பின்னைக்காயலிற் போய்ச்சேர்ந்தான். அங்கே சிலநாட் டங்கியிருந்தபின் வீரபாண்டிய மகாராஜனாற் கட்டப்பட்ட வீரபாண்டியன்பட்டணத்தையடைந்து அங்கேயோர் மாளிகையைக்கட்டி அதில் வாசஞ்செய்துவரும் நாளில் சூரபன்மனென்னும் இராக்ஷதனின் வாசஸ்தானமாகிய கந்தமாதன பர்வதத்தினருகேயுள்ள மணப்பாடு (மாப்பாடு) என்னு மூரில் போய் வசிக்கஎண்ணங்கொண்டு, தன் மாளிகையை மரியான்பூபாலராயனென்னும் வீரபாண்டியன் பட்டணத் தடப்பனூர்வச மொப்புவித்துத், தான் தன் சேகரத்தாரோடு மணப்பாட்டுக்குச் செல்லும்போது வழியில் திருச்செந்தூர், ஆலந்தலை, குலசேகரபாண்டியன் பட்டணமுதலான ஊரவர்களின் வந்தனைகளையேற்று, மணப்பாட்டைக்கிட்டியவுடனே, இன்பகவிராயரின் பிதாவும், அவ்வூர் அடப்பனுமாகிய தொமாசவியேர்லேயோன் என்பவர் ரத, கஜ, துரக, பதாதியென்னும் நால்வகைச்சேனைகளுடனும், விருதுகளுடனும், மேளவாத்தியங்கள் முழங்க எம்மிறைவனை யெதிர்கொண்டழைத்துப்போய்ப் பட்டணப்பிரவேசம் செய்து தம்மனையிலெழுந்திருக்கச்செய்தார். தென்னவர் கோமான் சிலநாள் அடப்பனூர் மனையிற்றங்கியிருந்தபின் னோர்மாளிகையைக்கட்டி அதில் வாழ்ந்திருந்தான்.

இவ்வண்ணம் செழியர்கோமான் செல்வத்துடன் அங்கே வாழ்ந்துவரும் நாளில், இவனுக்கு மூன்றாம்பேறாக 1821-ம் ஆண்டு டிசம்பர்மீ மூன்றாம்தேதி தொண்பிரியேல் தெக்குரூஸ் வாஸ்பல்தான் என்பவனுதித்தான். "எம்மிறைவனின் சிரேஷ்ட புத்திரனாகிய

தொன்ருசை தெக்குருஸ் வாஸ்பல்தானுக்குப்பின், இவனே அரசனுவானென்றும், இவனது அரசாட்சியின்காலம் முப்பத்துமூன்று வருஷமென்றும், இவன் காலத்தில் முத்துச்சலாபம் மூன்று கொழிக்கப்படுமென்றும், இவன் அறுபத்தெட்டாம் வயதில் மரணமாவனென்றும், இவன்காலத்தில் பரதருக்குள்ள சுவாதீனங்கள் பல குன்றுமென்றும்'' சமஸ்தான சோதிடர்கள் சாதகத்தைக் கணித்து இறைவனுக் கறிவித்தார்கள்.

திங்கள் குல கோமானாகிய எம்மிறைவன், அங்கு வசித்துவரு நாளி லோர்நாள் சகல செல்வங்களு மொருங்கே வாய்த்த கந்தமாதனபர்வதத்தைத் தரிசிக்கச் சென்று அம்மலையின் சிகரத்தினின்று தனது சமுத்திரத்தினழகையும், அச்சமுத்திரமாகிய தடாகத்திலே அழகிய அன்னப்பக்ஷிகள் நீந்தி விளையாடுமாப்போல் கப்பல்களும், தோணிகளும், படகு சோங்குகளும் வெண்மையான பாய்களை விரித்து விரைந்தோடுவதையுங்கண்டு களிப்புற்று, பின் தன் மாளிகைக்குத் திரும்பினான். அந்தோ! எம்பெருமான் திரும்பித் தன்னில்லம் போய்ச் சேருமுன், பிரசண்டமாருதமொன்று தோன்றிக் கடலிற்சென்ற கப்பல் முதலிய யாவையும் திரும்பிக்கரைசேராமல் சின்னபின்னம் செய்துவிட்டது. இப்பெரும் பூசலால் ஆழிவாய்க்கிரையான எம் சகோதரர்கள் பன்னீராயிரம் பேரெனக் கணக்கிடப்பட்டது. இத்தொகையில் நேர்பாதி பெரிய தாழையூரவர்களேயாம். இத்தோடு தாழையூர் தத்தளிக்கத் தொடங்கின. இப்பரிதாபமான சம்பவத்தை மீனவர் கோமானறிந்து மிகு கவலைகொண்டு, தங்கள் தகப்பனையும், புருஷனையும், பிள்ளைகளையும் ஆழிவாய்க்குத் தாரைவார்த்துவிட்டுத் தவிப்போர்க்குத் திரவிய சகாயஞ்செய்து, அவர்களுக்கு ஆறுதல் சொல்லித் தேறச்செய்தான்.

அப்பால் பரதர்கோமான் தூத்துக்குடியைக் கைக்கொள்ளும் பொருட்டு, அப்போது சென்னைக்கவர்னராயிருந்த மன்றோ என்பவரோடு எழுத்தின்மூலமாய் நடபடி செய்தான். மாக்ஷிமைபொருந்திய கவர்னரும் எம்மிறைவனின் கருத்திற்கிசைந்து, மீனவர்கோமானைச் சிலநாள் தாமதிக்கும்படி அறிவித்தார். எம்பெருமான் சலாபத்தினுடைய வருமானத்தை மாக்ஷிமைபொருந்திய ஆங்கிலவரசா

ட்சியா ரறியும்பொருட்டு, தூத்துக்குடிக்கு வடக்கே இரண்டுமைல் தூரத்திலுள்ள * விஜயநகரிலோர் சலாபத்தைக் கட்டி, ஆங்கிலரை யகமகிழச்செய்தான். ஆங்கிலர் எம் இறைவனுக்குச் சன்மானமாக ஓர் ஆங்கிலத் துவஜத்தை (**The Royal Standard Flag**) அளித்தார்கள்.

மதிசூலமன்னன் மந்திரநகரை விட்டகன்ற ஏழாமாண்டாகிய 1825ம்ஹு மாகூஷிமை பொருந்திய சென்னை கவர்னர் கந்தசாமி பிள்ளையின்வசம் ஓர் ஆங்கிலதுவஜத்தையும், ஓர் நிருபத்தையும் ஒப்புவித்து, அவைகளை மணப்பாட்டிலிருக்கும் பரவர்களுடைய ராஜாவுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கக்கற்பித்தார். கந்தசாமி பிள்ளை கவர்னருடையகட்டளைப்பிரகாரம் மணப்பாட்டையடைந்து மீனவர் கோமானைக்கண்டு தான் கொண்டுவந்த கொடியையும், கடிதத்தையும் அவனது திருக்கரங்களிலே அளித்து வணங்கிநின்றுன். எம்மிறைவன் அவைகளையேற்றுக் கடிதத்தைப் பிரித்து வாசித்த போது அதிற் குறித்திருந்தவைகளாவன:

பரவர்களுடைய அரசனும், எழுகடற்றுறைக் கதிபனுமாகிய சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன் கஸ்பார் அந்தோனிதெக்குருஸ் வாஸ் கொறெயா அவர்களுக்கு: இந்தியாவின் மாகூஷிமைபொருந்திய வைசிராயாகிய ஆடம் ஆமரெஸ்டு என்பவரின் கற்பனைப்பிரகாரம் யாம் தெரிவித்துக்கொள்வதியாதெனின்;

உமது மன்றுட்டை மாகூஷிமைபொருந்திய ஆங்கில வரசாட்சியார் ஒப்புக்கொண்டு உமது எண்ணத்தைத் திருப்தி செய்யும்படி எமக்கறிவித்தமையால், யாம் கந்தசாமிபிள்ளையின் வசமாக இந்நிருபத்தோடு மாகூஷிமை பொருந்திய அரசாங்கத் துவஜமொன்றையும க்கனுப்பி யிருக்கிறோம். நீரதை யொப்புக் கொண்டு உமது சேகரத்தாரோடு பிரயாணமாகிப் பாளையங்கோட்டையை யடைந்து அங்கே உமது வரவுக்காகக் காத்து நிற்கும் ஆங்கில சேனு வீரர்களுடன்

* விஜய நகர் தூத்துக்குடிக்கு வடக்கேயுள்ள அர்ச் - அலங்கார மாதா கோவிலுக்கு மேற்கே யிருந்தது. இப்போது அவ்விடத்தில்முத்துச்சிப்பிகள் நிறைந்த மணல் மேடுகளே காணப்படுகின்றன.

கூடி நேரே தூத்துக்குடிக்குச்சென்று, உலாந்தருடைய கோட்டைக்குள் பறக்கின்ற கொடியைக் கீழேயிறக்கி விட்டு எங்கள் துவஜத்தையுமது கரத்தாலே மேலேயேற்றிப் பின்னுமது அரண்மனைசெல்லும். அங்கே சகல ஏற்பாடுகளும் செய்திருக்கின்றோம் உமது மாளிகையைப் பாதுகாத்துவரும் சவியோர் வஸ்தியம் பருணாந்து என்பவன் உமக்கதை யொப்புவிப்பான்.

இங்ஙனம்

மன்றோ. இ. பா.

சென்னை மாகாண கவர்னர்."

எனவரைந்திருந்தது. இந்நிருபத்தைப் பரதர்கோமான்பார்வையிட்டானபின், கந்தசாமி பிள்ளைக்குக் கனகாபிஷேகஞ் செய்துவிட்டுத், தான் தன் குழுவினரோடு புறப்பட்டுப் பாளையங்கோட்டைக்குப் போய்ச்சேர்ந்தான். அங்கே எங்கோமானின் வருகைக்காக எதிர்பார்த்துக் காத்துநின்ற ஆங்கில வீரர்கள், எம்மிறைவனுக்கு ஆசாரம்செய்து அவனை வரவேற்றார்கள். எம் ஆண்டவன் அவ்வீரர்களுடன் தூத்துக்குடியை வந்தடைந்தான். திருமந்திர நகரவாசிகள் சில ஆண்டுகளாய்த் தங்களை விட்டு நீங்கியிருந்த அரசனையும், தங்கள் பந்துக்களையுங் கண்டுமகிழ்ந்தார்கள். சங்கு முழங்கும் சமுத்திரத்தையும், இனிய தமிழ் முழங்கும் தராதலத்தையுமுடைய எம்மன்னன் பாரத வீரர்களும், ஆங்கிலவீரர்களும் அணியணியாய்த்தன்னைச் சூழ்ந்துவர, தான் அவர்களின் நடுவே சென்று, உலாந்தருடைய கோட்டைபுட்புகுந்து, அங்கேஸ்தம்பத்தின் மீது அசைந்தாடிக் கொண்டிருந்த உலாந்தருடைய கொடியின் கயிற்றையவிழ்த்து, அதில் மாக்ஷிமைபொருந்திய ஆங்கில துவஜத்தைச்சேர்த்துத் தனது கரங்களால் மேலேயுயர்த்தினன். உடனே சங்கீத வாத்தியங்களின் தொனியும், பீரங்கிகளின் ஓசையும், ஆங்கில வீரர்களின் ஆனந்த கோஷ்டமும், பரதகுலமாக்களின் பாக்களினோசையும் அண்டமுகட்டை யதிரச்செய்தன. இவ்வண்ணம் பிறகொடிமேலே செல்ல முற்கொடி கீழேயிறங்கின. அப்போது அம்புலியின் குலத்தெழுந்த எம்மிறைவன் உலாந்தருடைய துவஜத்தை யவிழ்த்துக் கீழேபோட்டுத் தனது தொடுசோல் கால்களா லதை மிதித்துநின்றான். இச்சம்பவத்தைக் கண்ணுற்கண்ட உலாந்த கவர்னரும், அவனினத் தவர்களும் அகம் நொந்து கண்ணீர் சொரிந்தழுதார்கள்.

சத்தியம் பொருந்திய சந்திரகுலத்தவனாகிய எம்மரசன் இவ்வண்ணம் தன்சபதத்தைப் பூர்த்திசெய்து, பின் தன்னரண்மனையை நாடிச் சென்றான். அங்கே தன் மாளிகையைக் காவல் செய்துவந்த சவியேர் வஸ்தியம் பருநாந்து என்பவன், அதை அரசனுக்கொப்புவித்தான். இங்ஙனம் தூத்துக்குடி மாகாணமை தங்கிய ஆங்கில வரசாட்சிக்குள்ளானது. மன்னர்புகழும் தென்னர் கோமான் திருமந்திர நகர் சிம்மாசனத் தமர்ந்து சிலகாலஞ் செங்கோல் செலுத்தி அரசை முதுமகனாகிய தொன்சூசை அந்தோனி தெக்குரூஸ் வாஸ் பல்தான் என்பவனுக் கொப்புவித்துத்தானாசனமேறியமுப்பத்திரண்டா மாண்டில் (1839ம்ஞு) அறுபத்திரண்டு பிராயமுள்ளவனாய் மரணமானான்.

# சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்சூசை அந்தோனி தெக்குரூஸ் வாஸ்பல்தான் பரதவர்மபாண்டியனின் அரசியல்.

சிறப்புப் பொருந்திய வரத்தினையுடைய சந்திரகுலத்திறைவனாகிய இவன், தன்முன்னோர்களுடைய முறைமைகளை யனுசரித்துச் செங்கோல் செலுத்திவரும்நாளில், இச்சேர்ப்பனுக்கு ஓர் குமாரனுதித்துச் சிறிது காலம் வாழ்ந்திருந்து பின் பரகதியடைந்தான். எம்மிறைவனுக்கு நேரிளையோனாகிய தொன் சவியேர் தெக்குரூஸ் வாஸ் பல்தான் என்பவன், இலங்கையைச் சேர்ந்த மன்னாரில் கட்டப்பட்ட சலாபத்திற்குச் சென்று அதன் வருவாயைக்கைக்கொண்டு வரும் வழியில் நோயின் வாய்ப் பட்டுத் தூத்துக்குடியையடைந்து சில தினங்களுக்குப் பின் பரலோக பிராப்தியானான்.

இன்ப கவிராயரின் மைந்தனாகிய அன்னப்பூபதி லேயோன் இவ்விறைவனின் வாசல் வித்வான். இவ்வேந்தனின்காலத்திற்றான் தூலூஸ் சேசு சபைக்குருக்கள் பரதர்தேசத்தில் வேதம் போதிக்க வந்து பரதருள் கக்ஷிப் பிரிவினையையுண்டுசெய்து,பலங்குன்றச்செய்தார்கள். எம், ஆண்டவன் தனக்குப்பின் தாரணியை யாளத்தனையனில்லாக் கவலையினால்,அரசைவெறுத்துமகுடத்தைக்கடைசிச்சகோ

தரனுகிய தொன்கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் பல்தானுக் கொப்பு வித்துத் தான் 1856ம்ஷு பொய்யுலகைநீத்து மெய்யுலகையடைந் தான்.

# சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் பல்தான் பரதவர்ம பாண்டியனின் அரசியல்.

இவன் குணத்திலும், சௌரியத்திலும் குமரவேளுக் கொப் பானவன். இவ்வரசனுடைய அசட்டையினுல் இவனுக்குண்டாயி ருந்த சுவாதீனங்களின் பெரும் பாகத்தையும் பஞ்சு வர்த்தகத்தா லும், பரதருட் புதிதாய்க் குடிகொண்ட கக்ஷிப்போரினுலும் பெரு ந்தொகையான திரவியத்தையு மிழக்கலானுன். இவன் மூன்று சலாபங்களைக்கட்டி அதன் வருமானத்தைக் கைக் கொண்டபோதி லும் அவைகள் அந்நஷ்டத்தைத் தாங்கக் கூடியதாயிருக்கவில்லை.

மணப்பாடு மஹாவித்வான் இன்ப கவிராயரின் மைந்தனுகிய அன்னப்பூபதிலேயோன் இவ்வறைவனின் வாசல் வித்வானுயிருந்து காலஞ்சென்றபின், இக்கவி வாணரின் மைந்தர்களான * ஜோசேப் லேயோசிம்மராய பரதவர்மா என்பவரும், †ம- சவியோர்ஹென்றி லேயோ இன்ப கவிராயர் என்பவரும் சமஸ்தான வித்வான்களாக நியமனம் பெற்ருர்கள்.

செழியர்கோமானுகிய இவன், முப்பத்துமூன்றுவருஷகாலம் அர சாண்டான். இவனைப்போல் நீண்டகாலம் பரதர்தேசத்தை யாண் டவரொருவருமிலர். இத்தென்னர்குலசேகரனுக்கு தோனுமரிய

---

* இவர் திருவநந்த புரத்தில் இராமவர்மாவின் சமஸ்தானத்திலசிறிது காலம் வாசல் வித்வானுயிருந்து பரிசுபெற்றவர். "பரதகுலபாண்டியர் பழமை." என்னும் பிரபந்த மியற்றியவ ரிவரே.

---

† இவர்தான் "பரதவம்ச சரித்திர சங்க்ஷேபம்" "அர்ச் - பிலோ மீனம்மாள் நாடகம்" "அருளானந்தர் நாடகம்" "ஆட்டு வாணியனுகிய மர்த்தீன் கஷாயிக்காரன் நாடகம்" "உதாரிப்பிள்ளை நாடகம்" "கற்பலங் காரி சரித்திரம்" "திவ்ய பனிமயமாதாபேரில்பதிகம்" "கக்ஷிமாலை" ,, தொபியாஸ் நாடகம்" முதலானவைகளைச் செய்தவர்.

கஸ்பார் தெக்குரூஸ் வாஸ் பீரிஸ் என்னும் ஓர் பெண்ணேயன்றி வேறு சந்ததி யில்லாமையால், அம்மாதை ரொசாரியு மோத்தா வென்னும் மாபிரபுவுக்கு மணமுடித்து, தனது மகுடத்தைப் புத்திரிகா புத்திரனுக்கொப்புவித்து அறுபத்தெட்டாம்வயதில் பரகதியடைந்தான்.

ஸ்ரீவல்ஸ்ரீ மதுரைத்தட்டுடன்சேர்ந்த ஏழுகடற்றுறைக்கும், பரதகுலபாண்டியருக்கும் அதிபதியாகிய இவ்வரசனிறந்தபின், இவ்விறைவனின் சமஸ்தானவித்வான்களி லொருவராகிய ம. சவிரியேர் ஹென்றி லேயோ இன்பகவிராயர் என்பவர் திருவாய்மலர்ந்தவிய சரமகவிகளை இங்கே கூறுவாம்.

## எண்சீர்க்கழி நெடிலடி விருத்தங்கள்.

"கடல்வளையு மெழுதுறைக்கு மதிப னாகக்
காசினியி லெழுந்ததொன்கஸ் பாரந் தோனி
திடமுடையெம் மரசனின் னேய புத்ரா
செவ்வேளை நிகர்த்தவழ குடைய பூமா
அடல்விளைக்குந் துஷ்டர்தமை யடக்கி யாண்ட
ஐயனே! தொன்கபிரியேல் வாஸ்பல் தானு
இடமுனக்குத் தெரிந்துகொள்ள வுன்னி யிப்போ
தெவ்விடநீ யெமைவிடுத்துச் சென்றாய் மன்னா? (1)

மன்னாநீ யாயிரத்தெண் ணூற்றோர் பத்தும்
மற்றொருபத் தொடுமொன்றுஞ் சேர்ந்த நல்ல
தென்னுமா மார்கழியின் மூன்றாந் தேதி
இலகுமணப் பாட்டிலுதித் தாண்டு மூவேழ்
தன்னொடு பன் னிருவருஷ முலகி லெங்கள்
ஜாதிமுறை வழுவாது நடத்தி யெம்மாற்
பன்னரிய மோக்ஷசுக மடைய வேண்டிப்
பாரினைவிட் டேகினையோ வையோ! வையா! (2)

இந்துகுலத் துதித்திகத்தில் வளர்ந்து திவ்ய
பேர்பெறுமிந் நாவலந்தீ வதனை யாண்ட

சுந்தரனே பரதகுல கோமா னேயுன்
சுதந்தரனும் பாண்டியசுந் தரற்கே யன்று
எந்தமுடைய யக்காள்மீ னாக்ஷி தன்னை
ஈந்தவனே சிந்துவதி பதியே நீயுந்
தொந்தமுறு முலகைவிட்டுப் பரத்தை நாடித்
தொகுப்புறவேசென்றனையோ?வையோ! ஐயா! (3)

சீர்தவழும் அங்கிலேய வரசிக் குன்னுற்
செய்யக்கூ டியதாய மேன்மை போந்த
நேர்தவழ்முத் தினைக்கொழிக்குஞ் சலாப மூன்று
நீயேஉன் னுத்தாரப் படி நடாத்திப்
பேர்தவழ்மா செல்வமதை யவட் களித்த
பெருமானே! சந்த்ரகுல கோமா னே! நீ
ஏர்தவழும் பரலோகஞ் சேர வுன்னி
எம்மையுமிவ் விகத்தையுநீ யிகழ்ந்தாய் கொல்லோ?

அறுபத் தெட்டாம்வயதி லெம்மோ டிந்த
ஆழ்ந்தகடல் சூழுலகம் மனைவி தன்னோ
டொருபுத்ரி யானவந்த நங்கை யுந்தம்
குரியமகர் தம்மையுமே கை நெகிழ்ந்து
துரிதத்தி லேகிடவே நினைந்த தென்னோ?
துறையே நீ யுனைமறக்க வெம்மா லாமோ?
மறுபத்தங் கொண்டெமது தேவ னுன
வானவர்கோன் பதமதனை யடைந்தாய் கொல்லோ? "(5)

---

## சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்கபிரியேல் தெக்குரூஸ் லாசரூஸ் மோத்தாவாஸ் பரதவர்மபாண்டியனின் அரசியல்.

சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் பல்தான் பரதவர்மபாண்டியனின் குமாரத்தியான தோனுமரிய கஸ்பார் தெக்குரூஸ் வாஸ்பீரிஸ் என்னும் ஆத்தாள்: ரொசாரியு

மோத்தாவென்னும் பிரபுவை மணமுடித்து, பஞ்சதிருவழுதியர்க் கொப்ப ஐந்து ஆண்மாக்களைப்பெற்றாள். அவர்களுள் முதியோனாகிய லாசரூஸ் மோத்தாவாஸ் என்னும் பிரபுவே தன்மாதா மகனுக்குப்பின் சிஞ்ஞோர், சிஞ்ஞோர் தொன்கபிரியேல் தெக்குரூஸ் லாசரூஸ் மோத்தாவாஸ் பரதவர்மபாண்டியனென்னும் பெயரோடு பாராளும்பரதருக்கரசனாகஆசனமேறினான். இவ்விறைவன் 1864ம்௵ நவம்பர்மீ 11-ம்௳ பிறந்தவன். சத்தியமே நித்தியமென்றும் தர்மமே ஜெயமென்றும் நன்குணர்ந்தவன். பொறுமையில் பூமிதேவிக் கொப்பானவன். இவ்வண்ணம் பாண்டியராஜ சிம்மாசனத்திற்குரித்தாளியான இவ்வரசனைத் திருமந்திர நகரமென்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் திருக்கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் பரிசுத்தபனிமயத்தாய் ஆசீர்வதிப்பாளாக.

ஸர்வஸாம்பிராஜ்ய ஸர்வமகத்துவ ஷட்குணனாகிய தேவாதிதேவன் எம்மிறைவனுக்கு நல்ல சுகத்தையும், நீடிய ஆயுளையு மளிக்கும்படி அவனதுபாதாம்புஜங்களையே ஸதா ஸ்தோத்தரிக்கின்றேம்.

## விருத்தம்.

மதிமரபிற் புவிநிழற்று மாலைநெடுந் தனிக்குடையோர்
மன்னன் றோன்றிக்
கதிருமிழ்வெம் படையேந்து மந்தணர்தம் மொடுங்கூடிக்
கலியீற் றின்க
ணதிர்திரைநீர்க் கடலுலகி னருமறையி னெறியொழுகா
தகன்றோ ராவி
கொதி யழல்வெஞ் சினந்திருகு கொடுங்கூற்று முணவிருந்து
கொடுக்கு மாதோ.

அதாவது: சந்திரகுலத்திலே யுதித்து இப்புவியைப்புரக்கின்ற மன்னர் மரபினின்று இவ்வுலகை ஓர் குடையின்கீழாள வல்லவோரரசன் இக்கலியுகத்திற்குள் தோன்றி அந்தணருடன் கூடி அருமையாகிய வேதாகமங்களிற்சொல்லிய வொழுக்கங்களைவிட்டு விலகியவர்களை எமனுக் கொப்புவிப்பானென்று வியாசபகவான் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றமையாலும், தூத்துக்குடி, காயல், பின்னைக்

காயல், ஆற்றூர், முக்காணி, கொற்கை, மாறமங்கலம், திருப்பதி, திருக்களூர், ஆழ்வார்திருநகரி, ஏரல், ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், வீரபாண்டியன்பட்டணம், ஆலந்தலை, குலசேகரபாண்டியன் பட்டணம், மணப்பாடு, தாழை, கூடுதாழை, கூட்டப்பனை, உவரி, கூத்தன்குழி, இசைந்தகரை, பஞ்சல், பெருமணல், கூட்டப்புளி, கன்னியாகுமரி, மதுரை, கமுதி, தேவிபட்டணம், பௌத்ரமாணிக்கநகர், மண்டபம், வேம்பாறு, நரிப்பூர், வைப்பாறு, பாஸியங்கோட்டை, பேட்டை, கலியாவூர் முதலான விடங்களிலும், சேர சோழ நாடுகளிலும், இலங்கையிலும் வாசஞ்செய்யும் பரதகுலமாக்களுள் கல்வி, நாகரீகம், செல்வம், நல்லொழுக்கம், தீரம், நீதி முதலானவைகள் நாளுக்குநாள் அபிவிருத்தியடைந்து வருவதாலும், எம் குலத்தார் கூடியவிரைவில்தாங்களிழந்துபோன சீரையும் செல்வத்தையும் பெற்றுப் புவியையாளுவார்களென்றெதிர்பார்க்கின்றோம். அதிநல்லவரும், சர்வவல்லவருமாகிய கடவுள் அனுக்கிரகம் புரிவாராக.

## வாழி விருத்தம்.

திரித்துவ வொருவன் வாழி திகழ்திருக் குடும்பம் வாழி
பரப்பொரு ளடியார் வாழி பரிசுத்த பாப்பு வாழி
பரிவுறு சந்த்ர வம்ச பாண்டியன் குலத்தோர் வாழி
பரமனி னருளா லெந்தம் பாரம் பரையும் வாழி.

முற்றிற்று.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 12 | யரேத்துக்கு | யாரேத்துக்கு |
| ,, | 22 | நேசம் | சேம் |
| 5 | 21 | செத்தொழிந்தன. | செத்தொழிந்தனர். |
| ,, | 22 | அவர்களின | அவர்களின் |
| 7 | 6 | தேசத்தை, | தேசத்தை) |
| ,, | 30 | (ஆரிய வாசம்) | (ஆரியர் வாசம்) |
| 8 | 19 | ஒப்பீா | ஒப்பீர் |
| 10 | 24 | சந்திரனின் மேற்கெண்ட | சந்திரனின் மேற்கொண்ட |
| 12 | 14 | இதென்ன; | இதென்ன! |
| | 11 | சக்கிரவர்த்தியைப் பார்த்து: | சக்கரவர்த்தியைப்பார்த்து: |
| 1, | 4 | மின்னலைப் பழிக்கும | மின்னலைப்பழிக்கும் |
| 20 | 17 | நீ யாா ? | நீயார்? |
| 21 | 18 | சொல்லுகிறான். | சொல்லுகிறான்: |
| | 2 | சொல்லுகிறாள். | சொல்லுகிறாள்: |
| | 26 | விருமபிய | விரும்பிய |
| 23 | 2 | வாழ்க | வாழ்க் |
| ,, | 23 | மணஞ்செய்துகெள்ளத் | மணஞ்செய்துகொள்ளத் |
| 24 | 4 | ஆடகலோத்திறைவனை | ஆடகலோகத்திறைவனை |
| 27 | 3 | வஜ்ரமாாபின்மேல் | வஜ்ரமார்பின்மேல் |
| 5 | 30 | நீலனும, | நீலனும். |
| 40 | 11 | பெண்ணே; | பெண்ணே! |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 49 | 2 | கந்தரு | காந்தரு |
| 54 | 17 | அவ | அவனு |
| 61 | 14 | மணமுடித்துக்க் கொடென்ற | மணமுடித்துக் கொடென்று |
| 76 | 10 | தேசஸ் | தேகஸ் |
| 83 | 25 | மிக்கேல்ஸ் | மிக்கேல்வாஸ் |
| 86 | 25 | சாக்ஷிக்கின்றது. | சாக்ஷிக்கின்றன. |
| 87 | 5 | உராமாபுரியில் | உரோமாபுரியில் |
| ,, | 24 | பலனற்றதாகவிருக்கின்றது | பலனற்றதாக இருக்கின்றன |
| 93 | 8 | சேசுக்கிறீஸ்வில் | சேசுக்கிறிஸ்துவில் |
| ,, | 12 | அந்தோணிக் | அந்தோனிக் |
| 103 | 10 | Jeaw Fernanday | Jeam Fernandez |
| ,, | 31 | அந்தத்தலைவண | அந்தத் தலைவன் |
| 104 | 25 | வல் | வல்ல |
| 105 | 19 | சத்த | சத்து |
| ,, | 26 | ரென்னுடு | ரென்னோடு |
| 106 | 7 | கிரிமிலி | கிரிமினலி |
| 110 | 19 | ஜபத்தில் | ஜெபத்தில் |
| 113 | 4 | Excllenti | Excellenti |
| 114 | 8 | சிஞ்ஞோர் லூயிஸ் | சிஞ்ஞோர்தொன் லூயிஸ் |
| 120 | 15 | வாளாயுதத்தையுடைய | வாளாயுதத்தையுடைய |
| 127 | 2 | தெக்குரூஸ் | ஆரோக்கியம்தெக்குரூஸ் |
| 137 | 21 | ஒரு | திரு |
| 146 | 16 | இவ்வறைவனின் | இவ்விறைவனின் |
| ,, | 18 | சவியோர்ஹென்றி | சவியேர் ஹென்றி |
| 148 | 21 | துறையே | துரையே |

பிழை பொருப்பார் பெரியோர்.